

கல்கி
KALKI
28-9-1958
30
நயா
பைசா





வெட்டவெளிச்சமான உண்மை...

ரின்ஸோ வெளுப்பது அதிவெண்மை

ரின்ஸோ—வெண்மை யென்றால் உண்மையான வெண்மை! சக்தி வாய்ந்த ரின்ஸோவின் நுரை, நூலிழைகளில் மறைந்துள்ள அழுக்குகளையும் அறவே அகற்றிவிடுகிறது. அடித்துத் துவைக்கவோ, அழுத்தித் தேய்க்கவோ வேண்டாம். வெள்ளைத் துணிகள் வெள்ளைவெளேரென்றும், வர்ணத் துணிகள் அதிகப் பிரகாசமாகவும் ஆகிவிடும். புடவைகள் முதல் கைக்குட்டை வரை, குடும்பத்தின் சகல துணிகளுக்கும் உகந்தது ரின்ஸோ!

R. 21-30 TM

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு

கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 18 இதழ் 9

தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா

— பாரதியார்

விளம்பி௵ புரட்டாசி 12௳

புது வரிகள்

ஒரு முறை மூதேவிக்கும் அவள் தங்கை லக்ஷ்மிக்கும் தங்களுக்குள் யார் அழகு என்று சண்டை வந்ததாம். இதற்குத் தீர்ப்புச் சொல்லும்படி நாரதரைக் கேட்டார்களாம். 'இது என்ன பெரிய தர்மசங்கடமாகப் போய்விட்டதே' என்று நாரதர் நினைத்தார். கடைசியில் அவர்கள் இருவரையும் சற்றுத் தூரம் நடந்து செல்லச் சொன்னார். அப்படியே அவர்கள் நடந்து திரும்பினார்கள்.

"அம்மா, மூதேவி! நீ நடந்து போகும்போது உன் பின்னழகு ரொம்பப் பிரமாதம்! அம்மா, லட்சுமி! நீ நடந்து வரும்போது உன் முன்னழகு அசாத்தியம்!" என்று கூறித் தர்மசங்கடத்திலிருந்து நாரதர் தப்பித்துக் கொண்டாராம்.

நமது மத்திய உணவு மந்திரியும் ஏறத்தாழ இத்தகைய தர்மசங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டு ராஜ்ய சபையில் நமது நிலச்சீர்திருத்தங்களைப் பற்றி மேற்கூறிய முறையிலேயே பேசியிருக்கிறார்.

சென்ற வாரம் ராஜ்ய சபையில் உணவுப் பிரச்னை சம்பந்தமாக எழுந்த விவாதத்துக்குப் பதில் அளிக்கும்போது, உணவு மந்திரி திரு ஏ. பி. ஜெயின் " "நிலச்சீர்திருத்தங்களை அமுலுக்குக் கொண்டு வருவதில் காலதாமதம் ஏற்படுவதால் நமது விவசாய உற்பத்தி பாதிக்கப்படுகிறது. நிலச் சீர்திருத்தங்களைத் துரிதமாகச் செய்ய முடியவில்லையென்றால், அவை செய்யாமல் சிறிது காலத்துக்கு நிறுத்தி வைத்தாலாகிலும் விவசாயத் துறையில் சிறிது அமைதி ஏற்படும். இருக்கிற உற்பத்தி குறைந்து போகாமலாவது இருக்கும்!"


இதை விளக்கும் வகையில் மந்திரி மேலும், "நிலச் சீர்திருத்தங்களின் அவசியத்தை ஒரு புறம் ஒப்புக் கொள்ளாமலில்லை. ஆனால் மற்றொரு பக்கம், நமது நிலச் சீர்திருத்தத் திட்டங்கள் உணவு உற்பத்தியைப் பாதிக்கத்தான் இருக்கின்றன" என்று கூறியிருக்கிறார். நாரதர் தீர்ப்பாகவுள்ள மத்திய உணவு மந்திரியின் இந்தக் கூற்றைப் படித்து நாம் அவர் நிலைமையைக் கண்டு அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை!

முதலில் நிலச்சீர்திருத்தங்கள் அவசியம்தான் என்கிறார்; அதே மூச்சில் நிலச் சீர்திருத்தங்கள் நமது விவசாயத்தைப் பாதிக்கின்றன; உற்பத்தியைக் குறைத்திருக்கின்றன என்று சொல்லவும் செய்கிறார்.

இந்தக் குழப்பத்துக்கெல்லாம் காரணம், நிலச்சீர்திருத்தம் என்ற பெயரில் உற்பத்தி செய்ய வேண்டிய மக்களிடையில் இருக்க வேண்டிய ஒற்றுமையை அழித்து வேற்றுமை உண்டாக்கும் சட்டங்களே. சீர்திருத்தம் என்பது, பயனளிக்கும் நல்ல திருத்தங்களுக்குத்தான் பெயர். அடாவடி மாறுதல்களெல்லாம் சீர்திருத்தமாகாது.

நமது சர்க்கார் "நிலச்சீர்திருத்தங்கள்" செய்தே தீருவது என்று பிரகடனம் செய்துவிட்டனர்! நமது திட்டக் கமிஷன் புரட்சிகரமான "நிலச்சீர்திருத்தங்கள்" செய்தாலன்றி உணவு பெருகாது என்று திட்டம் வகுத்துவிட்டது. நமது பிரதம மந்திரி "உணவுப் பற்றாக்குறை; உணவு இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது" என்று கேள்விப்படும் போதெல்லாம், "நிலச்சீர்திருத்தங்கள் உடனடியாகச் செய்தாக வேண்டும். இவற்றைச் செய்யாததனால்தான் இந்தப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது" என்று திட்டக் கமிஷன் எழுதி வைத்துள்ள பாடத்தைத் தமது எதிர்ப்பற்ற குரலில் கர்ஜிக்கிறார்! "நிலச் சீர்திருத்த"த்தை அமுலுக்குக் கொண்டு வராததால் உணவு இலாக்கா கெட்டுப் போய் விட்டது. அதை உடனே ஒழுங்குபடுத்த வேண்டும் என்று சொல்கிறார்!

பாத யாத்திரை !



சென்னை மந்திரிகள் தமிழ் நாட்டில் உள்ள தங்கள் தங்கள் தொகுதிகளில் பாத யாத்திரை செய்யப் போகிறார்களாம் !

சிந்தனையின்றி எல்லாத் தலைவர்களும் ஒரே பாடத்தைத் திருப்பித் திருப்பிப் பாடும் போது உணவு மந்திரி என்ன செய்யமுடியும்? வேஷ்டி கட்டாத ஊரில் வேஷ்டி கட்டிக் கொண்டு போனவன் பைத்தியக்காரன் என்று சொல்லி விடுவார்கள் அல்லவா? அத்தகைய நிலைமை தமக்கு ஏற்படாமல் இருக்க வேண்டும் என்ற கவலையில், அவரும் அதே பாடத்தைத் திரும்பத் திரும்பப் பாடுகிறார்.

திரு ஜெயின் உணவு இலாக்கா பொறுப்பு ஏற்றுக் கொண்டிருப்பதால் பிரத்யட்ச நிலைமையைக் கண்ணாரக் காண்கிறார். எங்கெங்கெல்லாம் 'நிலச் சீர்திருத்தங்கள்' செய்யப் பட்டிருக்கின்றனவோ, அங்கெல்லாம் உற்பத்தி குறைந்திருக்கிறது. இந்த உண்மையை அவரால் மறைக்க முடியவில்லை.

ஆகவே, பொறுப்பிலும் அதிகாரத்திலும் உள்ளவர்கள் நமது நாட்டில், தற்போதுள்ள நிலைமையில் நிலச் சீர்திருத்தம் என்ற பெயரால் நிலமுடையவர்களுக்கும் நிலத்தில் பாடுபடுபவர்களுக்கு மிடையில் பிரிவினைகளை வளர்த்தால், உற்பத்தி பெருகுவதற்குப் பதிலாகக் குறைகிறது என்று நிதர்சனமாகத் தெரிகிறது. தெரிந்தும் மீண்டும் 'நிலச் சீர்திருத்தம்' என்ற பெயரில் தவறான பாதையில் செல்கிறார்கள்.

இதற்கு உதாரணம் வேறு எங்கும் போக வேண்டியதில்லை. நமது, சென்னை அரசாங்கமே போதும்.

ஏற்கனவே செய்த சட்ட மாறுதல்களினால் நிலத்தைச் சம்பாதித்தவர்கள், அதில் முதல் போட்டு உழைத்துப் பாடுபட உற்சாகம் இழந்து நிற்கிறார்கள். நிலத்தில் போட்ட பணத்தைப் பாங்கியில் போட்டால் நிலத்திலிருந்து கிடைப்பதை விட அதிக வருமானம் வட்டியாகக் கிடைக்குமே என்று எண்ணுகிறார்கள். இல்லையேல், வேறு தொழில்களில் ஈடுபடுத்தினால் அதிக வருமானம் வரலாமே என்று எண்ணுகிறார்கள். அல்லது பட்டணக் கரையில் வீடாகக் கட்டிப் போட்டால் வாடகைப் பணம் கணிசமாக வரும் என்று நினைக்கிறார்கள். ஆகவே, தற்போது இந்திய நாட்டில் பணம் உடையவர்கள் நிலத்தைத் தவிர வேறு எதில் பணத்தை முடக்கினாலும் நல்ல வருமானம் வரும் என்று நினைக்கிறார்கள். இதன் பயனாக, பலர் தங்கள் நிலங்களை விற்று நகர்ப்புறங்களுக்கு வருவதைப் பார்க்கிறோம். இந் நிலையில் இப்பொழுது இன்னும் கொஞ்சநஞ்சப் பேர்கள் பழக்கத்தின் காரணமாக நிலத்தில் ஒட்டிக் கொண்டிருந்தால் அதற்கும் உலை வைக்கும் வகையில் ''விவசாய வருமானவரி'' என்று சட்டம் இயற்றியிருக்கிறார்கள். இதற்கு வருஷ வருமானம் ரூ. 3600-க்கு மேலுள்ளவர்

களுக்குத்தான் இந்த வரி என்று விதித்திருக்கிறார்கள். அதாவது மாதம் ரூ. 300 வீதம் வருமானமுள்ளவர்களுக்கு வரி என்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இது நகரத்தில் உத்தியோகம் செய்து 300 ரூபாய் சம்பாதிப்பவர்களுக்கும் வருமானவரி விதித்திருப்பது போல் விவசாய வருமானத்தில் வாழ்பவருக்கும் அதே நிலையில் வருமானவரி விதிக்க வேண்டும் என்று செய்திருக்கிறார்கள். இருதர மக்களையும் ஒரு நிலையில் நிறுத்தி மதிப்பதாகச் சர்க்காரின் எண்ணம். ஆபீஸில் வேலை செய்கிறவர்களுக்கும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்குமுள்ள வித்தியாசத்தைச் சர்க்கார் உணரவில்லை. விவசாயத்தில் தன் காலத்தையும் சக்தியையும் செலுத்துகிறவனுக்கு நன்றி செலுத்த வேண்டுமே தவிர வரி போடலாகாது. ஆபீஸ் ஊழியர்களுக்கு அவர்களுடைய பணியை உத்தேசித்து வருமான வரிக்கு உட்பட்டோ, அல்லது வரி செலுத்த வேண்டியதில்லை என்றோ சம்பளம் நிர்ணயிப்பது நியாயம்.

விவசாயி நிலத்தில் பயிர் விளையச் செய்ய வேண்டிய செலவுகள் அதிகம். உண்டான பயிரைப் பாதுகாக்க எவ்வளவோ செலவழிக்க வேண்டியிருக்கிறது. ரூபாய் 3600 விருந்து வரி போடுவது ரொம்பவும் தவறு என்று எதிர்க்கட்சியாளர்களும் சொன்னார்கள். கம்யூனிஸ்டு கட்சியினர் ரூ. 5000க்கு மேற்பட்டவர்களுக்குத்தான் வரி விதிக்க வேண்டும் என்றார்கள்.

ஆனால் காங்கிரஸ் சர்க்கார், கம்யூனிஸ்டுகளை விடத் தாங்கள் அதிதீவிரவாதிகள் என்று காட்டிக் கொள்ள கம்யூனிஸ்டுகளின் யோசனையை ஏற்க மறுத்து விட்டார்கள்!

இந்தப் புதிய விவசாய வருமான வரி இரு ஏ. பி. ஜெயின் பயந்துசொன்ன உண்மையை இன்னும் உறுதிப்படுத்தி விடப் போகிறது! உற்பத்தி குறையப் போகிறது! உற்பத்திக் கணக்கைப் பார்வையிடுவதற்கும் பரிசோதனை செய்வதற்கும் நடவடிக்கை எடுப்பார்கள். சின்ன விவசாயிகள் எல்லோரும் உத்தியோகஸ்தர்களின் பேரிலும் சர்க்காரின் பேரிலும் காங்கிரஸ் கட்சியின் பேரிலும் வெறுப்புக் கொள்வார்கள். உத்தியோகஸ்தர்களுக்கு லஞ்சம் கொடுக்க ஆரம்பிப்பார்கள். அவர்களும் வேண்டாம் என்று சொல்ல மாட்டார்கள். எளிய முறையில் யாருக்கும் தெரியாமல் தங்களுடைய போதாத சம்பளத்துக்கு வரிக்கு உட்படாத துணை சம்பாதனையை வரவேற்பார்கள்.

ஆட்சி என்றால் கபிட்சத்தைப் பெருக்கி, 'அதைப் பங்கிட்டுத் தருவது என்று எண்ணியிருந்தோம். ஆனால் வறுமையை எல்லோருக்கும் பங்கிட்டுத் தருவதே இன்று காங்கிரஸ் ஆட்சியின் லட்சியமாகி விட்டதே என்று பரிதபிக்கிறோம்.

போதும் இந்த விளையாட்டு!

அமெரிக்க ஜனாதிபதி ஐஸன்ஹோவர் ருஷ்யத் தலைவர் குருஷேவ் எழுதிய கடிதத்தை வாங்கக்கூட முடியாது என்று திருப்பி விட்டார்! பதில் சொல்வது கடினம்; கடிதத்தைத் திருப்பி விடுவது எளிது.

குருஷேவ் எழுதியுள்ள கடிதத்தின் வாசகங்கள் மாஸ்கோ ரேடியோவில் ஒலிபரப்பப்பட்டன. அந்த வாசகங்கள் ஐஸன்ஹோவருக்கு எட்டி, அதன் மீது கடிதத்தைப் பெற மறுத்து விட்டார். கடிதத்தின் உள்ளுரை தெரிந்து கொண்டு மறுத்து விட்டார்.

குற்றமுள்ள நெஞ்சுதான் குறுகுறுக்கும். ருஷ்யத் தலைவர் எழுதியுள்ள கடிதத்தில், அமெரிக்கா, சீனக் கடலில் தன் துருப்புகளை நிறுத்திச் சீனா மீது பாய்வதற்கான சந்தர்ப்பத்தை எதிர்நோக்கி நிற்கிறது; சீனா மீது பாயும் பட்சத்தில், அதை ருஷ்யா தன் மீது போர் தொடுத்ததாகவே கருதும் என்று சொல்லியிருக்கிறார்.

சீனாமீது அணுகுண்டு, ஜலஜகுண்டு யுத்தம் நடத்தத் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிகிறது. அப்படி நடத்தினால் ருஷ்யா பின் வாங்கிவிடாது என்றும், அதே அளவுக்குத் தானும் ஜலஜ குண்டுகளைச் சீனாவைத் தாக்கியவர்கள் மீது போடத் தயாராகவே இருக்கிறது என்பது நினைவிருக்கட்டும் என்றும் குருஷேவ் எச்சரிக்கை செய்திருக்கிறார்.

அறுபது கோடி மக்கள் மனமுவந்து ஏற்றுக் கொண்ட கம்யூனிஸ்ட் சீன ஆட்சியை அங்கீகரிக்காமல், ஐ. நா. சபையில் அதை நுழைய விடாமல் செய்து கொண்டிருக்கிறது அமெரிக்கா. ஆனால் அறுபது கோடி மக்கள் உதறித் தள்ளிய சியாங்கை உண்மை சீனத் தலைவர் என்றும் அவரது பிரதிநிதியை உண்மை சீனாவின் பிரதிநிதியென்று ஐ. நா. சபையில் அனுமதித்திருப்பதும் அடாத செயல்; இனியும் இதைப் பொறுக்க முடியாது. உடனடியாகக் கம்யூனிஸ்டு சீனாவை அங்கீகரிப்பதே கிழக்காசியாவில் நிலவும் பேராபத்தான சூழ்நிலையைத் தவிர்ப்பதற்கு வழியாகும் என்று சந்தேகத்துக்கிடமின்றிச் சொல்லியிருக்கிறார்.

இதையே இந்திய சர்க்காரும் உலகமும் நியாயம் என்று கருதுகின்றன. 'அமெரிக்காவைத் திட்டியிருக்கிறார் குருஷேவ்' என்று ஐஸன்ஹோவர் கடிதத்தை வாங்க மறுத்தது, உண்மையில் அமெரிக்கா செய்து வருவது தவறு என்பதை உறுதி செய்து விட்டது. ருஷ்யாவையும் மற்ற கம்யூனிஸ்ட் ராஜ்யங்களையும் மேற்கத்திய அரசாங்கங்கள் திட்டியதில் குறைவுண்டா?

அபாயகரமான சூழ்நிலை ஏற்படுத்தி விட்டு பிரத்யட்ச நிலைமை வரும்போது, கண்ணை மூடிக் கொள்வதாகும் இச்செய்கை. ஐஸன்ஹோவர், இந்த அபாய எச்சரிக்கை செய்யும் கடிதத்தை வாங்க மறுத்ததால் அபாயநிலை மாறி விட்டதாகாது.

இன்னும் கிழக்காசியாவில் அபாயநிலை மேலும் மேலும் வளர்ந்து வருகிறது. உலகத்தை அபாயநிலைக்குக் கொண்டு போய்ப் பிறகு பின்வாங்கும் விளையாட்டைப் பல முறை டல்லஸ் விளையாடி விட்டார். இந்த விளையாட்டு ஒரு சமயம் போல் ஒரு சமயம் இராது. 'போதும் உங்கள் அபாய விளையாட்டு' என்று அமெரிக்காவுக்கு உலகம் எச்சரிக்கை செய்ய வேண்டும்.

இலங்கைத் தமிழர் பிரச்னை

சென்ற ஞாயிற்றுக்கிழமை சென்னை லட்சுமிபுரம் இளைஞர் சங்கத்தில் "இலங்கைத் தமிழர்" விஷயமாக ஒரு பெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. சென்னை தமிழரசுக் கழகத்தின் தலைவர் திரு ம. பொ. சி. இலங்கைத் தமிழர் பிரச்னையை மிகத் தெளிவாக விளக்கினார். ராஜாஜி அக் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். தலைவர் ராஜாஜி கலவரம் நடந்த உடனே, இலங்கை சர்க்காருக்கும், சிங்களவர்களுக்கும் அறிவுரை சொன்னார். கல்கி வாயிலாக ராஜாஜி அறிக்கை வெளியிட்டார், அந்த அறிக்கையை இலங்கை சர்க்கார் கத்தரித்து விட்டார்கள்.

இப்பொழுது குழப்பம் ஓரளவு அடங்கி, இலங்கைத் தமிழ் கட்சித் தலைவர்கள் விடுதலை அடைந்திருக்கின்றனர். இன்றையச் சூழ்நிலையில் செய்ய வேண்டியது என்ன என்பது சென்றவாரம் 'இலங்கைத் தமிழர்கள்' என்ற 'கல்கி' தலையங்கத்தில் வெளியாயிற்று. அதையே தலைவர் திரு ம.பொ. சிவஞானம் அவர்கள் வரிக்கு வரி பொதுக் கூட்டத்தில் ஒப்புக் கொள்வதாகக் கூறினார்.

தலைவர் ம. பொ. சி. இலங்கைக்கும் இந்தியாவுக்கும், தமிழ்நாட்டுக்கும் சரித்திர காலம் தொட்டு எப்படி எப்படி நெருங்கிய தொடர்பிருந்து வந்திருக்கிறது என்பதை விளக்கினார்.

இலங்கையில் தோட்டங்களுக்கு வேலை செய்யச் சென்றவர்களைச் சுரண்டச் சென்றவர்கள் என்று கூறுவது தவறு என்றார். இலங்கையும் இந்தியாவும் ஒரு ஆட்சிக்கு அடங்கிய ஒரு தேசமாக இருந்த காலத்தில் இலங்கை இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்தது. ஒரு நாட்டின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்குச் சர்வ சாதாரணமாக மக்கள் செல்வது போல் இலங்கைக்குத் தமிழர்கள் சென்றார்கள். வருந்தி வருந்தி அழைக்கப் பட்டுச் சென்றார்கள். நூறு வருஷங்களுக்கு முன்பு சென்று இலங்கைத் தோட்டப் பகுதிகளில் குடியேறிய மக்களைப் பிரஜாவுரிமை இல்லாமல் வைத்திருப்பது அநீதி என்றார். இவர்களை யெல்லாம் இலங்கை உரிமையுமின்றி, இந்திய உரிமையுமின்றி 'இந்திய வம்சாவளியினர்' என்று பெயரிட்டு நாடோடிகளாக வைத்திருப்பது அநீதம். இவர்கள் அமைதியாகக் கிளர்ச்சி செய்து தங்கள் கோரிக்கையைப் பெற வேண்டும். இலங்கையை விட்டு விட்டு இந்தியாவுக்குப் போய் விடலாம் என்று நினைப்பது தவறு. இந்தியாவுக்கு வந்தால் வறுமையில் மடியத்தான் நேரிடும் என்றெல்லாம் எச்சரிக்கை செய்தார் திரு ம. பொ. சி. இது இந்த நூற்றாண்டில் இந்தியாவிலிருந்து இலங்கையில் குடியேறிய மக்களின் விஷயம். இலங்கைப் பழங்குடித் தமிழர்கள் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு முதலிய வட மாகாணங்களில் பழங் குடிகளாக வசிப்பவர்கள் மத்திய ஆட்சிக்கு உட்பட்ட மாகாண சுயாட்சி கோருகின்றனர். இந்தக் கோரிக்கை நியாயமானது. இந்த நியாயமான கோரிக்கைக்கு சாத்துவிக முறையில் போராட வேண்டும். நியாயம் இன்றில்லாவிடில் நாளையாவது வெற்றிபெற்றே தீரும். மாகாண சுயாட்சி பெற்று விட்டார்களானால் அங்கு தமிழ் மொழியில் ஆட்சி நடத்தும் உரிமையும் பெறுகிறார்கள். தமிழ் மாகாணங்களில் தமிழ் ஆட்சி மொழியாகி விட்டால், மத்திய ஆட்சியிலும் அதற்கு உரிய சம அந்தஸ்து கிடைத்துவிடும். அதற்கிடையில் இலங்கை சர்க்கார் தற்போது செய்துள்ள சட்டத்தை அமுல் நடத்துவதில் எவ்வளவு தூரம் நியாயமாக நடந்துகொள்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். அதைச் சரியானபடி அமுல் நடத்தும்படி இலங்கைத் தமிழர்கள் கவனித்து வேண்டிய கிளர்ச்சி செய்ய வேண்டும் என்றார் ராஜாஜி.

நஷ்டப்பட்டவர்கள் சிங்களவர் என்றும் தமிழர் என்றும் பாரபட்சம் காட்டாமல் இலங்கை சர்க்கார் சமீப காலக் கலவரங்களில் அனைவருக்கும் நஷ்ட ஈடுதர வேண்டும் என்றும் ம. பொ. சி. வற்புறுத்தினார்.

சிங்களவர்கள் தாங்கள்தான் இலங்கைக்கு உரிய புதல்வர்கள் என்றும், தமிழர்கள் தத்துப்புத்திரர்கள் என்றும் நினைப்பதாகத் தோன்றுகிறது. சற்று ஆராய்ந்தால் தமிழர்களே இலங்கைக்கு உரிய ஆதி புதல்வர்கள் என்றும், சிங்களவர்கள் பின்னால் வந்தவர்களோ என்றும் நினைக்கத் தோன்றுகிறது. யார் அண்ணனாயினும் தம்பியாயினும், சகோதரர்கள் சமமாக நடத்தப்பட வேண்டியவர்கள். அவர்கள் இருவருக்கும் சொத்தில் உரிமையுண்டு. 'இலங்கைத் தமிழர்களுக்கு இலங்கையில் சம உரிமையுண்டு என்றும், இலங்கைத் தமிழர்கள் இலங்கை முன்னேற்றத்துக்காகச் செய்த பெரும் பணியை மறந்து விடலாகாது என்றும் எடுத்த எடுப்பிலேயே ராஜாஜியும் ம. பொ. சி.யும் வற்புறுத்தினார்கள்.

இந்தியப் பிரதமர் நேரு உலகிலுள்ள எல்லாப் பிரச்னைகளைப் பற்றியும் அபிப்பிராயம் தெரிவிக்கிறார்; இலங்கை இந்தியர்களைப்பற்றி, இலங்கை விஷயத்தைப் பற்றி ஒரு வார்த்தை பேச மறுக்கிறாரே என்று ம. பொ. சி. வருத்தப்பட்டார். ராஜாஜி இதைப்பற்றிச் சமாதானம் கூறினார்.

உலகில் உள்ள மற்ற அரசியல் விஷயங்கள் தூரத்தில் நடைபெறுவன. அவற்றைப் பற்றி அபிப்பிராயம் தெரிவிப்பது அவசியம். ஆனால் இது நேருஜியின் உள்ளத்துக்கு நெருங்கிய பிரச்னை. அண்டை வீட்டுப் பிரச்னை. இதில் தமது சொந்த செல்வாக்கைப் பயன்படுத்தி நிலைமையைச் சீர்திருத்தலாம் என்று எண்ணிக் கிளர்ச்சி செய்யாமல் இருக்கலாம். அதனால் நேருஜியின் மௌனத்தைத் தவறாகப் பொருள்படுத்திக் கொள்ளக் கூடாது என்றார் ராஜாஜி.

ராஜாஜியின் பேச்சையும், ம. பொ. சி. அவர்களின் பேச்சையும் பொது மக்கள் பல முறை கரகோஷத்தினிடையே வரவேற்றார்கள். இலங்கை இந்தியர் பிரச்னையை இந்தியத் தமிழர்கள் உணர்ந்து வருகிறார்கள் என்பதை இந்தக் கூட்டம் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியது.

அருள் வாக்கு

சம்ஸ்கிருதத்துக்கு, தெற்கே வாய் எதிர்ப்புத்தான் ' இருக்கிறது. வடக்கே காரியத்தில் எதிர்க்கிறார்கள். காரணம், இந்தியைத் தேசிய பாஷையாக மாற்ற வேண்டும் என்பது அவர்களது எண்ணம். இதற்குக் காரணம் அதிகமான ராஜ்யங்களில் இந்திதான் பேசுகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அதே சமயம் சிலர், " சம்ஸ்கிருதத்தை அப்படிச் செய்து விடலாமே. எல்லா ராஜ்யங்களிலும் சம்ஸ்கிருதம் இருந்திருக்கிறது. வைத்தியம், தத்துவம் முதலிய எல்லாத் துறைகளிலும் சம்ஸ்கிருதத்தில் புத்தகங்கள் இருக்கின்றன" என்று சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். இதைக் கேட்கும்போது சம்ஸ்கிருதத்தை அடியோடு அழித்து விட வேண்டும் என்று இந்தி வித்வான்கள் ஆரம்பித்து விட்டார்கள்.

சாஸ்திரம், வேதம், புராணம் எல்லாம் சம்ஸ்கிருதத்தில் இருக்கின்றன என்பதனாலேயே இங்குள்ளவர்களுக்கு இன்னும் அந்த மொழியில் நிறைய பக்தி இருக்கிறது. பாஷை என்ற ஒரு காரணத்துக்காக மட்டும் சம்ஸ்கிருதம் வேண்டும் என்றால் நான் கூட வேண்டாம் என்றுதான் சொல்வேன். ஆனால், நம்முடைய மதத்துக்கு மூலமான வேதம், சாஸ்திரம் எல்லாம் அந்தப் பாஷையில் இருப்பதனால் வேதத்தை ரட்சிப்பதற்காக அதனுடைய மொழியையும் ரட்சிக்க வேண்டும்.

திருக்குறளுக்குச் சிறப்புப் பாயிரம் பாடின திருவள்ளுவமாலைப் புலவரும் இப்படித்தான் நினைத்திருக்கிறார். "சம்ஸ்கிருதம் உயர்வா, தமிழ் உயர்வா என்று யோசனை பண்ணிப் பார்த்தேன். இது வரைக்கும் சம்ஸ்கிருதம் உயர்வு என்று சொல்ல வேண்டியிருந்தது. அது இன்றுடன் நிவிருத்தியாகி விட்டது. சம்ஸ்கிருதமும் தமிழும் சமந்தான். ஒன்று உயர்வு, ஒன்று மட்டம் என்று சொல்ல முடியாது. எதனாலே என்றால் சம்ஸ்கிருதத்தில் வேதம் இருக்கிறது. தமிழில் இப்போது திருக்குறள் இருக்கிறது. இதுவும் ஒரு தமிழ் மறை. வேதத்துக்குச் சமானமான ஒன்று தமிழில் இல்லை என்றால் சம்ஸ்கிருதம் உயர்வாக இருக்கலாம். திருக்குறள் வேதத்துக்குச் சமானமாக இருக்கிறது. அதனால்தான் சம்ஸ்கிருதம், தமிழ் இரண்டையும் சேர்த்துப் பார்க்கும் பொழுது ஒன்றைக் காட்டிலும் ஒன்று உயர்ந்தது, சிறந்தது என்று சொல்ல முடியாது" என்று அப் புலவர் பெருமான் கூறுகிறார்.

" ஆரியமும் செந்தமிழும் ஆராய்ந் ததனினிது
சீரியதென் றொன்றைச் செப்பரிதால்-ஆரியம்
வேதமுடைத்துத் தமிழ் திருவள்ளுவனார்
ஓது குறட்பா உடைத்து "

என்கிறார் அப் புலவர். சம்ஸ்கிருதத்துக்கு எதனால் கௌரவம்? பாஷை என்பதற்காக அல்ல. வேதம் அதில் இருப்பதனால்தான் என்பதை அந்தப் புலவர் சொல்லியிருக்கிறார்.

வேதம் இருந்தால் என்ன? எல்லாவற்றையும் மொழிபெயர்த்து விட்டால் போகிறது என்று பலர் எண்ணலாம். பல நூல்கள் இந்தக் காலத்தில் மூல பாஷையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன. அதன் காரணமாக மூலமே உருமாறிப் போய் விடுகிறது. ஒரு பொருளைச் சொல்வதற்கு ஒரு பாஷையில் அழகான சொல் ஒன்று இருக்கும். அதற்கு ஏற்ற சொல் இதர பாஷையில் சிற்சில சமயங்களில் இல்லாமல் போகலாம். மேலும், மொழிபெயர்க்கிறவன் தன்னுடைய ஞானத்துக்கு ஏற்றவாறு பொருள் பண்ணிக்கொண்டு மொழிபெயர்த்து விடக்கூடும். ஒருவன் செய்திருக்கிற மொழிபெயர்ப்பு சரி அல்ல என்று இன்னொருவன் வேறு விதமாகச் செய்வான். பண்ணுகிறவனுடைய அபிப்பிராயத்துக்குத் தக்கபடி அந்த மொழிபெயர்ப்பு இருக்கும். மொழிபெயர்ப்புகளில் சந்தேகம் வரும் போது மூலத்தைப் பார்க்கத் தோன்றும். மூலமே அழிந்து போய் விட்டால் என்ன செய்வது? அதனால்தான் சொல்லப்பட்ட விஷயங்கள் சொல்லுகிறவன் வாக்கிலிருந்து எப்படி வருகின்றனவோ அதே மொழியிலிருந்து விட்டால், ஒரு சமயம் இல்லாவிட்டால் மற்றொரு சமயம் அவற்றின் உண்மைப் பொருளைத் தெரிந்து கொள்ள முடியும். அதனால்தான் வேதத்தை ரட்சிப்பதற்காக அதன் பாஷையையும் ரட்சிக்க வேண்டும்.

பொருளாதாரப் பிரச்னை

கொழும்பு, செப்டம்பர் 19உ.

இலங்கையிலுள்ள கொழும்பு முனிசிபல் சபை உள்பட்ட பல்வேறு ஸ்தாபனங்களிலும் சுமார் ஆறாயிரம் இந்தியர்கள் சேவை புரிகிறார்கள். இவர்கள் எல்லோரும் இலங்கைப் பிரஜாவுரிமைக்குக் கோரிக்கை செய்யாமல் இந்தியப் பிரஜைகளாகவே இருப்பவர்கள். ஆகவே இமிகிரேஷன் சட்டப்படி இவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வாச பர்மிட் காலாவதியாவதுடன் பதில் பேசாமல் இந்தியாவுக்குத் திரும்பிவிட வேண்டியவர்கள். ஸ்தல ஸ்தாபனச் சட்டத்தின் பிரகாரம் அவர்களிடம் சேவை செய்பவர்களுக்கு 55-வது வயதில் வேலையிலிருந்து ஓய்வு பெற்றால் மட்டுமே பென்ஷன் கேட்க உரிமையுண்டு. இந்தியச் சிப்பந்திகளும் தொழிலாளரும் இமிகிரேஷன் சட்டப்படி வாச பர்மிட் காலாவதியான வேலையையும் நாட்டையும் விட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

பல வருட காலம் சேவை செய்துவிட்டுத் தாங்களாக வலுவில் வேலையை விடாமல் அரசாங்க நிர்ப்பந்தத்தின்மீது வெளியேற வேண்டியிருப்பவர்களை பென்ஷனுமின்றி வெறுங்கையுடன் அனுப்புவது தர்மமில்லையென்றும் முறையிட்டுக் கொண்டதின் பயனாக அரசாங்கம் ஸ்தல ஸ்தாபனச் சட்டத்தைத் திருத்த உத்தேசித்திருக்கிறதாம். புதிய உத்தேசத் திருத்தச் சட்டத்தின்படி 55 வயதுக்கு முன்னால் அரசாங்க நிர்ப்பந்தத்தின்மீது இந்தியா திரும்ப நேரிடும் இந்தியச் சிப்பந்திகளுக்கும் தொழிலாளருக்கும் பென்ஷன் கிடைக்க ஏற்பாடு செய்யவிருக்கிறார்கள். கூடிய சீக்கிரம் திருத்தச் சட்டம் இயற்றப் படுமானால் அது சுமார் ஆறாயிரம் இந்தியர்களுக்கு நன்மை புரிவதாயிருக்கும்.

இந்திய 'இமிகிரேஷன் சட்டத்தின்படி தோட்டங்களில் வேலை செய்யும் இந்திய வம்சாவளியினர்களான தொழிலாளருக்கு இருந்துவரும் சில சலுகைகளை ரத்துச் செய்யவும் அவர்களைச் சகல விஷயங்களிலும் சிங்களத் தொழிலாளரைப் போல் நடத்தவும் அரசாங்கம் சட்டம் இயற்றப் போவதாக ஒரு செய்தி வெளியாகியிருக்கிறது. இந்திய வம்சாவளியினர் சுமார் 150 அல்லது 200 ஆண்டுகளுக்கு முன்னால் அநேகம் உரிமைகளும் சலுகைகளும் தருவதாக ஆசைகாட்டி இங்கு அழைத்து வரப்பட்டவர்கள். இன்று தோட்டத்தில் வேலை செய்பவர்கள் இப்படி வந்தவர்களின் சந்ததியார்களே யாகும். இவர்கள் தங்களுக்கும் இந்தியாவுக்கும் சம்பந்தமில்லையென்றும், தாங்கள் இந்தியர்களல்லவென்றும் சொல்லிக் கொள்கிறார்கள். இந்திய அரசாங்கமும் இவர்கள் இந்தியர்களல்லவென்று கைகழுவி விட்டது. அந்த நிலைமையில் அவர்கள் இந்தியர்களல்லவென்றும் இலங்கையர்கள்தானென்றும் உண்மையை உள்ளபடி உணர்ந்து அவர்களுக்கும் சிங்களவர்களுக்கு மிடையில் வேற்றுமை காட்டக் காரணமில்லையென்று அரசாங்கம் தீர்மானித்திருக்கும் பட்சத்தில் அது முற்றிலும் நியாயமானதே. இதை யாரும் ஆட்சேபிக்கமாட்டார்கள். சம்பள விஷயத்திலும் சலுகைகள் விஷயத்திலும் மாத்திரம் வேற்றுமை யிருக்கக்கூடாது. பிரஜாவுரிமை விஷயத்தில் வேற்றுமை யிருக்கலாமென்றால் இலங்கை அரசாங்கம் இந்திய வம்சாவளியினரை இங்கு அழைத்து வந்தபோது கொடுத்த வாக்குறுதிகளுக்கு அநீதி இழைத்ததாகவே கருத வேண்டும்.


இந்திய வம்சாவளியினர்களுக்கு இருப்பதாகக் கூறப்படும் சலுகைகள் உண்மையில் அவர்களுக்கு நன்மை செய்வதை விடத் தீமையே செய்கின்றனவென்றும். அவை வேண்டவே வேண்டாமென்றும் காங்கிரஸ் உபதலைவர் திரு கே. ராஜலிங்கம் ஒரு பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

இம்மாதம் 27ம் தேதி நுவரெலியா என்ற இடத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் வருடாந்திர மகாநாடு திரு யஸ். தொண்டமான் தலைமையில் ஆரம்பமாகிறது. இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினரின் நிலைமையும் பொதுவாகத் தமிழ் பேசும் மக்களின் நிலைமையும் ஒரு நெருக்கடியான கட்டத்தை யடைந்திருப்பதால் இவ்வருட மகாநாடு விசேஷ முக்கியத்துவம்வாய்ந்ததா யிருக்குமென்பதில் சந்தேகமில்லை. வழக்கமாகப் பிரஜாவுரிமையைப் பற்றியே திரும்பத்திரும்பப் பேசிவரும் காங்கிரஸின் போக்கில் சென்ற வருடம் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது. தோட்டங்களில் வேலையில்லாத் திண்டாட்டம் மலைபோலப் பெருகி வருவதாலும் நிலைமை வெகு விரைவில் விசுவ ரூப மெடுத்துவிடுமென்று அஞ்சப்பட்டதாலும் சென்ற வருட மகாநாடு முதன்முதலாகப் பொருளாதாரப் பிரச்னைக்கு முதலிடம் கொடுத்தது. இந்திய வம்சாவளியினர்களான தோட்டத் தொழிலாளர்களுக்கு இலங்கை அரசாங்கம் பிரஜாவுரிமை கொடுத்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, அவர்கள் இங்கு தானிருக்கப் போகிறார்கள். அவர்களை இங்கிருந்து வெளியேற்ற எந்த சக்தியினாலும் முடியப் போவதில்லை. எனவே பிரஜாவுரிமைப் பிரச்னை முக்கியமானதென்றாலும் அதைவிட ஆபத்தானதும் தொழிலாளர் உயிர் வாழ அவசியமானதுமான பொருளாதாரப் பிரச்னையில் அவசர கவனம் செலுத்துவது இன்றியமையாதது. தோட்டங்களில் பல்லாயிரக் கணக்கானவர்கள் வேலையின்றித் தவிப்பதாலும் அரசாங்கத்தின் புதிய போக்கினால் வேலையற்றோர் எண்ணிக்கை மேலும் பெருகும் ஆபத்து உருவாகி வருவதாலும் இப்பிரச்னையில் அவசர கவனம் செலுத்த வேண்டுமென்பதைக் காங்கிரஸ் வட்டாரங்கள் உணர்ந்து வருகின்றன. ஆகவே இவ்வருட காங்கிரஸ் மகாநாட்டிலும் தொழிலாளரின் பொருளாதாரப் பிரச்னைகளே முதலிடம் பெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

—ரஜனி



TOILET POWDER
SANDAL
Padmini Priyadarshini
டி.எஸ்.ஆர். & கோ
கும்பகோணம்



49

'நான் லோகோபகாரி. இவ்வளவு கொடுத்தேன் அவ்வளவு கொடுத்தேன்' என்று சிலர் பெருமைப்படுவது தவறு.

உண்மையில் வறுமையில் கஷ்டப்படும் மக்களுக்குத் தருவதே ஈகை. மற்றவர்களுக்குத் தருவதெல்லாம் நமக்கு யாதேனும் ஒரு பிரதிப் பிரயோசனத்தை எதிர்பார்த்துத் தருவதே. அது வியாபாரத் துறையில் கொடுத்ததே யொழிய உண்மை ஈகையல்ல. ஒன்று கொடுத்து அதற்கு ஈடாக ஒன்று பெறுவது வியாபாரம்தானே?

குறியெதிர்ப்பை :—பந்துக்கள் மங்கள விசேஷ காலங்களில் சம்பாவனை செய்வது வழக்கம். அவற்றையெல்லாம் சரியாகக் குறித்துக்கொண்டு பிறகு ஒரு விசேஷ காலத்தில் அவர்களுக்கு அந்தச் சம்பாவனைக்குச் சரியான பதில் சம்பாவனை தர வேண்டியது உலக நடை. முதலில் தருவதும் வழக்கத்தின்படி கடமை. பிறகு ஈடு செய்வதும் அவ்வாறே கடமை. இந்தக் கொடைகள் ஈகை ஆகாது.

வறியார்க்குஒன்று ஈவதே
ஈகைமற்று எல்லாம்
குறியெதிர்ப்பை நீரது
உடைத்து.

குறியெதிர்ப்பை நீரது உடைத்து — குறியெதிர்ப்பையின் தன்மையைக் கொண்டது. நீரது—நீர்மையுடையது. உ 1

வறியார் அல்லாத மற்றவர்களுக்குக் கொடுப்பதெல்லாம் ஏதேனும் ஒரு பயன் நோக்கிக் கொடுப்பதே. வெளிப்படையாக இல்லாதாயினும் அதுவே நோக்கம்.

வறுமையின் காரணம் பிறனிடம் பெறும் பொருள் - தானமானது - வாங்கிக் கொள்கிறவனுக்கு ஓரளவு துன்ப உணர்ச்சி உண்டாக்குகிறது. பிறனுடைய உதவியை இப்படிப் பெற வேண்டியிருக்கிறதே என்று துயரம் தானாக உண்டாகிறது. கொடுப்பவன் அதனால் இன்பம் அடைகிறான். மேல் உலகத்தில் தானத்தின் பயனாக அவனுக்கு நன்மை உண்டாகும் என்கிற நியதி ஏதும் இல்லாமற் போனாலும், வறியாருக்குக் கொடுக்கும் கொடையினால் கொடுத்தவனுக்குக் கொடுக்கும்போதே மகிழ்ச்சி தருகிறது. இதைச் செய்தேனே, செய்யும் வசதி கிடைத்ததே. இவன் கஷ்டத்தைத் தீர்த்தேனே என்று உள்ளத்தில் இன்பம் உண்டாகிறது. இதை இந்தக் குறளில் சொல்லுகிறார்:

நல்லாறு எனினும்
கொளல்தீது மேலுலகம்
இல்எனினும் ஈதலே
நன்று.

சமயக் கொள்கை எதுவாயினும், கொடுப்பதிலே இன்பமும், பெறுவதிலே துன்பமும் உண்டாகின்றன என்பது பொருள். வறுமையில் சிக்கி அலைகிறவன் கொடுக்கும் திறன் உள்ளவர்களிடம் பொருளுதவி பெறுவதில் யாதொரு பாவமும் இல்லை. அது 'நல் ஆறு'. எனினும் அவ்வாறு பிச்சை பெறும்போது கஷ்டம்தான் படுகிறோம். ஏழையும் உதவி பெறும் போது அந்தக் கஷ்டம் அனுபவிக்

கிறான். இதை மறக்காதே என்று முனிவர் கொடுப்பவனுக்குச் சொல்லுகிறார்.

சாஸ்திரமும் சமயக் கொள்கைகளும் விடுத்து இயற்கை நியதியை எடுத்துக் காட்டுகிறார்.

இது வள்ளுவரின் தனிப் பாணி. ஈகையினால் உண்டாகும் இன்பத்தைக் காட்டி ஊக்குவிக்கிறார். "உனக்கே இன்பம். பிறனுக்கு நீ இன்பம் தருவதாக எண்ண வேண்டாம். உதவியோடு ஓரளவு துன்பமும் தருகிறாய்" என்கிறார்.

* * *

"ஐயா! நான் கஷ்டப்படுகிறேன். உதவி செய்யுங்கள்" என்று ஒருவன் நம்மை அண்டும்போது, மனத்தில் நமக்குக் கஷ்டம் உண்டாகிறது. இது என்ன தொல்லை என்பது ஒன்று. உலகத்தில் வறுமை ஏன் என்பது இரண்டாவது. ஆனால் அந்த "இன்னா" உணர்ச்சி கொஞ்ச நேரந்தான். வறியவனுக்குக் கொடுத்தவுடனே அவன் முகத்தைப் பார். கஷ்டம் தீர்ந்தது என்று அவன் முகம் பொலிவு பெற்றுப் பிரகாசிப்பதைப் பார்ப்பாய். அந்தப் பொலிவைக் கண்டவுடன், இவன் வந்தது எவ்வளவு இன்பத்தில் முடிந்தது என்று நீயும் மகிழ்வாய்.

இன்னாது இரக்கப்
படுதல் இரந்தவர்
இன்முகம் காணும்
அளவு.

அந்த இன்முகத்தைக் கண்டபின் நீ முன் உணராததை உணர்வாய். இவன் வந்து என்னைக் கேட்டுப் பெற்றது என் பாக்கியம் என்று உனக்குள் சொல்லிக் கொள்வாய். இவ்வளவு சந்தோஷம் உண்டாக்கும் சக்தி எனக்கு இருந்ததே என்று மகிழ்ச்சியடைவாய். சாதாரண ஒரு மானிடப் பிறவியாகிய எனக்கு, பிறன் ஒருவனுக்கு இவ்வளவு சந்தோஷம் உண்டாக்கும் சக்தி இருந்ததே என்று வியந்து இன்பம் பெறுவாய்.

வறியாருக்கு உதவி தந்து உண்மை ஈகையைச் செய்து அனுபவித்தவர்கள் இந்தக் குறளின் அழகைப் பார்த்து மகிழ்வார்கள். 'இரந்தவர் இன்முகம் காணும் அளவு' என்று வரம்பு கட்டி முதலில் ஏற்படும் ஆயாசத்தை முடிப்பது குறளின் அழகு.

உலகத்தில் ஏன் இந்த வறுமை இருக்க வேண்டும்? ஒருவன் கஷ்டப்படுவது, ஒருவன் சுகமாக இருப்பது இதுவெல்லாம் சரியில்லை என்று சிலர் எண்ணி ஆண்டவனையும் பழிப்பார்கள். அத்தகையோரையும் இந்தக் குறளில் குறிப்பிட்டதாக வைத்துக் கொள்ளலாம். "இரக்கப்படுதல் இன்னாது என்று நீ எண்ணலாம். ஆனால் அந்த நிகழ்ச்சியின் முடிவைப் பார். இந்த ஏற்றக் குறைவும் அதன் காரணமாக நடைபெறும் ஈகையும் சேர்ந்து இரு பக்கத்திலும் எவ்வளவு பெரிய இன்பத்தைத் தோற்றுவிக்கிறது. பார்!" என்கிறது குறள்.

மேடும் பள்ளமும் இருப்பதால் அல்லவோ ஆறு ஓடுகிறது. எல்லாம் சமமாக இருந்தால் ஆறு ஏது, அருவி ஏது? ஆனந்தமும் ஏது? மானிட உயிரானது ஆற்றைப் போல். மேடும் பள்ளமும் இருப்பதால்தான் ஆண்டவன் லீலையாகிய துன்பமும் இன்பமும் தோன்றுகின்றன. துன்பம் இல்லையேல் இன்பமும் இல்லை.

செங்கோலும் ஜனநாயகமும்

• க. சந்தானம் •

10. ஜனநாயகம்: அரசியல் கட்சிகள்

சென்ற நாற்பது வருஷங்களாக எல்லா ஜனநாயகங்களும் ஒரு தர்ம சங்கடத்தில் மாட்டிக் கொண்டிருக்கின்றன. ஏதேச்சாதிகாரத்தையும், பலாத்காரத்தையும் கொள்கைகளாகக் கொண்ட அரசியல் கட்சிகள் முதலில் சாதாரண அரசியல் கட்சி போல் நடித்துத் தமக்கு ஜனநாயக உரிமைகள் வேண்டுமென்று கிளர்ச்சி செய்கின்றன. இக் கோரிக்கையை மறுப்பது ஜனநாயகத்தின் தத்துவத்திற்கு விரோதம். அந்த உரிமைகளைக் கொண்டு பெரும்பாலான வாக்குகளைப் பெற்று அதிகாரத்துக்கு வந்தவுடன் இதரக் கட்சிகளையெல்லாம் பலாத்காரமாக அடக்கி விடும். இப்படியே ஹிட்லரும் முசோலினியும் சர்வாதிகாரிகளானார்கள். கிழக்கு ஐரோப்பாவில் பொது உடைமைக் கட்சிகளும் இதே தந்திரத்தைக் கையாண்டு ஏதேச்சாதிகாரம் பெற்றன. இந்த அபாயத்திலிருந்து ஜனநாயகத்தைப் பாதுகாப்பது எப்படி என்று ஆலோசிப்பது அவசியமாகும்.

அரசியல் அமைப்பில் அவ்வித ஏதேச்சாதிகாரம் ஸ்தாபிப்பதற்குக் கண்டிப்பான தடைகள் இருக்க வேண்டும். அமைப்பை எளிதில் மாற்றுவதற்கு வசதிகள் அளிக்கக் கூடாது. நேரில் பொதுமக்களின் சம்மதத்தைப் பெறாமல் அரசியல் அமைப்பில் எவ்விதச் சீர்திருத்தமும் செய்ய முடியாது என்று பல நாடுகளில் விதி இருக்கிறது. பாரத அரசியல் அமைப்பிலும் அவ் விதி செய்யப்பட்டிருந்தால் நலமாக இருந்திருக்கும். பொது உடைமைக் கட்சிக்காரர்கள் மத்திய பார்லிமெண்டைக் கைப்பற்றிக் கொள்ளுவதற்கு முன்னமே இதைச் செய்து விடுவது அத்தியாவசியமாகும்.

எந்த அரசியல் கட்சியும் போலீஸ், சைனியப் பயிற்சியுடன் தொண்டர் படை அமைக்க அனுமதிக்கப்படக் கூடாது. சுதந்திரப் போரில் காங்கிரஸ் மகாசபை அவ்விதம் செய்யவில்லையா என்று வினவலாம். அன்னிய ஆட்சியை எதிர்த்துப் போராடும்பொழுது கையாளும் முறைகள் ஜனநாயகத்தில் நியாயமாகமாட்டா. தவிர, காங்கிரஸ் மகாசபை அஹிம்சா முறையை ஏற்றுக் கொண்டிருந்ததால், அதன் தொண்டர் படை பலாத்காரமாக எதையும் செய்ய முடியாது. வாக்காளர்களின் ஆதரவு கிடைக்கும் கட்சி அரசு புரிந்து தனது திட்டங்களை அமுல் செய்யக் கூடிய ஜனநாயகத்தில் அணிவகுத்துப் போராடும் தொண்டர் படைக்கு அவசியம் இல்லை.

நாட்டின் சைனியங்களும், அதிகார வர்க்கமும் அரசியல் அமைப்புக்கு விரோதமானவை என்று எக்காரியமும் செய்வதில்லையென்று சபதம் எடுத்துக் கொள்வதோடு அவ்விதக் காரியங்கள் அரசியல் அமைப்புக்கு விரோதமானவை என்று தெளிவாகப் போதிக்கப்பட வேண்டும்.

எல்லாவற்றிலும் முக்கியமான பாதுகாப்பு பொது மக்களின் அறிவு. ஏதேச்சாதிகாரத்தால் தங்களுக்கு எவ்விதமான நிச்சய பலனும் கிடைக்காதென்றும், பலவித கஷ்டங்களும், கொடுமைகளும் அதன்கீழ் நிச்சயமாகச் சம்பவிக்குமென்றும் சரித்திர பூர்வமாக அவர்கள் நன்குணர்ந்தால்' ஏதேச்சாதிகாரத்தை நம்பும் கட்சிகளுக்குச் சிறிது ஆதரவும் கிடைக்காது.

மக்களின் அறியாமையாலோ அலட்சியத்தாலோ அவ்விதக் கட்சி பெரும்பாலரின் வாக்குப் பெற்றுப் பதவிக்கு வந்து விட்டால் அதன் செயல்களை நன்கு கவனித்து ஜனநாயகத்தைக் கவிழ்க்கும் முறைகளை எதிர்த்து, அவசியமானால் பலாத்காரமாகக் கூடப் புரட்சி செய்வதற்கு ஜனநாயகத்தில் பக்தியுடையவர்கள் தயாராக இருக்க வேண்டும்.

11. தேர்தல்

ஆதியில் சில இடங்களில் ஒரு நகரமோ, சிறிய பிரதேசமோ தனி ராஜ்யமாக இருந்த பொழுது, எல்லாக் குடும்பத் தலைவர்களும் கூடி அரசாங்கத்தை நடத்தினர். கிரீஸ் தேசத்தில் ஏதென்ஸ் நகரத்தில் இம்மாதிரியான ஜனநாயகம் நடைபெற்றது. ரோமாபுரியிலும் அப்படியேதான் முதலில் இருந்தது. பாரதத்திலும் வைசாலி முதலிய இடங்களில் நேரடியான ஜனநாயகமே பல வருஷங்களுக்கு அமுலில் இருந்தது. இது சிறிய பிரதேசங்களுக்குச் சாத்தியப்படும். பெண்கள், விவசாயிகள், தேக உழைப்பாளிகள் முதலியோருக்கு அதில் பங்கில்லை. நாகரிகர்கள் என்று அழைக்கப்பட்ட குடும்பங்களின் ஆண்களே ஜனநாயகத்துக்கு உரியவர்களானார்கள்.

இக் காலத்தில் கோடிக்கணக்கான மக்கள் கூடிய பரந்த நாட்டுக்கு ஒரு ராஜ்யம் இருக்கிறது. எல்லா மக்களும் கூடி ஜனநாயகம் நடத்தமுடியாது. ஆதலால்நாட்டைத்தொகுதிகளாகப் பிரித்துப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுத்து அவர்கள் மூலம் அரசாங்கம் செய்வதே ஜனநாயகம் என்று கருதப்படுகிறது.

தொகுதிகளை எவ்விதம் வகுக்க வேண்டும், தேர்தல் முறை எப்படியிருக்க வேண்டும், தேர்தல் காலத்தில் அபேட்சகர்களும், அவர்களின் அரசியல் கட்சிகளும் அதிகாரிகளும், வாக்காளர்களும் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டுமென்பது முக்கிய பிரச்னைகள்.

21 வயது வந்த ஆண் பெண் அனைவரும் வாக்காளர்களாக இருக்கவேண்டுமென்பது தற்காலத்திய ஜனநாயகங்களில் சாதாரண விதி. பாரத அரசியல் அமைப்பிலும் இப்படியே. இவ்விதம் படித்தவர், படிக்காதவர்; பணக்காரர், ஏழை; உழைப்பவர், சோம்பேறி என்று எவ்வித வித்தியாசமும் பார்க்காமல் எல்லோருக்கும் சமமாக வோட்டுக் கொடுத்துத் தலைகளை எண்ணித் தேர்தல் நடத்துவது மிகவும் மூடத்தனம் என்று காலம் சென்ற பெர்னார்ட்ஷாவைப் போன்ற பல அறிஞர்கள் எண்ணுகின்றனர். பிரிட்டன்,

அமெரிக்கா முதலிய நாடுகளில் முதலில் சொத்துள்ளவர்களுக்கே வாக்கு இருந்தது. அரசியல் அதிகாரத்தைக் கொண்டு தங்கள் கூட்டங்களுக்கு அதிகமாகவும் பொது ஜனங்களின் நலத்துக்குச் சிறிதளவுமே பிரயோசனப் படுத்தினர். இதனால் வாக்கில்லாத மக்கள் கிளர்ச்சி செய்தனர். அப்படியே அரசியலுக்குத் தகுதியற்றவர்கள் என்று கூறப்பட்ட பெண்களும் பலமான கிளர்ச்சி செய்தனர். முடிவில் அனைவருக்கும் வாக்குக் கொடுத்தாலொழிய நிலைபெற்ற ஜனநாயகம் ஏற்படாதென்று கண்டு அதை ஏற்றுக் கொண்டனர்.

செங்கோலின் முக்கிய அம்சங்களைக் கவனித்தால் அதில் சாதாரண ஜனங்களுக்கு விளங்கக் கூடாத விஷயங்கள் அதிகமில்லை என்று புலப்படும். பசி, பயம், பலாத்காரம், பட்சபாதம் என்ற தீமைகளை விலக்குவதும் அமைதி, ஆரோக்கியம், அறிவு, ஆனந்தம் என்ற நன்மைகளைப் பெருக்குவதும் ராஜ்யத்தின் முக்கிய கடமைகளானால், அதிகப் படிப்பில்லாதவர்களும் இவைகளை ஒரு அரசாங்கம் எவ்விதம் சாதித்து வருகிறதென்று மதிப்பிடக்கூடும். இந்த உத்தேசங்களை நிறைவேற்றும் முறைகளைப் பற்றியே சிக்கலான பிரச்னைகள் எழும்பக் கூடும். அவற்றில் படித்தவர்களுக்குள்ளும் தீவிர அபிப்பிராய பேதங்கள் இருப்பது சகஜம். அனுபவம் ஒன்றே முடிவான வழிகாட்டும். அந்த அனுபவத்துக்கு இலக்கானவர்கள் பொதுமக்கள்.

வாக்காளர்களை நீண்ட நாள் வறுமையால் வருத்தவோ, தற்குறிகளாக இருக்கவோ எந்தப் பிரதிநிதித்துவ ஜனநாயகமும் விட்டுவிட முடியாது. இந் நலங்கள் அனைவருக்கும் வேண்டியதால் எல்லோரும் வாக்காளர்களாக இருப்பதே நலம்.

பொதுத் தொகுதிகளில்லாமல், தொழில் வாரியான தொகுதிகளாகப் பிரித்துத் தேர்தல் நடத்துவதால் திறமையுள்ளவர்களும், அந்தந்தத் தொழிலின் சூக்ஷ்மங்களையும், கஷ்டங்களையும் நன்கறிந்த பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்களென்றும் வாதிக்கப்படுகிறது. ஆனால் தொழில்வாரிப் பிரதிநிதிகள் பொதுநலத்தைக் காட்டிலும் தங்கள் தொழில் கூட்டங்களின் நன்மையையே நாடுவார்கள். இல்லாவிடில் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள். அதனால் பொதுநலம் குன்றிவிடும். ஆயினும் மேல்சபைகளுக்கு இம்முறை ஓரளவு கையாளப்படுகிறது.

வாக்காளர்களுக்குள் வித்தியாசம் பாராட்டலாகாது. ஆனால் தகுந்தவர்களே அபேட்சகர்களாக நிற்க வேண்டும் என்று விதிக்க வேண்டும். தகுதியானவர்கள் என்பதற்கு வேண்டிய படிப்பு, திறமை முதலியவற்றை அரசியல் அமைப்பிலேயே குறிப்பிட வேண்டும் என்று டாக்டர் ராஜேந்திரப் பிரசாத் உள்படப் பலர் பாரத அரசியல் நிர்ணய சபையில் வற்புறுத்தினர். நீண்ட விவாதத்துக்குப் பின் இது சாத்தியமில்லை, பட்சபாதமாகும் என்று நிராகரிக்கப்பட்டது. எவ்வித மான பரீட்சை வைத்தாலும், அதில் தேறாத பலர் நல்லவர்களாகவும், திறமை வாய்ந்தவர்களாகவும் இருப்பார்கள். ஆயிரக்கணக்கான வாக்காளர்கள் ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கும் பொழுது அவர்களின் பேராதரவைப் பெற்றவர்கள் அபேட்சகர்களாக நிற்கலாகாதென்ற விதியினால் ஜனநாயகத்தின் மீது மக்களுக்கு வெறுப்பு உண்டாகலாம். உயர்ந்த படிப்பு அல்லது வருமானத்தை நிபந்தனைகளாகச் செய்து விட்டால் பிரதிநிதிகள் ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர்களாகி அதன் நலத்தையே நாடுவார்கள்.

ஆதலால் பொதுஜனங்கள் தமக்கு இஷ்டப்பட்ட பிரதிநிதியைத் தேர்ந்தெடுப்பதே சரியான முறை என்று முடிவு செய்யவேண்டியிருக்கிறது.

தேர்தல் சரியாக நடைபெறுவதற்கு அபேட்சகர்கள் அரசியல் கட்சிகளின் சார்பிலோ, சுதந்திரமாகவோ நிற்பதற்குப் பூரண உரிமை இருக்க வேண்டும். தங்களுடைய கொள்கைகளையும், திட்டங்களையும் வாக்காளர்களுக்கு எடுத்துரைத்து ஆதரவு தேடச் சம வசதிகள் அளிக்கப்படுவதும் அவசியம். பொதுக் கூட்டங்களும், ஊர்வலங்களும் நடத்தும் பொழுது கலவரமில்லாமல் அமைதியை நிலைநிறுத்துவது சுலபமல்ல. அதிகாரத்திலுள்ள கட்சிக்குச் சாதகமாக அதிகார வர்க்கம் நடந்து கொள்ளக் கூடாது. அது பட்சபாதமின்றி நடந்து கொண்டாலும், எதிர்க்கட்சிகள் அதிகாரிகளைத் தூற்றாமல் இருக்கமாட்டார்கள். தேர்தல் காலங்களில் கூட்டங்களைச் சட்டத்துக்குட்பட்டு நிர்வகிக்கவும், அனாவசியமாக அடக்குமுறைகளைக் கையாளாமல் இருப்பதற்கும் தனிப் பயிற்சியும், அனுபவமும் தேவையாகும்.

தேர்தல் தேதி நெருங்கும் பொழுது வாக்காளர்களுக்குப் பணம் கொடுத்தும், அவர்கள்மீது செல்வாக்குள்ளவர்களுக்கு லஞ்சம் வழங்கியும் எப்படியாவது வெற்றி பெற வேண்டுமென்ற உணர்ச்சி வளரும். இவைகள் குற்றமென்று சட்டமிருந்த போதிலும், முதலில் ஜெயித்துப் பிறகு வழக்கு வந்தால் பார்த்துக் கொள்ளலாம் என்ற மனப்பான்மை உண்டாகும்.

நேரில் வாக்காளர்களுக்கோ, அவர்களின் ஜாதி, மதத்தலைவர்களுக்கோ பணம் கொடுக்காமல் கிராமத்தின் பொதுநலத்துக்கோ, மத ஸ்தாபனங்களுக்கோ தானம் செய்து வாக்குகளைச் சேகரிப்பதும் தேர்தல் தந்திரங்களில் ஒன்று. முதலாளித்துவமும், சொத்துரிமைகளும் வழங்கும் நாடுகளில் நியாயமான பொதுத் தேர்தல் சாத்தியமில்லை என்று சில சமத்துவவாதிகள் கூறுவதில் ஓரளவு உண்மையுண்டு.

ஆனால் பொதுமக்கள் மனத்தைச் சேவையினாலும், தியாகத்தாலும் கவர்ந்தவர்கள் இந்தக் கீழ்த்தர வழிகளுக்கு அஞ்சவேண்டியதில்லை என்பதையும் நாம் நேரில் கண்டிருக்கிறோம். 1937-ல் மாகாணப் பொதுத் தேர்தல்களில் காங்கிரஸ் அபேட்சகர்களில் பெரும்பாலோர் எவ்விதப் பணச் செலவுமின்றியே தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதர அபேட்சகர்களிடம் பணம் வாங்கினவர்கூட மஞ்சள் பெட்டியில் வோட்டுப் போட்டு வந்தனர்.

எந்தத் தேர்தலிலும் ஒரு ஸ்தானத்துக்கு ஒரு அபேட்சகரே வெற்றியடைய முடியும், மற்றவர்கள் தோல்வியுறுவது தவிர்க்க முடியாதது. ஆதலால், தேர்தலில் தோல்வியடை

வதை அவமானமாகக் கருதுவது தவறு. அதிகப் பணம் செலவழிக்காமல் இருந்தால், முகமலர்ச்சியுடன் அதை ஏற்றுக் கொள்ளலாம். வாக்காளர்களின் ஆதரவைத் தீய முறைகளில் தேடி வெற்றி பெறுவதைவிடத் தோல்வியே மேலானது என்று பலர் நியாயமான பிரசாரத்தோடு இருப்பியானால் சமூகத்தில் ஜனநாயகம் நன்கு வேரூன்றும்.

ஜாதி, வகுப்பு, மதம் என்ற பேதத்தைக் கொண்டு பிரசாரம் செய்வதோ, வாக்குக் கொடுப்பதோ ஜனநாயகத்துக்கு முற்றிலும் ஒவ்வாது. சட்டசபைகளில் பிரதிநிதியாக இருப்பது, கௌரவமென்று எண்ணுவதும் அறியாமை. அச்சபைகளின் நடவடிக்கைகளில் பங்கு எடுத்துக் கொள்ள முடியாதவர்களைத் தேர்ந்தெடுப்பதால் அவர்களுடைய தொகுதிக்கு எவ்வித நன்மையும் இல்லை. பிரதிநிதிகளுக்கும் மதிப்பு இராது. அறிவிலும், திறமையிலும் சிறந்தவர்களைப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கும் தொகுதிக்கும், வாக்காளர்களுக்கும் கௌரவமுண்டு. இக்காரணத்தாலேயே ஜனநாயகத்தில் பழுத்த நாடுகளில் பிரபல தலைவர்களைத் தங்கள் அபேட்சகர்களாக நிற்க வேண்டுமென்று தொகுதிகள் போட்டி போடுகின்றன.

சாதாரணமாக, கட்சிகளைச் சேர்ந்த அபேட்சகர்களை ஆதரிப்பது நல்லது. தனி நபர்களால் எவ்விதக் காரியமும் செய்ய முடியாது. ஆனால் இதற்கு ஒரு முக்கிய விதி விலக்கு உண்டு. அறிவிலும், ஒழுக்கத்திலும் சிறந்த ஒரு அபேட்சகர் எக் கட்சியின் கொள்கைகளையும் முற்றிலும் ஏற்காமல் சுதந்திர அபேட்சகராக நின்றால் அவரைச் சட்டசபைக்கு அனுப்புவதால் தொகுதிக்கும், தேசத்துக்கும் நன்மையுண்டு. பல சிக்கலான பிரச்னைகளில் ஓர் தனி அறிவாளி பெரும்பாலோருக்குச் சிறந்த யோசனைகளும், புத்திமதிகளும் கூறி அரசாங்கத்தின் போக்கை மாற்றக் கூடும்.

தேர்தல் காலத்தில் அபேட்சகர்கள் இரவு பகலாகத் தொகுதியில் அலைந்து திரிந்து ஆதரவு தேடுவதும், அதற்குப் பின் மறு தேர்தல் வரை வாக்காளர்கள் கண்களில் படாமல் சொந்த அலுவல்களைக் கவனிப்பதும் வழக்கமானால், ஜனநாயகத்தில் பொதுமக்களுக்கு அவநம்பிக்கை உண்டாகும். ஆதலால் ஒவ்வொரு பிரதிநிதியும் தன் தொகுதியின் வாக்காளர்களோடு நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ளுவது அவசியம். அவ்விதம் தொடர்பை விரும்பாத பிரதிநிதிகளைக் கண்டித்து, அடுத்த தேர்தலில் அவர் நிற்க முடியாதபடி அவர்மீது அருவருப்பை உண்டாக்குவது வாக்காளர் கடமையாகும். சட்டசபைப் பிரதிநிதிகள் மக்களின் தொண்டர்கள். அதற்குத் தகுதியுள்ளவர்களே அபேட்சகர்களாக முன் வரவேண்டும். அவ்வித அபேட்சகர்களுக்கே வாக்காளர்கள் வோட்டுப்போடுவார்கள். தேர்தலுக்குப் பின் பிரதிநிதிக்கும் வாக்காளர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்துவரும் என்ற சம்பிரதாயங்கள் நிலைபெற்ற பின்னரே பிரதிநிதித்துவ ஜனநாயகம் ஓங்கி வளரும்.

(தொடரும்)

● சென்ற ஒன்பதாம் தேதி இரவு சங்கீத கலாநிதி திரு டி. வி. சுப்பாராவ் காலமானார் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம். கர்நாடக சங்கீதத்தைப் போற்றி வளர்க்கும் சென்னை வித்வத் சமாஜத்தை ஆரம்பித்து வைத்த சங்கீத மேதைகளுள் திரு சுப்பாராவும் ஒருவர். ஆரம்பித்து வைத்ததுடன் நிற்காமல் அதன் துணைத் தலைவராக ஆரம்பத்திலிருந்தே பணியாற்றி வந்தார். தொழிலில் வழக்கறிஞர் எனினும், அரந்தாங்கி திரு வைத்தியநாதய்யரிடம் குரு-சிஷ்ய சம்பிரதாயப்படி சங்கீதம் பயின்று வீணையிலும், வயலின் வாத்தியத்திலும் பாண்டித்யமுள்ளவர். தியாகய்யரிடமும் புரந்தரதாஸரிடமும் அளவு கடந்த பக்தி கொண்டவர். புரந்தரதாஸர் சாஹித்தியங்களில் விசேஷ ஆராய்ச்சி நடத்திப் புகழ்பெற்றவர். வித்வத் சபையின் சங்கீத விவாத அரங்குக்கு ஆணிவேர் போன்றிருந்து, ஆண்டு தோறும் நடந்த சர்ச்சைகளுக்கே ஒரு பிரகாசத்தை அளித்து வந்தார். சென்னை, ஆந்திரா, அண்ணாமலை சர்வகலாசாலைகளில் கர்நாடக சங்கீதத்தைத் தனிக் கல்விக்குரிய ஒரு பாடமாகப் புகுத்திய சிறப்பு திரு சுப்பாராவைச் சாரும். வித்வத் சபையின் சார்பில் சிறந்த முறையில் கர்நாடக சங்கீதத்துக்குப் பணி புரிந்துவரும் சங்கீத ஆசிரியர் கல்லூரியின் நிர்வாகஸ்தராகவும் தலைவராகவும் பல ஆண்டுகள் செயல் புரிந்தார். அவரது மறைவு சென்னை வித்வத் சபைக்கு மட்டுமின்றிக் கர்நாடக சங்கீதத்துக்கே மகத்தான நஷ்டமாகும். அவருடைய பிரிவால் துயரமுற்றிருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். ●



சென்னையில்: கெயிட்டி, மஹாராணி

மற்றும் தென்னாடெங்கும்



★ ★ ஆராய்ச்சி அரங்கக் கட்டுரைகளைப் படித்துவிட்டுப் பல அன்பர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றனர். சொந்த அனுபவத்தைக் கொண்டு பலர் இச்செலாவணி நெருக்கடியைத் தீர்க்க வழியும் சொல்லியிருக்கின்றனர். ''பயர்ஸ்டோன் டயர் அண்டு ரப்பர் கம்பெனி'' யின் தென் மண்டல நிர்வாகி திரு கே. வி. பி. ராவ் அவர்கள் இது சம்பந்தமாக அனுப்பியுள்ள கட்டுரையைக் கீழே பிரசுரித்திருக்கிறோம். அயல் நாடுகளிலிருந்து வட்டிக்குக் கடன் வாங்குவதைக் காட்டிலும் அன்னிய மூலதனத்தை ஈர்ப்பது தொழிலபிவிருத்திக்கு ஏற்றது, லாபகரமானது என்பதைத் தக்க உதாரணங்களுடன் விளக்குகிறார் திரு ராவ். —ஆசிரியர்

அன்னியச் செலாவணி

கே. வி. பி. ராவ்

அயல் நாடுகளுக்கு நாம் ஏற்றுமதி செய்தாலொழிய அன்னியச் செலாவணி சம்பாதிக்க முடியாது. பிற தேசங்களுக்கு நமது சாமான்களை அனுப்பி விற்பனை செய்வது சுலபமல்ல. நம்மைப்போல் மற்ற நாடுகளும் நாம் உற்பத்தி செய்யும் பொருள்களை நம்மைக் காட்டிலும் மலிவான விலையில் உண்டாக்கி நமக்குப் போட்டியாக அனுப்பி வைக்கிறார்கள். உயர்ந்த ரகங்கள் என்று அவை போட்டியிடுகின்றன. நமது பண்டங்கள் வெளிநாடுகளில் நிரந்தரமாக விலை போக வேண்டுமானால், நமது பொருள்களின் தரம் மிகவும் உயர்வாக இருக்க வேண்டும். ஒரே மாதிரியாகவும் இருப்பது அவசியம். மாதிரிக்கென்று அனுப்பும் பொருளுக்கும் பின்னால் சப்ளை செய்யப்படும் பொருளுக்கும் தரத்தில் வித்தியாசம் காணப்படுவது நம்மிடத்திலுள்ள ஒரு குறைபாடு.

உற்பத்தியில் உயர்வும் வெற்றியும் காண வேண்டுமானால், தொழிலின் ஒவ்வொரு பகுதியிலும் ஆராய்ச்சி வளரவேண்டும். இதற்குப் பணம் ஏராளமாகச் செலவாகும். விஞ்ஞான நுட்பங்களை ஆராயும் திறமை வாய்ந்த சாமர்த்தியசாலிகள் வேண்டும். நுட்பமான யந்திரங்களும் உபகரணங்களும் வேண்டும். இவையனைத்தும் நம்மிடம் தற்சமயம் போதிய அளவில் இல்லை. தொழில் - நுண்ணறிவு தொழில்-செயல் முறை எனப்படும் இவற்றை இதர நாடுகளிலிருந்து பணம் கொடுத்தோ, அல்லது சலுகை காட்டியோ பெற்றுக் கொள்ளுவது சில சமயங்களில் லாபகரமாக இருக்கும். இதர நாடுகளில் இவ்வாறு செய்வது வெகு சகஜம். அமெரிக்க ஐக்கிய நாட்டில்கூட மற்ற நாடுகளிலிருந்து பணம் கொடுத்துத் தொழில் நுட்பங்களைத் தெரிந்து கொள்ளுகின்றனர். நம் நாட்டில் அடுத்த 20 அல்லது 25 வருஷங்களுக்காவது தொழிற் நுட்பங்களுக்கும் செயல் - முறை அறிவுக்கும் பிற நாடுகளை நம்பித்தான் இருக்க வேண்டும் என்பது பொதுவாகவே ஒப்புக் கொள்ளப்படுகிறது. ஸோவியத் ருஷ்யாகூட, புரட்சிக்குப் பின் அபிவிருத்தித் திட்டங்கள் வகுத்தபோது, இங்கிலாந்திலிருந்தும் அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்தும்தான் தொழில் நுட்பங்களைப் பெற்றுக் கொண்டது. அந்த நாடுகளெல்லாம் இம்மாதிரி செய்திருக்கும் போது நாம் மட்டும் அயல் நாடுகளிலிருந்து காத்துக் கொண்டிருக்கும் உதவியையும், தொழில் நுட்பங்களையும் ஏற்றுக் கொண்டு அயல்நாட்டுத் தொழிலதிபர்களை நம்நாட்டுத் தொழில்களில் பங்கு கொள்ளும்படி அழைக்கத் தயங்க வேண்டிய அவசியமில்லை. இவ்வுதவியை நாம் ஏற்றுக் கொண்டால், அயல் நாட்டு மூலதனம் தங்கு தடையின்றி நம்முடைய பாரத நாட்டுக்குக் கிடைக்கும்.

அயல்நாட்டு மூலதனத்துக்காகக் காத்துக் கிடக்கும் நாடு இந்தியா ஒன்றுதான் என்பதல்ல. பல நாடுகள் இம்மாதிரி நிலையிலிருக்கின்றன. பார்க்கப் போனால் அவையெல்லாம் நம்மைக் காட்டிலும் அதிகமாகத் தேவையுள்ள நாடுகள். அவர்களெல்லாம் அயல் நாட்டு மூலதனத்தையும் அயல்நாட்டுத் தொழிலதிபர்களையும் வரவேற்கும் முறை நாம் அனுஷ்டிக்கும் முறைக்கு வேறானது. அதனால் அயல்நாட்டு மூலதனம் வெகு சுலபமாக இதர நாடுகளுக்குப் போகிறது.

இதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அன்னியச் செலாவணி எதற்காக நமக்குத் தேவைப்படுகிறது? ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு வேண்டிய யந்திரச் சாதனங்களை வாங்கவும், நாட்டின் தொழில் வளத்தை - சர்க்கார் தொகுதியிலாகட்டும், தனியார் தொகுதியிலாகட்டும் - பெருக்கவும்தானே. நமக்குத் தேவைப்படும் சாதனங்கள் அயல் நாடுகளிலிருந்து கடனாகக் கிடைத்தாலென்ன? அயல் நாட்டு மூலதனமாக நம் நாட்டுத் தொழில் நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்டால் என்ன? இரண்டிலும் முடிவு ஒன்றுதானே? நாம் வெற்றியுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி வாங்குகிற கடன்களெல்லாம், அடிப்படையில் அரசியல் காரணங்களுக்காகத்தான் கிடைக்கின்றன. எவ்வளவுதான் இல்லை என்று சொன்னாலும் இதில் ஓரளவுக்கு உண்மை இருக்கிறதென்பதை மறுக்க முடியாது. ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

கடனென்றால் வட்டியுடன் திருப்பிக் கொடுக்க வேண்டும். அன்னிய மூலதனமானால் அநேகமாக நிரந்தரமாக நம் நாட்டிலேயே நிலைத்துவிடக் கூடும். லாபத்தையும் சம்பாதித்து அதைக் கொண்டே திருப்பிக் கொடுக்க வேண்டிய தொகைக்கு வழி வகுத்துக் கொள்ளும். லாபத்தில் வருமானவரி மூலம் இந்திய அரசாங்கத்துக்கு வருவாய் கிடைக்கும். இங்கே செயல் புரியும் ஒவ்வொரு வெளிநாட்டுக் கம்பெனியும் 53 சதவிகிதம்

"என்னைத் தெரிகிறதா, சார்? நேற்று எங்கேயோ பராக் பார்த்துக் கொண்டு போனீர்கள். கார் உங்கள் மேல் ஏற இருந்தது. நான் காப்பாற்றினேனே?"



"என்றைக்கு?"
"நேற்றைக்கு சார்"
"காலையிலா? சாயங்காலமா?"

லாபத்தில் வரி செலுத்துகிற படியால் சர்க்கார்தான் அதிகமாக லாபமடைந்து வருகிறார்கள். முதலீடு செய்யப்பட்ட மூலதனமும் அரசியல் காரணங்களுக்கின்றி, தொழில் முறையிலும் நமக்குக் கிடைக்கும்.

இவ்வாறு நன்மைகள் பலவிதமாக இருந்தாலும் அன்னிய மூலதனத்தை நாம் நட்பு முறையில் வரவேற்றால்தான் அது நமது நாட்டுக்குக் கிடைக்கக்கூடும். வரவேற்பது மட்டும் போதாது; வரும்படி செய்ய வேண்டும். லாபம் சம்பாதிப்பதிலும் லாபத்தைச் சொந்த நாட்டுக்கு அனுப்புவதிலும், திட்டவட்டமான விதிகளை அரசாங்கம் மேற்கொள்ளத் தேவையில்லை. அதற்கு மாறாக, லாபத்தையெல்லாம் வேண்டுமானால் தாராளமாக நாட்டுக்கு வெளியே எடுத்துச் செல்லலாம் என்று விதி ஏற்படுத்துவது நல்லது. அவசியமானால் மூலதனத்தைக்கூட எடுத்துச் செல்லலாம் என்று விதி இருக்க வேண்டும். இம்மாதிரி வசதிகள் இதர நாடுகளில் தாராளமாக அளிக்கப்படுகின்றன. "இன்னின்ன வகைகளில் நாங்கள் சலுகைகள் அளிக்கிறோம்" என்று பத்திரிகைகளில் விளம்பரங்கள் மூலம் பிரகடனப்படுத்துகிறார்கள். சில உதாரணங்கள் கொடுக்கலாம். போர்டோரிக்கோ என்னும் நாடு "பார்ச்சூன்" (Fortune) என்னும் பத்திரிகையில் செய்துள்ள விளம்பரத்தின் ஒரு பகுதியைக் கீழே கொடுத்திருக்கிறேன் :—

போர்டோரிக்கோவில் நீங்கள் செய்யும் முதலீடு உங்களுக்கு அதிக லாபத்தைப் பெருக்குகிறது. ஏன் தெரியுமா?

1. ஐந்து வருஷத்திலிருந்து பத்து வருஷங்களுக்குச் சொத்து வரியிலிருந்து உங்களுக்கு விலக்களிக்கப்படுகிறது.

2. உற்பத்திக்குத் தேவையான கச்சாப் பொருள்கள், யந்திரங்கள் முதலியவற்றுக் கெல்லாம் உற்பத்தி வரி நிரந்தரமாகக் கிடையாது.

3. தொழிலாளிகள் ஏராளமாக இருக்கின்றனர். மொத்தமுள்ள 650000 தொழிலாளிகளில் லக்ஷம் பேர்கள் வேலையில்லாதிருக்கின்றனர்.

4. சுங்கக் கட்டுப்பாடுகள் எதுவுமில்லை. அமெரிக்காவுடன் இணைந்திருப்பதால், பணத்தைத் தடையின்றி வேண்டியபோது எடுத்துச் செல்லலாம்.

இம்மாதிரி அவர்கள் எல்லோரும் தாங்கள் அளிக்கும் சலுகைகளைப் பறைசாற்றி அன்னிய மூலதனத்தைத் தங்கள்பால் ஈர்க்கிறார்கள். இதே போல் ஐரோப்பிய நாடுகளான பெல்ஜியம், ஹாலந்து, லக்ஸம்பர்க், மேற்கு ஜெர்மனி முதலிய நாடுகளும் அன்னிய மூலதனத்தைக் கூவி அழைக்கின்றன.

நாமும் அவ்வாறு செய்ய வேண்டும். அயல் நாட்டுத் தொழிலதிபர்களுக்கு உறுதியளிக்க வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு நம்மிடம் நம்பிக்கை பிறக்கும். நம்பிக்கையிலிருந்து அன்னிய மூலதனம் நம் நாட்டுக்குப் பாயும். தொழிற்சாலைகள் நம் நாட்டில் பெருவாரியாக நிறுவப்படும். மூலதனத்தை ஈர்க்கவும், தொழில் நுட்பங்களைப் பணச் செலவின்றி அறியவும் எடுத்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கைகளில் இதுதான் முதலாவது. இம்மாதிரி அளிக்கப்பட வேண்டிய சலுகைகள் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. அவற்றுக்கு 20 அல்லது 25 வருஷங்கள் என்று அந்தந்தத் தொழில் நிலைக்கேற்றவாறு கால வரையறையும் ஏற்படுத்திக் கொள்ளலாம். 20, 25 வருஷ காலம் அன்னியத் தொழிலதிபர்களிடையே நம்பிக்கையை நிலைநாட்டப் போதுமானதென்றே எனக்குத் தோன்றுகிறது. அயல் நாட்டு மூலதனமும் தொழில் நுட்பமும் செயல் முறையும் நமக்குக் கிடைக்கத் தொடங்கி விட்டால் நமது செலாவணி நெருக்கடி அநேகமாகத் தீர்ந்து விடுவது மல்லாமல், உயர்ந்த ரகச் சாமான்கள் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்டு, தரத்திலும் அளவிலும் அவை உயர்ந்து விளங்கும். அப்போது பிற தேசப் பொருள்களுடன் உலகச் சந்தையில் நாமும் போட்டி போட முடியும். விசேஷமாக ஏற்றுமதியும் செய்து, செலாவணியும் சம்பாதிக்கலாம். நாட்டின் பொருளாதாரத்தைச் சீரான நிலைக்குப் படிப்படியாக உயர்த்திவிட முடியும்.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் வரி செலுத்திய பின் உங்கள் நிகர லாபம்	போர்டோரிக்கோவில் நிகர லாபம்
29,500 டாலர் என்றால்	50,000 டாலர்
53,500 ,,	100,000 ,,
245,500 ,,	500,000 ,,

தமிழ்நாடு உயர்ந்தது!

பகீரதன்



தமிழ் மக்களின் சீர் உயர்ந்து விட்டது! தமிழும், தமிழ் நாடும் தமிழ் மக்களின் பெயரும் இமயத்தைப் போல் உயர்ந்து விட்டன! இமயத்துக்கு அப்பாலும் ஆசியா கண்டம் முழுதும் சிறப்பு பரவி விட்டது!

"இதுகாறும் ஆசியாவிலேயே இம்மாதிரி ஒரு கவிஞனுக்கு விழா நடந்ததில்லை. நானூறு மைல் நீளம் ஊர்வலம் விட்டு மகிழ்ந்ததில்லை. பல லட்சக்கணக்கான மக்கள் இது போன்ற ஊர்வலத்தைக் கண்டு களிக்கும் பாக்கியம் பெற்றதில்லை!" என்று எட்டயபுரத்தில் செப்டம்பர் 11, 12 தேதிகளில் நடைபெற்ற கவியரசர் பாரதி விழாவுக்கு வந்த ஒரு லட்சம் தமிழ்ப் பெரு மக்களும் சொல்லிச் சொல்லி வியந்தார்கள்.

இரண்டு நாளையத் திருநாளுக்காக எட்டயபுரத்தில் ஒரு லட்சம் மக்கள் கூடிக் கலந்தார்கள். தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையிலிருந்து செப்டம்பர் ஒன்பதாம் தேதி காலையில் ஊர்வலம் புறப்பட்டது. முன்னால் பாரதியின் திரு உருவத்தை ஏந்திய கார் செல்ல அதைத் தொடர்ந்து, ஐம்பது கார்களில் பாரதியின் பாடலைப் பாடிக் கொண்டு கலைஞர்கள் சென்றார்கள். ஒரு மைலா? இரண்டு மைலா? ஒரு கோடியிலிருந்து இன்னொரு கோடிக்கு, நானூறு மைல் தூரம், காரில் ஊர்வலமாகச் சென்றார்கள். பாரதியைப் பெற்ற புண்ணிய பூமியான எட்டயபுரம் சென்றார்கள். இந்தக் காணக் கிடைக்காத ஊர்வலத்தைத் தமிழ்நாட்டில் சுமார் பத்து லட்சம் மக்கள் பார்த்துக் களித்தார்கள். எட்டயபுரம் திருவிழாப் பந்தலில் ஐம்பதினாயிரம் பேருக்கு மேல் வந்து குவிந்தார்கள். இவர்களில் பெண்மணிகள் மட்டும் பத்தாயிரம் பேர்களுக்கு மேல் இருக்கும். இவ்வளவு பெருங் கூட்டத்தில், இத்தகைய ஜன நெருக்கடியில் ஒரு துர்ச் சம்பவம்கூட நடக்கவில்லை. ஒருவருக்கும் ஒரு சிறு காயமும் ஏற்படவில்லை. எந்தவிதமான சேதமோ, நஷ்டமோ யாரும் அடையவில்லை. இவ்வளவு மங்களகரமாகப் பாரதியார் விழா நடந்தேற, கருணைபுரிந்த தமிழ்ப்பெருமக்களை வாயார வாழ்த்த வேண்டும். அவர்களுக்குத் தலை குனிந்து வணங்க வேண்டும்!

"ஒரு குக்கிராமத்தில், எட்டயபுரத்தில் ஒரு லட்சம் பேர்கள் கூடும்படி பாரதியார் விழா நடத்தலாமா? தமிழ் நாட்டின் தலை நகரான சென்னை நகரிலேயே நடத்தக் கூடாதா?" என்று உடல் நலுங்காத உத்தமர்கள் சிலர் குறைப்பட்டார்கள்.

அதற்கு யார் என்ன செய்வது? சென்னை நகரம் பாரதியாரைத் தகனம் செய்யும் பாக்கியம் பெற்ற நகரம்தான். ஆனாலும் பாரதியார் குக்கிராமமான எட்டயபுரத்தில்தானே பிறந்தார்? குடி தண்ணீர்கூடக் கிடைக்காத கரிசல் பூமி ஆயிற்றே! பல வசதிகளும் குறைந்த சின்னஞ் சிறு கிராமம் ஆயிற்றே! இங்கே நாம் பிறக்கலாமோ? என்று அவர் அல்லவா யோசித்திருக்க வேண்டும்!

தமிழ்நாட்டில்தான் இப்படி இன்னமும் சிலர் குறைப்படுகிறவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் குறைப்படுவதற்கென்றே பிறந்தவர்கள். அவர்கள் தங்கள் வாழ்நாளெல்லாம் குறைப்பட்டுக் கொண்டே இருக்கட்டும்!

உலகம் அப்படி நினைக்கிறதா? இல்லை. உலக மொழியாகிய ஆங்கில மொழியைத்

தாய்மொழியாகக் கொண்ட ஆங்கிலேயர்கள் அப்படி நினைக்கவில்லை. ஆங்கில மகாகவி யான ஷேக்ஸ்பியருக்கு லண்டன் மாநகரத் தில் அவர்கள் ஞாபகார்த்த மண்டபம் அமைக்கவில்லை. ஷேக்ஸ்பியர் பிறந்த 'ஸ்டா போர்டு ஆன் ஆவன்' என்னும் கிராமத்தில் தான் அந்த மகாகவிக்கு ஞாபகார்த்த நாடக மண்டபம் அமைத்திருக்கிறார்கள்.

ஆண்டுதோறும் ஷேக்ஸ்பியர் பிறந்த புண் ணிய தினத்தில் பல்லாயிரக் கணக்கான ஆங்கில மக்கள் அந்த நாட்டின் பல பாகங் களில் இருந்தும் திரண்டு வந்து அந்தக் கிரா மத்தில் திருவிழா நடத்துகிறார்கள்.

நிசப்தமாய் அமைதி குடிகொண்டு வாழும் அந்தப் பிரதேசம் அப்போது ஜனக் கூட்டம் நிறைந்து ஒரே கோலாகலமாய்க் காட்சி அளிக்கும். புள்ளினங்களின் இனிய கானம் கேட்டுக் கொண்டிருந்த இடத்தில் காது செவிடுபடும்படியான பலவித வாத்திய முழக்கங்கள் கேட்கும்.

அரங்கமேடையில் ஷேக்ஸ்பியர் நாடகங் களை உணர்ச்சியுடன் நடிப்பார்கள். இலக்கிய மேடைகளில் ஷேக்ஸ்பியரின் நாடகங்களைப் பற்றித் திறன் ஆய்வு செய்வார்கள்.

இந்தமாதிரி யெல்லாம் ஆங்கில மக்கள் தங் கள் கவியைப் போற்றுகிறபடியினால்தான் அவர்கள் தங்களுக்கு நேர்ந்துவரும் விபத்துக் களை யெல்லாம் கடந்து ஜெயபேரிகை முழக்கு தல் சாத்தியமாகிறது.

இம்மாதிரி தமிழ்நாடும் தமிழ் மக்களும் எதிர்காலத்தில் ஜயபேரிகை முழக்கி மகோன் னத நிலையை அடையப் போகிறார்கள் என்ப தற்குப் பல அறிகுறிகள் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்றுதான் நம்மை வாழ்விக்க வந்த மகாகவி சுப்பிரமணிய பாரதி பிறந்த எட்டயபுரத்தில் அவருக்குச் சிறப்பாக விழா எடுத்துப் போற்றி வருவது.

** ** **

செப்டம்பர் 11ந் தேதி மகாகவி பாரதி யார் அமரரான திருநாள். இருநூறு ஆண்டுகள் அடிமை வாழ்வில் உழன்ற மக்க ளுக்குச் சுதந்திர உணர்ச்சியையும், தேசபக்தி யையும், தெய்வபக்தியையும், மொழிஅன்பை யும் ஊட்டிய ஒரு மகாகவியின் நினைவைக் கொண்டாடுவது இயல்புதான். அதைமுன்பே உணர்ந்த பேராசிரியர் கல்கி அவர்கள் பாரதி யார் பிறந்த எட்டயபுரத்தில் அவருக்கு ஒரு ஞாபகார்த்த மணிமண்டபம் கட்டித் தமிழ் மக்களின் பெருமையை உயர்த்தி விட்டார்.

பாரதத்திலேயே முதன் முதலாக ஒரு மகா கவிக்கு ஞாபகார்த்த மண்டபம் கட்டிய பெருமையைத் தமிழ்மொழியும் தமிழ் நாடும் அடையும்படி செய்து விட்டார்.

இந்த மண்டபம் கல்லினாலும் சுண்ணாம்பி னாலும் கட்டியதா? இல்லை. சிமெண்டினாலும் இரும்பினாலும் கட்டியதா? இல்லை. பொன் னைக் கொண்டும் மண்ணைக் கொண்டும் கட்டிய மாளிகையுமில்லை. அதிகாரத்துக்கும் ஆணைக் கும் பணிந்து கட்டியதுமில்லை.

அன்பினாலும் ஆசையினாலும் கட்டிய மணி மண்டபம். ஆசையோடும் பாசத்தோடும் கட்டிய எழில் மாளிகை. தமிழ் மக்கள் தங்கள் இதயம் கவர்ந்த கவிஞருக்குப் பக்தி யோடு சமர்ப்பித்த காணிக்கை.

இத்தகைய சிறப்பு மிக்க பாரதியார் மணி மண்டபத்துக்கு முன்னால் விஸ்தாரமாக நிர்மாணிக்கப்பட்டிருந்த வ. உ. சிதம்பரனார் அரங்கில்தான் பாரதி விழா நடைபெற்றது. தமிழ் மக்களின் உள்ளத்தைத் தமது நடிப்புத்

வரவேற்புக்குழுத் தலைவர் திரு சிவாஜி கணேசன், விழாத் தலைவர் திரு டி.கே.'ஷண்முகம்,' இலக்கிய மகாநாட்டைத் துவக்கி வைத்த திரு. எம். பக்தவத்சலம் முதலியோர் அமர்ந்திருக்கின்றனர்.





பாரதி விழாவில் திறந்து வைத்த பேராசிரியர் கல்கி அவர்களின் திரு உருவப் படத்துக்கு அடியில் கலைஞர்கள் அமர்ந்திருக்கின்றனர்.

திறமையினாலும் தமிழ்ப் பண்பாலும் அன்புப் பணியினாலும் கவர்ந்திருக்கும் திரு சிவாஜி கணேசன் இந்த வருஷத்துப் பாரதி விழாப் பொறுப்பை ஏற்று நடத்தினார்.

ஒப்பற்ற புனிதத் தன்மை பொருந்திய மகா கவியின் திருவிழாவில் கலந்து மகிழ்வதற்குச் சென்னை மாகாணத்து முதன் மந்திரி, கல்வி மந்திரி, போலீஸ் மந்திரி, தமிழரசுக் கழகத் தலைவர் திரு ம. பொ. சி., நாடகக் கலைஞர் திரு டி. கே. ஷண்முகம், தமிழ் நாட்டிலுள்ள தமிழ் அன்பர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகாசிரியர்கள், தமிழ்ப் பெரும் புலவர்கள், சினிமா நாடகக் கலைஞர்கள் எல்லாரும் வந்திருந்தார்கள்.

''ஐயமுண்டு பயமில்லை மனமே—இந்த ஜன்மத்திலே விடுதலையுண்டு நிலையுண்டு''

என்று பாடிய தீர்க்கதரிசியின் விழாப் பந்தலில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் செப்டம்பர் 11-ந் தேதி வியாழக்கிழமை காலையிலேயே கூடிவிட்டார்கள்.

இந்த அற்புதக்காட்சியைப்பார்க்கப் பாரதியார் வானவீதியில் வந்து விட்டார். ''தலை நிமிர்ந்து நில்!'' என்றும் ''மார்பை நிமிர்த்தி நட!'' என்றும் தம் வாழ்நாளெல்லாம் உபதேசித்த தீர மகாகவி தலைகுனிந்து தாம் பிறந்த ஊரான எட்டயபுரத்தைப் பார்த்தார். எட்டயபுர வீதிகளில் நகைச் சுவை நடிகர் திரு டி. என். சிவதாணுவின் தலைமையில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்து கொண்டு தம்முடைய ஞாபகார்த்த மணி மண்டபத்திலிருந்து தாம் பிறந்த இல்லத்துக்குச் செல்லும் ஊர்வலத்தைப் பார்த்தார். ''வாழ்க கவியரசர்!'' ''வாழ்க பாரதியார்!'' என்று ஆயிரமாயிரம் தமிழ் மக்கள் கூடி நின்று கோஷிப்பதையும், தம்முடைய வீட்டிலே தாயின் மணிக் கொடி ஏறிப் பறப்பதையும், அதன் பட்டொளியைப் பார்த்துத் தம்முடைய தாய் மாமன் திரு சாம்பசிவய்யர் பரவசப்படுவதையும் பார்த்து ''ஆகா! நாம் கண்ட கனவு பலித்து விட்டதே!'' என்று வியப்படைந்தார்.

அவருடைய வியப்பைக் காற்றிலே மிதந்து வந்த நாதஸ்வர இசை கலைத்தது! இசை பிறந்து வந்த திசையை நோக்கிச் சென்றார். பாரதி மண்டபத்துக்கு எதிரிலே தம்முடைய நண்பர் வ. உ. சி. யின் திருநாமத்தில் அமைந்துள்ள விசேஷ அரங்கில் காருகுறிச்சி திரு அருணாசலம் அவர்கள் நாதஸ்வரம் வாசித்துக் கொண்டிருப்பதைக் கண்களைத் திறந்து பார்த்தார். ''ஆடுவோமே! பள்ளு பாடுவோமே!'' ''வெள்ளைத் தாமரை பூவில் இருப்பாள்!'' ''சின்னஞ் சிறு கிளியே!'' ஆகிய பாடல்களைத் தம்மை மறந்த லயந் தன்னில் காருகுறிச்சி வாசிப்பதையும், அவருடைய கச்சேரியை ஐம்பதினாயிரம் மக்கள் கூடி அமர்ந்து அமைதியாகக் கேட்பதையும் கண்டு அதிசயித்தார். மக்களோடு மக்களாய் மகாகவி பாரதியாரும் விழாவில் கலந்து கொண்டு விட்டார். ஆம்; கவியரசர் சுப்பிரமணிய பாரதியார் சூட்சும உருவில் அங்கு வந்து தமிழ் மக்களுடன் சேர்ந்து ஆனந்தப் பட்டது போலவேதான் தோன்றியது.

திரு கே. வி. சீனிவாசன் கடவுள் வணக்கம் பாடப் பாரதி விழா 'ஜாம் ஜாம்' என்று ஆரம்பமாயிற்று. வரவேற்புக் குழுத் தலைவர் திரு சிவாஜி கணேசன் பாரதி மணி மண்டபம் கட்டிய பேராசிரியர் கல்கி அவர்களுக்

கும், பாரதிக்கு விழா கொண்டாடத் தம் போன்ற கலைஞர்களுக்கு வழிகாட்டிய கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கும் அஞ்சலி செலுத்தி விட்டுத் தம்முடைய கனிரென்ற குரலில் உணர்ச்சியுடன் வரவேற்புரை கூறினார். விழாவுக்கு வந்திருந்த மந்திரிகளையும், எழுத்தாளர்களையும், கலைஞர்களையும், பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களையும் கரங்குவித்து, சிரம் தாழ்த்தி வரவேற்றார். இவ்வரவேற்புரையைக் கேட்ட போது திரு சிவாஜி கணேசன் அவர்களின் தமிழ்ப் பற்று நன்கு வெளியாயிற்று.

பாரதியாரின் விழாவுக்குச் சிறப்பு அளித்த அம்சம் கல்வி மந்திரி திரு சி. சுப்பிரமணியமே வந்து கொடி ஏற்றுவித்ததாகும். பாரதியிடம் பக்தி கொண்டு பணியாற்றி வரும் தலைசிறந்த தமிழ் அன்பர் திரு சுப்பிரமணியம் என்பது அவருடைய பேச்சிலிருந்து தெளிவாயிற்று. எல்லா விஷயங்களையும் தமிழில் சொல்வதற்குப் பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். நடிகர்களையும் படாதிபதிகளையும் பார்த்து வேறு மொழியிலிருந்து கதைகள் எடுப்பதை விட்டுவிடவேண்டும் என்று சொன்னது, மேடைமீது அமர்ந்திருந்த சிறந்த தமிழ் எழுத்தாளர்களிடமிருந்து 'சபாஷ்!' பட்டத்தைப் பெற்றது. 'கலைஞர்கள் போட்டி போட்டுக் கொண்டு ஆண்டுதோறும் எட்டயபுரத்தில் பாரதி விழா நடத்த வேண்டும். அதற்கு அரசாங்கத்தின் உதவியும், ஒத்துழைப்பும் இருக்கும்' என்று பாரதி விழா மேடையில் அவர் கூறியது மிகப் பொருத்தமாக இருந்தது. அதோடு கல்வி மந்திரி இது போன்ற கலைஞர்கள் விழாவுக்கு ஊக்கமளிப்பார் என்பதற்கும் அத்தாட்சியா யிருந்தது.

இன்னொரு முக்கிய அம்சம் ராஜ்ய முதன் மந்திரி திரு காமராஜ் நாடார் அவர்கள் விழாவைத் துவக்கி வைத்துச் சில நிமிஷங்கள் பேசியது. இது போன்ற விழாவைத் துவக்கி வைத்துத் திரு காமராஜ் நாடார் பேசுவதுண்டு. ''விழாவைத் துவக்கிவைத்து விட்டேன்!'' என்று சொல்லி விட்டுப் பேச்சை முடித்துக் கொண்டு விடுவார். ஆனால் எட்டயபுரத்தில் அவர் உண்மையிலேயே விழாவைத் துவக்கி வைத்துப் பேசினார். ''தமிழகமெங்கும் பாரதியார் விழாவை எட்டயபுரத்தில் கொண்டாடுவது போலவே சிறப்பாகக் கொண்டாட வேண்டும்'' என்றார். ''பாரதியார் பாடல்களைப் பற்றிப் பேசுவதோடு பாரதி பாடல்களை உணர்ச்சியோடு பாடச் செய்ய வேண்டும். பாரதியார் பாடல்கள் தமிழகத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் முழங்க வேண்டும்'' என்பது போன்ற பல நல்ல கருத்துக்களை வெளியிட்டுச் சபையோர் புரிந்து கொள்ளும்படி செய்தார். தமிழ் மக்கள் ஏராளமாகக் கூடியிருக்கும் சபையில் அவர்களுக்குத் திருப்தியாகப் பேசக்கூடிய ஆற்றல் படைத்தவர் முதன் மந்திரி திரு காமராஜ் நாடார் என்னும் விஷயம் தெளிவாகத் தெரிந்தது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, சிறப்பளித்த அம்சம் கலைஞர் நடத்தும் விழாவுக்கு ஒரு கலைஞரே தலைமை வகித்ததாகும். நாடகக் கலைஞர் திரு டி. கே. ஷண்முகம் பேச்சு வன்மை படைத்தவர்; நல்ல தமிழ் ஆர்வம்

உள்ளவர்; பாரதியிடம் பக்தி படைத்தவர். கலையோ அவருடைய சொந்த விஷயம். பிறகு கேட்பானேன்? சபையோருக்கு உபயோகமான சொற்பொழிவு ஒன்று கிடைத்தது. கலைஞர் குழாம் பாரதிவிழா நடத்தவேண்டிய அவசியத்தைப் பற்றிப் பேசினார். பெண்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கும் கொடுமையையும், தமிழ் மக்களுக்குள் இருக்கும் சாதி வேற்றுமைகளும், ஏற்றத் தாழ்வுகளும் ஒழிய வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினார்.

சாதிகள் இல்லையடி பாப்பா!—குலத்
தாழ்ச்சி உயர்ச்சிசொலல் பாவம்

என்று மகாகவி பாடிய தீர்க்கதரிசன வாக்கை எடுத்துக் காட்டினார்.

கடல் கடந்து வாழும் தமிழ் மக்கள் அல்லல்கள் தாங்காமல் போடுகின்ற அபயக் குரலைக் கேட்கும்படி செய்தார். கடைசியாக இவற்றையெல்லாம் கண்டு நாம் சோர்வடைய வேண்டியதில்லை. இன்பமும் துன்பமும் கலந்ததுதான் வாழ்க்கை. ஆகவே,

துன்பம் நெருங்கிவந்த போதும்—நாம்
சோர்ந்துவிட லாகாது பாப்பா!
அன்பு மிகுந்ததெய்வம் உண்டு—துன்பம்
அத்தனையும் போக்கிவிடும் பாப்பா!''

என்ற பாரதியார் பாடலை உணர்ச்சியோடு பாடிக் காட்டிக் கூடியிருந்த சபையோருக்கு ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தினார்.

ஜெமினி அதிபர் திரு எஸ். எஸ். வாசன் அவர்கள் பாரதிக்கு மணிமண்டபம் கட்டிய பேராசிரியர் கல்கி அவர்களின் திருஉருவப் படத்தைத் திரை நீக்கம் செய்து பேராசிரியர் தமிழுக்கும், தமிழ் நாட்டுக்கும், தமிழ் மக்களுக்கும், செய்திருக்கும் மாபெரும் தொண்டைப் பற்றி விளக்கினார். ''எல்லா விஷயங்களையும் தமிழிலே நன்றாகச் சொல்லலாம்'' என்று சொல்லிப் பேராசிரியர் கல்கி அவர்களின் எழுத்தின் சக்தியை எடுத்து, உதாரணம் காட்டினார். திரு எஸ். எஸ். வாசன் பேசியது தமிழ் மொழியின் எதிர் காலத்தைப் பற்றி நம்பிக்கையை ஊட்டியது என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகிறேன்.

''தம்பிகளே! உங்களுக்குள் ஏன் போட்டி போட்டுக் கொள்கிறீர்கள்? கலைஞர்களுக்குள் உயர்வு தாழ்வு ஏது? கலைஞர்கள் எல்லாரும் ஒரே சமம்தான். அவர்களுக்குள் வேற்றுமை இல்லை; வித்தியாசமில்லை என்று எடுத்துக் காட்டினார் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன். அவருடைய பால் வடியும் முகத்தைப் பார்க்கும் போதெல்லாம் அவர் அப்படி சொல்வதாகத்தான் எனக்குப்படுகிறது'' என்று சொல்லிக் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் படத்தைத் திறந்து வைத்தார் நடிகர் திலகம் திரு சிவாஜி கணேசன்.

திரு சிவாஜி கணேசன் சொன்னதை மற்ற நடிகர்கள் எடுத்துக் கொள்வார்களா மாட்டார்களா என்பதைப் பற்றி நாம் ஒன்றும் அபிப்பிராயம் சொல்வதற்கில்லை. எனினும் அவர் கூறிய கருத்து இப்பொழுது கலைஞர்களுக்கு அவசியமாக இருக்கிறது. கலைஞர்களுக்குள் ஒற்றுமை வளர்க்கும் பணி ஒருபுறம் இருக்கட்டும். கலையும் தமிழும் வளர்க்கும் பணிதானே எட்டயபுரத்தில் நமக்கு முக்கியமாக இருந்தது. **(அடுத்த இதழில் முடியும்)**



தென் இந்திய ஆபீஸ் : 5/149, பிராட்வே, சென்னை - 1



பாகவதமாகிய

முக்தி வயல்

பௌராணிகர்



4. பரீக்ஷித்து மன்னர்

[பரீக்ஷித்து மன்னர் அந்தணகுமாரனுல் சாபம் பெற்றதும், சுகரிடம் பாகவதம் கேட்டதும்.]

பரீக்ஷித்து மன்னர் நெறி தவறுமல் தம் நாட்டை ஆண்டு வந்தார். உத்தரனுடைய மகள் இராவதியை மணம் செய்துகொண்டார். அவளிடம் ஜனமேஜயன் முதலாக நான்கு மைந்தரை அடைந்தார்.

ஒரு சமயம், பரீக்ஷித்து தமது எல்லைக்குள் அடங்கிய குருஜாங்கல தேசத்தில் வசித்து வந்தார். அப்பொழுது கலியுகம் பூமியைச் சூழ்ந்து கொண்டதைக் கேட்டு மிக்க வருத்தம் அடைந்தார். கொடியோரைக் கொல்ல வேண்டி, வில்லும் கையுமாய் வெளியேறினர். அனேக அரசர்களைப் போரில் வென்று கப்பத்தையும் பெற்றுர். ஆங்காங்கு கிருஷ்ணனுடைய சரிதையைச்சிலர் பாடுவார்கள். அதைக் கேட்டு, முகமலர்ந்து அவர்களுக்கு விலை உயர்ந்த முத்துமாலைகளையும், உடைகளையும் வழங்குவார். தானும் ஹரியினிடம் பக்தியைச் செலுத்துவார்.

இதனிடையே பரீக்ஷித்து மன்னர் ஒரு விந்தையைக் காண நேர்ந்தது. தருமம் ஒரு காளை வேஷத்துடன் மூன்று கால்களும் ஒடிந்து போய், ஒரே காலால் நடந்து கொண்டிருந்தது. பூமாதேவியானவள் ஒரு பசுவின் ரூபத்தை எடுத்துக் கொண்டிருந்தாள். காளை பசுவினிடம் பரிதாபமாகப் பேசிக் கொண்டிருந்தது. தருமம் பூமியினிடம், ''தாயே! களையற்று இருக்கிறுய். மனத்தில் வருந்துகிறுய் போலும். எனக்கு மூன்று கால்கள் போய்விட்டனவே என்று வருத்தப்படுகின்றனையா? இல்லை, தருமத்துக்கு விரோதமாக வந்திருக்கும் மாறுபாடுகளைக் கண்டு கவலைப்படுகின்றனையா? பூபாரத்தைக் குறைத்து விட்டு மறைந்து போன மாயனை எண்ணித் துயரம் மேலிடுகிறதா? ஏன் இளைத்திருக்கிறுய்? அதன் காரணத்தைக் கூறவேண்டும்'' என வினவியது.

பசு வேடம் பூண்ட பூமி பதில் அளித்தது. ''தர்மமே! என்னிடம் கேட்ட கேள்விக்கு விடை நீயே அறிவாய். நற்குணங்களுக்கெல்லாம் இருப்பிடமான ஸ்ரீநிவாசன் நீங்கி விட்டான். இப்பொழுது கலி பூமியை ஆட்கொண்டு விட்டான். இதை நினைத்து வருந்துகிறேன். மேலும் உன்னையும் என்னையும், ஏனைய நல்லோரையும் குறித்தும் வருந்துகிறேன். கண்ணன் திருவடிகள் பட்ட நான் மேன்மையுடன் திகழ்ந்தேன். அப்பொழுது நான் செருக்கை அடைந்தேன். கண்ணனுடைய பிரிவை யாரால்தான் பொறுக்க முடியும்?''

ஸரஸ்வதி நதிக்கரையில், குருக்ஷேத்திரத்தில், தருமமும் பூமியும் இவ்வாறு பேசிக் கொண்டிருக்கையில், பரீக்ஷித்து அவ்விடத்தை அடைந்தார். அங்கு அரசனென்று உடையுடுத்த இழி குலத்தோன் ஒருவன் கையில் தடி ஏந்தி, ஒரு காளையையும், ஒரு பசுவையையும் துன்புறுத்துவதைப் பார்த்தார். உடனே அவருக்குக் கோபம் பொங்கியது. ''நான் காத்துவரும் புவிமீது இக் கொடிய செயலை எப்படிச் செய்யத் துணிந்தாய்? ஒரு தவறும் செய்யாதவர்களைத் துன்புறுத்தும் உன்னைக் கொல்வதே அறம். நீ யார்?'' என்று கேட்டார். பின்னர் பசுவினிடம் திரும்பி, 'இனி அஞ்சவேண்டாம்' என்று தேற்றினர். அப்பொழுது அங்கிருந்த காளைக்கு மூன்று கால்கள் இல்லாததைக் கண்டு அவற்றை வெட்டியவன் யார் என்று வினவினர்.

அதற்குக் காளைவேஷம் தரித்த தருமம் ''கண்ணனை அன்பாகக் கொண்ட பாண்டவ குலத்தில் பிறந்த நீங்கள் பொருத்தமாகவே பேசுகிறீர்கள். இக் காலத்தில் மனிதர் பல மதங்களைப் பின்பற்றி வருகின்றனர். வாய்

மொழிக்கு எட்டாத ஈச்வரனிடம் இருந்துதான் எல்லாம் தோன்றுகின்றன என்ற எண்ணம் உலகில் இன்று சிலருக்கு மட்டுமே இருக்கிறது'' என்று கூறியது.

அதற்கு அரசர், ''தீமை புரிந்தவனைத் தெரிந்தும் நேராகக் குறிப்பது தவறு என்ற ஒழுக்கத்தை ஒட்டி நீ பேசுவதால், காளை உருவம் கொண்ட தருமமே நீ என்று எண்ணுகிறேன். தவம், நல்லொழுக்கம், தயவு, உண்மை என்ற நான்கும் தர்மத்தின் நான்கு கால்கள் ஆகின்றன. வீண் பெருமை, பெண்ணாசை, குடிவெறி முதலிய அதர்மங்கள் மிகுந்ததனால் உன்னுடைய மூன்று கால்கள் நாசமாகி விட்டன. உண்மை என்பது ஒன்று மட்டும் இந்தக் கலியில் பாக்கி நிற்கிறது. அதையும் அழிக்கச் சித்தமாக இருக்கிறார்கள். கண்ணனை இழந்த பூமியும் துக்கத்தை அடைகிறாள்'' என்று தர்மத்தையும் பூமியையும் தேற்றி விட்டுக் கெடுதிகளுக்குக் காரணமான கலியைக் கொல்வதற்குக் கத்தியைக் கையில் எடுத்தார். கலி அவர் காலில் விழுந்து வணங்கினான். அரசர் அவனிடம் ''கலியே! கடவுள் வணக்கமும் யாகங்களும் அவை காரணமாக விளையும் கடவுளின் கருணையும் நிறைந்திருக்கும் என் நாட்டில், அதர்மத்தையே அன்பனாக உடைய நீ இருக்க முடியாது!'' என்றார்.

அப்பொழுது கலி புருஷன் மன்னனிடம் ஒரு வேண்டுகோளைத் தெரிவித்துக் கொண்டான்.

''எங்கு பார்த்தாலும் வில் ஏந்திய கையுடன் உங்களையே காண்கிறேன். ஆகையால் கவலையற்று நிம்மதியுடன் நான் இருப்பதற்கு இடம் நீங்களே எனக்குத் தேடித் தர வேண்டும்.''

இவ்வாறு மன்றாடியதைக் கேட்ட மன்னவன் எந்த இடத்தில் சூது, கள், பெண்ணாசை, ஜீவஹிம்சை இவை நான்கும் நடக்கின்றனவோ, அதை இருப்பிடமாகக் கலிக்குக் கொடுத்தார். இரும்பவும், பொன்னாசை இருக்குமிடத்தையும் கலிக்கு அளித்தார்.

அரசனுடைய உதவியால் இழந்த மூன்றுகால்களையும் தருமம் அடைந்தது. பூமியும் ஆறுதல் அடைந்து பொருளைப் பெருக்கினாள்.

புராணங்கள் ஒருவரிடமிருந்து ஒருவர் கேட்டதாகச் சொல்லப்படுகின்றன. பாகவதம் எழுதியது வியாசர். அதை அவர் தம் மகன் சுகருக்கு உபதேசித்தார். சுகர் பரீக்ஷித்து மகாராஜனுக்கு எடுத்துரைத்தார். அச்சமயம் சூதர் அவ்விடம் இருந்தபடியால் அவரும் அதைக் கேட்க நேர்ந்தது. சூதர் ஒரு சமயம் நைமிசாரணியத்தில் சௌனகர் முதலிய முனிவர்களைச் சந்தித்தார். அவர்கள் சூதரை பாகவதம் சொல்ல வேண்டும் என்று கேட்டார்கள். ஆகையால் நாம் படிக்கும்பாகவதம் சூதர் முனிவர்களுக்குச் சொன்ன வரலாறு ஆகும்.

பரீக்ஷித்து மன்னர் கலியை அகற்றித் தரு



மத்தை நிலை நிறுத்தியதைக் கேட்ட முனிவர்கள், மனமகிழ்ந்து, சூதரை ஆசீர்வதித்தார்கள். ஓமத்தின் புகையால் மாசடைந்த மேனியை உடைய தங்களைக் கோவிந்தனுடைய கதையான தேனைப் பருகச் செய்வதாகப் புகழ்ந்து விட்டு, மேலும் கண்ணனுடைய சரித்திரத்தை விரிவாக எடுத்துரைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அதன்மேல் சூதரும் தன் புத்திக்கு எட்டிய வரையில், பறவைகள் எப்படித் தம் திறத்துக்கு ஏற்றவாறு பறக்கின்றனவோ, அவ்வாறே சொல்வதாக வாக்களித்தார். இந்த இடம் பாகவதத்தில் மேல் கதைக்குமுகவுரையாக இருக்கிறது.



ஒருநாள் பரீக்ஷித்து வேட்டையாடச் சென்றார். காட்டில் பல விலங்குகளைப் பின்தொடர்ந்ததால் பசியாலும், தாகத்தாலும் களைப்புற்றார். தண்ணீர் இருக்கும் இடம் தெரியாமல் தவித்தார். அப்பொழுது ஒரு ஆசிரமம் அவர் கண்ணுக்குத் தெரிந்தது. அரசர் ஆசிரமத்துக்குள் சென்றார். அவ்விடத்தில் கண்களை மூடிக்கொண்டு தவம் செய்யும் ஒரு முனிவரைக் கண்டார். முனிவருடைய மேனி அவரது பரவியிருந்த சடையினாலும், போர்த்தியிருந்த மான் தோலாலும் மறைக்கப் பட்டிருந்தது. மன்னனுக்கோ தாகத்தினால் நாக்கு வறண்டுவிட்டது. முனிவரிடம் பரீக்ஷித்து தாகத்துக்குத் தண்ணீர் கேட்டார். முனிவர் இவரைப் பார்க்கவில்லை. மன்னனாகிய தமக்குத் தகுந்த உபசாரம் செய்யவில்லை என்று பரீக்ஷித்துக்கு அதுவரை வராத சினம் வந்தது. அருகில் உயிரற்ற பாம்பு ஒன்று கிடந்தது. அதை வில் நுனியால் எடுத்து முனிவர் கழுத்தில் மாலையாகப் போட்டு விட்டுத் தமது நகரத்துக்குத் திரும்பினார்.

தவம் செய்து கொண்டிருந்த முனிவருக்குச் சமீகர் என்று பெயர். அவருக்குச்சிருங்கி என்று ஒரு மகன் இருந்தான். தன் தந்தையின் கழுத்தில் செத்த பாம்பு கிடப்பதைக் கேள்வியுற்று அவன் அடங்காத கோபம் கொண்டான். விளையாடிக் கொண்டிருந்த நண்பர்களிடம் பின்வருமாறு சொன்னான்:

"அரசனுக்குக் குடிகளைக் காப்பது கடமை. அந்தக் கடமையை அரசன் மீறலாகாது. காக்கையும் வாசல் காக்கும் நாயும் போல் யஜமானனையே ஏமாற்றுவது அரசனுக்கு அதர்மம். குடிகளைக் காக்கவந்த வேந்தன், குடிகள் வீட்டிலேயே புகுந்து அன்னத்தை அருந்துவது அநீதி. இதைத் திருத்திய நீர

வேண்டும். பாருங்கள் என் திறமையை'' என்று கூறிவிட்டு, முனிகுமாரன் ஆசமனம் செய்தான். கண்கள் சிவந்தவனாய், இடி முழங்கியதெனப் பெருங் குரலில், ''இன்றிருந்து ஏழாவது நாள், தன் குல ஒழுக்கத்தில் நின்று வழுவி, என் தந்தையை அவமதித்த அரசனைத் தக்ஷகன் கடிப்பானாக'' என்று விதியை ஏவினான்.

இவ்வாறு சபித்து விட்டு, அந்தண பாலகன் தன் தந்தையைக் காண வேண்டி ஆசிரமம் சென்றான். கழுத்தில் கிடக்கும் பாம்புடன் முனிவரைக் கண்டதும் துக்கம் தாங்காமல், கதறி அழுதான். அழுகைக் குரலைக் கேட்ட சமீகர் கண் விழித்துக் கொண்டார். எதிரில் நின்று அழும் மைந்தனையும் தம் கழுத்தில் கிடக்கும் பாம்பையும் கண்டார். ''ஏன் அழுகிறாய்?'' என்று மகனை வினவினார். நடந்ததையெல்லாம் சுருங்கி எடுத்துரைத்தான். ஆனால் மகன் செய்த செயலை அவர் ஆமோதிக்கவில்லை. ''அறிவில்லாத பாலனே! நீ பெரிய பாபத்தைச் செய்து விட்டாய். இச் சிறு தவறுக்குப் பெரும் தண்டனையைக் கொடுத்து விட்டாயே. கடவுளின் கலை பொருந்திய அரசனைப் பாமரன் என்று கருதலாகுமா? உனது அறிவு இன்னும் விரிவடையவில்லை. 'அரசனுடைய பலத்தினால் அன்றோ நாம் பயமின்றி வாழ்கிறோம். அரசன் மாண்டால் நாட்டில் கொள்ளைக்காரர் மிகுந்து குடிகளின் பொருளைப் பறிப்பார்கள். இந்தக் கொடுமையை அனைவரும் தம் தலையில் அல்லவோ சுமத்துவார்கள். பரீக்ஷித்து நன்மையைக் காத்துத் தீமையைத் தீர்க்கும் அரசர். ஆண்டவனுக்கு அடிமையானவர். அந்த பக்தனுக்குத் தீங்கு செய்து விட்டாய். நீ அறியாக் குழந்தை. உன்னை இறைவன்தான் மன்னிக்க வேண்டும்'' என்று பலவிதத்தில் வருந்தினார்.

வீட்டுக்குத் திரும்பின அரசரும் ஒருபுறம் வருத்தப்பட்டார். ''அந்தோ, பாமரனைப் போல் நான் நிரபராதியான அந்தணனிடம் நடந்து கொண்டேன். இதனால் தாங்க முடியாத தீமை என்னை இப்பொழுதே எய்தும். எனக்கு இன்னல் வரட்டும். இனிமேலாவது எனக்கு இத்தகைய கொடுஞ் செயலைச் செய்யத் துணிச்சல் வரக்கூடாது. முனிவருடைய சினம் என்ற தீயானது என்னுடைய நாட்டையும், செல்வத்தையும், சேனையையும் வேண்டுமானால் போகக்கட்டும்'' என்று தம்மையே நொந்து கொண்டிருக்கும்பொழுது, முனிகுமாரன் தம் மேல் இட்ட சாபத்தைக் கேள்வியுற்றார்.

அதைக் கேட்ட அரசர் சிறிதும் வருந்தவில்லை. மண்ணுலகில் பற்றுள்ள தமக்கு விரக்தி வருவதற்கு இதுவே வழி என்று கருதினார். கண்ணனின் திருவடிகளே கதி என்று அறிந்து, மற்ற எல்லாப் பற்றுதல்களையும் உதறி விட்டு, உணவின்றி உடலை வருத்தி உயிரை மாய்த்துக் கொள்வது என்று தீர்மானம் செய்து கொண்டு, புண்ணிய நதியான கங்கையின் கரையில் போய் உட்கார்ந்து கொண்டார். அசையாத மனத்துடன், கிருஷ்ணனிடம் சரண் புகுந்தார்.

அரசர் கங்கைக் கரையில் ''பிராயோபவேசம்'', அதாவது பட்டினி கிடந்து உயிரை விடுவது என்ற நிச்சயத்துடன் இருக்கிறார் என்ற செய்தியைக் கேட்ட முனிவரும் ஏனைய பெரியோரும், தவம் வாய்ந்த அந்தணரும், ராஜ ரிஷிகளும், தேவ ரிஷி நாரதரும், குடமுனி அகத்தியரும், பராசரரும், தீவில் தோன்றிய வியாசரும், விச்வாமித்திரரும், பரசுராமரும், அத்ரியும், வசிஷ்டரும், அரிஷ்டநேமியும், பிருகுவும் மற்றும் பலரும் வந்து கூடினார்கள். வந்தவர்களை அரசர் வினயத்துடன் வரவேற்று வணங்கிக் கைகூப்பித் தம் நிச்சயத்தை அவர்களிடம் தெரிவித்தார்.

''உலகத்தில் பற்றுள்ள எனக்கு, மூவுலகுக்கும் அதிபதியான நாராயணனே, அந்தணன் சாபம் என்ற முறையில் வந்திருக்கிறார். கடவுள் மீது மனம் வைத்த பக்தன் என்று என்னை அனைவரும் அறிந்து கொள்வீர். தக்ஷகன் என்று வேஷம் பூண்டு யார் வேண்டுமானாலும் என்னைக் கடிக்கட்டும். ஆனால் விஷ்ணுவின் கதையைக் கானம் செய்வீராக. மறு பிறப்பெல்லாம் கண்ணனிடம் பக்தியுடன் இருக்க வேண்டும் என்பதே எனது ஆவல்'' என்று அரசர் உரைத்தார்.

நாட்டைத் தம் மகன் ஜனமேஜயனிடம் ஒப்புவித்து விட்டுக் கங்கையின் தென் கரையில் பிராயோபவேசம் செய்யத் துணிந்த மன்னாதி மன்னர் மீது விண்ணவர் மலர்மாரி பெய்தார்கள். வந்திருந்த முனிவர்களும் மெச்சினார்கள். மாயத்தை மீறி, துயரம் தீண்டாத வீட்டை மன்னவர் அடையும்வரை தாங்கள் அவ்விடத்திலேயே இருந்துவிட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டனர்.

அப்பொழுது பரீக்ஷித்து அவர்களிடம் ஒரு கேள்வியைக் கேட்டார்: ''என்னுடைய கடமையைக் குறித்து நான் ஒரு கேள்வி உங்களைக் கேட்க விரும்புகி

றேன். நன்றாக ஆலோசனை செய்து எனக்குப் பதில் கூறுங்கள். அனைவரும் எந்தக் காலத்திலும் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள் யாவை? அதிலும் இறக்கும் தறுவாயில் செய்ய வேண்டியது என்ன ?''

இந்தச் சந்தர்ப்பத்தில், மனம் போன போக்கில் புவிமீது திரிந்து கொண்டிருப்பவரும், மண்ணுலகின் எண்ணமே அற்றவரும், குலத்துக்கேற்ற குறி ஒன்றும் இல்லாதவரும், தம்மைத்தாமே தெரிந்து கொண்டவருமான சுகர் பதினாறு வயதுவாய்ந்து, வடிவழகு துலங்கத் துணி ஒன்றும் தரிக்காமல் தானாய் நின்று கொண்டு, முகத்தை மறைக்கும் தலைமயிருடனும் மாதர் மனத்தைக் கொள்ளை கொள்ளும் புன்சிரிப்புடனும் அங்கு வந்து சேர்ந்தார்.

மறைந்திருந்த போதிலும் ஓரளவு மறைக்க முடியாத தேஜஸினால் யார் என்று அறிந்து கொண்ட அனைவரும் எழுந்திருந்து சுகரை வணங்கினார்கள். விஷ்ணுராதனும் தலை வணங்கினார். சுகர் ஆசனத்தில் அமர்ந்தார். நட்சத்திரங்களால் சூழப்பட்ட சந்திரனைப் போல் விளங்கினார். அமர்ந்திருக்கும் சுகரை அண்டித் திரும்பவும் தலை வணங்கிப் பரீக்ஷித்து மன்னர் இவ்விதம் கூறினார்:

''அரச குலத்தில் பிறந்த நாங்கள் இன்று உங்கள் வருகையால் மேலுற்றோம். உங்களை நினைத்தாலே வீடு மேன்மை அடையும். நீங்கள் நேராகவே வந்து, கை கால் அலம்பி அமர்ந்தால் கேட்கவும் வேண்டுமோ? விஷ்ணுவின் எதிரில் அரக்கர் அழிவது போல் உங்களைக் கண்டதும் பாபங்கள் அழிந்து போகும். கண்ணனுக்கு என்னிடம் கருணை இருக்கிறது. இல்லையேல் இறக்கும் தறுவாயில் இச்சையில்லாமல் கானகத்தில் இருக்கும் உங்களைக் காண்பது என்பதெப்படி?

''ஆகவே, மரிக்கும்பொழுது மானிடன் செய்ய வேண்டுவது என்ன? எதை எண்ணவும் சொல்லவும் செய்யவும் வேண்டும்? எது தகும், எது தகாது? தாங்களோ, ஒருவர் வீட்டுக்கும் வர மாட்டீர்கள். வந்தாலும் ஒரு பசு கறக்கும் தருணம்தான் தங்குவீர்கள். ஆகையால் இப்பொழுது நான் நடந்து கொள்ள வேண்டிய முறையை எடுத்து உரைக்க வேண்டும்.''

இதைக் கேட்ட அரசனுக்குச் சுகர் பதிலுரைத்தார். (தொடரும்)

'அனஸின்'

தலைவலி, ஜலதோஷம், ஜுரம் மற்றும் தசைவலிகளிலிருந்து

நிவாரணமளிப்பதில் சிறந்தது

ஏனெனில் அதில் நான்கு மருந்துகள் சேர்ந்துள்ளன.



வைத்திய விஞ்ஞானிகள், 'அனஸின்' என்பது வலியை அகற்றும் தீவிர சக்திவாய்ந்த அநேக மருந்துகளின் சரியான விகிதாச்சார கலவை என்று கூறுகிறார்கள். அது வேறெந்த ஒரே மருந்து கலவையைவிட அதிதுரிதமாயும், அபாயமின்றியும், நிச்சயமாயும் நிவாரணமளிக்கிறது என்று ஞாபகத்தில் வையுங்கள்! 'அனஸின்' ஒரு டாக்டரின் குறிப்பிற்கு ஒப்பான விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலவையாகும். ஆகவே 'அனஸினை', தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி மற்றும் தசைவலிகளிலிருந்து துரிதமாயும், முற்றிலும் குணமளிப்பதில் சிறந்தது. எப்பொழுதும் வீட்டில் 'அனஸின்' வைத்திருங்கள்.

GEOFFREY MANNERS & CO. PRIVATE LTD. REGISTERED USER

K. 67 (R) TAM.



பாண்டிமாதேவி

அத்தியாயம் 25

ஊமை பேசினாள்

திருநந்திக் கரைச் சமணப் பெரும் பள்ளியின் வாசலில் அந்தப் பூக்கார ஊமைப் பெண்ணிடம் சேந்தனைப் பற்றி விசாரித்து விட்டுத் தளபதி வல்லாள தேவன் சாலையில் இறங்கிச் சென்ற சில கணங்களுக்குப் பின் ஒரு அதிசய நிகழ்ச்சி நடைபெற்றது. அதிசயமென்றால் வெறும் அதிசயமா அது? வியப்பையும், திகைப்பையும் ஒருங்கே உண்டாக்கக் கூடிய அதிசய நிகழ்ச்சி அப்போது அங்கே நடைபெற்றது.

சமணப் பள்ளியின் கிழக்குப்புறம், இருபது முப்பது அடி பள்ளத்தாக்கு நிலமாக இருந்தது. அந்தப் பள்ளத்தாக்குப் பிரதேசத்தில் சிறிய காட்டாறு ஒன்றின் கிளைக் கால்வாய் பாய்ந்து கொண்டிருந்தது. கால்வாய்க்கு அப்பால் சமவெளி நிலத்தில் நெடுந்தூரத்துக்கு நெடுந்தூரம் பாக்கு மரங்களும், தென்னை மரங்களும் அடர்த்தியாக வளர்ந்திருந்தன. பாக்கு மரங்களின் தூரில் மினுமினுவென்று மின்னும் முக்கோண வடிவப் பச்சை இலைகளும், கொத்துக், கொத்தாக மிளகுக் கொடிகளும் தழுவிப் படர்ந்திருந்தன.

தளபதியின் தலை மேற்கே திருநந்திக் கரைச் சாலையின் திருப்பத்தில் மறைந்ததோ இல்லையோ, தரையின் இடைவெளி தெரியாமல் பரந்து கிடந்த கீழ்ப் புறத்துப் பள்ளத்தின் பசுமையிலிருந்து இரண்டு செந்நிறக் குதிரைகளும் ஒரு குட்டை மனித உருவமும் மெதுவாக வெளியேறி மேட்டுக்கு வந்தன.

அப்போதும் அந்தப் பூக்காரப் பெண்ணுடன் அவள் தந்தையும் அங்கேதான் உட்கார்ந்து கொண்டிருந்தார். என்ன ஆச்சரியம்? எந்த ஒரு அழகிய பெண்ணைப் பிறவிச் செவிடு என்றும், பிறவி ஊமை என்றும் தளபதி எண்ணி, படைத்தவன் கைகளைத் தூற்றிக் கொண்டு போனானோ, அந்தப் பெண் இப்போது நாராயணன் சேந்தனிடம் வாய்திறந்து பேசினாள். "ஐயா! நீங்கள் கூறியபடியே அந்த மனிதரிடம் நடித்து ஏமாற்றி அனுப்பி விட்டோம். நான் ஊமையாகவே நடித்து விட்டேன். என் தந்தையும் தமக்கு ஒன்றும் தெரியாதென்று பதில் சொல்லி அனுப்பி விட்டார்" என்று குயிலின் இனிமையும் யாழின் நளினமும் செறிந்த குரலில் நாராயணன் சேந்தனிடம் கூறினாள் அந்தப் பூக்காரப் பெண்.

"மிகவும் நல்ல காரியம் செய்தீர்கள்! உனக்கும் உன் தந்தைக்கும் நான் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன், பெண்ணே!" என்று சொல்லிக் கொண்டே தன் இடுப்புக் கச்சையை அவிழ்த்து இரண்டு பொற் காசுகளை அந்தப் பெண்ணிடம் எடுத்துக் கொடுத்தான் நாராயணன் சேந்தன். வட்டமாக இருந்த அந்தக் காசுகளின் ஒரு புறம் மகரமீன் வடிவும், இன்னொரு



புறம் யானையின் உருவும் அமைந்திருந்தன. பாண்டிய நாட்டில் பராந்தகனின் இறுதிக் காலத்தில் வெளியிடப் பெற்ற நாணயங்கள் அவை.

காசுகளைப் பெற்றுக் கொண்டு மலர்ந்த முகத்தோடு கைகூப்பி வணங்கினான் அவன்.

"ஐயா! நீங்கள் அடிக்கடி இந்தப் பக்கம் குதிரையில் வந்து போக வேண்டும்." உபசாரத்துக்காகச் சொல்லுகிறவனைப் போலக் கிழவன் இந்த வார்த்தைகளைச் சொன்னான்.

உடனே நாராயணன் சேந்தன் முகத்தில் குறும்பு மிளிரச் சிரித்துக்கொண்டே கிழவனையும் அவன் பெண்ணையும் பார்த்து. "ஆகா! அதற்கென்ன? அடிக்கடி வருவதற்குத் தடையில்லை. ஆனால் அடிக்கடி என்னிடத்தில் இரண்டு பொற்காசுகள் இருக்காதே?" என்று குத்தலாக ஒரு போடு போட்டுவிட்டுப் புறப்பட்டான்.

அவன் புறப்படுகிற சமயத்தில், "கொஞ்சம் பூக்கள் தருகிறேன். உங்கள் இல்லத்துக்குக் கொண்டு செல்லுங்கள்" என்று கூறிப் பூக்களை அள்ளினாள் அவள். "அதற்குப் பயனே இல்லை! நான் இன்னும் ஒற்றைக் கட்டைதான்!" என்று கூறி நகைத்தான் நாராயணன் சேந்தன்.

"இன்னுமா உங்களுக்குத் திருமணம் ஆகவில்லை?" என்று கிழவர் வியப்புடன் அவனை வினவினார்.

"ஐயா, கிழவரே! உங்கள் மகளைப் போல ஒரு அழகான நல்ல பெண் கிடைக்கிறவரை திருமணமே செய்து கொள்வதில்லை என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே ஓரக்கண்ணால் அந்தப் பூக்காரப் பெண்ணை நோக்கினான். அவள் தலையைக் குனிந்து கொண்டாள்.

"வருகிறேன், பெரியவரே!" என்று ஒரு குதிரையில் ஏறிக்கொண்டு இன்னொன்றின் கடிவாளக் கயிற்றைப் பிடித்தவாறே பக்கத்தில் நடத்திக் கொண்டு புறப்பட்டான்.


வந்தவழியே திரும்பிச் சென்று முன்பு 'எந்தச் சாலையில் பறளியாற்று வெள்ளத்தினால் உடைப்பு ஏற்பட்டிருப்பதாக'த் தளபதியிடம் சொல்லி அவனைச் சுற்றுவழியில் இழுத்தடித்தானோ அதே சாலையில்தான் இப்போது சென்றான் சேந்தன். கூற்றத் தலைவர் கூட்டத்து நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காகச் சேந்தனும் அரண்மனைக்குப் போகிறான் போலிருக்கிறது. போகட்டும். அவனுக்கும் முன்பே நேயர்களை அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு போய் அங்கு நடக்கும் விறுவிறுப்பான நிகழ்ச்சிகளைக் காண்பித்துவிட விரும்புகிறேன்



தான். திருநந்திக்கரைச் சமணப் பள்ளியில் சேந்தனால் ஏமாற்றப்பட்டு மனம் சோர்ந்து கால்நடையாகக் கிளம்பிய தளபதி வல்லாள தேவனும், ஏமாற்றி விட்டுக் குதிரையில் கிளம்பிய சேந்தனும், புறத்தாயநாட்டு அரண்மனைக்கு வந்து சேர வெகு நேரம் செல்லுமாகையினால் நாம் முந்திக்கொண்டு விடலாம்.

. . .

"திரையை அகற்றி விடுங்கள்"—என்று மகாமண்டலேசுவரர் கூறியவுடனே திரைக்குப் பின்னாலிருந்து ஆள் நடந்து செல்லும் அரவம் கேட்டதும் அங்கே கூடியிருந்த அத்தனைபேரும் பரபரப்படைந்தார்கள். "பிடி! பிடி! யாராயிருந்தாலும் ஓடித் தப்பிவிடக் கூடாது" என்று அங்கிருந்த காவல் வீரர்களைப் பார்த்துக் கூச்சலிட்டார் மகாமண்டலேசுவரர். அங்கு நின்று கொண்டிருந்த மெய்க்காப்பாளர்களும், காவல் வீரர்களும் வாள்களை உருவிக்கொண்டும், கூர்மையான வேல்களை ஓங்கிக்கொண்டும், தடதடவென்று ஓசையுண்டாகும்படி திரைக்குப் பின்னால் பாய்ந்தோடினர். திரைக்குப் பின்னாலிருந்த பகுதியில் சாளரங்களோ, கதிர்மாடங்களோ, பலகணிகளோ இல்லாததால் பகல் நேரத்திலேயே இருண்டு கிடந்தது. அதன் காரணமாகத் தேடிச் சென்றவர்களே ஒருவர் மேல் ஒருவர் மோதிக் கொண்டனர். கண்டு பிடிக்க வேண்டிய ஆள் மட்டும் அகப்படவே இல்லை. மந்திராலோசனை மண்டபத்தின் பின்புறம் கவரோரமாக ஒருபடிக்கட்டு, கீழ் நோக்கி இறங்கிச் சென்றது. அது அரண்மனையின் நிலவறைக்குச் செல்லும் பாதை. புறத்தாய நாட்டு அரண்மனையின் பலபகுதிகளில் அமைந்திருந்த நிலவறைகளில் முக்கியமானது அது தான். போர்க்காலங்களி



லும், அரசியலில் குழப்பமான சூழ்நிலைகள் ஏற்படும் காலத்திலும், அரண்மனையிலுள்ள விலையுயர்ந்த கலைப் பொருள்கள், சிலைகள், முன்னுள்ள வேந்தர்கள் வழங்கிய நாணயங்கள், உபயோகித்த ஆயுதங்கள், கவசங்கள்- இவற்றையெல்லாம் அந்த நிலவறையில் பாதுகாப்பாகப் பத்திரப்படுத்தி வைப்பது வழக்கம்.

திரைக்குப் பின்னால் ஒளிந்திருந்தவன் தப்பிச் சென்றிருந்தால் கீழே நிலவறைக்குச் செல்லும் படிக்கட்டைத் தவிர வேறெந்த வழியினாலும் தப்பிச் சென்றிருக்க முடியாது. சிலர் நிலவறைக்குள் போகும் வழியிலும் சிறிது தூரம் சென்று தேடினார்கள். ஆள் அகப்படவில்லை. படிக்கட்டு ஆரம்பமாகும் இடத்தில் ஒரு சிறிய சதுரமான வெள்ளைப் பட்டுத் துணி கிடந்தது. அதை எடுத்துக் கொண்டுபோய் மகாமண்டலேசுவரரிடம் கொடுத்தார்கள்.

"ஆள் அகப்படவில்லையா?" என்று சினம் பொங்கும் குரலில் அதட்டிக் கேட்டார் அவர்.

"நிலவறைக்குள் போய்த் தப்பிச் சென்றிருக்கலாமென்று தெரிகிறது. படி இறங்கும் வழியில் இந்தப் பட்டுத் துணி கிடைத்தது" என்று சொல்லித் துணியை அவரிடம் கொடுத்தார்கள், தேடிச் சென்று திரும்பியவர்கள்.

"உடனே ஓடிப் போய்க் கீழே நிலவறைக்கு இறங்கும் வழியின் கதவை அடைத்து முன்புறமாகத் தாழிட்டு விடுங்கள்" என்று கூறி அவர்களை மறுபடியும் துரத்தினார் மகாமண்டலேசுவரர். அவர்கள் கதவை அடைக்கச் சென்றதும், அங்கு கூடியிருந்த அத்தனை பேருக்கும் நடுவில் அந்தப் பட்டுத் துணியை விரிக்காமல் ஒரு மூலையில் தூணின் மறுபுறம் மறைவில் அதை விரித்துப் பார்த்தார். பயமும் கலவரமும் அடைந்து பீதியின் நிழல் படிந்த முகங்களால் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு மகாராணியாரும் கூற்றத் தலைவர்களும், மந்திராலோசனை மண்டபத்து இருக்கைகளில் வீற்றிருந்தனர். மெய்க்காப்பாளர்களும், வீரர்களும் நிலவறைக்குச் செல்லும் வழியை அடைப்பதற்காக அதன் கனமான பெரிய மரக்கதவை இழுத்து மூடும் ஓசை மண்டபம் எங்கணும் எதிரொலித்தது.

மகாமண்டலேசுவரர் விரித்துப் பார்த்த அந்தப் பட்டுத் துணியில் ஏதோ ஒரு குறிப்பிட்ட குழுவினருக்கு அடையாளச் சின்னம் போன்றதொரு சித்திரம் தீட்டப்பட்டிருந்தது.

ஒரு வீர இளைஞன் தன் வலது கையில் உருவி ஏந்திய வாளினால் தனது தலையையே அரிந்து குருதி ஒழுக இடது கையால் தாங்கி நிற்பது போல் அந்த ஓவியம் அமைந்திருந்தது. அந்த இளைஞனின் தலைப்புறமாக மகரமீன் இலச்சினையும் பொறிக்கப்பட்டிருந்தது. அவர் அந்த ஓவியத்தைக் கவனமாகப் பார்த்தார். பட்டுத் துணியில் வரையப் பெற்றிருந்த அந்த அடையாளச் சின்னம் அவருக்குப் புதியதல்ல. தென்னவன் ஆபத்துதவிகளின் அடையாளம் அது. ஆபத்துதவிப் படையைச் சேர்ந்த ஒவ்வொரு வீரனும் அந்த மாதிரி துணியை இடுப்புக் கச்சையாக அணிந்து கொள்வது வழக்கம்.

பட்டுத் துணியை மடித்து மறைத்து வைத்துக் கொண்டார், இடையாற்று மங்கலம் நம்பி. அவர் மனத்தில் பலவிதமான சந்தேகங்கள் உண்டாயின.

"ஆபத்துதவிப் படைகளைச் சேர்ந்த யாவரும் இப்போது கோட்டாற்றிலுள்ள தென்திசைப் பெரும்படையின் குடியிருப்பில் அல்லவா தங்கியிருக்கிறார்கள்? அவர்களோ, அல்லது அவர்களில் ஒருவனோ இப்போது இங்கே எப்படி வந்திருக்க முடியும்? திரைக்குப் பின்னால் ஒளிந்திருந்தவன் ஆபத்துதவிகளில் ஒருவன்தானோ? அல்லது என்றைக்காவது தென்னவன் ஆபத்துதவிகள் இங்கே அரண்மனைக்கு வந்திருந்தபோது நிலவறைக்கு அருகில் இதைத் தவறிப்போட்டு விட்டார்களா? இந்தப் பொருள் நிலவறைக்கு அருகில் கிடந்ததனால் மட்டும் நாம் ஆபத்துதவிகளின் மேல் சந்தேகப்பட்டு விடுவதற்கில்லை. வேறு எவனாவது நம்முடைய பகைவர்களின் கையாளாகிய ஒற்றன் வந்து ஒட்டுக் கேட்டு விட்டுப் போயிருக்கலாம். நாம் இந்தத் துணி ஒன்றை மட்டும் சான்றாகக் கொண்டு யாரையும் குற்றவாளியாக முடிவு செய்து விடுவதற்கு இயலாது" — என்று சிந்தித்து ஒரு முடிவு செய்து கொண்டார் மகாமண்டலேசுவரர்.

அவர் தூண் மறைவிலிருந்து மறுபடியும் மந்திராலோசனை மண்டபத்தின் நடுவில் வந்து நின்றபோது அவருடைய உத்தரவுப்படியே நிலவறைக் கதவை அடைத்து விட்டதாக வீரர்கள் வந்து கூறினார்கள்.

எல்லோருடைய கண்களும் அவருடைய முகத்தையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தன.

"சந்தேகப்பட்டுக் கொண்டே இந்த இடத்தில் கூட்டத்தை நடத்தக் கூடாது. அவசியமானால் நிலவறையைத் திறந்து தீபங்களோடு உள்ளே சென்று தேடிப் பார்த்து விடலாம். இந்த மந்திராலோசனை மண்டபத்தைச் சுற்றி

யும் வெளிப்பகுதிகளிலும் சந்தேகப் படத்தக்க புதிய மனிதர்கள் யாரும் இல்லை என்று உறுதியாகத் தெரிந்து கொள்வதற்கு முன்னால் கூற்றத் தலைவர் கூட்டத்தைத் தொடங்குவது நன்றாயிராது'' என்று தம் கருத்தைக் கூறினார் பவழக் கனிவாயர்.

ஏதோ கவலையில் ஆழ்ந்து போய் அமர்ந்திருப்பவர் போல், தலைகுனிந்து ஒன்றும் பேசாமல் உட்கார்ந்திருந்தார் மகாராணி வானவன்மா தேவியார்.

''பவழக் கனிவாயர் கூறுவது சரியே! 'தேரான் தெளிவும் தெளிந்தான் கண் ஐயுறவும் தீரா இடும்பை தரும்'— என்று தெய்வப் புலவராகிய திருவள்ளுவர் கூறியிருப்பதைப் படிக்காதவர்கள் நம்மில் யாருமில்லை. தென்பாண்டி நாட்டு அரசியல் இரகசியங்களை அறிவதற்காக யார் யாரோ சூழ்ச்சி செய்கிறார்கள் போலிருக்கிறது. இல்லையானால் அந்தரங்க மந்திராலோசனைக் கூட்டம் நடைபெறும் இந்த இடத்தில் நமக்கு மிக அருகில் வந்து ஒளிந்திருக்கும் அளவுக்கு ஒரு மூன்றாவது மனிதனுக்குத் துணிவு ஏற்படுமா?'' என்றார் பல்லாயிரங் காலத்துப் பயிர் போலச் சிறந்த தொன்மை வாய்ந்த அதங்கோட்டாசிரியர் குடும்பத்தில் பிறந்த ஆசிரியர். படிப்பின் பெருமிதமும் கலையின் எழிலும் ஒருங்கு தென்படும் அவருடைய ஒளி பொருந்திய முகமண்டலத்தில் இதைச்சொல்லும்போது கவலை இருள் சூழ்ந்திருந்தது.

''மகாராணியாரும், மண்டலேசுவரரும், இங்கு வருவதற்கு முன் நாங்கள் இதே இடத்தில் நீண்ட நேரமாகப் பல செய்திகளையும் பேசிக் கொண்டிருந்தோமே? அப்போதெல்லாம் திரைக்குப் பின்னால் யாரும் ஒளிந்திருந்ததாக எங்களுக்குத் தெரியவில்லையே?'' என்றார் கூற்றத் தலைவர்களுள் ஒருவராகிய கழற்கால் மாறனார்.

'''ஒளிந்திருக்கவில்லை' என்று நீங்களும் நானும் எப்படி உறுதியாகச் சொல்ல முடியும்? ஒருவேளை, பேச்சில் கவனமாக இருந்த நாம் கவனிக்காமல் இருந்திருக்கலாம். திரைக்குப் பின்னால் இருப்பதை இங்கே உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த நாம் எப்படிக் கவனித்திருக்க முடியும்? நம் பேச்சையே தப்பி ஓடினவன் முழுதும் கேட்டிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை'' என்று கழற்கால் மாறனாரின் கருத்தைத் திருத்தினார் நன்கணிநாதர்.

''இந்த மந்திராலோசனைக் கூட்டத்தை இவ்வளவு நடந்த பின்பும் இன்றே நிகழ்த்துவானேன்? நாளைக்குத் தள்ளி வைத்து விடலாமே!'' என்றார் அதுவரை ஒன்றும் பேசாமல் சிந்தனையில் ஆழ்ந்திருந்த வானவன்மாதேவியார்.

''ஆம்! அப்படிச் செய்வது தான் நல்லது'' என்ற குரல் எல்லோருடைய வாயிலிருந்தும் ஒலித்தது. ஆனால் மகாமண்டலேசுவரரான இடையாற்று மங்கலம் நம்பி மட்டும் வாயைத் திறக்கவே இல்லை. அவருடைய மௌனத்தை மகாராணி கவனித்து விட்டார்.

''மகா மண்டலேசுவரருடைய கருத்து என்னவோ?'' என்று மெல்லக் கேட்டார் மகாராணி.

''கூட்டத்தை இன்றே நடத்திவிட வேண்டுமென்பதுதான் என் கருத்து. வேண்டுமானால் இந்த இடத்தில் நடத்தாமல் வேறோர் இடத்தில் நடத்தலாம். இன்றைக்கு என்று குறிப்பிட்ட கூட்டத்தை இன்றே நடத்தாமல் போவதனால் எத்தனையோ புதிய தொல்லைகள் உண்டாகலாம்'' என்று அவர் மறுமொழி கூறியபோது அதில் தீர்மானமான பிடிவாதம் ஒலித்தது.

அத்தியாயம் 26

கரவந்தபுரத்துத் தூதன்

இந்த அத்தியாயத்தின் கதை நிகழ்ச்சியைத் தொடங்குவதற்கு முன்னால் நேயர்களுக்கு ஒரு சில சரித்திர உண்மைகளைத் தெளிவாகச் சொல்லி விட வேண்டியது அவசியமாகிறது. பாண்டியர் அரசமரபு பற்றியும், அவர் வீரச் செயல்கள் பற்றியும் சிறிது அறிந்து கொண்டால் கதையின் மேற்பகுதிகளை நன்றாக விளங்கிக் கொள்வதற்கு முடியும்.

அளவற்றுப் பரந்த காலத்தின் பேரெல்லைக்கும் எட்டாமல் விரிந்து கொண்டே போகின்ற பழைமையைத் தன் குலச் செல்வமாகக் கொண்ட பாண்டியர் மரபின் முதலரசன் வடிம்பலம்ப நின்ற பாண்டியன். நிலந்தரு திருவின் நெடியோன் எனவும், மாகீர்த்தி எனவும் சிறப்புப் பெயர்கள் பூண்டிருந்தான் இம்மன்னன். தமிழ் மொழியின் முழுமுதல் தனி நூலாகவும், இலக்கணக் களஞ்சியமாகவும் விளங்கும் தொல்காப்பியம் இவன் அவையில் பெரும் புலவராக விளங்கிய அதங்கோட்டாசிரியர் தலைமையில்தான் அரங்கேற்றம் பெற்றது. அதங்கோட்டாசிரியர் வழிமுறையினரான ஒவ்வொருவரும் பிற்

காலத்தே பன்னூறாயிரம் ஆண்டுகள் அதே குடிப்பெயர் கொண்டு தமிழின் புகழ் பரவ வாழ்ந்திருக்கலாம். இந்தக் கதையில் வரும் அதங்கோட்டாசிரியர் பழைய அதங்கோட்டாசிரியரின் பிற்காலத் தலைமுறையினரில் ஒருவராக இருக்க வேண்டுமென்று கொண்டு இந்தக் கதைக்காகக் கற்பனை செய்யப்பட்ட பாத்திரமாவார்.

வடிம்பலம்ப நின்ற பாண்டியன் தான் (இந்தக் கதை நிகழும் காலத்தில் தென்பாண்டி நாட்டின் வற்றாத நீர் வளத்துக்குக் காரணமாக இருக்கும்) பறளியாறு எனப்படும் பஃறுளியாற்றை முன்பு முதன் முதலாக வெட்டுவித்தான். கடல் தெய்வத்தை வழிபட்டுக் கொண்டாடும் 'முந்நீர் விழா' என்ற



விழாவை ஏற்படுத்தினான். தலைச்சங்கத்தின் இறுதியில் ஆண்ட பெரும் பேரரசனான இவன் காலத்துக்குப் பின் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்ற மன்னன் குறிப்பிடத் தக்கவன்.

இவர்கள் காலத்துக்குப் பின் கடைச் சங்க காலத்துக்கு முன்னுள்ள கால இடைவெளி பாண்டியர் வரலாற்றின் இருள் சூழ்ந்த பகுதியாகும். கடைச் சங்கத்தின் முதல் பாண்டிய மன்னனாகிய முடத்திருமாறன் காலத்தில் குமரி மலைத் தொடரும், குமரியாறும், குமரி நாடும், — ஆகிய தென்பாண்டி நாட்டின் தென்கோடி நிலப்பரப்பு முழுதும் கடல் கோளால் அழிந்தது. இனிய பெருங் கனவு போல், அழகிய கலைக் காவியம் போல், சிறந்து இலங்கிய கபாடபுரம் என்ற நகரத்தைக் கடல் விழுங்கி விட்டது.

முடத்திருமாறனுக்குப் பின் பதினைந்து பாண்டிய அரசர்களின் வழிமுறைக்கும் அப்பால் இறுதி மன்னனாகிய நம்பி நெடுஞ்செழியனோடு கடைச் சங்கப் பாண்டியர் மரபு முடிந்துவிடுகிறது. நம்பி நெடுஞ்செழியனுக்குப் பின் பாண்டிய நாட்டில் களப்பிரர்களின் ஆதிக்கம் ஏற்பட்டது. பாண்டியன் கடுங்கோன் தலையெடுத்த பின்பே பாண்டி நாட்டில் களப்பிரர் ஆட்சி ஒழிந்தது.


'' தன்பா லுரிமை நன்கனம் அமைத்த
மானம் போர்த்த தானை வேந்தன்
ஒடுங்கா மன்னர் ஒளிநக ரழித்த
கடுங்கோ னென்னும் கதிர்வேல்
தென்னவன்''

என்று அவன் புகழை வேள்விக்குடிச் செப்பேடு போற்றிப் பாடியது. கடுங்கோன் முதலான பிற்காலப் பாண்டியர் வழியில் கோச்சடையன் ரணதீரன், நெடுஞ்சடையன் பராந்தகன் முதலிய புகழ் பெற்ற அரசர்களெல்லாம் ஆண்டு முடித்த பின் வரகுண மகாராசன் என்னும் ஈடு இணையற்ற பேரரசன் முடி சூட்டிக் கொண்டான். பிறவிக் கடலைக் கடக்கும் ஞானத் தோணியாம் திருவாசகத்தை எழுதிய மாணிக்கவாசகப் பெருமான் இவ்வரசன் காலத்திலேயே வாழ்ந்துள்ளார். சைவத் திருமுறைகளின் தொகுப்பாசிரியராகிய நம்பியாண்டார் நம்பி தம்முடைய கோயில் திருப் பண்ணியார் விருத்தத்தில் வரகுண மகாராசனைப் புகழ்ந்திருக்கிறார்.

வரகுணனின் புதல்வனான சீமாறன். சீவல்லபன் தன் இரு மக்களுள் மூத்தவனான வரகுணவர்மனுக்குப் பட்டம் சூட்டினான். வரகுணவர்மனுக்குப் பின் சீமாறன் சீவல்லபனின் இரண்டாம் புதல்வனான சடையவர்மன் பராந்தகன் பாண்டிய மன்னனாகப் பட்டம் சூடிக் கொண்டான். இவனுக்கும் வானவன் மாதேவி என்னும் பட்டத்தரசிக்கும் பிறந்த புதல்வனே இந்தக் கதையில் வரும் இராசசிம்மன்.

இனி இங்கே தலைப்பில் காணும் கரவந்தபுரம் பற்றிக் காண்போம். தென்பாண்டி நாட்டுக்கும், வடபாண்டி நாட்டுக்கும் நடுவே நெல்வேலிக் கோட்டத்துத் தென்கோடியில் பாண்டியப் பேரரசுக்கு உட்பட்ட சிற்றரசு ஒன்று இருந்தது. கோட்டையும் கொத்தளமுமாகப் பாதுகாப்பு அமைப்புடன் கரவந்தபுரம் என்ற பெயர் கொண்டு புகழ் பரப்பியது. இந்தக் கதையில் வரும் இராச சிம்மனின் தந்தையான சடையவர்ம பராந்தகனின் காலத்தில் கரவந்தபுரத்துக் கோட்டையும் அதன் ஆட்சி


மேலும் மலிவானது!
குடும்பம் முழுவதற்கும் ஒரே டால்க்
PROTEX
All Purpose
TOILET POWDER
ப்ரோடெக்ஸ்
சர்வ பிரயோக டாய்லட் பவுடர்
ஜயன்ட்சைஸ் அழகிய


தனிப்பெருமைவாய்ந்த
ரேடியோ
6 வால்வுகள், 4 அலை பாண்டுகள், அலைஎல்லை வைத்தரும் புஷ் பட்டன்கள் கூடியது. வைடோசோனிக் தொனிகாட்டும் அமைப்புடன் கூடியது. தொனிகளை உயர்த்தவும் தாழ்த்தவுமுள்ள இண்டிகேட்டர் மாஜிக் ஐ. உஷ்ணப்பிரதேசத்திற்கு ஏற்றது. உங்களுக்கு மிகச் சமீபமுள்ள பிலிப்ஸ் வியாபாரியிடம் சென்று, இதை வைத்துக்காட்டும்படி கேளுங்கள்.
PHILIPS
B5CA 66A/U
விலை ரூ. 575/-
(வரிகள் தனி)
ஒலியில் ஒரு புது உலகம்
பிலிப்ஸ்
நோவோஸோனிக்
ரேடியோ
பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்.
PSPH-83

உரிமையும் உக்கிரன் என்று குறுநில வேள் கையிலிருந்தது. செருக்கின் காரணமாக உக்கிரன் பாண்டியப் பேரரசை அவமதித்தான். அதனால் பெருமன்னரான பராந்தக பாண்டியர் அவனை அடக்கிச் சிறைப்பிடித்துக் கொண்டு வந்தார். பாண்டியனின் சிறையில் சில திங்கள் துன்புற்றபின் பேரரசுக்கு உட்படுவதாகவும் திறை செலுத்துவதாகவும் ஒப்புக்கொண்டு மீண்டும் தன் கோட்டையைப் பெற்றான் உக்கிரன். அதிலிருந்து கரவந்தபுரத்து ஆட்சியும் உக்கிரன்கோட்டையும் பாண்டியப் பேரரசின் முன்னேற்றத்துக்கு உறுதுணையாகவும், ஆதரவாகவும் இருந்தன. இதெல்லாம் பழைய கதை! பராந்தக பாண்டியன் காலஞ் சென்ற பின் சிறிது காலத்தில் உக்கிரனும் இறந்தான். கரவந்தபுரத்துக் கோட்டை உக்கிரனுடைய மகன் உரிமையாயிற்று.

இதன்பின் பாண்டிநாட்டு அரசியலில் இளவரசனான இராச சிம்மனுக்கும்,



அவன் தாய் வானவன்மாதேவிக்கும் ஏற்பட்ட குழப்பம் நிறைந்த சூழ்நிலைகளையும், வடபாண்டி நாட்டையும், மதுரையையும், வடதிசை மன்னர் வென்று கைப்பற்றியதையும், இராசசிம்மன் தலைமறைவாகச் சென்றதையும், கதையைப் படித்து வரும் நேயர்கள் அறிவார்கள். எஞ்சிய தென்பாண்டி நாட்டின் வடக்கு எல்லையாக இருந்தது கரவந்தபுரமே. தென்பாண்டி நாட்டுக் கோட்டையில் கூற்றத் தலைவர்கள் கூடியிருந்த அதே நாளில் கரவந்தபுரத்துக் கோட்டையின் வடக்கே பயங்கரமான சில சங்கேத நிகழ்ச்சிகள் நடந்தன. அதன் சிற்றரசனாக இருந்த பெரும் பெயர்ச் சாத்தன் அதிர்ச்சியடைந்து போய் உடனே அரண்மனையில் மகாராணியைச் சந்தித்து விவரங்களை அறிவிப்பதற்காக ஒரு தூதனை அவசரமாகவும், பரம இரகசியமாகவும் அனுப்பினான். இனி மேலே கதையைப் படியுங்கள். சரித்திரச் சூழ்நிலை ஒருவாறு விளங்கியிருக்கும்.

திருநந்திக்கரையிலிருந்து கால்நடையாகப் புறப்பட்ட தளபதி எப்படியும் அன்று இரவுக்குள் அரண்மனைக்குப் போய்விட வேண்டுமென்று துடியாய்த் துடித்தான். அவன் உள்ளம் இன்னசெய்வதென்றறியாமல் தவித்தது. திருநந்திக்கரையிலோ, அதைச் சார்ந்துள்ள இடங்களிலோ பிரயாணத்துக்குக் குதிரை கிடைக்குமென்று தோன்றவில்லை. "முக்கியமான பல செய்திகளைப் பற்றி ஆலோசிக்க வேண்டியிருப்பதால் மகாமண்டலேசுவரரோ, கூற்றத் தலைவர்களோ, காலையிலேயே கூட்டத்தை முடித்துக் கொண்டு ஊர்களுக்குத் திரும்பியிருக்க முடியாது. என்ன அவசரமாயிருந்தாலும் நாளைக்குத்தான் அரண்மனையிலிருந்து புறப்படுவார்கள். இப்போதே இங்கு எங்காவது ஒரு குதிரை மட்டும் கிடைத்தால் பொழுது மங்குவதற்குள் அரண்மனைக்குப் போய்ச் சேர்ந்துவிடலாம்." இப்படிப் பலவாறு சிந்தித்தபின் கால் நடையாகவே முன்சிறைவரை செல்வதென்றும் அங்கே யாரிடமாவது தேடிப் பிடித்துக் குதிரை வாங்கிக் கொள்ளலாம் என்றும் ஒரு முடிவான தீர்மானம் செய்து கொண்டு புறப்பட்டான் வல்லாள தேவன்.

சில நாட்களாகத் தொடர்ந்து பெய்த மழையின் அளவையும் சேர்த்து வெய்யில் வாட்டிப் பிழிந்து கொண்டிருந்தது. சாலையின் இருமருங்கிலும் மரங்கள் மட்டும் இல்லாமல் இருந்தால் தளபதி நடந்து சென்றிருக்கவே முடியாது. நாஞ்சில் நாட்டின் சிறப்புகளிலெல்லாம் சிறப்பு அதன் அற்புதமான சாலைகள். ஒவ்வோர் சாலையும் ஒரு பசுஞ் சோலையாகக் காட்சியளிக்கும். சத்தியத்தின் முன்னும் பின்னும் அறம் காரணத் துணையாக நிற்பதுபோல் சாலையின் இருபுறமும் சிறிதும் வெய்யில் நுழைய முடியாதபடி அடர்ந்த மரங்கள் பசுமைக் குடையாக நின்றனவென்றால் நிழலுக்குக் கேட்கவா வேண்டும்?

முன்சிறையை நோக்கிச் சாலையில் நடந்து கொண்டிருந்தபோது சாலையின் இருபுறமும் அழகிய இயற்கைக் காட்சிகளைக் கண்டான் தளபதி. பச்சைப் பசும் பாய் விரித்தாற் போன்ற நெல் வயல்கள், அவற்றின் இடையேயுள்ள நீர்ப் பள்ளங்களில் தீப்பிடித்தது போல் மலர்ந்துள்ள பல செந்நிற மலர்கள், கரும்புத் தோட்டங்கள், கதலிக் காடுகள், கன்னங் குழியச் சிரித்துக் கொண்டே ஓடும் சின்னஞ்சிறு கன்னிப் பெண்ணினைப் போல் கலகலத்துப் பாயும், சிற்றோடைகள்! என்ன வளம்!

என்ன அழகு! வாழ்நாள் முழுதும் அந்தத் தென்பாண்டி நாட்டுக் காட்சிகளில் ஒரு புதிய அழகு பிறந்து கொண்டிருப்பது போல் தோன்றியது.

பலநூறு ஆண்டுகளுக்கு முன்னால் சங்ககாலத்தில் ஒரு சிறைப் பெரியனார் என்ற புலவர் நாஞ்சில் நாட்டைப் பற்றி வருணித்துப் பாடியிருக்கும் புறநானூற்றுப் பாடலின் அழகிய கருத்துக்கள் அவனுக்கு நினைவு வந்தன.

"விதைத்த வித்துக்கள் தண்ணீர் இல்லையே என்பதனால் முளைக்காமற் போக மாட்டா. முளைத்துச் செழித்துக் கரும்பு போல் வளரும். கோடைக் காலத்தில் எங்கும் வறட்சி தென்படும் போதும் பெண்களின் கண்களை ஒத்த கருங்குவளை மலர்கள் பார்க்குமிடமெல்லாம் வளமாகப் பூத்துக் கிடக்கும். கருப்பு நிற அடி மரத்தையுடைய வேங்கை மரத்தின் பொன் போன்ற மலர் அரும்புகள் உதிர்ந்து மிதக்கும்படி நீர்க் கால்கள் கடலை நோக்கி ஓடும்."

"ஆகா! இந்தப் புலவருக்குக் கருங்குவளைப் பூக்களை நினைக்கும்போதே பெண்களின் கண்கள்தானே நினைவுக்கு வருகிறது! உலகத்தில் கவிநோக்கு என்பதே இப்படித்தான் இருக்கும் போலும்! அழகுள்ள ஒரு பொருளைப் பார்க்கும்போது அதே அழகுள்ள மற்றொரு பொருளின் நினைவை அது தூண்டி விடுகிறதோ?"

தன்னை அறியாமலே திருநந்திக்கரையில் பூ விற்றுக் கொண்டிருந்த அந்த இளம் பெண்ணின் எழில் முகம், நினைவுகள் ஓடி மறையும் அழகிய தடங்கண்கள்,—எல்லாவற்றையும் நினைத்துப் பார்க்கத் தொடங்கினான் தளபதி வல்லாளதேவன்.

தனக்குத்தானே சிரித்துக் கொண்டான். "சற்று முன் அந்தப் புலவரைப் பற்றி இகழ்ச்சியாக எண்ணினேன்! எனக்கு மட்டும் இப்போது எந்த நினைவு உண்டாகிறது? உடம்பில் இரத்தமும் உள்ளத்தில் நினைக்கும் உரமும் இருக்கிறவரை மனிதர்கள் எல்லோருக்கும் இந்த நினைவுத் தொத்துநோய் பொதுவானதுதானோ?"

சிந்தித்தவாறே முன்சிறையை நெருங்கிக் கொண்டிருந்தான் அவன். இன்னும் கால் நாழிகைத் தூரம் நடந்தால் முன்சிறையை அடைந்து விடலாம். தொலைவில் தென்படும் ஓவியம்போல் அவன் நடந்து கொண்டிருந்த சாலையிலிருந்து பார்க்கும்போது ஊர் மங்கலாகத் தெரிந்தது. எந்த ஊரையும் தொலைவிலிருந்து பார்க்கும்போது கோவிலும்,

கோபுரமும், வீடுகளும், மரங்களுமாக அதன் அழகே தனிக் கவர்ச்சி மிருந்து தோன்றும். அருகில் நெருங்கி உள்ளே நுழைந்து விட்டால் அந்தக் கவர்ச்சி இருப்பதில்லை. உலகத்தில் எல்லா அழகுள்ள பொருள்களுமே இப்படித்தான்.

ஊர் நெருங்க நெருங்கத் தளபதியின் மனத்தில் சிந்தனைகள் குறைந்து சொந்தக் கவலைகள் எழுந்தன. "முன் சிறையில் எங்கே போய்த் தேடி யாரிடம் குதிரை கேட்பது? குதிரை கிடைத்தாலும் அரண்மனைக்குப் போய்ச் சேருவதற்குள் இரவாகி விடுமே? காலையி



லிருந்து கூற்றத் தலைவர் கூட்டத்தில் என்னென்ன முக்கியமான செய்திகளைப் பேசி முடிவு செய்தார்களோ? அவற்றையெல்லாம் நான் அருகிலிருந்து அறிந்து கொள்ள முடியாமல் கெடுத்து என்னை இந்தக் குட்டையன் ஏமாற்றி விட்டானே? இனி நான் இரவில் அரண்மனைக்குப் போனாலும் அந்தரங்கக் கூட்டத்தில் நடந்தது பற்றி யாரிடமாவது கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்பதும் இயலாது! என்ன நடக்கிறதோ பார்க்கலாம்." எண்ணத்தில் அவநம்பிக்கை கலந்திருந்தாலும் வல்லாள தேவனுக்கு அதனிடையே ஒருசிறு நம்பிக்கையும் இருந்தது. "வைகறையிலேயே ஆபத்துதவிகள் தலைவன் மகர நெடுங்குழைக்காதன் தன் கூட்டத்தோடு அரண்மனைக்குச் சென்றிருப்பதனால் அவன் மூலமாக ஏதாவது நடந்த செய்திகள், பேசப்பட்ட விவரங்கள், குறிப்பாகவோ, வெளிப்படையாகவோ தெரியலாம்" என்று நம்பினான் தளபதி. மந்திராலோசனைக் கூட்டம் நடக்கிற இடத்தில் எல்லோரையும் உடன் இருக்கவிடமாட்டார்கள். ஆனால் குழைக்காதன் குறிப்புத் தெரிந்தவன். சமயத்துக்கேற்றாற் போல் சாமர்த்தியமாக நடந்து கொள்ள அவனுக்குத் தெரியும்" என்று எண்ணித் திருப்தியடைந்தான் தளபதி.

'நேரே முன்சிறை அறக் கோட்டத்துக்குப் போனால் அங்கே பகல் உணவை முடித்துக் கொள்ளலாம். அறக் கோட்டத்தில் இருப்பவன் கூட நாராயணன் சேந்தனின் தமையனான அண்டராதித்த வைணவன்தானே? அவனிடமே அவனுடைய தம்பி செய்த வஞ்சனையை விவரித்து நம்முடைய அவசர நிலையையும் கூறி ஒரு குதிரை சம்பாதித்துத் தருமாறு கேட்கலாம். நாராயணன் சேந்தனைப் போல் அடங்காப் பிடாரி இல்லை அவன் தமையன். பரம சாது. அப்பாவி மனிதனுங்கூட. நாம் சொன்னால் உடனே கேட்பான்" என்று எண்ணியவனாக ஊருக்குள் நுழைந்து அறக் கோட்டத்துக்குச் செல்லும் பகுதியில் நடந்தான் வல்லாளதேவன்.


அறக்கோட்டத்து வாசலை அவன் நெருங்கியபோது அங்கே அண்டராதித்த வைணவனும், அவன் மனைவி கோதையும் நின்று கொண்டு யாரோ ஒரு குதிரை வீரனை வழியனுப்பிக் கொண்டிருந்தனர். குதிரையின் மேல் வீற்றிருந்தவன் அவர்களுக்கு வணக்கம் செலுத்தி விடைபெற்றுக் கொண்டு புறப்படத் தயாராயிருந்தான்.

திடீரென்று தளபதி வல்லாளதேவன் கால்நடையாக அங்கு வந்து சேர்ந்தது அவர்களுக்கு வியப்பை அளித்தது. குதிரையின்மேல் இருந்தவன் பரபரப்படைந்து உடனே கீழே குதித்துத் தளபதியை வணங்கினான். அண்டராதித்தனும், கோதையும் கூட வணங்கினர்.

"கரவந்தபுரத்துக் குறுநில வேள் பெரும் பெயர்ச் சாத்தனிடமிருந்து வருகிறேன், அவசர ஓலை ஒன்றுடன் அரண்மனைக்குத் தூதனுப்பப் பட்டிருக்கிறேன்" என்று தளபதி வல்லாள தேவனுக்குத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான் புதியவன். (தொடரும்)



இப்பொழுது நடைபெறுகிறது
சென்னை சித்ரா..கிரவுன்..மஹாலக்ஷ்மி
மற்றும் தென்னாடெங்கும்
டைரக்ஷன்.
A.K. வேலன்
சங்கீதம்.
K.V. மஹாதேவன்
BALU BROS
அருணாசலம் பிக்சர்ஸ்
பெரியகோயில்
BEEBEES



ஒரே வருஷத்தில் எனது சம்பளம் இரு மடங்காயிற்று
போர்ன்-விடாவுக்கு எனது நன்றி



என் ஆபீஸ் வேலையில் கவனம் செலுத்த முடியாமலிருந்தது. என் உடம்பு சக்தியற்று இருந்தது. வேலையில் நான் பின்வாங்கியதைப் பார்த்த என் மேல் அதிகாரி என்மேல் மிகவும் கோபம் கொண்டார். என்னை வேலையிலிருந்து எடுத்துவிடுவதாக பயமுறுத்தினர். ஆகையால் என் தோழன் நந்துவை அவனுக்கு எப்படி அதிக சக்தி வந்தது என்று கேட்டேன். பலத்துக்கும் வலிமைக்கும போர்ன்-விடாவை சாப்பிடும்படி நந்து சொன்னான். இப்பொழுது நான் தினந்தோறும் இரவில் போர்ன்-விடாவை சாப்பிடுகிறேன். நான் எப்பொழுதும் அதிக சக்தியுடனும் வலிமையுடனும் இருக்கிறேன். என் மேல் அதிகாரி எனது வேலையில் உயர்வை அளித்தார். நான் எனது டிபார்ட்மெண்டுக்குத் தலைவனாகவும், போனவருஷம் வாங்கிய சம்பளத்தைப்போல் இரு மடங்கு சம்பளமும் வாங்கிக்கொண்டிருக்கிறேன். போர்ன்-விடாவுக்கு எனது நன்றி. எனது குடும்பத்தினர் யாவரும் சக்திக்காகவும், வலிமைக்காகவும் தினந்தோறும் இரவில் போர்ன-விடாவைச் சாப்பிட்டு வருகிறோம்.

For Strength and Vigour

BOURN-VITA



யுவர்களுக்கு வேண்டுகோள்

இத் தலைப்பில் ராஜாஜி எழுதியிருந்த கட்டுரையைப் பற்றி பல அன்பர்கள் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். ஒரு பம்பாய் நண்பர் சில சந்தேகங்களைக் கிளப்பி ராஜாஜிக்கே எழுதியிருக்கிறார். அக் கடிதத்தையும் ராஜாஜி அதற்கு அளித்த பதிலையும் மற்ற வாசகர்களுக்கும் பயன் படும் என்று கீழே தருகிறோம். —ஆசிரியர்

ஸ்ரீ ராஜாஜி அவர்களுக்கு,

நமஸ்காரம். நீங்கள் 14—9—58 கல்கி இதழில் கலப்பு மணம் செய்துகொள்ளும்படி இளைஞர்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். இது விஷயத்தில் எனக்கு உள்ள ஒரு சந்தேகத்தை நிவர்த்திக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

கலப்பு மணத்துக்கு இப்பொழுது இளைஞர்கள் அதிகமாக முன் வராததற்குப் பெற்றோர்களின் எதிர்ப்பே முக்கிய காரணமாகும். நம்மை இதுவரை அன்புடன் பேணி வளர்த்த பெற்றோர்களின் விருப்பத்துக்கு எதிராகவாவது இளைஞர்கள் கலப்பு மணம் செய்துகொள்ள முன்வர வேண்டுமென்று நீங்கள் கருதுகிறீர்களா? இது விஷயமாகத் தாங்கள் பெற்றோர்களுக்கும் ஒரு வேண்டுகோள் விடுத்தால், மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பது என் நம்பிக்கை.

மாதுங்கா
15—9—58 கே. வெங்கடாச்சாரி

ராஜாஜியின் பதில்

என்னுடைய வேண்டுகோள் பெற்றோர்களுக்கும் இளைஞர்களுக்கும் இருவருக்குமே சொல்லப்பட்டது. பெற்றோர்களுடைய சம்மதம் பெற்றே விவாகம் செய்துகொள்வது நலம். சுதந்திரமாகச் செய்து கொண்டால் பல கஷ்டங்களுக்குத் தயாராக இருக்க வேண்டும். எவ்வகையிலாவது பெற்றோர்களைச் சமாதானப்படுத்துவது நலம், துன்பமின்றி முன்னேற்றமடைய வேண்டுமானால்.

★

''யுவர்களுக்கு வேண்டுகோள்'' என்ற ராஜாஜியின் பொன்மொழிகளைப் படித்தேன். எத்தனை தரம் படித்தேன் என்று எனக்கே தெரியாது. ஒவ்வொரு யுவனும் கடைப்பிடிக்க வேண்டியவைகளை மதிப்புக்குரிய ராஜாஜி அவர்கள் மிக அழகாக, தெளிவாக எடுத்துக் கூறியிருப்பதைப் பாராட்டுகிறேன். இளைஞர்களின் பழக்க வழக்கங்களைப் பற்றிய அறிவுரைகளை அறிவாலும் காலத்தினாலும் சீலத்தினாலும் முதியவரான ராஜாஜி அவர்களின் வாயிலாகக் 'கல்கி' வெளியிட்டிருப்பதைப் பெரிதும் பாராட்டுகிறேன். இளைஞர்கள் அறியாததைப் பெரியோர் மூலமாகக் கூறியதற்கு எனது நன்றி தங்களுக்கு உரியதாகுக.

சென்னை-4
11—9—58 எம். ஸ்ரீநிவாசன்

★

செப்டம்பர் 14-ந் தேதி கல்கி இதழில் தலைவர் ராஜாஜி அவர்கள் யுவர்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோள் ஒவ்வொரு இளைஞனும் மனத்தினில் இருத்திப் பாதுகாக்க வேண்டியதோர் அரிய பொக்கிஷமாகும். தற்காலத்திய மாணவர்களின் நிலை குறித்து, ராஜாஜி அவர்களின் மனம் அடைந்துள்ள வேதனை இந்தக் கட்டுரையில் பிரதிபலிக்கக் காண்கிறோம். இனியாவது கர்மயோகி ராஜாஜி அவர்களின் மனம் புண்படாத முறையில் மாணவர்கள் திருந்தி நடப்பார்களேயானால் அது அவர்களுக்கும் நன்மை பயக்கும்; நாட்டுக்கும் நன்மையாகும்.

தெனாரா
11—9—58 ஏ. ராமமூர்த்தி

★

கனம் ராஜாஜி அவர்களால் ''யுவர்களுக்கு வேண்டுகோள்'' என்ற தலைப்பில் எழுதப்பட்ட கட்டுரை மிகவும் வரவேற்கத் தக்கது; பாராட்டத்தக்கது. இந்தக் கட்டுரை, மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் புத்தி புகட்டும் வகையில், அழகாக எளிய நடையில் இருக்கிறது. இம்மாதிரி கட்டுரைகள், இன்றையத் தமிழ் நாட்டுக்கு மிகவும் அவசியம்.

உறையூர்
13—9—58 கே. சங்க[illegible]

★

கல்கி செப்டம்பர் 14-ந் தேதி இதழில் ராஜாஜி அவர்கள் எழுதிய கட்டுரையைப் படித்தேன். வீட்டுக்கு ஒரு பெரியவர் இருந்து கொண்டு பேரன்களைப் புத்திமதி கூறிக் கண்டிப்பதுபோல் நாட்டுக்கு ஒரு பெரியவராக, அறிஞராக, தீர்க்கதரிசியாக இருக்கும் ராஜாஜி அவர்கள் இன்றைய இளைஞர் சமூகம் தவறான பாதையில் நடைபோடுவது கண்டு மனம் நொந்து 'வேண்டுகோள்' என்ற பெயரில் கட்டுரை வரைந்திருக்கிறார். 'பெரியவர்' என்ற பெயரைக் கொண்டவர்கள் சிலர், துவேஷத்தை மூட்டிவிடும் பேச்சுக்களைப் பேசி வரும் இவ்வேளையில் உண்மையில் வயதில் மட்டுமல்லாது, அறிவிலும், அநுபவத்திலும் பெரியவராக இருக்கும் ராஜாஜி அவர்களின் வேண்டுகோளைச் செவிமடுத்துச் செயற்பட வேண்டும். '[illegible] வகுப்பு' என்ற பிரிவில் இருக்கும், இளைஞர்கள், 'வைதீகச் சடங்குகளில் நம்பிக்கையில்லையென்றால் விட்டுத் தொலையுங்கள்' என்றவரிகளை எவ்வளவு மனம் நொந்து எழுதியிருக்க வேண்டும் ராஜாஜி அவர்கள். சாதி வித்தியாசம் ஒழியக் கலப்பு மணம்தான் சிறந்த பரிகாரம் என்கிறார். புகை பிடிப்பதையும், புலால் உண்ணுவதையும் நாகரிகமாக வெளியே சொல்லிக் கொள்ளும் இன்றைய இளைஞர்கள், படித்தவர்கள், பணக்காரர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் ஆகியோர் அவற்றை நிறுத்திவிட வேண்டும். 'இவற்றை நிறுத்தி விடுவதற்குத் தயங்க வேண்டாம்—வழி கிடையாது' என்ற அந்த வரிகளில் எத்தனை எத்தனையோ அர்த்தங்கள் உள்ளடங்கியிருக்கின்றன.

மானாமதுரை
12—9—58 'இளஞ்சோழன்'

அம்மன் அருள்

கல்வி கோபாலகிருஷ்ணன்

"அம்மா! பச்சைத் தேன் மிட்டாய் வாங்கியாரையா?" என்று பத்தாவது முறையாகக் குடிசை வாசலில் நின்று கொண்டு முனியன் கேட்டான்.

"வாங்கியாரேன், வாங்கியாரேன். வீட்டைப் பத்திரமாகப் பார்த்துக்கோ. எங்கே யாச்சும் போயிடாதே. சாயந்திரம் சந்தைக் கடையிலிருந்து வரச்சே தேன் மிட்டாய் வாங்கியாரேன்" என்று தெருக் கோடியிலிருந்து கடைசி முறையாகக் கத்தி விட்டுத் தலையில் சுமையுடன் சந்தையை நோக்கி விரைந்தாள் முனியனின் தாயார்.

சந்தை என்பது குழந்தைகள் மனம் மகிழ நவ நவ பொம்மைகள், உள்ளம் களிப்புற உண்ண மிட்டாய் தினுசுகள், கண்ணைப் பறிக்கும் கலர்ச் சட்டை, நிஜார்கள் வாங்குமிடம் என்று கருதினான் முனியன். அவன் அவ்விதம் எண்ணுவதில் என்ன தவறு? சந்தை முடிந்து திரள் திரளாகத் திரும்பும் மக்களின் கைகளில் பொம்மைகளையும், தின்பண்டங்களையுமே இவன் கண்டதுண்டு.

தாய் தந்தையரின் தலை மறைந்ததும் முனியன் தன் குடிசை வாசலில் அமர்ந்து எண்ணமிடத் தொடங்கினான். சந்தைக்குத் தன்னை ஒரு முறையாவது, ஏன், தாய் தந்தையர் அழைத்துச் செல்ல மறுக்கின்றனர்? ஒரு முறையாவது சென்று பத்து, நூறு பதினாயிரம் பலூன் பொம்மைகள், தின்பண்டங்களை வாங்கி வருவது என்று திட்டமிட்டான். ஒரு தேன் மிட்டாய் அல்லது ஒரு முறுக்குக்கு மேல் இரண்டாவது கேட்டால் உதை கொடுக்கச் சித்தமாயிருக்கும் தாய் தந்தையரை இவ்வளவையும் வாங்கித் தரும்படி கேட்பதில் என்ன பலன் என்பதையும் அவன் அறிவான். அன்னையும் பிதாவையும்விட அம்மனுக்கு வேண்டினால் அருள் புரிவாள் என்று ஒரு எண்ணம் இவன் இளம் மனத்தில் மெள்ள மெள்ள ஊன்றத் துவங்கியது.

ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தான். தன் இரு தாடைகளிலும் இன்னும் உரமும் பால் கரடுமுரடாகாத கரங்களால் மடமடவென்று அடித்துக் கொண்டான். அடுத்தபடியாக இவன் இமை இரண்டும் இவன் விழிகள் இரண்டையும் மூடின. இவன் தூய உள்ளத்திலிருந்து ஒலி ஒன்று எழும்பியது. 'அம்மா, காளியாயி! சந்தைக்குப் போயி நல்ல சட்டை நல்ல நல்ல பலூன் நிரம்ப மிட்டாய் வாங்கப் பணம் போட மாட்டியா? உன்னைக் கும்பிடறேன், காளியாயி! காளியம்மா! அருள் புரிய வேண்டும்" என்று மறுமுறையும் தாடையில் போட்டுக் கொண்டான் முனியன்.

மறுவிநாடி ஒரு பயங்கர ஒலி கேட்டு இவன் திடுக்கிட்டுக் கண்ணைத் திறந்து பார்த்தான். அதை என்னவென்று இவன் ஊகிப்பதற்குள் இவன் மடியில் ஏதோ 'தொப்' பென்று விழுந்த அதிர்ச்சி இவன் கவனத்தை மடியின் பக்கம் திருப்பியது. குத்துயிர் கொலை உயிராக ஒரு கோழிக் குஞ்சு தன் மடியில் கிடப்பதைக் கண்டான். இதை யார் எறிந்திருக்கக் கூடுமென்று சுற்றுமுற்றும் பார்த்தான். ஆகாயத்தில் கழுகு ஒன்று இவன் தலைக்கு நேராக வட்டமிடுவது தெரிந்தது. இவன் ஏமாறும் தருணத்தை எதிர்பார்த்து நிற்பது போல் இவனையே உற்று நோக்கிக் கொண்டு சற்றுத் தூரத்தில் காக்கை ஒன்று கரைந்த வண்ணம் இருந்தது.

முனியன் இனி அங்கு தாமதித்தால் கோழிக் குஞ்சு தப்ப முடியாது என்று தன் குடிசைக்குள் கோழிக்குஞ்சுடன் ஓடி ஒளிந்தான். உயிருக்கு மன்றாடிய ஜீவனைக் காப்பாற்றும் வேலையில் இவன் உள்ளம் ஈடுபடவே இவன் மனம் வேறொன்றிலும் செல்லவில்லை. சில விநாடிகளுக்கு முன்பு இவன் கட்டிய காற்றுக் கோட்டை கலைந்தது. அம்மனை இனிய தின்பண்டங்களுக்காக வேண்டிய அவன் உள்ளம் தற்பொழுது உயிருக்கு மன்றாடும் கோழிக் குஞ்சுக்கு உயிர்ப் பிச்சை அருள வேண்டும் என்று அம்மனை உள்ளம் உருக வேண்டியது. நேரம் போவதுகூடத் தெரியாமல் கோழிக் குஞ்சின் பராமரிப்பில் அவன் முழுக் கவனமும் கழிந்து வந்தது.

சந்தி வேளையில் சூச்சியில் செருகிய பச்சைத் தேன் மிட்டாயுடன், "முனியா! முனியா!" என்று கூவிக் கொண்டு குடிசையைப் பரபரப்புடன் அண்டினாள் தாயார். தெருக்கோடியில் எதிர்கொண்டு அழைக்க வேண்டிய மகன் பழக்கத்துக்கு விரோதமாக அன்று அவர்கள் வீட்டை அடைந்தும் காணவில்லையென்றால் தாயார் பதறாமல் என்ன செய்வாள்? முனியனுக்கு என்ன நேர்ந்து விட்டதோ என்று பீதியுடனே குடிசைக்குள் எட்டிப் பார்த்தாள். பெற்றோர்களைக் கண்ட முனியன் குடிசையிலிருந்து பரபரப்புடன் ஓடி வந்தான். இவர்கள் கையிலிருந்த பச்சைத் தேன் மிட்டாயையும் இவன் பொருட்படுத்தாமல் தன் கையிலிருந்த கோழிக் குஞ்சை அவர்களுக்கு ஆவலுடன் காட்டி அவசரம் அவசரமாக நடந்ததை ஒன்று விடாமல் கூறினான். தான் எவ்விதம் அம்மனைக் குறித்து வேண்டியதாகவும் தன் வேண்டுகோளுக்கு இணங்கி அம்மன் அருள் புரிந்தாள் என்றும், அந்தக் கோழிக் குஞ்சைத் தானே வளர்த்து வருவதற்கு அனுமதி தரவேண்டுமென்றும் கெஞ்சினான்.

தாயின் பராமரிப்பில்லாத தனிப்பட்ட கோழிக்குஞ்சு நாய், பூனை போன்ற விரோதிகளிடமிருந்து தப்புவது துர்லபமென்று மனத்துக்குள் நிச்சயித்துக் கொண்ட அவனது அன்னை "ஏதோ அம்மன் புண்ணியத்திலே உயிரோடு இருந்திச்சானால், அதைச் சந்தையிலே விற்று இரண்டு காசு வந்திச்சானால், உனக்கு நல்ல நல்ல சட்டை துணியெல்லாம் வாங்கிப் போடுவேன். வைச்சுக்கிட்டு வளர்த்து வா. பிழைச்சுக் கிடந்தால் பார்த்துக்கிடுவோம்" என்று கூறிப் பிள்ளைக்குப் புதுச் சட்டை நிஜார் வாங்கும் நன்னாள் என்றைக்கு வருமோ என்று பெருமூச்சு விட்டாள்.

★

ஒரு வருட காலம் ஒரு நொடியில் பறந்தோடியது. அன்று முனியனின் மடியில் அழுக்கடைந்த பஞ்சுப் பந்தாக, பொட்டுக் கண்களுடன் அபயமளிக்க வேண்டுவது போல் தன் நுண்ணிய மஞ்சள் மூக்கைப் பரிதாபமாக விரித்து விரித்துக் காட்டிய கோழிக்குஞ்சு இன்று வானவில்லையே வெட்டிச் செருகிக் கொண்டது போன்ற கண்ணைக் கவரும் வண்ணத் தோகைகளுடனும், அந்திவானத்தையே அள்ளிப் பூசிப் பவழத்தையே பரிகசிக்கக்கூடிய செங்கொண்டைகளுடனும், பசும்பொன்னில் கடைந்தெடுத்த கால்களுடனும், கம்பீரமாக ராஜ நடை போட்டு உலவும் சேவலாக மாறிவிட்டது. இதன் அகம்பாவ நடையும், தன்னம்பிக்கையுடன் தலைநிமிர்ந்து நின்று சுற்றுமுற்றும் பார்க்கும் பார்வையும் சுற்றுவட்டாரத்துச் சேவல்களைக் குப்புற அடித்து ஓடி ஒளியச் செய்தன. மற்றச் சேவல்களை மருண்டு ஓடச் செய்த முனியனின் சேவல் செருக்கு மனப்பான்மை படைத்தது என்று எண்ணிவிடக் கூடாது. குப்பையைக் கிளறி ஆகாரத்தைக் கண்டதும் மற்றக் கோழிகள் உண்ணுவதற்காக வழிவிட்டு விலகி நிற்கும் அழகும், மற்றக் கோழிகள் உண்ணுவதைக் கண்டு உள்ளம் பூரித்துக் கொக்கரிப்பதைக் காண ஆயிரம் கண்கள் வேண்டும். உயிருக்கு மன்றாடிய கோழிக் குஞ்சை உயர்தரச் சேவலாக வளர்த்த பெருமை முனியனையே சார்ந்தது என்றாலும் அவன் செயலுடன் அம்மனின் அருளும் சேர்ந்ததல்லவா?

முனியன் கிராமத்திலிருந்த மாரியம்மனுக்குத் திருவிழா அடுத்த வெள்ளிக் கிழமை நடக்க இருந்தது. அதற்கு முந்தைய தினம் வழக்கம் போல் வாரச் சந்தையும் சேர்ந்து கொண்டது. மாரியம்மன் திருவிழாவின் போது பலி கொடுக்கப் போகும் ஆடு கோழிகளுக்குக் கணக்கேது? இதன் காரணமாக, ஆடுகோழிகளின் விலைவாசியும் உயர்வது சகஜம்தானே!

முனியனின் தாயார் விலை உயர்வை முன்னிட்டு நடக்கப் போகும் சந்தையில் முனியனின் சேவலை விலைப்படுத்தி, அதில் கிடைக்கும் பணத்தைக் கொண்டு அழகிய துணிமணிகளை மகனுக்கு வாங்கத் திட்டமிட்டாள். "மகனே! சந்தைக்கு இட்டுக்கிட்டுப் போய்ச் சேவலை விற்று உனக்குச் சொகுசா சட்டை வாங்கித் தரப் போறேன்" என்று முன் கூட்டியே சொல்லியும் விட்டாள்.



குழந்தையுள்ளம்படைத்த முனியன் சந்தையில், தான் காணப் போகும் காட்சிகளையும், வாங்கப் போகும் பலூன் பட்சணங்கள், விளையாட்டுச் சாமான்களையும் எண்ணி அந்த நன்னாளை மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்து ஆனந்தித்து வந்தான்.

சந்தையன்று பகலில் முனியன் கையிடுக்கில் தன் சேவலுடன் தாய் தந்தையர்களோடு சந்தைக்குப் பிரயாணமானான். சந்தையை அடைந்ததும் முனியனின் தாய் தந்தையர் தாங்கள் விற்பனைக்குக் கொண்டுவந்த காய்





கறிகளை ஒரு இடத்தில் வைத்துக் கடை போட்டு அமர்ந்தனர்.

முனியனின் அன்னை ''மகனே! உன் சேவலை எடுத்துக்கிட்டுச் சந்தையைச் சுத்திக் கூவிக் கிட்டுவா. யாராச்சியும் சேவலை விலைக்குக் கேட்டால், மூணு வராகன்னு சொல்லு. ஆனால், நீயே விலை பேசிச் சேவலை கொடுத்திடாதே. விலை கேட்கிறவங்களை யெல்லாம் இங்கே இட்டுக்கிட்டுவா. பிறகு நாங்க விலை பேசி முடிக்கிறோம்'' என்று முனியனை அனுப்பி விட்டாள்.

முனியன் ''சேவல்! சேவல்!'' என்று கூவிக் கொண்டே வரிசை வரிசையாக வைத்திருந்த கடைகளின் வழியே வேடிக்கை பார்த்துக் கொண்டே போனான். இவன் கண்ட அதிசயங்கள் இவனைப் பிரமிக்கச் செய்தன. குவியல் குவியலாகப் பொம்மைகள் பல்வேறு வகை பட்சணங்கள் இவன் நடையின் வேகத்தைத் தடுத்து வந்தன. இவன் கடை கடையாக நின்று கண்குளிர எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டே சென்றான். இவனுக்கு இருந்த பிரமிப்பில் ''சேவல்! சேவல்!'' என்று கூவுவதாக எண்ணி அவ்வார்த்தைகளை முணுமுணுத்தானே யொழிய இவன் கூக்குரல் யார் காதிலும் படும்படி எழும்பவில்லை.

ஒரு பலகாரக் கடையின்முன் நின்றுகொண்டு கடையில் தட்டுகளில் குவித்திருந்த பலகாரங்களைக் கண்குளிரப்பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது ''என்ன தம்பி, சேவல் விலைக்குக்கொடுக்கிறாயா?'' என்று கடைக்காரன் கேட்டது முனியனைச் சுய நினைவுக்கு வரச் செய்தது. முனியன் ''ஆம்!'' என்று சொல்வதற்குப் பதிலாக, ''சேவல்! சேவல்!'' என்று உரக்கக் கத்தினான்.



கடைக்காரன் சிரித்துவிட்டு, ''என்ன விலை தம்பி?'' என்று கேட்டான். ''மூணு வராகனுங்க'' என்று முனியன் கூறக் கேட்ட கடைக்காரனுக்குக் கோபமும் கொந்தளிப்பும் வந்து விட்டன.

''தம்பி! என்ன பகல் கொள்ளை அடிக்கலாம்னு பார்த்தியா? இரண்டு வராகன் கொடுக்கிறேன். வாங்கிக் கொண்டு சேவலைக் கொடு'' என்றான் கடைக்காரன்.

காக்கையை ஓட்டுவதற்காகக் கூரையில் தலைகீழாகத் தொங்க விட்டிருந்த உயிரற்ற சேவலின் உடலைப் பார்த்ததும் முனியனின் மனம் மாறிவிட்டது. ''இல்லை'' என்று கூறி விட்டு அந்த இடத்தை விட்டு நழுவினான்.

முனியன் விரைந்து செல்லும்பொழுது ஒரு கூட்டத்தைக் கண்டான். அங்கே என்ன நடக்கிறது என்று முனியன் முண்டியடித்துக் கொண்டு முன்னே சென்றான். இவன் இளம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வகையில் பச்சை, சிவப்பு, ஆரஞ்சு போன்ற பல வர்ணச் சட்டை, நிஜார், தொப்பிகளைக் கும்பல் கும்பலாகக் குவித்துக் கொண்டு ஒருவன் ஏலம் போடுவதைக் கண்டான். ஏலத்தில் விலை போன ஒவ்வொரு உடையையும் தான் வாங்கி அணியக் கூடாதா என்று ஏங்கினான்.

ஏலம் போடுபவன் இவன் உள்ளக் கருத்தை எவ்விதத்திலோ உள்ளங்கை நெல்லிக்கனி போல் அறிந்து கொண்டான். முனியனுக்கு அளவெடுத்து வந்தாற்போல் பச்சைச் சட்டை, நீல நிஜார், ஆரஞ்சுக் குல்லாய் மூன்றையும் எடுத்துக் கொண்டு முனியனிடம் ஏலக்காரன் வந்தான். ''தம்பி! இதோ பார், இந்தச் சட்டையைப் போட்டுக்கிட்டு இந்த ஆரஞ்சுக் குல்லாயைப் போட்டுக் கிட்டியானால் மவாராசா கணக்கா இருப்பே'' என்றான். அங்கு கூடியிருந்த மகாஜனங்கள் ஆமோதித்தது போல் கரகோஷித்தனர். முனியன் என்ன செய்வதென்று அறியாமல் திகைத்து நின்றான்.

ஏலக்காரன் ''தம்பி!'' என்று முனியனைத் தட்டிக் கொடுத்து, ''காசு கையிலே இல்லையா? கவலைப்படாதே! சேவலைக் கொடு. சட்டை, நிஜார், குல்லா உனக்கே உனக்குக் கொடுத்திடறேன்'' என்று கூறி முனியனின் கையிலிருந்த சேவலின் காலைப் பிடித்து இழுத்தான். முனியன் கையில் நிம்மதியாக இருந்து வந்த சேவல் வலி தாங்காமல் ஓலமிட்டது.

சேவலின் ஓலத்தைக் கேட்டதும், முனியனை இதுகாறும் மயக்கிய வர்ணச் சட்டைகளின் மோகம் அவனை விட்டு விலகியது. ''சட்டை வேண்டாம், சட்டை வேண்டாம்!'' என்று முனியன் அந்த இடத்தைவிட்டுத் தன் சேவலுடன் 'தப்பித்தோம் பிழைத்தோம்' என்று வேகமாக ஓடினான்.

அன்று முழுவதும் சந்தையைச் சுற்றிவிட்டு அந்தி நேரத்தில் முனியன் சேவலும் கையுமாகப் புறப்பட்ட இடத்துக்கே வந்து சேர்ந்தான். அவன் தாய் தந்தையர் தங்கள் வியாபாரத்தை முடித்துக் கடையைக் கட்டிக் கொண்டு முனியனின் வருகையை எதிர் நோக்கி நின்றனர்.

''மவனே! ஒருத்தராச்சியும் சேவலைக் கேட்கலையா? காலையிலிருந்து சுத்தினியே, ஒருவரும் விலைக்குக் கேட்கலையா?'' என்று முனியனின் அன்னை கேட்டாள்.

''உன் மவன் அழகு மூஞ்சியைப் பார்த்தால் தெரியலே? எங்கேயாச்சும் பராக்குப் பார்த்துக்கிட்டுநின்னுப்பூட்டு வந்திருப்பான்;

நாளைக்குப் பொழுது விடிஞ்சால் மாரியம்மனுக்குத் திருவிழா. சேவலும் ஆடும் வெல்லம் பட்ட பாடு படும். என்னடான்னு ஒரு நாளெல்லாம் கத்திப்பிட்டுச் சேவலும் கையுமாக ஒருத்தராச்சியும் கேக்கலைன்னு வந்து நிற்கிறான்'' என்று கன்னத்தில் 'பளார்' என்று ஒரு அறை விட்டான் தந்தை.

"ஊகும். இதோ பாத்தியா, என் புள்ளெ மேலே கை வைச்சியானால் தெரியுமா? என்னமோ நீ சேவலை வாங்கிக் கொடுத்துட்ட மாதிரின்னு பேச வந்துட்டே?'' என்று தாயார் அவனுக்குப் பரிந்து பேசிக் கொண்டே வந்தாள்.

இதற்குள் "என்ன கருப்பாயி! இந்தச் சேவலை என்ன விலைக்கு வாங்கினே? இன்னைக்கெல்லாம் சந்தையைச் சுத்திச் சுத்தி ஒரு சேவல் கூடக் கிடைக்கலே. பொழுதுவிடிஞ்சா மாரியம்மனுக்குக் காவு கொடுக்கச் சேவல் வேணும். என்ன பண்ணப் போறேன்னு தெரியல்லியே'' என்று ஒரு தொண்டு கிழவி முனியனின் தாயாருடன் பேச வந்தாள்.

"இந்தச் சேவலு வாங்கல்லே ஆயா. விலைக்கு வித்துடலாம்னு கொண்டு வந்தேன். என் மவன் முனியன் வளர்த்தது. மூணு வராகன் கொடுத்தியானால் கொடுத்துப்புடுவேன்'' என்றாள் முனியனின் அன்னை.

வெகுநேரம் இருவரும் பேரம் பண்ணிவிட்டுக் கையில் கொண்டுவந்த ஐந்து ரூபாயைச் சேவலுக்காக அச்சாரமாகக் கொடுத்துவிட்டு மிகுதியை மறுநாள் காலை விடிந்ததும் கொண்டு வந்து கொடுப்பதாகச் சொல்லிவிட்டு, சேவலை வாங்கிக் கொண்டு போய் விட்டாள் அந்தக் கிழவி.

அடி வாங்கிய வருத்தம் ஒரு பக்கம், தன் அருமைச் சேவலை முதல் தடவையாக விட்டுப் பிரிந்த துயரம் மற்றொரு பக்கம் வாட்ட, முனியன் கோழி விற்ற காசில் சந்தையிலிருந்து எதுவொன்றையும் வாங்கித் தரும்படி கேட்கவில்லை. குழந்தையே கேட்டு வற்புறுத்தாத காரணத்தாலும், கலையாக ஐந்து ரூபாயை எப்படி மனமொப்பி மாற்றுவது என்ற ஏக்கத்தாலும், அவன் தாயார் முதலில் திட்டம் போட்டபடி அவனுக்குச் சட்டை எதுவும் வாங்கித் தரவில்லை. ஐந்து ரூபாய் நோட்டை அழகாக மடித்து முந்தானையில் முடிந்து கொண்டு வீடு திரும்ப ஆயத்தமானாள். வழக்கம்போல் முனியனுக்குக் கிடைக்கும் பச்சைத் தேன் மிட்டாயும் அன்று அவனுக்குக் கிடைக்கவில்லை.

அன்று இரவு முதல் தடவையாக முனியன், தன் அருமைச் சேவல் பக்கத்தில் இல்லாமல் தூங்க நேர்ந்தது. சேவலைப் பிரிந்த துக்கத்தை எவரிடமும் சொல்ல முடியாமல் அவன் அழுதவண்ணம் தூங்கிவிட்டான்.

நித்திரையில், "ஐயோ, தம்பி! தம்பி! என்னைக் காப்பாற்று, காப்பாற்று. என்னை வெட்ட வருகிறார்களே, வெட்ட வருகிறார்களே!'' என்று அவனைச் சேவல் கட்டிக் கொண்டு கதறுவதுபோல் காட்சி. காளியம்மன் கோவில் பூசாரி கத்தியுடன் முனியனிடம் சரண் புகுந்த சேவலை மீட்க வந்தது

நன்றி அறிவிப்பு



திருமணம் - 7-9-58

எங்கள் குமாரன் செல்வன் சேதுரெத்தினம் B. A.க்கும் செல்வி சுதாதேவிக்கும் நடந்தேறிய திருமணத்தன்று வருகை தந்து மணமக்களை வாழ்த்திப் பரிசுகள் வழங்கிய உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், கலையுலக அன்பர்களுக்கும், மற்றும் வாழ்த்துச் செய்தி யனுப்பிய அனைவருக்கும் எங்கள் உளங் கனிந்த நன்றி.

அன்புள்ள,

செட்டியார்பேட்டை	சி.எஸ். அப்பாவு உடையார்
12—9—58	அ. ராமாமிர்தம்

L. R. SWAMI

போல் மற்றொரு காட்சி. முனியன் தன் அருமைச் சேவலுடன் காளியம்மனின் காலில் விழுந்து, 'ஐயோ! என் அருமைச் சேவலுக்கு உயிர்ப்பிச்சை அளிக்க வேண்டும்' என்று கதறுவதுபோல் மூன்றாவது காட்சி. பூசாரி இவன் கதறலைப் பொருட்படுத்தாமல் கத்தியை ஓங்கி வெட்ட வருவது போல் கொடூரக் காட்சி. – இப்படியாகப் பல காட்சிகளைக் கண்டான் முனியன். அடுத்த கணம் அலறிப் புடைத்துக்கொண்டு எழுந்தான். அவனைச் சுற்றித் தாய் தந்தையரும் முதல் நாள் சேவலை வாங்கிய கிழவியும் மூவருமாகப் பேசிக்கொண்டு நிற்பதைக் கண்டான்.

" இந்தா மீதி ரூபாய், எனக்கு நேரமாவுது. இனிமேல் போய் அம்மனுக்குச் சேவலை வெட்டிப் பொங்கல் படைக்கணும் " என்று மீதிப் பணத்தை நீட்டினாள் கிழவி.

" ஐயோ! என் சேவலைக் கொடுக்க மாட்டேன், மாட்டவே மாட்டேன் " என்று கதறினான் முனியன்.

" என்னடா எதற்குச் சாகசம் பண்ணறே? சேவலை விலை பேசிக் கொடுத்துப்பிட்டுப் பணத்தையும் வாங்கிக்கிட்டு, சேவலைக் கொடுக்க மாட்டானுமே?" என்று கையை ஓங்கிக் கொண்டு முனியனின் முதுகில் அறைய முன்வந்தான் அவன் தந்தை.

" இதோ புள்ளெ மேலே அம்மன் ஆணையா கையை வைச்சியானும் தெரியுமா? ஏதோ நீ வாங்கிக் கொடுத்த மாதிரி விலை கூறுவதற்கு வந்துட்டியே? ஏதோ கொளந்தை அம்மனை வேண்டிக்கிடுச்சாம், அம்மன் கொளந்தை மேலே மனம் வைச்சு அருள் புரிஞ்சாங்களாம். அதை வைச்சுக்கிட்டுக் கொளந்தை ஆசையா வளர்த்துக்கிட்டு வந்தது. அதைக் கொடுக்கறதும் கொடுக்காததும் அது இஷ்டம். என்னடான்னு எடுத்ததுக் கெல்லாம் அடிக்க வந்துடறியே பிள்ளையை? நல்லதனமா சொல்லிப் பிள்ளையைச் சமாதானம் செய்வியா...... "

" கருப்பாயி! அம்மனுக்குப் பலி கொடுக்க நேரமாச்சு. இந்தா பாக்கிப் பணம்......" என்று பணமும் கையுமாகத் துடித்தாள் அந்தக் தொண்டு கிழவி.

" மகனே! பணத்தை வாங்கிக்கிட்டு நல்ல நல்ல பட்டுப் பூ போட்ட சட்டை, நிஜாரு மிட்டாய், பலூன் எல்லாம் வாங்கித்தரேன்" என்று கெஞ்சினாள் அவன் அன்னை.

" ஐயோ! எனக்குச் சட்டையும் வேண்டாம், என் சேவலைக் கொடுங்க, அது போதும்!" என்று தாயைக் கட்டிக் கொண்டு கதற ஆரம்பித்தான் முனியன். அப்பொழுது ஒரு விநோத ஒலி கேட்டுக் குடிசையின் வாயில் பக்கம் எல்லோருடைய கவனமும் சென்றது. என்ன விந்தை? காலில் அறுந்த கயிறுடன் முனியனின் சேவல் கதறிக் கொண்டு வீடு நோக்கி வந்தது. முனியன் குதித்து, "என் சேவல்! என் சேவல்!" என்று கத்திக் கொண்டே வாசற் பக்கம் ஓடினான். முனியனும் அவனுக்கு அம்மன் அருள் புரிந்த அருமைச் சேவலும் ஐக்கியமாயினர் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? அடுத்த கணம் கிழவி கொடுத்த ஐந்து ரூபாய்ப் பணம் அவளிடமே போய்ச் சேர்ந்தது.

வட்ட மேஜை

ராஜாஜி அவர்களுக்கு, வணக்கம்:

ஆகஸ்ட் மாதம் 'பவன்ஸ் ஜர்னலி'ல் வெளியான ''நவீன உத்தரகாண்டம்'' என்ற ஆங்கிலக் கட்டுரையையும், பிறகு அதையே 31-8-58 'கல்கி'யில் தமிழிலும் முறையே படித்து மகிழ்ந்தோம்.

பெரிய பெரிய புராணங்களான மஹாபாரதத்தையும், ராமாயணத்தையும், சுருக்கமாகவும் எளிய நடையிலும் ''வியாசர் விருந்து'' என்றும் ''சக்கரவர்த்தித் திருமகன்'' என்றும் தாங்கள் தற்காலத்துச் சிறுவர் சிறுமிகளின் பொருட்டு எழுதியிருக்கின்றீர்கள். இப்பொழுது ''வள்ளுவர் வாசகம்'' என்று திருக்குறளைத் தாங்கள், எங்கள் யாவருக்கும் விளங்கும்படி எளிய நடையில் எழுதி வருகின்றீர்கள். எங்கள் பெண் இனத்துக்கு மகிழ்ச்சி தரக்கூடிய இந்த 'நவீன உத்தர காண்டத்தை'த் தங்கள் பரந்த மனப்பான்மையைக் கொண்டு எழுதியிருக்கிறீர்கள்.

சாதாரணமாக ராமாயணத்தை உபந்நியாசமாகவோ காலக்ஷேப முறையிலோ கேட்கும்பொழுது ஸ்ரீராமபிரானை உலகத்திலேயே மேம்பட்ட குணங்கள் படைத்த ஒரு ஆதர்ச புருஷனாக வர்ணித்துக் கூறுகிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட ஸ்ரீராமர் இரண்டு மூன்று கட்டங்களில் தயைதாக்ஷண்யமின்றி நடந்து கொள்ளுகின்றார் என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

முதலாவதாக, மரத்தின்பின் மறைந்திருந்து வாலியைக் கொன்றது. அடுத்தபடியாக ராவணவதமான பின் மிகவும் கஷ்டப்பட்டு நொந்து போயிருந்த சீதா தேவியை வரவழைத்து அவளிடம் ஒரு ஆறுதலான வார்த்தையோ, கருணையோ காட்டாமல் மனிதத் தன்மை கூட இல்லாத கடினமான வார்த்தைகளால், ''உனக்காக நான் ராவண வதம் செய்யவில்லை. நீ எங்கு வேண்டுமானாலும் போகலாம்; பிறர் மனையில் இருந்த உன்னை நான் ஏற்றுக் கொள்ள முடியாது'' என்றும் சொல்லி விட்டார்.

கடைசியாகக் கேவலம் ஒரு வண்ணானுடைய பேச்சுக்கு மதிப்புக் கொடுத்து கர்ப்பிணியான சீதாதேவியைக் காட்டுக்கு அனுப்பி காருண்யமில்லாமல் நடந்து கொண்டார். இது சரியா என்று ராமாயணப் பிரவசனம் செய்யும் குறுகிய மனப்பான்மையுடையவர்களைக் கேட்டால் ஏதாவது சமாதானம் சொல்லித் தட்டிக் கழிக்கிறார்கள்.

மேலான மனப்பான்மையுடைய தாங்கள் இப்படி ஒரு நவீனம் எழுதியதில் எங்கள் பெண் குலத்தவருக்கே ஒரு பெருமை. ரோசமும் தன்மானமும் உள்ள ஒரு பெண் எப்படி ஸ்திரபுத்தியில்லாத கணவனிடம் பேசுவாளோ, அப்படிப் புராணத்தையே மாற்றிப் பெண்களுக்குப் பெருமையை அளித்து விட்டீர்கள். இதையே ஒரு ஸ்திரீ எழுதியிருந்தால் புருஷர்கள் மதிக்க மாட்டார்கள். மதிநுட்பமும் எவற்றையும் ஆராய்ந்து பார்க்கும் தன்மையும் வாய்ந்த தாங்கள் இதை எழுதினபடியால் இதற்கு மதிப்பு கட்டாயம் ஏற்படும்.

சென்னை—18
15—9—58
ஆர். எஸ். சாவித்திரியம்மாள்

நிதி விரயம்

ஜில்லாக்களில் நிர்வாகம் சரிவர நடைபெறாததால் இருகூறு போடப்படும் என்று மந்திரிகள் கூறுகிறார்கள். நிர்வாகம் சரிவர நடைபெறாததற்குப் பொறுப்பும் அவர்களே. ஜில்லா கலெக்டர், மந்திரிகள் வருகின்ற சமயங்களில், அவர்களுடைய பிரயாணத்தில் கலந்து கொள்வதே தம் பிரதான வேலையென்று கருதி மற்றைய நிர்வாக வேலைகளைப் புறக்கணிக்கின்றனர்.

தேசிய விஸ்தரிப்பு, சமுதாய நலத் திட்டங்கள் என்ற பெயரில் பல லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவிடப்பட்டுக்கொண்டேயிருப்பதை நாம் காண்கிறோம். இதனால், இந்நாள் வரையில் பலன் ஒன்றும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஏதோ ஒன்று, இரண்டு ஊர்களில், சிறிதளவுதான் வெற்றிபெற்றிருப்பதாக மத்திய சர்க்கார் அறிக்கை ஒன்று கூறுகிறது. 'கிராம சேவக்' என்று அழைக்கப்படுபவர்கள், குமரிமுதல் இமயம் வரை சர்க்கார் செலவில் சுற்றுப்பிரயாணம் செய்த வண்ணமாகவே இருக்கிறார்கள். இப்படியா நமது வரிப் பணமெல்லாம் விரயமாக வேண்டும்?

அம்பாசமுத்திரம்
13—9—58
வி. எஸ். சுப்பிரமணியம்

பழுதுபார்ப்பார்களா?

எங்களூர் பஞ்சாயத்து போர்ட் எல்லைக்குட்பட்ட இரண்டாவது வார்டிலிருக்கும் 'நாடார் கிணறு!' சுமார் 150 ஆண்டுகளுக்கு முன் வெட்டப்பட்டு, சுமார் ஆறாயிரம் மக்களுக்குக் குடி தண்ணீர் அளித்து வந்திருக்கிறது. அதனை வெட்டி அதிக காலம் ஆனபடியால் 1—8—58-ல் சரிந்து விழுந்து, தண்ணீர் எடுக்க முடியாத நிலைக்கு மாறிவிட்டது. வேறு குடிதண்ணீர் வசதிக்குக் கிணறு இல்லாதபடியால் மிகவும் அவதிப்படுகிறோம். இந்தக் கிணறு எங்களூர்ப் பண்ணையார் அவர்களுக்குச் சொந்தமானது. எனவே இந்தக் கிணற்றைப் பழுதுபார்க்கப் பண்ணையார் அவர்கள் முன் வருவாரா? அல்லது பஞ்சாயத்து போர்டாவது முன்வருமா?

திருநெல்வேலி
11—8—58
மா. கணேசன்

ருஷ்யாவில் சுதந்திர தினம்

சில ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள அன்புபடைத்த மாபெரும் ருஷ்ய நாட்டில் இருந்து தங்களுக்கு இந்தக் கடிதம்



சென்னை மாணவர் மன்றத்தின் 26, 27 ம் ஆண்டு விழா இம்மாதம் 6, 7 தேதிகளில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவினை ஒட்டி மாணவர்கள் ஓவியப் போட்டி, கையெழுத்துப் போட்டி, மாறுவேடப் போட்டி முதலியன நடைபெற்றன. முதல் நாளன்று போட்டியில் கலந்துகொண்ட மாணவ மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கப் பட்டன. மாலையில் குழந்தைகளின் ஆடல்பாடல் கதம்ப நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இரண்டாம் நாளன்று மன்ற நிலையத்துக்கு எதிரே நூற்றுக் கணக்கானவர்களுக்கு அன்ன தானம் செய்யப்பட்டது. மாலை நிகழ்ச்சிக்கு திரு அ. சிதம்பரநாத செட்டியார் அவர்கள் தலைமை வகித்தார். மேயர் திருமதி தாராசெரியன் விழாவைத் துவக்கி வைத்து மன்றத் தின் பணிகளைப் போற்றினார். மேஜர் அழகப்பன் டாக்டர் குருசாமி முதலியார் அவர் களின் உருவப்படத்தைத் திறந்து வைத்தார். மன்றத் தலைவர் திரு மயிலை சிவமுத்து வரவேற்பு அளிக்கையில் மன்றத்தின் கட்டட நிதிக்கு உதவக் கோரினார். திரு சோமசுந்தர தம்பிரான் திரு சிவகுமாரன் முதலியோர் பேசிய பிறகு, திரு தணிகை உலகநாதன் நன்றிகூற ஆண்டுவிழா முடிவுற்றது.

◆◆

எழுதுவதற்கு நாங்கள் மட்டற்ற மகிழ் வெய்துகிறோம்.

இந்திய - ருஷ்ய நாட்டின் நல்லுறவுக்குச் சான்றாகப் பல இந்திய பொறி இயலாளர்கள் ருஷ்ய நாட்டில் உயர்தரப் பயிற்சி பெற்று வருகின்றார்கள். அவர்களால் நமது நாட்டின் சுதந்திர தினம் மிகச் சிறப்பாகக் கொண் டாடப்பட்டது. சுதந்திர தினத்தன்று காலை யில் கொடி ஏற்றமும், மாலையில் தேநீர் விருந்தும் நடந்தன. தேநீர் விருந்துக்குப் பிறகு இங்கு பயிற்சி பெற்று வரும் இந்தியப் பொறி இயலாளர்களால் ஓர் ருஷ்ய நாடகம் நடிக்கப்பட்டது. இந்த நாடகம் ருஷ்யர் களால் பெரிதும் பாராட்டப் பட்டது.

இங்குள்ள இந்தியர்களின் சார்பாகத் தங்க ளுக்கும், தங்கள் பத்திரிகைக்கும் சுதந்திர தின வாழ்த்துக்கள் அனுப்புகிறோம். தமிழர் களின் மனத்தில் நிரந்தர இடம் பெற்று விட்ட தங்கள் பத்திரிகை என்றென்றும் எங்கள் உள்ளத்தை மகிழ்விக்கும் என்று நம்புகிறோம்.

மகிவகா-ருஷ்யா
21—8—58

ரா. நாகராஜன்

நிலத்தை நிர்ணயிக்க வேண்டும்

சென்ற ஐந்து வருடங்களாக நிலச் சீர்திருத்தம் என்ற அடிப்படையிலே அணு அணுவாகக் குடியானவர்களையும் நிலச் சுவான்தார்களையும் சித்திரவதை செய்து வருவது யாவரும் அறிந்ததே.


எப்போதும் நிலம் ஒரு நபரிடம் இரு தலை முறைகளுக்கு மேல் நிலைத்திருப்பதில்லை. அத் துடன் எந்த நிலத்திலும் நன்றாக உண்மையா கப் பாடுபட்டால்தான் வருமானமும் கிடைக் கும். மகசூல் காலத்தில் சர்க்காரிடம் கடன் கோரிக் காலதாமதமாகப் பெற்றுச் சாகு படி செய்தால் அது விளைந்தாலும் விளையா விட்டாலும் கடனையும் வரியையும் கொடுத் துக் கணக்கு தீர்க்க வேண்டும். இவ்விதம் பலவிதத்திலும் வரிகளைப் போட்டு வதை செய்வதைவிட ஐந்து நபருள்ள குடும்பம் இவ்வளவுதான் நிலம் வைத்துக் கொள்ள வேண்டும் என்று நிர்ணயம் செய்து சட்டம் செய்யலாம்.

நெருஞ்சிப்பேட்டை
5—9—58

செ. சுந்தர ரெட்டி



26
சென்னை
பிரபாத், வெலிங்டன்
சரஸ்வதி மற்றும் தென்னாடெங்கும்
பசந்த் பிக்சர்ஸ்
ஜிம்போ
கேவா கலர் தமிழ்
வாடியா பிரதர்ஸ் தயாரிப்பு
தயாரிப்பு டைரக்ஷன்: ஹோமி வாடியா
தந்திரக் காட்சிகள்: பாபு பாய் மிஸ்திரி
தமிழாக்கம்: பிலிம் சென்டர்
மதராஸ்.
சங்கீதம்: சித்ர குப்தா
Elegant



"நீங்களும் சினிமா நக்ஷத்திரமாகலாம்"

என்று சொல்கிறார் அசோக்குமார்

போட்டி
அறிவிக்கப்படுகிறது

"ஹாஸலேன்' ஸ்நோ"வைத் தயாரிப்பவர்களால் ஏற்படுத்தப்பட்ட "நீங்களும் சினிமா நக்ஷத்திர மாகலாம்" என்ற போட்டி பில்மாலயாவின் சொந்தக் காரரான எஸ். முக்கர்ஜீ மற்றும் நார்கிஸ், சுனில் தத் இவர்களால் தேர்ந்தெடுக்கப்படும்.

நீங்கள் சினிமா நக்ஷத்திரமாக விளங்க விரும்புகிறீர்களா? உங்களுக்கு இஷ்டமான பிரபல சினிமா நக்ஷத்திரங்களுடன் சினிமாவில் நடிக்க உங்களுக்கு விருப்பம் இருக்கிறதா?

உங்களுக்கு இது ஒரு அருமையான சந்தர்ப்பம்—
இதை மேலும் படியுங்கள்
இதில் என்ன விசேஷம்

இந்திய சினிமா தொழிலில் நன்றாக நடிக்கக் கூடிய நக்ஷத்திரங்களுக்குத் தற்போது தேவை முக்கியமாக இருக்கிறது. எனவே புதிய நடிகர்களைக் கண்டு பிடிப்பதற்காக "ஹாஸலேன் ஸ்நோ" தயாரிப்பாளர்கள் "நீங்களும் சினிமா நக்ஷத்திரமாகலாம்" என்ற போட்டியை ஏற்படுத்தி இருக்கிறார்கள். இப்போட்டியை பெயர்போன சினிமா நக்ஷத்திரங்களான நார்கிஸ், சுனில்தத் மற்றும் பில்மாலயா என்ற பெரிய பிலிம் கம்பெனியை ஆரம்பித்திருப்பவரான எஸ். முக்கர்ஜீ அவர்களும் தேர்ந்தெடுக்க அநுமதித்து இருக்கிறார்கள்.

இப்போட்டியில் 16 வயது முதல் 30 வயது வரை யாவரும் கலந்துகொள்ளலாம். இதில் கலந்துகொள்ள விரும்புவோர் தலைமுதல் தோள்வரை அல்லது தலை முதல் கால் வரையோ ஒரு போட்டோ எடுத்து அதன் பின்புறம் :-

1. பெயர் மற்றும் விலாசம்.
2. வயது
3. உயரம் மற்றும் எடை
4. எழுதப் படிக்கத் தெரிந்த பாஷைகள்
5. இவைகளை எழுதி அத்துடன் "ஹாஸலேன் ஸ்நோ"வின் காலி அட்டைப்பெட்டிகளில் இரண்டும் சேர்த்து வைக்க வேண்டும்.

பிறகு அதை ஒரு கவரில் வைத்து அதன்மேல் – YOU TOO CAN BE A STAR" COMPETITION – என்று எழுதி அதை நீங்கள் "ஹாஸலேன் ஸ்நோ" வாங்கிய கடைக்காரரிடம் கொடுத்தால் அவர் எங்களுக்கு அனுப்பி வைப்பார்.

நார்கிஸ், சுனில் தத் மற்றும் எஸ். முக்கர்ஜீ ஆகிய மூவரும் அவைகளைத் தேர்ந்தெடுப்பார்கள்; அவர்களுடைய தீர்ப்பே முடிவானது. 4 சிறுவர்களும் 4 சிறுமிகளும் இதில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவர்கள் 8 பேர்களும் "ஹாஸலேன் ஸ்நோ" தயாரிப்பாளர்களின் விருந்தினர்களாக பம்பாய்க்கு அழைக்கப்படுவார்கள்.

பிறகு பம்பாய் பில்மாலயா ஸ்டூடியோவில் ஒவ்வொருவருக்கும் சினிமாவில் நடிப்பதற்கான பரீக்ஷைகள் நடத்தப்படும். மூன்று தினங்கள் பம்பாயில் இருப்பு. எல்லாம் இலவசமாக.

நடிப்பதற்கான பரீக்ஷை முடிந்தவுடன் ஒரு சிறுவனும் ஒரு சிறுமியும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவ்விருவர்களுக்கும் சினிமா உலகில் முக்கியமான எதிர்கால வாழ்வு காத்திருக்கும்.

ஞாபகமிருக்கட்டும்
நீங்களும் சினிமா நக்ஷத்திரமாவதற்கு இது ஒரு சிறந்த சந்தர்ப்பம்
இதை நழுவ விடாதீர்கள்
உங்களை
சினிமா தொழில்
எதிர்பார்க்கிறது

உங்கள் என்ட்ரியை இப்பொழுதே அனுப்புங்கள்



சிறு கதை

நோட்டுப் புத்தகம்

'கௌசிகன்'

அடுத்த வீட்டுப் பையன், ரமணிக்குக் கப்பல் செய்யக் கற்றுக் கொடுத்தான். உடனே அதைச் செய்து பார்க்க ரமணி தன் கணக்கு நோட்டிலிருந்து ஒரு தாளைப் 'பரக்' என்று கிழித்தான். பாதி கிழித்திருப்பான். ''ரமணி! ரமணி!...என்னைக் கிழிக்காதே!'' என்று ஒரு குரல் கேட்டுத் திகைத்த ரமணி திரும்பினான். சுற்று முற்றும் பார்த்தான். யாரையும் காணவில்லை. ''உன் கையிலுள்ள கிழிந்த காகிதமான நான்தான் பேசுகிறேன், ரமணி! நீ கணக்குப் போடுகிற இந்த நோட்டுப் புத்தகத்தின் உருவத்தை அடைய நான் பட்ட சிரமங்களை அறிந்தால் நீ இப்படி என்னை அலட்சியமாகக் கிழிக்க மாட்டாய்'' என்றது பேப்பர் 'மொர மொர' வென்று தன் உடல் துடிக்க.

''உன் கதையைத்தான் சொல்லேன் கேட்கிறேன்'' என்று உட்கார்ந்தான் ரமணி.

அவன் தங்கை உஷாவும் ஓடி வந்தாள். இருவரும் சுட்டிகள். சதா துருதுருவென்று இருப்பார்கள். எந்த விஷயத்தைப் பற்றியும் ஆராய்ந்து அறிந்து கொள்வதில் அக்கறை காட்டுவார்கள். அதுவும் கதை கேட்பதில் அலாதியான ஆனந்தம் அவர்களுக்கு.

காகிதம் தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தது. ''நான் எதனால் உண்டானேன் தெரியுமா? நான் பிறப்பதற்கு மூலகாரணம் ரம்பங்கள்தான். ரம்பத்துக்கும் காகிதத்துக்கும் என்ன சம்பந்தம் என்கிறாயா? பெரிய பெரிய மரங்களை அறுப்பதற்கு ரம்பம் வேண்டாமா? நான் உருவாவதற்கு மூலப் பொருள் மரங்கள்தான் என்று உனக்குத் தெரியாது. மேல் நாட்டிலே 'பிர்' (Fir) என்று ஒருவகை மரம். எங்களைப் பிறப்பிக்க முக்கியமாக அந்த மரங்களைத்தான் உபயோகிப்பார்கள். நம் நாட்டிலும் எங்கள் இனத்தவர்களை உற்பத்தி செய்யப் பிரத்தியேகமான மரங்களைத்தான் தேர்ந்தெடுக்கிறார்கள்.

''கிளைகள், இலை தழைகள், குச்சிகள், பட்டைகள் இவைகளையெல்லாம் அகற்றிய அடி மரத்தின் பெரிய பெரிய கட்டைகள்தான் தேவை. 'கட்டடம் கட்டுவதற்கா?' என்று குறும்பாகக் கேட்காதே. பெரிய மரக் கட்டைகளைச் சிறு சிறு துண்டுகளாகச் சீவுவார்கள். இந்தத் துண்டுகளையெல்லாம் பெரிய கொப்பரைகளில் போட்டுப் பாயசம் பண்ணுவார்கள்.''

''பாயசமா?''

''ஆமாம் பாயசமேதான். இந்த வித்தைப் பாயசத்துக்குப் பருப்பு – மரத்துண்டுகள்; பால்—அமிலம்! தொழிற்சாலையில் பிரும்மாண்டமான அண்டாக்கள் - உன் வீட்டிலுள்ள பெரிய அறையைப்போல அத்தனை பெரிய அண்டாக்கள்- இருக்கும். அதில் மரத் துண்டையும் அமிலத்தையும் ஊற்றிப் பாயசம் கொதிக்க வைப்பார்கள். மரத் துண்டுகள் நைந்துபிசிர்பிசிராகும். இதை வேறொரு யந்திரத்தின் மூலம் நன்றாக அரைப்பார்கள். இப்போது நிஜமான பாயசம்-மரக்கூழ்-தயாராகிவிடும். இந்தப் பாயசத்திலிருந்துதான் நான் உற்பத்தியாகிறேன்.

'மரக் கூழிலிருந்து பேப்பரா?' என்று அதிசயிக்கிறாயா? ஒரு காகிதத்தை எடுத்து அதன் முனையிலிருந்து மிக மெல்லிய ஒரு துண்டை உரித்து எடு. அதை விளக்கின் முன்னால் தூக்கிப் பிடித்துப் பார். சல்லடை போன்ற துவாரங்களுடையதாய்ச் சிறுசிறு அணுக்கள் ஒன்றோடு ஒன்று சேர்ந்து கொண்டிருப்பது தெரியும். அதிலிருந்து நான் கனமான ஒரே பொருளால் ஆக்கப்பட்டவன் இல்லை என்பது விளங்கும். இதற்கு இன்னொரு உதாரணம். என்னைத் துண்டுகளாகக் கிழித்துத் தண்ணீரில் ஊற வை. ஒன்று சேர்ந்திருக்கும் மரத்தூளின் அணுக்கள் பிரிந்து மறுபடியும் உனக்கு மரக்கூழ் கிடைக்கும்.

''மரக்கூழிலிருந்து எப்படி நான் உருவாக்கப்படுகிறேன் என்பதைச் சொல்ல வேண்டாமா? மரக் கூழை அகலமான சமமான நீண்ட வாய்க்கால்களின் வழியே போகச் செய்வார்கள். அப்படிப் போகும்போதே மரக்கூழ் நன்றாகக் குலுக்கப்படும். இப்படி அசைத்து அசைத்துக் குலுக்கப்படுவதால் மரக் கூழிலுள்ள அணுக்கள் ஒன்றோடொன்று இணைந்து கொள்ளும். எத்தனை மெல்லியதாக ஆக்க முடியுமோ அத்தனை மெல்லியதாக இந்தக் கூழிலிருந்து-அப்பளம் இடுவது போல நான் இழைக்கப்படுவேன். இப்போது நான் கரடுமுரடாகவும்-சரப்பசை யுடையதாயு



ளாகவும் இருப்பேன். இனி என்னைக் காய வைப்பார்கள். என் உடலின் மீது சூடான உருளைகள் ஊர்ந்து செல்லும். அப்போது தண்ணீர் எல்லாம் ஆவியாகப் போக, நான் உலர்ந்தவனாகி விடுவேன். பிறகு என் உடலை வழவழப்புள்ளதாக்கி மெருகேற்றி உருளைகளில் சுற்றி விடுவார்கள். இத்தனை நேரம் சொல்லியவை 'நியூஸ் பிரிண்ட்' என்ற பத்திரிகைக் காகிதம் செய்யும் முறை பற்றி!

''எங்களில் உறுதியானதும் உயர்ந்ததுமான இனத்தவர்களை மரங்களிலிருந்து உருவாக்குவதில்லை. கந்தைத் துணி சாக்கு, வைக்கோல், புல், சணல் ஆகியவைகளிலிருந்து உருவாக்குகிறார்கள். மரத்துண்டுகளுக்குப் பதில் சாக்கு, கந்தல் துணிகள் முதலியன. அமிலத்துக்குப் பதில் காரங்கள் (உப்பு, ஆல்கலி) அல்லது கண்ணும் சேர்க்கப்படுகின்றன. சாக்கு, துணிக் கந்தல், சணல், கம்பளி, வைக்கோல் உப்புக்கள் இவைகளைக் கொண்டு முன்போல் பாயசம் தயாரித்து உயர்ந்த காகிதங்களைச் செய்கிறார்கள்.

''சங்கிலித் தொடர் போல் எத்தனை நிகழ்ச்சிகள்? பெரிய மரத்தைச் சிறுசிறு துண்டுகளாக்கி, அந்த மரத் துண்டுகளைக் கொதிக்க வைத்துப் பாயசமாக்கி அந்தப் பாயசத்திலிருந்து மெல்லிய காகிதம் தயாரித்து, அந்தக் காகிதத்திலிருந்து உனக்கு நோட் புத்தகம் கிடைக்கிறது.

''காகிதத்தைத்தூக்கிப் பிடித்தால் அதில் எழுத்துக்களும், சில படங்களும் இருப்பதைக் காணலாம். என்னை எங்கே செய்தார்கள், யாருடைய கைத்திறன் என்பதைக் குறிக்கும் அடையாளங்கள்தான் இவை. இவற்றை எப்படி என் உடலில் பதிக்கிறார்கள் தெரியுமா? காகிதக் கூழை மெல்லியதாக இழைக்கும் யந்திரத்தின் சமமான அடித்தளத்தில் இந்தஎழுத்துக்களும் குறிகளும்சற்று உயரமாகப் பொறிக்கப்பட்டிருக்கும். இதன் மீது மரக்கூழ்படிந்துமெல்லியதாக அழுத்தி இழைக்கப்படும் போது இந்தக் குறிகளும், எழுத்துக்கள் உள்ள இடங்களும் மற்றப் பாகத்தை விடக் கனம் குறைவாக இருக்கும். ஆகவே காகிதத்தைத் தூக்கிப் பிடித்துப் பார்க்கும் போது அந்த இடங்களில் ஒளி அதிகமாக ஊடுருவிச் செல்லும். இதற்கு ''வாட்டர் மார்க்'' என்று பெயர்.

''காகிதம் செய்யும் தொழிற்சாலைக்குப் போனால் பிரும்மாண்டமான யந்திரங்கள் என்னை உருவாக்கும் பல நிலைகளை அடுக்கடுக்காகக் காணலாம். ஒரு நிமிஷத்துக்கு 383 கஜ நீளமுள்ள காகிதம் உற்பத்தி செய்யும் யந்திரங்களும் இருக்கின்றன.

''காகிதங்களைஉருளைகளாகத்தான் முதலில் செய்து குவிப்பார்கள். ஒவ்வொரு உருளையிலும் குறிப்பிட்ட அகலமுள்ள பல மைல் நீளத்துக்குக் காகிதம் சுற்றப் பட்டிருக்கும். உனக்கு வேண்டிய நோட்டுப் புத்தகம் செய்ய, இந்த உருளைகளிலிருந்து காகிதத்தைத் தேவையான அளவுகளில் துண்டு துண்டாக வெட்டி 'ரீம்'களாகக் கட்டுவார்கள்.


''இனி இந்த ரீம்கள் 'நோட் புத்தகம்' செய்யும் தொழிற்சாலைக்குப் போகும். அங்கு யந்திரங்கள் தேவையான அளவுக்குக் காகிதங்களை எண்ணி எடுத்து மடிக்கும். எண்ணுவதிலே இவை தவறுவதே இல்லை. இன்னொரு யந்திரம் எனக்குச் சட்டையைக் (அட்டை) கொண்டு வரும். உள்ளே என்னை வைத்து என் மீது அந்தச் சட்டையைப் போட்டு அடுத்த யந்திரத்துக்குத் தள்ளும். அங்கே அட்டையோடு என்னைச் சேர்த்து நடுவிலே துவாரமிட்டுக் கம்பியால் தைக்கும் ஒருயந்திரம். 'கிராப்' வெட்டிக் கொள்வது போல என் உடலின் மூன்று பக்கங்களையும் ஒழுங்காக வெட்டி அழகுபடுத்துவார்கள். இப்போது உனக்கு உபயோகமாக, நீ பெரிய அறிவாளியாக, உன் பாடங்களை எழுதிக் கொள்ள, உன் வரவை எதிர்பார்த்து நான் கடையில் தயாராக இருப்பேன்'' என்று தன் கதையை முடித்தது.

''என் அறிவை வளர்க்கும் சாதனமாக, மனித குலத்தின் பெருமையை உயர்த்தும் மகத்தான பொருளாக நீ தோன்ற எத்தனை மாறுதல்களை அடைந்து வந்திருக்கிறாய். இனி உன்னை நான் கிழித்து வீணாக்க மாட்டேன்'' என்றான் ரமணி.

''இனி நீ காகிதத்தைக் கிழித்துப் பாழாக்கவே கூடாது, அண்ணா!'' என்றாள் உஷா.

கண்டு பிடி ?

இங்குள்ளபடத்தில் உங்களுக்குப் பழக்கமான சில பொருள்கள் தரப்பட்டிருக்கின்றன. இவை என்னென்ன என்று கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.



விடை: 1. பூட்ஸ் போட்டுக் கொள்ள உதவும் தகடு-ருக்காம் பக்கவாட்டுத் தோற்றம். 2. சீப்பு-உச்சித் தோற்றம். 3. பேப்பர் கிளிப்-உச்சித் தோற்றம் (பெரிது பண்ணப் பட்டது). 4. சாவி-அடித் தோற்றம். 5. ஊற்றுப் பேனா-நிப்பு முனை மூடல்-உச்சித் தோற்றம். 6. தையற்காரரின் விரல் தொப்பி-உச்சித் தோற்றம்.

7. கட்டுண்ட பட்டு

காரின் மேலிருந்து உருண்டு விழுந்த சேகருக்கு அதிர்ஷ்டவசமாகப் பலத்த காயங்கள் எதுவுமில்லை. விழுந்த அதிர்ச்சியிலிருந்து விடுபட்டுப் பார்த்தபோது அவருக்கு வியப்பு தாங்கவில்லை. விழுந்து கிடந்த அவர் முன்னால் சற்றுத் தூரத்தில் சதிகாரர்களின் கார் நின்று கொண்டிருந்தது. இன்னும் அதிசயம் என்னவென்றால் அவர்கள் காரிலிருந்தபடி சேகரையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்ததுதான். கீழே விழுந்த தன்மீது காரை ஏற்றி அரைத்துக் கொண்டு போகாமல் அவர்கள் ஏன் அப்படி நிற்கிறார்கள் என்று வியப்படைந்த சேகருக்கு, அப்போதுதான் தனது இடக்கரம் ஒரு கைத் துப்பாக்கியை அவர்களை நோக்கிப் பிடித்துக்கொண்டிருப்பதை உணர்ந்தார். யாரையும் சுட்டுக் கொல்லும் எண்ணம் அவருக்கு இல்லை. 'காரின் சக்கரத்திலே சுட்டுக் காற்றைவெளியேற்றி 'பங்க்சர்' செய்து விட்டால் பயல்கள் சிக்கிக் கொண்டு விடுவார்கள்' என்ற முடிவோடு முன் சக்கரத்து டயரைக் குறி பார்த்த அதே சமயம் குபீரென்று ஒரு குலுக்கலுடன் அந்தக் கார் கிளம்பிக் கணவேகத்தோடு இவரை நோக்கி வர ஆரம்பித்தது. சேகர் அதன் சக்கரங்களிலே நசுங்கிவிடாமலிருக்கத் தரையிலே விழுந்து ஒரு பக்கமாக உருண்டு ஒதுங்கினார். சதிகாரர்கள் திறமைசாலிகள்தான்! மறுபடியும் அவர் தலை நிமிர்ந்து பார்த்தபோது கரும்புள்ளியாக வெகு தூரம் சென்று விட்டது கார். அந்த விநாடியே சேகரின் அருகே இன்னொரு கார் வந்து நின்றது. ''என்ன சார் அந்தக் காரைப் பிடிக்க வேண்டுமா ?'' என்ற குரல் அதனுள்ளிருந்து கேட்டது. 'ஆமாம்! சீக்கிரம் அதைத் தொடர்ந்து செல்லுங்கள்' என்று சொல்லியபடியே காருக்குள் டிரைவரின் அருகே பாய்ந்து சென்று உட்கார்ந்தார் சேகர். அந்த டாக்ஸியும் காற்றைக் கிழித்துக் கொண்டு தார் ரோட்டிலே அம்பு போலப் பறக்கலாயிற்று.

உள்ளே வந்து உட்கார்ந்த மனிதரைப் பார்த்த டிரைவர், ''அட!...நீங்க...வந்து...வந்து மணியோட மாமா சேகரய்யா இல்லே?'' என்று வியப்புடன் கேட்டான். அப்போதுதான் முன்னால் செல்லும் காரிலிருந்து தன் கவனத்தை டிரைவரின் பக்கம் திருப்பிய சேகரும் வியப்புடன் ''ரங்கசாமியா?'' என்று கேட்டார். பிறகு ''அது, சரி! கிட்டுவும் பட்டுவும் உன்னை வந்து சந்திக்க வில்லையா?'' என்று கேட்டார் சேகர்.

'க்ரீச்' என்ற ஒலியுடன் அடுத்த தெருவுக்குக் காரை ஒடித்துத் திருப்பிக் கொண்டே, சேகருக்கு, கிட்டு பட்டுவுடன் தான் புலித்தேவன் தோப்பு நிலவறைக்குப் போன விவரங்களை விஸ்தாரமாக விளக்கினான் ரங்கசாமி.

''நிலவறைக்குள் யாரையும் காணோமா? அப்படி என்றால்? ..'' குழப்பத்தோடு வினவினார் சேகர்.

சற்றுமுன்பு பெய்த மழையிலே திட்டுத் திட்டாகத் தேங்கி இருந்த தண்ணீரை வாரி இறைத்துக் கொண்டு இரண்டு கார்களும் ஒன்றையொன்று முந்திக்கொள்ள முன்னேறிக் கொண்டிருந்தன.

''ஆனால் மணி சொன்னதைப் பொய் என்று சொல்வதற்கும் இல்லை. அந்த நிலவறைக்குள்ளே இது கிடைத்தது'' என்று சொல்லி ஒரு கைக்குட்டையை எடுத்துச் சேகரிடம் நீட்டினான் ரங்கசாமி. ''இது காயம்பட்டுக் கிடந்த மனிதனின் வாயில் திணிக்கப்பட்டிருந்த துணியாகத் தான் இருக்க வேண்டும் என்று கிட்டு உறுதியாக நம்புகிறான்'' என்றான். சேகர் அந்தக் கைக்குட்டையை மௌனமாக ஆராய்ந்து கொண்டிருந்தபோது ரங்கசாமி கேட்டான்: ''அந்த நிலவறைக்குள்ளே அடிபட்டுக் கிடந்த ஆசாமி உங்க கூட்டாளிங்களா?''

சிந்தனையுடன் சேகர் ''ம்...அப்படித் தான் வைத்துக் கொண்டேன்'' என்றவர் முன்னால் போகும் காரைக் காணாமல் ''என்ன ரங்கசாமி அந்தப் பயல்களைத் தப்ப விட்டுவிட்டாயே ?'' என்றார் பரபரப்புடன்.

இத்தனை நேரம் முன்னால் போய்க் கொண்டிருந்த கார் அவர் சொல்லி வாய் மூடிய அதே சமயத்தில் ஒரு திருப்பத்

மூன்று நண்பர்கள்

வாண்டுமாமா

திலே சென்று மறைந்த சதிகாரர்களின் கார்—இப்போது திடீரென்று மின்னல் வேகத்தில் இவர்களை நோக்கித் திரும்பி வந்து கொண்டிருந்தது. சிந்திப்பதற்கும் நேரமில்லை. சேகரின் கார் மீது மோதி அதை உருட்டித் தள்ளி விபத்துக்குள்ளாக்கிவிட்டு ஓடிவிட வேண்டும் என்பது தான் அவர்களுடைய நோக்கம்.

இமைக்கும் நேரத்தில் தன்னை நோக்கி வரும் அபாயத்தை, அவர்கள் எண்ணத்தைப் புரிந்து கொண்ட ரங்கசாமி சட்டென்று தன் காரை ஒடித்துத் திருப்பிப் பாதை ஓரத்துப் பள்ளத்தில் இறக்கினான். மோதுவதற்கு வந்த எதிரியின் காருக்கு இலக்காகாமல், குறி தவறியது. ஆனால் ரங்கசாமியின் காரோ, அவர்களைப் பின் தொடர முடியாத நிலையில் பள்ளத்தில் இறங்கிக் கிடந்தது. சேகரும், ரங்கசாமியும், காரிலிருந்து கீழே இறங்கித் தங்களைத் தாண்டிச் சென்ற விரோதிகளின் காரை வியப்போடு பார்த்தார்கள். வெகு தூரத்தில் அது நிறுத்தப்பட்டிருப்பதைக் கண்ட ரங்கசாமிக்கு ஆச்சரியமாக இருந்தது.

"தப்பித்துச் செல்லாமல் ஏன் அவர்கள் அப்படித் தயங்கி நிற்கிறார்கள். ஒருவேளை நம்மைத் தாக்க மறுபடியும் இங்கு வரத் திட்டமிடுகிறார்களோ?" என்றான் ரங்கசாமி.

"நிச்சயமாக எதுவும் சொல்வதற்கில்லை. முதலில் நமது காரை ரஸ்தாவுக்கு ஏற்றும் வழியைப் பார்... ம்... ஒரு கை பிடி" என்றார் சேகர்.

இருவரும் மிகுந்த பிரயாசையுடன் ரஸ்தா ஓரப் பள்ளத்திலிருந்து காரை வீதிக்குக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். இத்தனை நேரமும் தூரத்திலே நடு வீதியில் அவர்கள் கார் நின்று கொண்டிருப்பது அந்த மேகம் சூழ்ந்த மங்கிய நிலவொளியிலும் நன்றாகத் தெரிந்தது. சேகரும் ரங்கசாமியும் காரில் ஏறி உட்கார்ந்து அதைக் கிளப்பிய அதே சமயத்தில் அவர்கள் காரும் கணவேகமாகக் கிளம்பிக் கண்ணுக்குத் தெரியாமல் எங்கோ சென்று மறைந்து விட்டது. "தப்பி விட்டார்கள்..." என்று சலித்துக் கொண்டார் சேகர். பிறகு ரங்கசாமியைப் பார்த்து, "இனி நீ உன் காரைச் சற்று மெதுவாகவே ஓட்டு. அந்த அயோக்கியர்கள் இத்தனை நேரம் அங்கு நின்றிருந்ததற்கு ஏதாவது காரணமிருக்க வேண்டும். நமது காரைக் கவிழ்க்க ஏதாவது சதி செய்திருக்கலாம்" என்றார்.

இதற்குள் இவர்கள் கார் அந்த இடத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. நிலவு மேகத்துக்குள் மறைந்து கொண்டிருந்தது. இருள் கவிந்த அந்த நிலையிலும் நடு ரோட்டிலே ஏதோ ஒரு பொருள் இருப்பதைச் சேகரின் கண்கள் பார்த்துவிட்டன. "ரங்கசாமி! காரை நிறுத்து" என்றார். அவனும் காரை ஒரு ஓரமாக நிறுத்தினான். சேகர் காரிலிருந்து இறங்கி ஓடினார். ரங்கசாமியும் கையில் பாட்டரி விளக்குடன் அவரைப் பின்தொடர்ந்தான்.


சிறிது தூரத்தில் சேகர் தரையில் குனிந்து எதையோ உற்றுக் கவனித்தார். சேகர் பார்த்துக் கொண்டிருந்த இடத்தில் பாட்டரி விளக்கை அழுத்தி வெளிச்சத்தைப் பரவவிட்ட ரங்கசாமியிடமிருந்து "ஐயோ—இது நம்ப குழந்தை பட்டு இல்லே!" என்ற வார்த்தைகள் வெளிப்பட்டன.

ஆமாம்! நடுரோட்டிலே பட்டுதான் அப்படிக் கிடத்தப் பட்டிருந்தாள். அவளது கை கால்களெல்லாம் கட்டப்பட்டிருந்தன. அவளுக்குத் தன் நினைவு இல்லை. மயங்கிக் கிடந்தாள்.

ரங்கசாமி தன் இடையிலிருந்த சாவிக் கொத்திலுள்ள பேனாக் கத்தியின் உதவியால் பட்டுவின் உடல் கட்டுக்களை அறுத்து எறிந்தான். பிறகு அவளைத் தன் இரு கைகளிலும் தூக்கி வந்து காரில் படுக்க வைத்தான். (தொடரும்)




வாழ்க




ராதாகிருஷ்ண மில் ஆபீஸ் மானேஜர் திரு வி. சீனிவாசலு நாயுடு குமாரர் திரு வெங்கடேசலு பி. எஸ்ஸி.க்கும் சௌ. உமாதேவிக்கும் திருமணம் நடந்தது.



திரு வி. சுவாமிநாதன் அவர்களின் சகோதரி சௌ. சரோஜாவுக்கும் திருநாராயணசுவாமி எம். எஸ்ஸி.க்கும் பம்பாயில் விமரிசையாக விவாகம் நடந்தேறியது.



நாராயணன் கம்பெனியைச் சேர்ந்த திரு ஸ்ரீ. நாராயணசாமி அவர்களின் புதல்வி சௌ. ராஜலக்ஷ்மிக்கும் திரு எஸ். ராமச்சந்திரனுக்கும் திருமணம் நடைபெற்றது.



டி. ஏ. டெய்லர் கம்பெனி டைரக்டர் திரு ஆர். நடராஜன் அவர்களின் மருமகன் திரு என். சீனிவாசனுக்கும் சௌ. [illegible]க்கும் திருமணம் நடந்தது.




திரு கே. ராமையா செட்டியார் அவர்களின் புதல்வர் திரு கே. ஆர். ஆளவந்தாருக்கும் சௌ. அனுசூயாவுக்கும் விவாகம் வெகு விமரிசையாக நடைபெற்றது.



திரு இரா. புவனேசுவரனுக்கும், மங்களாம்பாளுக்கும் தஞ்சை ஜில்லா குச்சியில் அதி விமரிசையாகத் திருமணம் நடந்தேறியது.


மணமக்கள்




பச்சையப்பன் கல்லூரி பொருளாதாரப் பேராசிரியர் திரு எம். ஆதிவராகனுக்கும் செள. ருக்மிணிக்கும் தஞ்சாவூரில் திருமணம் நடைபெற்றது.




வேலூர் சப்கோர்ட்டு ஸரஸ்தார் திரு கே. ராமநாதய்யர் புதல்வி செள. பாமாவுக்கும் திரு வைத்தியநாதனுக்கும் விவாகம் நடந்தது.




பிரதம எஞ்ஜினியர் திரு கே. எஸ். சேஷாத்ரி அவர்களின் புதல்வர் திரு கே. எஸ். வி. ரமணனுக்கும் செள. சுகந்தாவுக்கும் திருமணம் நடைபெற்றது



குற்றாலம் மில் சொந்தக்காரர் முருகையன்செட்டியார் குமாரர் திரு முருகுமாணிக்கத்துக்கும் செள சரோஜினிக்கும் ஆகஸ்ட் மாதத்தில் திருமணம் நடைபெற்றது.



மாடர்ன் மில் ஸ்டோர்ஸ் பாகஸ்தர் திரு ஆராவமுதன் அவர்களின் புதல்வி செள. இந்திராவுக்கும் திரு ஆர். கிருஷ்ணன் பி. ஏ. க்கும் விவாகம் நடந்தது.



திரு ஏ. ஜி. வி. சுப்பிரமணியம் அவர்களின் புதல்வன் திரு ஏ. ஆர். கல்யாணசுந்தரத்துக்கும் செள. சங்கரிக்கும் சேலத்தில் விவாகம் நடந்தேறியது.



பொங்கிவரும் பெருநிலவு

கி. ராஜேந்திரன்

அத்தியாயம் 18

தெளித்த பன்னீர்

இலங்கையிலிருந்து மல்லிகா முதலானோர் திரும்பி விட்டார்கள் என்று அறிந்ததுமே அவளைப் போய்ப் பார்த்து வர வேண்டும் என்று உடலின் ஒவ்வொரு அணுவும் துடித்தது நடராஜனுக்கு. அந்தத் துடிப்பை அடங்கச் செய்வதற்கு அவனுக்கு ஒரே ஒரு வழிதான் புலப்பட்டது. அது அவளைப் போய்ப் பார்த்து விட்டு வருவதுதான்.

இப்படித் தீர்மானித்தவுடனேயே புறப்பட்டு விட்டான். அவன் போன சமயத்தில் அவளுடன் கூடச் சுகுமாரனும் கதிர்வேலனும் இருந்தது ஏமாற்றத்தையே அளித்தது.

கதிர்வேலனைப் பார்த்ததும், அந்த வீட்டுக்குப் போலீசார் வந்து விசாரணை நடத்திச் சோதனையிட்டு விட்டுப் போன அந்தப் பழைய சம்பவம் நினைவுக்கு வந்தது நடராஜனுக்கு. 'இவனைத்தானே அன்று போலீசார் தேடினார்கள்?' என்று நினைத்தான். அதைப் பற்றிப் பேசிச் சுகுமாரனைச் சங்கடப்படுத்த விரும்பாமல் பேசாமல் இருந்தான்.

மல்லிகாவின் புகழ் பாடினார் சுகுமாரன். "இலங்கையையே ஒரு கலக்குக் கலக்கி விட்டாள். சென்றவிடமெல்லாம் சிறப்பு. வெளியீட்டு விழாவுக்குப் போய்க் கலை விழாவே நடத்தி விட்டு வந்து விட்டாள்" என்றெல்லாம் சொல்லிப் பெருமைப்பட்டார்.

"ஓய்வு என்பதே கிடையாது என்று சொல்லுங்கள்" என்றான் நடராஜன்.

"பார்த்தாயா? டாக்டர் என்பதை உடனே காண்பித்து விட்டாயே? எவ்வளவு பெரிய காரியங்களைச் சாதித்து விட்டு வந்திருக்கிறாள்! நீ ஓய்வுபற்றிப் பேசுகிறாய்!"

"உடம்பு நன்றாக இருந்தால்தானே நீங்கள் சொல்லும் சாதனைகளையெல்லாம் புரிய முடியும்!"

"ஓய்வுக்காகத்தான் நாங்கள் ஊட்டிக்குப் போகிறோமே. கவலைப்படாதீர்கள்!" என்றாள் மல்லிகா.

"ஆமாம்! நாளைக்குக் காலையில் காரிலேயே புறப்பட்டுப் போய் விடலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன். கதிர்வேலனும் கூட வருகிறான். முடிந்தால்



நீயும் வாயேன். 'வேலை வேலை' என்று உயிரை விட்டுக் கொண்டிருக்கிறாயே? ஒரு மாதம் நிம்மதியாக இருந்து விட்டு வரலாமே?'' என்றார் சுகுமாரன்.

நடராஜனுக்குச் சிறிது சபலம் தட்டியது. எல்லாவற்றையும் மறந்து ஒரு மாத காலம் உதகமண்டலத்தில் உல்லாசமாக இருந்தால் என்ன? மல்லிகாவுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பும் அதன் மூலம் கிட்டும்! பாலில் பதமாகச் சிறிது தேனை விட்டு, அருந்தச் சொல்வது போலல்லவா அமைந்து விடும்?

'' அப்பா! நல்ல ஆளைப் பார்த்துக் கூப்பிட்டீர்கள், நம்மோடு அழைத்துச் செல்ல. அவர் எப்படியப்பா வருவார்?'' என்றாள் மல்லிகா.

'' ஏன் வர மாட்டான்? நம்மைக் கண்டால் வெறுப்பா? அல்லது ஊட்டியைப் பிடிக்கவில்லையா? பேஷாக வருவான்!''

'' அவருக்குப் பிடிக்காமல் இல்லை. அப்பா! கண்டிப்பாக வருவார். ஆனால் அவருக்கு அத்தை மகள் ஒருத்தி யிருக்கிறாள். சரியான கர்நாடகம்! அவர் காலைக் கட்டிக் கொண்டு விடுவாள். என்னோடு சேர்த்து அவரை அனுப்பவே மாட்டாள்! 'நான் மாய மோகினியாக உருவெடுத்து வந்திருக்கும் ராட்சஸி, அவரை அப்படியே மயக்கி விழுங்கி விடுவேன்' என்று பயம்! சுத்தப் பட்டிக்காடு!'' என்று சொல்லி விட்டுப் பெரிய ஹாஸ்யத்தைக் கூறிவிட்டவள் போல் சிரித்தாள் மல்லிகா.

வாய்விட்டுச் சிரித்தபோது ஈரமான செவ்விதழ்கள் அகன்று கோத்த முத்துக்களைப் போன்ற வரிசையான பற்களை வெளிப்படுத்தின. கண்களிலே விஷமப் பார்வை. அடக்க முடியாத சிரிப்பிலே விரல்கள் நீண்ட கழுத்தைத் தடவிக் கொடுத்தன. அவளுடைய கலகலப்பான சிரிப்பைக் கண்டு கதிர்வேலனுக்கும் சிரிப்பை அடக்க முடியவில்லை. ஒருகணம் தயங்கி நின்ற சுகுமாரனும் அவர்களுடன் சேர்ந்து கொண்டு பெரிதாகச் சிரித்தார். தொத்துநோய் போல் அந்த மூவரையும் பிடித்த அந்தச் சிரிப்பு நடராஜனை அணுகவில்லை. ஹாஸ்ய உணர்ச்சியே இல்லாதவன் அல்ல அவன். இருந்தபோதிலும் விமலாவைக் கேலி செய்து ஏளனமாகச் சிரித்த மல்லிகாவின் மீது கோபம் கோபமாக வந்தது. ஹாஸ்யத்துக்குச் சிரிக்கலாம். ஆனால் எள்ளிநகையாடுவதை எப்படி ரசிப்பது? கோபமும் வெறுப்பும் அவமானமும் போட்டியிட அவன் அங்கிருந்து சென்று விட்டான்.

* * *

பலத்த மழை பெய்து ஓய்ந்திருந்தது. 'கொடக் கொடக்' கென்று ஆண் தவளைகள் கர்ண கடூரமாகக் கத்திக் காதலிகளுக்கு அழைப்பு விடுத்தன. மழை பெய்து நனைந்ததால் பூமியிலிருந்து புது மணம் கமழ்ந்தது.

சற்றுத் தூரத்தில் தெருவில் நின்ற விளக்குக் கம்பம் அந்தக் கும்பிருட்டில் அழுது வடிந்தது.




அதன் ஓமே தேங்கி நின்ற மழை நீரில் அதன் ஒளி சர விளக்குப்போல் தோற்றமளித்தது.

கதிர்வேலன், மார்பு முன்னே புடைக்க, வயிறு ஒடுங்க, காதலியைச் சந்திக்கும் ஆவலிலே விரைவாக நடந்து வந்தான். நடையின் வேகத்துக்கேற்ப அவன் இரும்பை யொத்த பலம் பொருந்திய கரங்கள் முன்னேயும் பின்னேயும் அசைந்தன.

இருளில் அவனைச் சரியாக அடையாளம் சொல்ல முடியவில்லை. கம்பீரமான நடையுடன் ஒரு உருவம் செல்லுவதுதான் தெரிந்தது.

சாலையில் ஒருமோட்டார் அவனைத் தாண்டிக் கொண்டு சென்றது. அதன் பின் பக்கத்தில் இருந்த இரு சிவப்பு நிற விளக்குகளின் ஒளிக்கற்றைகளை ஈரமாக இருந்த வீதி பிரதிபலித்த போது தீப்பொறிகளை அந்தக்





பிரபல கேலிச் சித்திரப் பத்திரிகையான 'சங்கர்ஸ் வீக்லி' நடத்திய அகில உலகக் குழந்தைகள் சித்திரப் போட்டிகளில் பரிசு பெற்றவர்களுக்குப் பாரதப் பிரதமர் நேருஜி பரிசு வழங்கினார். வெற்றிப் பெருமிதத்தோடு அமர்ந்திருக்கும் குழந்தைகளின் நடுவே பாரதப் பிரதமர் காட்சியளிக்கிறார்.

கார் பொல பொலவென்று உதிர்த்துக் கொண்டே செல்வதுபோல் இருந்தது.

கதிர்வேலனின் உடல் சிலிர்த்தது. சட்டென்று கண்களை மூடிக் கொண்டான். 'சீச்சீ! அருவருப்பான இந்தப் பயப்பிராந்தி அடிக்கடி தோன்றி ஆளைக் கொல்கிறதே!' என்று தன்னைத்தானே நொந்து கொண்டான்.

நர்ஸிங் ஹோமுக்கு அருகாமையில் தெரு விளக்குக்கு அடியில் அவன் நடந்தபோது அவன் உருவம் 'பளிச்' சென்று தெளிவாகத் தெரிந்தது. அடுத்த கணம் அவன் ஒரே தாவலாகத் தாவி அந்த மதிலுக்கு உள் புறம் குதித்துப் போய் விட்டான்.

நிர்மலாவைச் சந்திக்கப் போகிறோம் என்ற ஒரே நினைவில், இருட்டோடு இருட்டாக மறைந்து நின்ற போலீஸ் மோட்டாரையோ அதன் அருகே யிருந்த சில போலீஸ்காரர்களையோ அவனது கூர்மையான கண்கள் கூடக் கவனிக்கத் தவறிவிட்டன.

நீண்ட நாட்களுக்குப் பிறகு தோட்டத்து மரத்தடியில் சந்தித்த காதலர்களுக்கு எவ்வளவோ விஷயங்கள் பேசுவதற்கு இருந்தன. இலங்கைப் பிரயாணத்தைப் பற்றியும் அங்கு தான் கண்ட காட்சிகளையும் விரிவாகச் சொன்னான் கதிர்வேலன். "ஆனால் நீ இல்லாமல் எனக்கு அதெல்லாம் ரசிக்கவேயில்லை, நிர்மலா! என்றைக்காவது உன்னையும் அழைத்துக்கொண்டு அங்கே மறுபடியும் போய் எல்லாவற்றையும் பார்க்க வேண்டும் என்று தீர்மானித்திருக்கிறேன்" என்றான்.

"நீங்கள் தீர்மானித்தால் போதுமா? என்னால் வரமுடியுமோ, என்னமோ?"

"ஏன் முடியாது?"

"எனக்குக் கல்யாணம் செய்துவைக்க என் தாயார் முயன்று வருகிறாள்."

"அப்படியா? ரொம்ப சந்தோஷம். எங்கே, எப்போது நடைபெறுகிறது என்பதைத் தெரியப்படுத்து. அவசியம் வந்திருந்து நடத்திவைக்கிறேன். ஆனால் அதற்கும் நாம் இலங்கை போவதற்கும் என்ன சம்பந்தம்?"

"கல்யாணம் ஆனபிறகு நான் கணவனுக்குத்தானே சொந்தம்? அவர் எங்கே கூப்பிடுகிறாரோ, அங்கேதான் போக முடியும். இலங்கைக்கு எப்படிவருவது?"

"கணவனும் இலங்கைக்கே உன்னை அழைத்தால்......?"

"போதுமே, பேச்சு சகிக்கவில்லை!" என்று சொல்லி வெறுப்புடன் திரும்பினாள் நிர்மலா. அவள் தோள்களைப் பற்றித் திருப்பினான் கதிர்வேலன். அன்போடும் ஓரளவு தயக்கத்தோடும் நிதானமாக அவன் பற்றியபோதிலும் விரல் பதிந்த இடங்கள் வலியைக் கொடுத்தன நிர்மலாவுக்கு.

"நிர்மலா! உனக்குக் கல்யாணம் என்றால், நான் வந்து தாலி கட்டித் தானே நடத்தி வைக்க வேண்டும்? அதன் பிறகு நான் இலங்கைக்கு உன்னை அழைத்தால் நீ வந்துதானே ஆகவேண்டும்? அந்த அர்த்தத்திலே சொன்னேன். உனக்குப் புரியவில்லை."

"மூடுமந்திரமாகப் பேசினால் எனக்கு என்ன தெரியும்? அசட்டுப் பெண் நான்!" என்றாள் நிர்மலா.

"ஆமாம், நிர்மலா! நீ அசடுதான். இல்லாவிட்டால், பகலிலே எல்லோரையும் போல் வெளியே சகஜமாக நடமாடப் பயந்து பதுங்கி, இரவில் கொட்டுக் கொட்டென்று விழித்திருக்கும்

ஆந்தையைப் போல் வெளியே வரும் என்னிடம் நீ காதல் கொள்வாயா? இரவுப் பறவையாக இருப்பதிலே இத்தனை நாட்களாக நான் வருத்தப்படவில்லை. ஆனால் உன்னை அத்தகைய வாழ்க்கையில் எப்படி இணைப்பது என்றுதான் யோசனையாக இருக்கிறது!''

"யோசனை என்ன? அத்தகைய வாழ்க்கையை விட்டு விடுங்கள்.''

"சுலபமாகச் சொல்லி விடலாம். காரிய சாத்தியமானதாகத் தோன்றவில்லை. என் ரத்தத்தில் ஊறிப் போன வாழ்க்கை இது. இருந்தாலும் உனக்காக முயற்சி செய்து பார்க்கிறேன்.''

"சத்தியம் செய்து கொடுங்கள்!''

"தொழிலை விட்டு விடுவதாகச் சத்தியம் செய்ய முடியாது. அதற்கு முயற்சி செய்வதாகச் சத்தியம் செய்கிறேன். நாளைக்குக் காரிலேயே ஊட்டிக்குப் போகிறோம். அதற்கு முன்னால் உன்னை ஒரு முறை பார்த்து விட்டுப் போக வேண்டும் என்று ஆவலுடன் வந்தேன். கிடைத்த சந்தர்ப்பத்தில் சந்தோஷமாகப் பேசாமல் வேதனையும் கவலையும் அளிக்கும் விஷயங்களைப் பேசுகிறோம்.''

"இன்றுதானே இலங்கையிலிருந்து வந்தீர்கள்? அதற்குள் மறுபடியும் புறப்பட்டுப் போக வேண்டுமா என்ன?''

"மல்லிகாவுக்கு ஓய்வு அளிக்க அங்கே அழைத்துச் செல்கிறார் சுகுமாரன். என்னையும் வரும்படி வற்புறுத்துகிறார். யோசித்துப் பார்த்தால் அது நல்லது தான். என்னைத் தேடிக் கொண்டு அவர்கள் வீட்டைச் சுற்றி நடமாடி வந்த போலீஸாரை இப்போது காணோம். அவர்களுக்கு மறுபடியும் சந்தேகம் உண்டாகும்படி எதுவும் நடந்து விடக்கூடாது, பார்! கொஞ்ச நாட்கள் சென்னையிலேயே நான் இல்லாமல் இருப்பது நல்லது. அப்புறம் அவர்களுக்கே அலுத்தும் மறந்தும் போய்விடும். இலங்கை போய் வந்தது கூட அந்த விதத்திலே எனக்கு உதவி புரிந்திருக்கிறது.'

"அப்படியானால் நான் தடைசொல்லவில்லை. போய் வாருங்கள்.''

"கொஞ்சமும் தயக்கமில்லாமல் 'போய் வாருங்கள்' என்று சொல்கிறாயே? என்னை விட்டுப் பிரிந்திருப்பது உனக்குக் கஷ்டமாக இல்லையா?''

"நன்றாகக் கேட்டீர்கள், அவசியத்துக்காக நீங்கள் போவதற்கு ஒப்புக் கொண்டேன். நான் படும் சிரமம் எனக்கல்லவா தெரியும்? நீங்கள் இலங்கை போனது முதல் சரியான தூக்கமே கிடையாது எனக்கு.''

"நான் நன்ருகத் தூங்கினேன், நிர்மலா! ஆனல் கனவிலே நீ தோன்றினய். ஒரு நாள் சிகிரியா குகைச் சித்திரங்களைப் பார்த்துவிட்டுத் திரும்பினேன். அந்தத் தேவ கன்னிகைகளெல்லாம் அழகுக்கு உன்னிடம் பிச்சை வாங்கவேண்டும் என்று நினைத்துக் கொண்டே படுத்துத் தூங்கினேன். கொஞ்ச நேரத்தில் அந்த அப்சரஸ்கள் கூட்டமாக, ஒடிந்து விழுவதுபோல் நாணிக் கோணி நடந்து வந்தார்கள். 'உங்களை யார் வரச்சொன்னது? என் நிர்மலா எங்கே?' என்று கேட்டேன். அப்போது அவர்கள் நடுவே இடைவெளி விட்டு இரு பக்கத்திலும் சிறிது விலகிக் கொண்டார்கள்.

"பெண் மயில்களுக்கிடையே தோகை விரித்த ஆண் மயிலைப்போல நீ அங்கு நின்ருய். அடி எடுத்து வைத்தால் பாதம் நோகுமோ என்று பார்ப்போர் அஞ்சும்படி பட்டுப் பாதங்களை நகர்த்தி என்னை நோக்கி நடந்தாய்.

"தேவ கன்னிகைகள் தோழிகளாகப் புடைசூழ நீ என்னைக் காண வருகிருய் என்பதை அப்போதுதான் புரிந்து கொண்டேன். உன் நடையிலே அடக்கம் இருந்தது. ஆனல் அந்தக் கன்னிகைகளைப் போல நாணிக் கோணவில்லை. மென்மை இருந்தது. ஆனல் இடை ஒடிய வரவில்லை.

"அந்த நிர்மலாவுக்கும் உனக்கும் ஒரே ஒரு வித்தியாசம். உன்னைப் போல் அவள் கூந்தலைத் தூக்கிக் கட்டியிருக்கவில்லை. முழங்காலுக்குக் கீழே தொங்கிய அடர்த்தியான கூந்தல் கரிய தொரு ஆடையைப் போல் அவள் உடலையே மூடி மறைத்தது!

"நிர்மலா! உனக்கு நிஜமாகவே அந்தமாதிரி நீண்ட தலைமயிர் இருக்கிறதா என்று பார்க்க எனக்குக் கொள்ளை ஆசை!"

பதில் பேசாமல் நிர்மலா தன் கரங்களை உயர்த்தினள். அவள் விரல்கள் நாலைந்து கொண்டை ஊசிகளை அகற்றின. அளகபாரம் அவிழ்ந்து குன்றின்மீது சலசலக்கும் சிற்ருேடை போல கதிர்வேலனுடைய தோளிலும் பரந்த மார்பிலும் புரண்டது!

சில்லென்று வீசிய காற்றிலே மரத்தின் இலைகள் அசைந்தன. அவற்றில் தேங்கி நின்ற மழை முத்துக்களை காதலர்களின்மீது பன்னீராகத் தெளித்தன.

கடமையை நினைவுபடுத்திக் கொண்டு அவனை அனுப்பி வைத்தாள் நிர்மலா.

தெருவில் குதித்த கதிர்வேலன் மூன்று பேர் 'திபு திபு' என்று தன்னை நோக்கி ஓடி வருவதைக் கண்டான். 'அவர்கள் யார்? எதற்காக ஓடி வருகிருர்கள்?' என்று தீர்மானிக்க ஒரு கணம் பிடித்தது அவனுக்கு. அந்த ஒரே ஒரு கணம் சற்றுத் தயங்கி நின்ருன் அவன். அடுத்த கணத்தில் ஒரே எட்டில் மதிலைத் தாண்டிக் குதித்து ஓடிஞன்.

வாசலில் ஏதோ சத்தம் கேட்கவே, உள்ளே சென்ற நிர்மலா மறுபடியும் வெளியே வந்து எட்டிப் பார்த்தாள். ஓடிவந்த கதிர்வேலன் அவள் அருகே நின்ருன். "நிர்மலா! போலீஸ் நடமாட்டம் அதிகமாக இருக்கிறது. காலையில் சுகுமாரனை டெலிபோனில் கூப்பிட்டு ஊட்டிக்குப் போகும்போது என் ஜாகைக்கு வந்து அழைத்துப் போகச் சொல்லு. அவருக்கு நான் இருக்குமிடம் தெரியும்" என்று சொல்லி விட்டு மறுபடியும் ஓடிஞன். நர்ஸிங் ஹோமுக்கு அருகேயே இருந்த நடராஜனின் வீட்டைத் தாண்டிச் சென்று பின்புறத்து மதிலை ஒரே தாவலாகத் தாவிக் குதித்துஓடி மறைந்து விட்டான்.

வீட்டிலும், நர்ஸிங்ஹோமிலும், தோட்டத்திலும் மூலை முடுக்குகளையெல்லாம் தேடிப் பார்த்து விட்டு அளவுகடந்த ஏமாற்றத்துடன் திரும்பிஞர்கள் போலீஸார்.

இரவு 'டியூடி'யில் இருந்த நர்ஸ் நிர்மலாவை விசாரித்தபோது, 'எனக்கு ஒன்றுமே தெரியாது' என்ருள் அவள். தூக்கத்திலிருந்து எழுந்த நடராஜன் கண்களைக் கசக்கிக் கொண்டே, 'என்ன விஷயம்?' என்று கேட்டான். வேறு உபயோகமான தகவல் ஏதும் கிடைக்காததால் திரும்பிப் போஞர்கள்.

பத்தொன்பதாம் அத்தியாயம்

தவழ்ந்த மாருதம்

மேட்டுப்பாளையத்தைத் தாண்டி டைரக்டர் சுகுமாரனுடைய கார் போய்க்கொண்டிருந்தது. பின்புறத்தில் மல்லிகாவும் அவள் தங்கை சரஸ்வதியும் உட்கார்ந்திருந்தார்கள்.

"மலைமேலே ஏறப் போகிருேம்!" என்று சொல்லிச் சொல்லி எழும்பிக் குதித்த வண்ணம் இருந்தாள் சரஸ்வதி.

சம தரையில் வேகமாகச் சென்று கொண்டிருந்த கார் சிறிது சிறிதாக

உயரச் சென்றது. "மலைப் பிரதேசமாக இருக்கிறதே, மாமா! காரின் வேகத்தை வேண்டுமானால் கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்களேன்" என்றான் கதிர்வேலன்.

"இதற்கெல்லாம் பயந்தால் முடியுமா, கதிர்வேலு! எப்படிப்பட்ட கார் இது? ஓட்டுகிறதுதான் யார் என்று நினைத்துக் கொண்டாய்? நீ இப்படிப் பயப்படுவாய் என்று தெரிந்துதான் மேட்டுப்பாளையத்திலிருந்து நான் காரை ஓட்ட ஆரம்பித்தேன்."

வளைந்து வளைந்து மேலே ஏறிய பாதையில் திரும்பித் திரும்பிச் சென்றது மோட்டார். இடப்புறம் திரும்பும் போது வலப்புறமும், வலப்புறம் திரும்பும்போது இடப்புறமும் உள்ளே உட்கார்ந்திருந்தவர்கள் சாய்ந்து சாய்ந்து விழுந்தார்கள்.

முதலில் சற்றுப் பயந்த சரஸ்வதியும் மல்லிகாவும் பயம் தெளிந்து சிரிக்க ஆரம்பித்தார்கள். இரண்டு புறமும் ஆடி ஆடிச் செல்வது அவர்களுக்கு ஒரே வேடிக்கையாக இருந்தது.

உயரப் போகப் போக, சாலையின் ஒரு புறம் அதள பாதாளமாகவும் மற்றொரு புறம் மேடாகவும் இருந்தது. ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தால் கிடு கிடு பாதாளம் தலையைச் சுற்றச் செய்தது. அவர்கள் ஏறி வந்த பாதையை இப்போது பார்த்தார்கள். ஒரு பெரிய மலைப் பாம்பு வளைந்து ஊர்ந்து அந்த மலையையே கட்டிப் பிடித்து நெருக்க முயல்வதுபோல் பாதை காட்சி தந்தது.

தூரத்தில் எங்கேயோ ரயில் கூவிய ஓசை மலைப் பிரதேசத்தில் முட்டி எதிரொலித்தது. விதம் விதமான பட்சி ஜாலங்கள் விநோதமாக ஒலிகளை எழுப்பிக் கொண்டிருந்தன.

கீழே அடர்த்தியாக வளர்ந்திருந்த கமுக மரத் தோப்புகளை மேலே இருந்து பார்த்தபோது மரகதப் பச்சை நிறத்தில் பட்டுச் சமக்காளம் விரித்தது போல் தோற்றமளித்தது.

விதம்விதமான மரங்களில் வண்ண வண்ண மலர்களைக் கண்டார்கள். ஒரு மரத்தில் ஒரே நீலநிறப் பூக்கள். மற்றொன்றில் வெண்மையான மலர்கள்.

இன்னும் மேலே போகப் போக யூகலிப்டஸ் மரங்களின் வாடை மூக்கைத் துளைத்தது. தேயிலைத் தோட்டங்களையும் காண முடிந்தது. சிறிய சிறிய புதர்களாகத் தேயிலைச்செடிகளை வரிசை வரிசையாக வளர்த்து விட்டிருந்தார்கள். அவற்றுக்கு நிழல்தர ஆங்காங்கே 'ஸில்வர் ஓக்' மரங்கள் இருந்தன.

இந்தக் கண்கவர் காட்சிகளை யெல்லாம் பார்த்துக் கொண்டே அம்மூவரும் சென்றார்கள். நடுநடுவே மல்லிகா, "அப்பா! இயற்கைக் காட்சிகளை யெல்லாம் நாங்கள் பார்த்துக் கொண்டு வருகிறோம். நீங்கள் தயவுசெய்து சாலையையே பார்த்துக் கொண்டு வண்டியை ஓட்டுங்கள். இல்லாவிட்டால் எல்லோருமாகச் சேர்ந்து கூண்டோடு கைலாசம் போக வேண்டியதுதான்!" என்று ஞாபகப் படுத்தினாள்.

"ஆமாம், மாமா! இந்தப் பள்ளத் தாக்குகளில் கார் விழுந்து விட்டால் எலும்புகளைக் கூடப் பொறுக்க முடியாது. ஜாக்கிரதை!" என்று எச்சரிக்கை செய்தான் கதிர்வேலன்.

"என்ன இப்படிப் பயப்படுகிறீர்களே? நான் தூங்கிக் கொண்டே ஓட்டினால் கூடக் கார் தன்னைப் போல் போய்ச்



சேரவேண்டிய இடத்துக்குப் பத்திரமாகப் போய் விடும், தெரியுமா?"

"போய்ச் சேர வேண்டிய இடம் எது என்று முதலில் தீர்மானித்து விடலாம். சொர்க்கத்துக்குப் போவது என்று எல்லோரும் தீர்மானித்து விட்டால் நீங்கள் தூங்கிக் கொண்டே ஓட்டுங்கள். எனக்கு ஆட்சேபணை இல்லை."

இதற்குள் சிறுமி சரஸ்வதி, "அக்கா! அக்கா! அதோ ஒரு அருவி விழுகிறது, பாரேன்! ரொம்ப அழகா யில்லை?" என்று கேட்டாள்.

இயற்கைத் தெய்வத்தை அந்த மலைச் சாரலிலே கண்டு பாலபிஷேகம் செய்வதுபோல் வெண்மையான நுரை தள்ளிச் சலசலக்கும் ஒலியுடன் விழுந்து கொண்டிருந்தது சிற்றருவி.

உதகை நகரத்தை நெருங்கிநெருங்கி வந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு முன்னால் சென்ற ஒரு காரின் ஜன்னல் வழியாக இரு நாய்கள் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தன.

"ஓகோ! 'டாக் ஷோ' ஆரம்பமாகப் போகிறது என்று நினைக்கிறேன். அவை

இரண்டும் விலை உயர்ந்த நாய்கள்'' என்றார் சுகுமாரன்.

'' அதென்ன மாமா, டாக் ஷோ?''

'' நாய்களைக் கொண்டு வந்து காட்டுவார்கள். பலவிதமான பரீட்சைகள் நடத்துவார்கள். உட்காரச் சொல்வார்கள். ஓட வைப்பார்கள், பல்லைப் பிடித்துப் பார்ப்பார்கள். காதைத் திருகுவார்கள், ரோமத்தைத் தடவுவார்கள், எடை போடுவார்கள், இன்னும் இல்லாத சிங்கிநாதமெல்லாம் செய்வார்கள். சிறந்த நாய்க்குப் பரிசு கொடுப்பார்கள்.''


'' நாய்க்குப் பரிசா? நாயைக் கொண்டு வந்தவனுக்குப் பரிசா?''

'' நாய்க்குப் பரிசு கொடுக்கிறார்கள் என்றால் அதன் சொந்தக்காரர்களுக்கு என்றுதான் அர்த்தம்.''

'' அது எப்படி மாமா! நாயின் சொந்தக்காரனே நாயாகிவிடுவானா? அல்லது நாய் மனிதனாக உயர்ந்து விடுமா?''

''அதென்னமோ எனக்குத் தெரியாது. குதர்க்கமாய்ப் பேசுவதே உன் வேலை.''

'' அப்பாவுக்குக் கோபம் மூட்டாதீர்கள். எந்த நாயை எவன் கட்டிக்



கொண்டு அழுதால் உங்களுக்கு என்ன?'' என்றாள் மல்லிகா.

'' அடி அசடே! இந்த நாய்களைக் கட்டிக் கொண்டு அழுவதற்கே கொடுத்து வைத்திருக்க வேண்டும் தெரியுமா? 'டாக் ஷோ'வுக்கு வரும் நாய்கள் தெருவில் போகும் நாய்களைப் போல் சாமான்யப்பட்டவை என்று நினைத்தாயா? ஒவ்வொன்றும் ஆயிரக் கணக்கில் விலை போகும், தெரியுமா? லண்டன் என்ன? ஆஸ்திரேலியா என்ன? அமெரிக்கா என்ன? என்று அங்கே விருந்தெல்லாம் விமானத்தில் சுகப் பிரயாணம் செய்து வந்திருக்கும்!''

'' ஆஸ்திரேலியாவிலிருந்து வந்த நாயாக இருந்தால் நிச்சயமாகக் கட்டிக் கொள்ள வேண்டியதுதான், மாமா! ஏன் அதோடு காதல் கூடப் புரியலாம்!'' என்றான் கதிர்வேலன்.

அதைக் கேட்டு விழுந்து விழுந்து சிரித்தனர் மல்லிகாவும், சுகுமாரனும்.

'' அப்பனே! நீ காதல் புரிகிறேன் என்று சொன்னால் கூட அவர்கள் விட மாட்டார்கள். காதல் புரியவும் நாய்களை ஆஸ்திரேலியாவிலிருந்தே கொண்டு வந்திருப்பார்கள். கேவலம், இந்தியனோ அல்லது இந்திய நாயோ அதனோடு சல்லாபிக்கும்படி விட்டுவிட முடியுமா என்ன?'' என்றார் சுகுமாரன்.

'' சினிமாவிலேதான் 'காதல் காதல்' என்று சொல்ற. நாய்க்குக் கூடக் காதல் உண்டா என்ன?'' என்று சிறுமி சரஸ்வதி கேட்டபோது எழுந்த குபீர் சிரிப்பில் சுகுமாரன் கார் பாதையை விட்டு நகராமல் பார்த்துக் கொள்ளப் பெரும்பாடு பட்டார்.

'' காதல் புரியும் நாய்கள் மட்டுமா? சாகபக்ஷிணியான நாய்கள், மாமிச பக்ஷிணியான நாய்கள் எல்லாம் உண்டு. மாமிசம் சாப்பிடாத நாய்களுக்குப் போஷாக்கு குறைந்து விடும் என்று வைட்டமின் மாத்திரைகளும் காட் லிவர் ஆயிலும்கூடக் கொடுப்பார்கள்!''

'' நாயாகப் பிறந்திருக்கலாம். அனாவசியமாக மனிதனாகப் பிறந்து தொலைத்து விட்டேன்'' என்று அலுத்துக் கொண்டான் கதிர்வேலன்.

இப்படி சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டே அவர்கள் உதகை நகரத்தை அடைந்து விட்டார்கள். நாலாபுறமும் மலைகள் சூழ்ந்து நடுவே பள்ளத்தாக்கில் அமைந்திருந்தது நகரம். அதற்கு நடு நாயகமாக குதிரைப்பந்தய மைதானம்.

அதற்கு மிக அருகிலேயே ஒரு முனீசுவரன் கோயில். சனீசுவரனிடம் அகப்பட்டுக் கொண்டு ஆடுவதற்கு முன் முனீசுவரனைத் தரிசித்துச் சென்றார்கள் பந்தய பக்தர்கள்.

விடுமுறையை உல்லாசமாகக் கழிக்க வரும் சிறிய பெரிய பணக்காரர்களுக்குச் சௌகரியமாகத் தங்க வசதி அளித்த ஹோட்டல்கள் பல. அவற்றுள் ஒன்றில் போய்த் தங்கினார்கள் அவர்கள்.

சிரம பரிகாரம் செய்து கொண்டபின் குதிரைப் பந்தயத்துக்குச் சென்றார்கள். ரேஸ் கிளப்புக்குள் நுழையும்பொழுதே முதலில் காட்சி அளித்தது ஒரு எருமை மாட்டின் மண்டை ஓடு! 'இந்தக் கட்டடத்துக்குள் நுழைந்தால் என் கதிதான் உனக்கும்' என்று பறைசாற்றியது அது. ஆனால் நவநாகரிகத்தின் பொருக்கி எடுத்த சின்னங்கள் அந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. உடல் தெரிய உடை அணிந்த நாரீமணிகளும் அமெரிக்க பாணியில் ஆடையுடுத்திய ஆண்

மக்களும் குழுமி நின்று குதிரைகள் ஓடுவதை விழி பிதுங்கப் பார்த்தார்கள். அனைவருக்கும் ஒரே நோக்கம். 'தங்கள் குதிரை ஜெயிக்க வேண்டுமே!'

"கம்மான் நைட்லேடி!"

"கம்மான் டே குவீன்!"

"கம்மான் புளு பர்ட்!"

காது துளைக்கக் கத்தினார்கள். பண்பாடு கெட்டுக் குதித்தார்கள். கைகளைப் பிசைந்தார்கள். விரல்களைச் சொடுக்கினார்கள். வியர்வையைத் துடைத்துக் கொண்டார்கள். பெருமூச்சை வெளிப்படுத்தி உட்கார்ந்தார்கள். ஏமாற்றம்! ஒரே ஏமாற்றம்! அடுத்த ரேஸ் ஆரம்பமாயிற்று. மறுபடியும் நம்பிக்கை, பயம், ஏமாற்றம். திரும்பத் திரும்ப இதேதான்.

மல்லிகாவுக்கு இதெல்லாம் முதலில் ஒன்றும் புரியவில்லை. சுகுமாரனும் கதிர்வேலனும் சேர்ந்து சொல்லிக் கொடுத்தார்கள். தெரிந்துகொண்ட பிறகு ஜுரம் அவளையும் பற்றிக் கொண்டது. உச்சநிலைக்குப் போய் விட்டது.

ஆயிரம் ரூபாய்க்கு மேல் தொலைத்த பிறகு ஆசுவாசப்படுத்திக் கொள்ள ஏரிக்கரைக்குச் சென்றார்கள். காதல் புரிய வந்த இளந்தம்பதிகள், விடுமுறையைக் கழிக்க வந்த மாணவர் கும்பல், ஓய்வு பெற்று வந்த வயோதிகர்கள் முதலிய பல ரகத்தைச் சேர்ந்தவர்களையும் அங்கே காண முடிந்தது. கரையில் சரஸ்வதி குதிரை சவாரி செய்த பிறகு, படகில் ஏறி, ஏரியில் உல்லாசமாகப் பவனி வந்தார்கள்.

தன் பலம் பொருந்திய கரங்களால் கதிர்வேலன் துடுப்பு வலித்துப் படகைச் செலுத்தியபோது அவன் திரண்ட தோள்கள் விம்மிப் புடைத்து நின்றன.

நான்கைந்து நாட்கள் இப்படிக் கழிந்தன. ஒரு நாள் மாலை வழக்கம் போல் அந்த ஏரியைச் சுற்றி நான்கு முறை வந்த பிறகு கரையில் முட்டி மோதி நின்றது படகு. படகை இழுத்துக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளும் முன்னரே பழகிவிட்ட காரணத்தினால் விழமாட்டோம் என்ற நம்பிக்கையுடன் கரையில் ஒரு காலை எடுத்து வைத்தாள் மல்லிகா.

ஒரு பக்கமாக ஒரேயடியாகச் சாய ஆரம்பித்தது படகு. நிலைதடுமாறி விழப் போன அவளை இரண்டு கரங்கள் தக்க சமயத்தில் பற்றித் தாங்கின.

சமயத்துக்கு உதவிய அந்தக் கரங்களின் உடையவருக்கு நன்றி தெரிவித்து நிமிர்ந்து பார்த்தாள் மல்லிகா.

புன்னகையுடன் நின்ற சேகரைக் கண்டதும் வியப்பினால் அவள் குவளைக் கண்கள் மலர்ந்தன.

சற்றுத் தூரத்தில் இருந்த ஒரு மரத்தில் கூட்டம் போட்டிருந்த வெண் நாரைகள் திடீரென்று சடசடவென்று சிறகுகளை அடித்துக் கொண்டு மேகக் குவியலைப் போல் பறந்து சென்றன.

மரங்களின் இலைகளுக்கு இடையே மறைந்திருந்த பலவிதப் பறவைகள் இனிமையாகக் குரல் கொடுத்தன.

யூகலிப்டஸ் மரங்களுக்கு இடையே புகுந்து, அயர்வு நீங்கக் கமழ்ந்து, ஏரியின் குளிர்ந்த நீர்ப் பரப்பிலே தவழ்ந்து வந்த மந்தமாருதம் மல்லிகாவை மருவித் தழுவியது. (தொடரும்)

தமிழ் கூறும் நல்லுலகம்


நாகபுரி சர்வகலாசாலையில் உள்ள தமிழ் மாணவ மாணவிகள் சேர்ந்து, இலக்கிய கலாசார வளர்ச்சியின் நோக்கம் கொண்ட ஒரு தமிழ் சங்கம் ஆரம்பித்திருக்கிறார்கள். சுமார் இருநூறு அங்கத்தினர்களைக் கொண்ட இந்தச் சங்கத்தின் முதல் பொது சபையின் கூட்டத்தில் திரு எல். என். கிருஷ்ணமூர்த்தி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். நிர்வாக சபை அங்கத்தினர்களும் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

★

"பம்பாய் ரிசர்வ் பாங்க் தமிழ் நூல் நிலையத்தினர் செப்டம்பர் 11-ந் தேதி பாரதி தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடினர். திரு ராகவன் இறை வணக்கம் பாட, விழா துவங்கியது. குமாரி வே. விசாலம், திரு ஆர். எஸ். கோபாலன், திரு புலியூருடையான் ஆகியோர் பாரதியாரின் கவிதை நயம் பற்றிப் பேசினர். அடுத்து, குமாரி விமலா விசுவநாதனும், திரு மணி, திரு கஸ்தூரியும் பாரதியார் பாடல்களைப் பாடினர். செயலாளர் திரு வெங்கடகிருஷ்ணன் நன்றி கூற, விழா இனிது நிறைவுற்றது.

★

மத்தியப் பிரதேசத்திலுள்ள குராலியா சுரங்கத் தொழிற் பயிற்சிப் பள்ளியில் பயிலும் தமிழ் மாணவர்கள் தங்கள் விடுதி நடுமன்றத்தில் பாரதி நினைவு நாளைச் சிறப்பாகக் கொண்டாடினர். மகாகவி பாரதியின் கவிதைத் தொகுதி புனித இருக்கையில் வைக்கப்பட்டு, மலர்களால் அழகுற அலங்கரிக்கப்பட்டிருந்தது. மணம் பரப்பும் ஊதுபத்திகளும், மெழுகுவர்த்திகளும் மேலும் சோபையூட்டிக் கொண்டிருந்தன.



கரூர் செண்டிரல் பாங்கு ஏஜண்ட் ஸ்ரீ எஸ். சுப்பிரமணிய அய்யர் குமாரர் ஸ்ரீ எஸ். சங்கர நாராயணனுக்கும், திருநெல்வேலி பாப்புலர் மியூஸிகல் ஸ்டோர்ஸ் உரிமையாளர் ஸ்ரீ ஜே. ராமசுப்பிரமணிய அய்யர் குமாரத்தி சௌ. பொன்னம்மாளுக்கும் திருநெல்வேலியில் ஆகஸ்டு 20-ந் தேதி விவாகம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

விழாவுக்கு விடுதி முதல்வர் திரு பிரேந்திர குமார் எம்.ஏ., பி.எல்., தலைமை வகித்தார். திரு செல்லத்துரை பிரான்சிஸ் மூன்று திருக்குறட் பாக்களைப் பாடி, அவற்றின் பொருளை ஆங்கிலத்தில் விளக்கினார். பின்னர் திரு ஜேம்ஸ்ராஜ் பி. எஸ்ஸி. வரவேற்புரை நிகழ்த்தினார். திரு ஈ. வே. ராமன் இந்தியில் "பாரதி—யார்?" என்ற தலைப்பிலும், திரு எஸ். நாராயணன் பி. ஏ., ஆங்கிலத்தில் "பாரதியின் வாழ்வும், சாதனையும்" என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர். அதன் பின்னர் திலமலர்மன்னன் பாரதி பாடல்களைப் பாடினார்.

நன்றி நவிலலும் தேநீரும் வழங்கப்பட்ட பின் பாரதியின் தமிழ் மொழி வாழ்த்தும், நாட்டுப் பண்ணும் முழங்க, கூட்டம் இனிது முடிவுற்றது.

★

திருவனந்தபுரம் வள்ளுவர் மன்றத்தில், கேரளா பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் திரு ஆர். வீரபத்திரன் செட்டியார் எம். ஏ. எல். டி., அவர்கள் தலைமையில் பாரதி விழா செப்டம்பர் 14-ந் தேதி யன்று கோலாகலமாகக் கொண்டாடப் பட்டது. விழாவையொட்டி நடத்தப்பட்ட போட்டியில் 'பாரதியும் கவிதையும்' என்ற பொருள் பற்றி எழுதப் பெற்ற கட்டுரைகளுக்குப் பரிசுகள் வழங்கப் பெற்றன. முதல் பரிசு திரு எஸ். கிருஷ்ணனுக்கும், இரண்டாம் பரிசு திரு எஸ். பி. பெருமாளுக்கும், மூன்றும் பரிசு திரு ந. முத்தையா அவர்களுக்கும் தலைவர் அவர்களால் வழங்கப் பெற்றன. செயலாளர் திரு வி. சுப்பராயன் நன்றி கூற, நாட்டு வணக்கத்தோடு விழா முடிந்தது.


★

ஸ்ரீநர்கேலா தக்ஷிண பாரத் சமாஜம் செப்டம்பர் 14-ந் தேதி அமரகவி பாரதியார் தினத்தைச் சிறப்பாகக் கொண்டாடியது. திருமதி காத்தியாயினி, திரு பால சுப்பிரமணியம், திரு வெங்கடசுப்பா ரெட்டி ஆகியவர்கள் மகாகவியின் கவி நயத்தின் சிறப்பை மிகவும் பாராட்டிப் பேசினார்கள். திரு வெங்குசுவாமி இவ் விழாவுக்குத் தலைமை வகித்தார். குமாரி ஜானகி சுப்பிரமணியமும், குமாரி வஸந்தாவும் நடன விருந்தளித்துச் சபையோரை மகிழ்வித்தனர். காரியதரிசி நன்றி கூற விழா இனிது நிறைவேறியது.

★

ஒலவக்கோடு தமிழ்ச் சங்கம் சார்பில் செப்டம்பர் 13-ந் தேதி பாரதி தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பாலக்காடு டாக்டர் திரு ஆர். பத்மநாபன் எம். பி. பி. எஸ். கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசினார். "கீதையின் சாரத்தையும் வேதங்களின் உட்பொருளையும் சாதாரண மக்களும் புரிந்துகொள்ளும் எளிய இசைப் பாடல்களாக வடித்துத் தந்துள்ளார் பாரதியார்" என்று குறிப்பிட்டார். சங்கச் செயலாளர் நன்றி நவிலக் கூட்டம் இனிது முடிவுற்றது.


இப்பொழுது நடைபெறுகிறது
சென்னை காஸினோ..பிராட்வே..சயானி
மதுரை சிந்தாமணி
மற்றும்
தென்னாடெங்கும்
பத்மா பிலிம்ஸ்
மனமுள்ள மறுதாரம்
திரைக்கதை, வசனம்
முரசொலி மாறன், M.A.,
டைரக்ஷன்
W.R.சுப்பராவ்·M.S.ராமனாத்
பாடல்கள்..மருதகாசி
BEEBEES
BALU BROS
சங்கீதம்..K.V.மஹாதேவன்
ஸ்டுடியோ...பரணி



இத்தாலியில் சர்வதேச '500' மைல் பந்தயம்



மோட்டார் பந்தயத்தில் இந்த டயர் அபாயமின்றி செல்லக் கூடியதென நிரூபித்துள்ளது

இத்தாலியிலுள்ள மான்ஸாவில் நடைபெறும் சர்வதேச ''500'' பந்தயம், வேகத்தையும் அபாயமின்றிச் செல்லக்கூடிய டயரின் தன்மையையும் குறிக்கும் சோதனைக்களமாகும். பந்தயத்தில் வெற்றிபெறும் டயர்களைத் தயாரிப்பதிலுள்ள அதே உன்னத தரத்தை நிர்ணயிக்கும் முறையும், உற்பத்தித் திறமையுமே, உங்கள் காரிலும் பயர்ஸ்டோன் ''பாமலி டைப்'' டயர்களைப் பொருத்துவதினால் ஏற்படும் அதிகப்படியான பாதுகாப்பைச் சாத்தியமாக்குகிறது

Firestone

பயர்ஸ்டோன்

நியூ டிலெக்ஸ் சாம்பியன் ட்யூப்லெஸ் அல்லது ட்யூபுள்ளது

மன நிம்மதியுடன் பிரயாணம் செய்வதற்கென்றே தயாரித்த டயர்

1-56

வக்கீல் அம்பலவாணர் அதிர்ஷ்டசாலி தான்! மிகப் பணக்கார இடத்தில்தான் கல்யாணம் செய்து கொண்டார். ஆனால் ஒரே குழந்தை - தனலட்சுமியைப் பெற்றுப் போட்டு விட்டு, அவரது அருமை மனைவி ஆறு வருஷ தாம்பத்திய வாழ்வுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துக் கொண்டு போய் விட்டாள். அவர் மனத்தைக் கல்லாக்கிக் கொள்ள வேண்டிய அவசியமில்லாமல், ஏற்கனவே அது ஓரளவு இறுகித்தானிருந்தது.


'தனத்துக்கு வருத்தமென்பதே தெரியாமல் வளர்க்க வேண்டும். அதற்கும் - நமக்கும் - தேவையான பணத்தைக் குறைவில்லாமல் ஏராளமாக, எப்பாடு பட்டாவது சம்பாதித்து விடவேண்டும்' என்ற அற்புதமானதொரு முடிவுக்கு வந்தார் வக்கீல் அம்பலவாணர்.

அவரது அதிர்ஷ்டம்! வழக்குகள் வந்து குவிந்த வண்ணமாக இருந்தன. குமாஸ்தா என்ற பெயரில் வாசற்புற அறையில் தர்பார் நடத்தி வந்த சுந்தரராஜன் அந்த ஊரில் இரண்டு வீடுகள் வாங்கி விட்டானென்றால், சுந்தரராஜனுக்கு வரும்படி என்ன, அம்பலவாணருக்கு எவ்வளவு என்பதையெல்லாம் கணித மேதைகள் கணக்கிட்டுப் பார்க்க வேண்டிய முயற்சி என்று விட்டுவிடலாம்.

ஊர் சிறிய கிராமம் என்றில்லாவிட்டாலும், டவுனென்றும் சொல்ல முடியாத ஒரு இசெங்கு நிலையில் இருந்தது. சுற்றிலும் செழிப்பும் பணமும் கொழிக்கும் முப்பது கிராமங்கள்! பாதிக்கு மேல் இலங்கையில் தேயிலைத் தோட்டங்களில் பணமாகவே பறித்தவர்கள்! மற்றவர்கள் நிலம் நீச்சுடன் பணத்தில் புரளும் பட்டுக்கோட்டைப் பிரமுகர்கள். தினசரி வியாஜ்யம் கோர்ட்டு என்று போகாவிட்டால் பணம் படைத்ததன் பலனைப் பரிபூரணமாகப் பெற்றவர்களாக மாட்டோம் என்ற கொள்கையில் அமிழ்ந்து ஊறியவர்கள். "இங்கிருந்த முட்டுக்கல்லே அரை அங்குலம் தகர்த்தி விட்டான்; கோணவாய்க்கால் கரை நிலத்தின் வரப்பு ஒரு சாண் உள்ளே வந்து விட்டது" என்று ஏதாவது சொல்லி, பக்கத்து நிலத்துக்காரனுடன், அவன் பக்கத்து வீட்டுக்காரனுக்கு கூட இருப்பான் - சண்டையை விதைத்துக் கொண்டு, வக்கீலிடம் வந்து சேர்வார்கள். மீன் குஞ்சுக்காவது நீச்சல் கற்றுக்கொடுக்க வேண்டியிருக்கலாம். வக்கீல் அம்பலவாணருக்குப் பேசவோ, கேசை நடத்தவோ,

பணமும் தனமும்

ஸ்ரீரஞ்சனி



குறிப்பாகப் பணத்தைத் தண்டவோ யாரும் கற்றுத்தர வேண்டிய அவசியமில்லை. அதுவும் ஏமாளிகள் அவர் கையில் சிக்கினால்...

சுந்தரராஜன் நான்கு தடவையாவது மாதத்தின் திருச்சிக்கு இலவசமாகச் சென்று, ஒவ்வொரு தடவையும் குழந்தைகளுக்குச் சட்டைத் துணி, மனைவிக்குப் புடவை சகிதமாகப் பிளஷர் காரில் வந்து இறங்குவார். அம்பலவாணர் ஹைகோர்ட்டில் யுத்தம் செய்ய, சென்னைக்கு முதல் வகுப்பில் சென்று, உயர்தர ஏர்கண்டிஷன் அறைகளில் தங்கி, எருதுடியான் பணத்தையும், கொப்பம்பட்டியார் சொத்தையும் கரைத்து விட்டு, கட்சிக்காரனை வெற்றி தோல்வி புரியாத மயக்க நிலையில் விட்டு வருவார்! அவரது முகராசி ஒன்றிரண்டு வழக்குகள் 'தீர்ந்து' போனாலும் கூட, கட்சிக்காரர்கள் அவரிடம் தான் வலிய வந்து ஈபோல மொய்த்தனர். வாதி, பிரதிவாதி இருவருமே அவரைக் கெஞ்சுவது சில சமயம் கண் கொள்ளாக் காட்சிதான்!

அபூர்வமாக அமைந்த இந்த அதிர்ஷ்டத்தை அம்பலவாணர் முழுதும் பயன்படுத்திக் கொள்ளத் தவறவில்லை. நோட்டாகவும், அரிசி மூட்டையாகவும், புளியாகவும், துணியாகவும் எந்த உருவத்திலாவது பிளைக் கிட்டி போட்டு வசூல் செய்து விடுவார்.

தனலட்சுமி!

வெளியிலிருந்து வீட்டுக்குள் வந்து குவியும் தனலட்சுமியில் தான் அம்பலவாணர் குறியாயிருந்தாரே ஒழிய, வீட்டுக்குள்ளேயே இருந்தாளே, அழகுப் பிம்பமாக, பொறுமையின் உருவமே ஒரு தனலட்சுமி, அவளை அவர் அதிகமாகக் கவனித்ததில்லை. 'இவள் வீட்டிலிருப்பவள்; எப்போது வேண்டுமானாலும் பார்த்துக் கொள்ளலாம், பேசலாம்; ஆனால் வாயடி கையடி அடித்து, மேஜையைக் குத்திப் பேசிக் கறந்து வாங்குகிறோமே அந்தத் தனலட்சுமி நாம் சற்று அலட்சியமாயிருந்தால் ஓடி விடுவாள்' என்ற பயமோ என்னவோ?

ஏதோ மனம் வந்து, சற்று ஓய்வு எடுத்து, ஒரு வரனைத் தேடி, தனலட்சுமிக்குக் கல்யாணம் என்று ஒன்று செய்து முடித்தார் அம்பலவாணர். கறிகாய் விநியோகம் ஒருவன், பால் தயிர் இன்னொருவன், இப்படி ஏற்பாடு! வட்டிக்கடை செட்டியார் கூடக் கல்யாணத்துக்கு வேண்டிய தாலியை, எட்டணா சில்லறைகளைக் கொடுத்து உதவினாரென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

தனத்தின் கல்யாண தினத்தன்றுதான் அம்பலவாணர் பல்லைக் கடித்துக் கொண்டு கோர்ட்டுக்குப் போகாமல் இருந்தார். வக்கீல் போர்டு மாட்டிய தினத்திலிருந்து ஏதோ ஒரு கோர்ட்டுக்கு, உள்ளூர், முசிறி, திருச்சி என்று அலைந்து கொண்டிருந்தார்.

தாயில்லாத பெண்ணான தனம் கூடிய வரை தன் சௌகரியங்களைத்தானே கவனித்துக் கொள்ளப் பழகி யிருந்தாள். சமையல் கார மாமி சமையல் தவிர மற்றெந்த வேலையிலும் தனத்துக்கு உதவ வேண்டிய அவசியமில்லாமல் இருந்தது. 'தாய் தான் மறைந்து விட்டாள். தகப்பனாராவது இன்முகம் காட்டிப் பேசக்கூடாதா?' என்ற ஏக்கம் தனத்தின் உள்ளத்தை அரிக்காமல் இருந்திருக்க முடியாது. அதை அவள் வெளிக் காட்டாமல் தனக்குள் அடக்கிக் கொள்ளப் பழகி யிருந்தாளென்றால், அது அவள் தாயிடமிருந்து ஸ்ரீதனமாகப் பெற்ற குண சம்பத்து என்று தான் சொல்ல வேண்டும். வாய் திறந்து பேசாமலே ஆறு ஆண்டுகள் குடும்பத்தை அற்புதமாக நிர்வகித்து நடத்தியவளாயிற்றே தனத்தின் அன்னை!

அம்பலவாணர் கொடுத்துவைத்தவர்தான்: ஒவ்வொரு பண்டிகைக்கும் பெண்ணை அழைத்துப் போவது, அழைத்து வருவது என்ற தொந்தரவுகள் எதற்கும் இடம் அளிக்காமல், மாப்பிள்ளை - தனத்தின் கணவன் சந்துரு - வேறு உறவினர் யாரும் இல்லாததால் மாமனார் நிழலிலேயே வந்து உட்கார்ந்து கொண்டான். அதையும் ஒரு நல்ல அதிர்ஷ்டமாகக் கருதினார் அவர். 'இனி வீட்டைப்பற்றி, மகளைப் பற்றி முன்னைப்போல அத்தனை கவலைப்பட வேண்டாமல்லவா?'



குடும்பத் தொல்லைகளைப் பகிர்ந்து கொள்ள மாப்பிள்ளை வந்து சேர்ந்ததும், தன் இஷ்டப்படி கட்சிக்காரன் இழுத்த இழுப்புக்கு ஈடு கொடுத்து ஊர் சுற்றத் தொடங்கினார் அவர். தனத்தின் திருமணத்துக்கு முன்பு இருந்து வந்த சிறிதளவு குடும்பப் பற்றும் அறவே இற்று விட்டது என்று கூறும்படி 'கேஸ் கேஸ், சரங்கி' என்று பறக்கத் தொடங்கினார் அம்பலவாணர். தனமும் மாப்பிள்ளையும் புதுமணத் தம்பதிகளாயிருந்த கொஞ்ச நாளைக்கு இதைப் பொருட்படுத்தவில்லை; தங்கள் இன்ப உலகத்திலேயே இருந்தனர். பிறகுதான் அவர் வீடு தங்காமல் சுற்றி அலைவது அவர்களுக்குப் புலப்பட்டது.

"மாமா!"

"யாரது? சந்துருவா?...யாராவது கட்சிக்காரன் வந்திருக்கானா? கொப்பம்பட்டி ரங்கசாமி வரேன்னான்; செங்காட்டுப்பட்டியான் முந்நூறு ரூபாய் கொண்டு வருவான்... இவன் கிட்டேயெல்லாம் சமயத்திலே கறந்துடணும்...இல்லேன்னா..."

சந்துரு சொல்ல வந்த விஷயம் அப்படியே நின்று விட்டது. அம்பலவாணர் தம்முடைய பேச்சிலேயே லயித்தபடி நின்றார்.

"அதில்லே மாமா! மறுபடியும் தனம் மயக்கமாகப் படுத்துக் கொண்டிருக்கிறாள்.."

"ஓ! அதுவா! அது அப்படித்தான் இருக்கும் என்று டாக்டர்தான் சொல்லி யிருக்

றீரே. எதிர்வீட்டுப் பாட்டியைத் துணைக்கு உட்காரச் சொல்லி, ஏதாவது கை மருந்தா கத் தரச் சொல்லு. எல்லாம் சரியாகிவிடும். இன்னும் அரை மணிக்கு அப்புறம் தகவல் சொல்லு. வேலை இப்போ தலைக்கு மேலே யிருக்கிறது...'' அம்பலவாணர் வழக்கு விஷ யத்துக்குள் மூழ்கி விட்டார். இரண்டு நிமிஷ நேரம் நிலைகுத்தியபடி அவரைப் பார்த்து நின்ற சந்துரு மௌனமாக உள்ளே சென்றான்.

உள்ளே சமையல்கார அம்மாள் சொல்லிக் கொண்டிருந்தாள்.

''முதல் பிரசவம். சர்வ ஜாக்கிரதையா கப் பார்த்துக்கணும். இந்த மாதிரி அடிக்கடி மயக்கம் வரவே கூடாது...அவர் கிட்ட சொல்லி நல்லபடியா...''

அம்பலவாணர் காதில் இது இலேசாக விழுந்து கொண்டிருந்தது.

''என்னடியம்மா! கோட்டைக்காவது அழைத்துக்கொண்டு போய் நல்ல டாக்ட ரம்மா கிட்ட கையைக் காண்பித்து, டானிக் வாங்கி வரக்கூடாதோ? நல்ல புருஷர்கள் இவர்கள். கேசக்கென்று போறப்போ அந்தக் காரிலே கொழுந்தையை அழைத்துக் கொண்டு போனால் தேய்ஞ்சா போயிடும்? அது என்ன வேலையோ, அதிசயமாத்தான் இருக்கு... இந்தப் பாழாய்ப்போன ஊரிலே ஒரே ஒரு டாக்டர்தான். அவர்தான் யாருக்கென்று ஆடுவார்? ஒரு சின்ன ஆஸ்பத்திரியாவது, இல்லே ஒரு மருத்துவச்சியாவது இருக்காளா, பாரேன்...'' இதுவும் இதைப் போன்ற பேச் சுக்களும் அடிக்கடி அவர் காதில் படும்படி அடிபடும். அதை அவர் சிறிதும் பொருட் படுத்த மாட்டார்.

சந்துரு மட்டும் ஏதாவது முணகுவான். மனைவி என்ற பாசம் ஒரு பக்கம். மாமனி டம் உள்ள மரியாதையும், மாமனார் வீட்டு மாப்பிள்ளை என்ற முறையில் அவன் இழந்து விட்ட சுதந்திரமும், ஓரளவு பயமும் தாழ்வு மனப்பான்மையுமாகச் சேர்ந்து அவனை வாய் திறந்து பேசமுடியாமல் அடித்து விட்டன.

''மிஞ்சினால் முருகன் வண்டியை எடுத்துக் கொண்டு ஒரு நிமிஷத்திலே கோட்டைக்கு ஓடலாம். பெட்ரோல் கூட நம்ம ராமசாமி ரெட்டிகிட்டே போட்டுக்கலாம்'' என்பதே அம்பலவாணர் சொல்லும் சமாதானம்.

''சந்துரு! என்னுடைய அந்த 'மைசூர் டர்ப'னை எடு'' என்று மாமனாரின் குரல் கேட்டுச் சந்துரு உள்ளே வந்தான்.

''நாளைக்கு மறுநாள் ஹைகோர்ட்டிலே ஒரு 'அப்பீல்'. நம்ம கிரம்பூர் சாமிநாதனு டையது. 'பீசெ'ல்லாம் அட்வான்சாகவே வாங்கி விட்டேன். இன்றைக்கு ராத்திரி வண்டியைப் பிடிக்க, திருநெல்வேலி எக்ஸ்பிர ஸிலே ஏறிக் காலையில் சென்னையிலே இருக்க வேண்டும். ரயிலுக்கும், ஹோட்டலிலேயும் 'ரிசர்வ்' பண்ணிவிட்டான். கேஸ் நம்ம பக்கம் தான்! இருந்தாலும் 'அப்பீ'லுக்கு அந்த 'ஆகி வந்த' டர்பனைத்தான் கையோடு கொண்டு போவேன். அதை எடு. அது இது வரையில் இருபதினாயிரம் ரூபாய் வரை சம்பாதிக்கக் கொட்டி யிருக்கிறது, சந்துரு! என்ன?'' என்றார் அம்பலவாணர்.



போலீஸ்: திருடன் வீட்டுக்குள் வந் திருக்கிறான் என்று தெரிந்தவுடன் கையில் கட்டையை எடுத்துக் கொண்டு நீங்கள் மாடிக்குப் பாய்ந்தீர்களாமே!

வீட்டுக்காரர்: ஆமாம்!

போலீஸ்: அப்பொழுது திருடன் எங்கேயிருந்தான்!

வீட்டுக்காரர் மனைவி: கீழேயிருந்தான்!

சந்துரு உதட்டைக் கடித்துக் கொண்டான்:

''இப்போ...மெட்ராஸ்....''

திறமைவாய்ந்த வக்கீலான அம்பலவாணர் சந்துரு என்ன சொல்ல வருகிறானென்பதைத் திட்டமாக ஊகிக்க மாட்டாரா என்ன?

''இப்போ எதற்குச் சென்னை என்கிறே அதுதானே? தனத்தின் உடம்பு பற்றிக் கவலையே வேண்டாம். தொழிலிலே 'இன் டெக்ரிடி' வேணும். பீஸ் அட்வான்ஸ் வாங் கின்ட பிறகு அப்பீலின்போது அவனைக் கை விட்டு விடுவதா?...''

''அதுக்கில்லே. தனம் உடம்பு இரண்டு நாட்களாகவே...'' சந்துரு வார்த்தைகளை மென்று விழுங்கினான்.

''இன்னும் இரண்டு மாசம் முழுசா இருக்கு. ஏன் பயப்படறே? 'கம்ப்ளீட் ரெஸ்ட்' எடுக்கச் சொல்லு. அவ்வளவுதான்; கவலை வேண்டாம்.''

''எனக்கென்னவோ...''

''போடா அசடு! இது ஒரு நல்ல சந்தர்ப் பம் எனக்கு. இந்த அப்பீலை ஜெயிச்சேன்னு எனக்கு ஸ்டேட்டிலேயே பெரிய வெற்றி யாச்சே இது...கொண்டு வரப்போற பணம் எல்லாம் வரப்போகிற ராஜாப் பயலுக்காகத் தானேப்பா?'' என்று சிரித்தபடி கழுத்து 'டை'யைச் சரிசெய்து கொண்டார் அம்பல வாணர். சந்துருவின் பதிலுக்குக் காத்திரா மல் அவர் புறப்பட்டும் விட்டார்.

* * *

வெற்றிமாலை சூடிய பெருமையோடு, பெரிய விருந்துச் சாப்பாட்டையும், இலவச சினிமாக் காட்சி ஒன்றையும் கிரம்பூரான் செலவில் முடித்துக் கொண்டு அட்டகாசமாக வீடுதிரும்பிய அம்பலவாணரை வர வேற்கக் காத்திருந்தது கிராமத்திலிருந்து வந்திருந்த அவசரத் தந்தி!

தந்தியா அது? அவரது இதயத்தையே ஒரு கண்டு கண்டி விட்டது. அது தான்

வரையில் துண்டாடப்படாத ரத்த பாசம் பீறிட்டுக் கிளம்பியது.

'குறைப் பிரசவமாகி, தனம் மிக்க அபாயகரமான நிலையில் இருக்கிறாள்-சந்துரு!' சந்துரு மாமனாரின் பண பக்தியை அறிந்தவன். 'புறப்பட்டு வரவும்' என்ற வரிகளைச் சேர்த்து அவரைத் தவிக்க விடவில்லை.

ஆயினும் வேறு ஜோலி இல்லாததால் அம்பலவாணர் வெற்றிப் புன்னகையுடன், தனத்துக்காகப் பிரத்தியேகமாக வாங்கிய புதுமாதிரி 'செயின்' ஒன்றுடன் கிளம்பினார் ஊர்நோக்கி.

மறுநாள் காலை ஊருக்குள் நுழைந்தார் அம்பலவாணர். வீட்டுக்குள்ளும் நுழைந்தார்.

வாயிற்புறத்தையே எட்டிப் பார்த்து அறியாத தனம், தகப்பனார் வரவை எதிர்பார்ப்பவள் போல ரேழியில் கிடத்தப்பட்டிருந்தாள். பேசும் சக்தியற்று, அழவும் உணர்வின்றி வெறும் மூச்சு மட்டும் விட்டுக் கொண்டு மற்றொரு சவம் போல உட்கார்ந்திருந்தான் சந்துரு.

உள்ளே நுழைந்த மாமனாரைக் கவனிக்காமல் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான் அவன்.

"முதல் நாள் சாயங்காலம் தனத்தின் உடல்நிலை கோளாறாகி விட்டது. திடீரென்று கிணற்றடிக்குப் போனவள் தவறி விழுந்து, பின் தலையில் சரியான அடி. மயக்கம் வேறு. சந்துரு தம் கடைப்பக்கம் போயிருந்ததால் யாரும் அவளைக் கவனிக்கவில்லை. வந்த வேலைக்காரி பார்த்து விட்டு உள்ளே தூக்கி வந்திருக்கிறாள். உள்ளூர் டாக்டர், மகள் கல்யாணத்துக்காக வெளியூர் போய் விட்டார். ஊரில் வேறு ஆஸ்பத்திரியும் கிடையாது. திருச்சிக்கு எடுத்துச் செல்வது அபாயகரமானதா இல்லையா என்று தீர்மானிப்பதற்குள் நிலைமை முற்றிவிட்டது. பக்கத்து வீட்டுக் கிழவியும் சமையல்கார அம்மாளுமாக ஏதோ பார்த்திருக்கிறார்கள். குறைப் பிரசவம் என்ற சாக்குக் காட்டித் தனத்தின் உயிர் பிரிந்து விட்டது.

இத்தனையும் ஒருவர் மாற்றி ஒருவராகச் சொல்லி அறிந்தார் அம்பலவாணர். ஏதோ நினைத்துச் சட்டைப் பையில் கைவிட்ட அவர் கையில் சென்னையில் வாங்கிய சங்கிலி அகப்பட்டது! அது அவரைப் பார்த்துச் சிரிப்பது போல் மின்னியது

யாருக்காக அது வாங்கப்பட்டதோ, யாருக்காகப் பணம் ஓடி ஓடிச் சம்பாதிக்கப்பட்டதோ, யாருக்காகப் பணம் என்று அம்பலவாணர் வாய்க்கு வாய் சொல்லிக் கொண்டிருந்தாரோ அந்தத் தனம் அந்தப் பணத்தில் காலணாவைக் கூடத் தீண்ட முடியாத நிலையில் கிடந்தாள்.

படிப்பும் அறிவும் சாதிக்க முடியாததை அந்த மரணச் சாட்சி சாதித்துக் கொண்டது. பண வெறி பிடித்து அலைந்ததன் பயனாக, பச்சை உடம்புக்காரியான ஒரே மகளைப் பலி கொடுத்த சோக நெருப்பு அவர் உள்ளத்தைச் சுட்டுப் பொசுக்கியது. அடுத்து, ஊரில் ஒரு சிறிய பிரசவ ஆஸ்பத்திரியாவது இருந்திருந்தால், ஒரு வேளை தனம் பிழைத்திருக்கலாமோ என்ற எண்ணம் எழுந்தபோது, அது இல்லாதது பெருங் குறைதானென்பதை உணர்ந்து கொண்டார் அம்பலவாணர்.

இடுகாட்டிலிருந்து திரும்பி, வீட்டுக்குள்ளே நுழையும் போதே, வெளியே மாட்டப்பட்டிருந்த 'வக்கீல்' பலகையைக் கழற்றி எடுத்து, உள்ளே ஒரு மூலையில் எறிந்தார். வீட்டில் எங்கு திரும்பினாலும் பணத்தின் மணம் தெரிந்தது. அவரது உத்வேகத்தைக் கிளப்பி விட்டது. தனம் இல்லாத வீட்டில், தனம்-பணம்-நிறைந்திருந்தும், நிறைவு இல்லையென்ற பேருண்மை அவருக்குத் தெரிந்தது.

தனலட்சுமிக்காகச் சேர்த்துக் குவித்த பணம் இதோ வீடு நிறைய இருக்கிறது. ஆனால் அதை அனுபவிக்க வேண்டிய அவள்?

'அவள் இல்லாத வீட்டில் 'அது' மட்டும் எதற்கு?'...இதைச் சற்று வாய்விட்டே சொன்னார் அம்பலவாணர்.

தனத்தைக் காப்பாற்றியிருக்கக்கூடிய எந்த ஒன்று அந்தக் கிராமத்தில் இல்லாமல் இருந்ததோ, அது தனத்தின் பெயராலேயே அங்கு உருவாக அவர் சேர்த்த பணம் முழுதுமே பயன்பட்டது. தனலட்சுமி மருத்துவ நிலையத்தைச் சிறப்பாகக் கட்டி முடித்துத் திறந்த போது பெற்ற நிம்மதியை அவர் தம்முடைய ஆயுளில் என்றுமே அனுபவித்ததில்லை.

பாண்ட்ஸ்

ட்ரீம்ப்ளவர் டால்க்
உபயோகித்தால்

நாள்முழுவதும் புத்துணர்ச்சி யுடனும், நறுமணத்துடனும் இருக்கலாம்

விருந்து கேளிக்கையிலும், நறுமணம் வாய்ந்த தூய்மையான பாண்ட்ஸ் ட்ரீம்ப்ளவர் டால்கம் பவுடர் உபயோகித்தால், சிங்கள் கொடிய வெப்பத்திலும், புழுக்கமான நாட்களிலும்கூட இனிய உணர்ச்சியுடன் இருக்கலாம். மென்மையான இந்த டால்கம் பவுடரை உடம்பில் தூவிக்கொண்டால், எரிச்சலூட்டும் வியர்வைத் தொல்லை ஒழியும். நாள் முழுவதும் புது மலரைப் போல் இனிய புதுமையுடன் இருக்க பாண்ட்ஸ் ட்ரீம்ப்ளவர் டால்கம் பவுடர் உபயோகியுங்கள்.

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன்
யு.எஸ். அமெரிக்காவில் இணைக்கப்பெற்றது)




இலவச புத்தகம் - "LOVELIER WITH PONDS" என்ற அழகு இலவச புத்தகத்தை வரவழையுங்கள். இதில் அழகு பராமரிப்பு பற்றி உபயோகமான குறிப்புகள் அடங்கியுள்ளன.

பி.ஓ. பாக்ஸ் 1012, பம்பாய் மெயின் பீ.ஓ. 23W பம்பாய்-1 என்ற விலாசத்திற்கு 25 நயா பைசா ஸ்டாம்புடன் எழுதவும்.


கால்கேட்டின்
துப்புரவாக சுத்தம் செய்யும்
வன்மை உங்களது
பற்களையும் ஈறுகளையும்
பாதுகாக்கிறது !
சாஸ்திரீயமாக அமைக்கப்பட்ட கால்கேட் டூத் பிரஷ் உங்கள் பற்களின் இடுக்குகளில் சுலபமாக நுழைகிறது ... உட்புறத்தையும், வெளிப்புறத்தையும் துப்புரவாக சுத்தம் செய்கிறது ... பல் ஈறுகளை மிருதுவாகத்தடவி உறுதிப்படுத்துகிறது! உங்கள் பற்களையும், ஈறுகளையும் கால்கேட் டூத் பிரஷ்ஷால் பாதுகாத்துக்கொள்ளுங்கள்.
4 சைஸ்கள் : ★ அடல்ட் ★ ஜூனியர் ★ சைல்ட் ★ பேபி
★ ஹார்ட் ★ மீடியம் ★ ஸாப்ட்
டீலக்ஸ் சுகாதார பிளாஸ்டிக் குழாயில் கிடைக்கும். ரெகுலரும் கிடைக்கிறது.
அழகான பிளாஸ்டிக் பிடிகளில் உறுதியாகப் பொருத்தப்பட்ட ஸ்டெரிலைஸ் செய்யப்பட்ட நைலான் பிரிஸ்ஸில்கள்
COLGATE
Nylon TOOTH BRUSH
NYLON STERILIZED
இந்தியாவில் சிறந்த டூத்பேஸ்ட் செய்பவர்களால் தயாரிக்கப்படுகிறது!


வலியை
நிறுத்தா
தீர்கள்
வியர்வையாக்கி
வெளியேற்ற
அமிர்தாஞ்சனம்
உபயோகியுங்கள்
தசைவலிகள், சுளுக்கு, தலைவலி எதற்குமே கைகண்ட நிவாரணி என 65 வருடங்களுக்கு மேலாக நற்பெயர் பெற்றுள்ளது அமிர்தாஞ்சனம். வலியாற்றிய பிறகு எவ்வித விளைவும் விளைவிக்காது; காரணம், வலி கண்ட இடத்தில் மட்டுமே உபயோகிக்கப்படுகிறது.
அனுபவமே அறிவு!
முதல் மருந்தாக அமிர்தாஞ்சனம் உபயோகித்துப் பாருங்கள்.
AMRUTANJAN
Pain Balm
அமிர்தாஞ்சன் லிமிடெட்
AL 58-2C TAM



75. நேயர்கள் கடிதம் (2)

கடிதம் 560 ல் சென்னை அன்பர் தெரிவிக்கிறார்:

''...... தாங்கள் கல்கியில் எழுதிய கால் ஆணிக்கு அம்மாம் பச்சரிசிப் பால் போட்டு வந்ததில் என் காலில் இருபது வருஷங்களாக இருந்த ஆணியைக் குணப்படுத்தியது. அதற்கு என் மனமுவந்த நன்றி......''

நேயர்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம் இது.

கடிதம் 571 ல் ஒலவக்கோடு நண்பர் தமது ''ப்ராங்க்டியாஸிஸ்'' என்ற வியாதியைப் பற்றி எழுதியிருக்கிறார்.

''......கடந்த ஐந்து வருஷங்களாக அவதிப்பட்டு வரும் ப்ராங்க்டியாஸிஸ் நோயிலிருந்து விடுதலை பெற (61-வது தொடர் எண்ணில் வைத்தியமுறைகள்) இந்த முறைகள் சிறந்தவையாக இருக்குமென நினைக்கிறேன். 60-வது தொடர் எண்ணில் 2-வது பாராவில் கண்டுள்ளவை யாவும் எனக்குத் தற்சமயம் பொருத்தமாக உள்ளன. இதுகாறும் இங்கிலீஷ் மருந்துகளை உபயோகப்படுத்திக்கொண்டு வந்தும் பலன் ஒன்றும் கிடைக்கவில்லை.

''......சுவாசப் பைகளில் துவாரங்கள் ஏற்பட்டிருக்கிறது, குணம் அடைவது சிரமம் என்கிறார்கள் இங்கிலீஷ் டாக்டர்கள். ஆதலால்......''

தஞ்சைஅரண்மனை முறைப்படித் தயாரித்த அச்வகந்தா லேஹியத்தில் காலை மாலை அரை தோலா வீதம் சாப்பிட்டு அனுபானமாகச் சிறிது வெள்ளாட்டுப் பாலைக் காய்ச்சிக் குடிப்பது நல்லது. ஒன்று அல்லது இரண்டு அவுன்ஸ் ஆட்டுப்பாலுடன் ஆறு, எட்டு அவுன்ஸ் ஜலம் சேர்த்து ஐந்து, ஆறு தரம் வடிகட்டின பிறகு—தோல் நீக்கிய பூண்டு ஒரு பல் எடுத்து அதில் இட்டுக் கொதிவராமல் சிறு தீயில் காய்ச்சி, பாதியளவு குறுகிய பிறகு பூண்டின் பல்லைக் களைந்துவிட்டுப் பாலைக் குடிப்பது மிகவும் நல்லது.

பூண்டு உடம்புக்கு ஒத்துக் கொள்ளாவிட்டாலோ, அல்லது பூண்டில் வெறுப்பு ஏற்பட்டாலோ தனித்த வெள்ளாட்டின் பாலையாவது மேற்சொன்ன விதம் குடித்து வரவும்.

வெள்ளாட்டுப் பால் கிடைக்காவிடில்-அல்லது கிடைக்காத நாட்களில் பசுவின்பாலை உபயோகிக்கலாம். ஆனால் இதில் கட்டாயமாகப் பூண்டை இட்டுக் காய்ச்சித் தான் தரவேண்டும். இளங்கன்றுள்ள பசுவின் பாலைத்தான் உபயோகிக்க வேண்டும்.

நாலு, ஆறு மாதம் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் குணம் தெரியும்.

மருந்துகளுடனே, அனுபானத்துடனே, பூண்டு கூட்டப்படுவதில் ஒரு விசேஷமுண்டு. பூண்டு பரிணாமமாகிய பின் இறுதியான கழிவுப் பொருளில் கணிசமான பாகம் சுவாசாசயம் வாயிலாகக் களையப்படுகிறது. அப்போது சுவாசப் பையிலுள்ள துவாரங்கள் அல்லது விரணங்கள் அங்குள்ள சளியைச் சுரக்கும் ஊற்றுகள் ஆகியவற்றைச் சுத்தமாக்கி, கிருமிகளை நாசமாக்கி, சுரக்கும் சளி—சீழ் முதலியவற்றை உலரச் செய்யும். ஆகவே விரணம் காயவும்—பள்ளங்கள் தூர்ந்து—துவாரங்கள் அடைபடவும் வகையுண்டாகலாம் அல்லவா?

கடிதம் 574 ல் பெங்களூர் நண்பர் எழுதுகிறார்:

''......நாட்டு வைத்தியம் என்ற பகுதியில் சில அரிய விஷயங்கள் கிடைக்கின்றன. ஆனால் அதில் தலைமயிர் உதிர்வதற்கு என்ன செய்ய வேணுமென்று வெளியாகவில்லை. அதனால் அதற்குள்ள மருந்தை உடன் உள்ள கார்டில் எழுதியனுப்பவும்......''

இப்படி ஒரு கடிதம் வந்தால் என்ன சொல்வது? முதலாவதாக, தலைமயிர் உதிர்வதற்கு என்ன செய்ய வேணுமென்று நான் எழுதவே இல்லை. உதிர்வதைத் தடுக்கவும், உதிர்ந்தவற்றை முளைக்கச் செய்வதற்கும் என்ன செய்யலாமென்பது பற்றித்தான் எழுதியிருந்தேன். மேலும், மருந்து செய்யும் முறையை எழுதியனுப்புவது கட்டுரையாகும். கடிதத்துக்குப் பதிலாகாது. எழுதுவதானாலும் ஒரு கார்டிலுள் எழுத முடியாது.

கடிதம் 576 ல் குத்தாலத்தை அடுத்த காமாட்சிபுரத்தைச் சேர்ந்த நண்பர் எழுதுகிறார்:

1. திரிஜாதம் என்ற மருந்துக்கூட்டில் ஒன்றான ''பத்ரம்'' என்பது பச்சிலை என்ற சரக்கா? லவங்கப்பத்திரியா?

பச்சிலை என்ற கடைச் சரக்குத்தான்.

2. ஜீவனீய கண சரக்குகளுக்குத் தமிழில் பெயர் கிடையாதா? .... அவை கிடைப்பதே இல்லையா? மலையாளத்தில் அவை அனைத்தும் கிடைப்பதாகச் சொல்கிறார்களே...!

பாலப்ரகாசனி காலத்திலேயே இவை கிடைப்பது சிரமமென்று தோன்றியதால்தான் அஷ்டவர்க்கங்களுக்குப்பதில் பிரதிநிதி சரக்குகளைத் தெரிவித்துள்ளார். சரக்குகளே கிடைப்பது அரிதான பிறகு அவற்றின் பெயர்களைப் பற்றிக் கேட்பானேன்?

தெரிந்த தெரியாத சந்தேகாஸ்பத ஔஷதிகளைத் தெளிந்து நிச்சயிக்கத் திட்டமிட்டுப் பூனாவில் ஒரு ஆராய்ச்சிக்கூடம் பணியாற்றி வருகிறது. சிறிது பொறுத்துப் பார்ப்போம். அஷ்டவர்க்கங்கள் போன்றவற்றின் தெளிவும் கிடைக்கலாமே.

3. "மயன தைலம் செய்யும் முறையைக் கல்கியில் விவரிக்கவேணும். செய்முறை சற்றுக் கடினமெனக் கருதிச் சில தரமான மருந்துகளை விவரிக்காமல் விட்டுவிட வேண்டியதில்லை.

அப்படியானால் வைத்தியக் கல்லூரிகளில் படிப்பிப்பதற்கென்று எதை எதை ஒதுக்குவது?

4. "...... அனுபவசித்தமான சில எளிய பஸ்ம ஸிந்தூரங்களைக் குறிப்பிடுவது நலம்.

மூன்றாவது கேள்விக்குச் சொன்ன பதிலேதான் இந்த நான்காவது கேள்விக்கும்.

கடிதம் 579ல் நீலகிரியை யடுத்த கொணவக்கரை நேயர், தமது வியாதியைப் பற்றி விஸ்தாரமாக எழுதிக் கல்கி கட்டுரையில் கண்டபடி தமது சுகவீனம் ரத்தவாதம் அதிலும் (பறக்கும்) ஓடு வாதத்தின் இனத்தைச் சேர்ந்தது என்றும் இதற்கு 'சீதஸ்நிக்தம்' என்று கல்கியில் எழுதிய கிரமப்படி சிகிச்சை செய்வது பொருத்தமாகுமென்றும் தெரிந்து கொண்டார்.

உண்மையில் அதுவரையில் சரிதான். இதுவரையில் உபயோகித்த மருந்துகளின் ஜாபிதாவைக் கொடுத்து இதனாலெல்லாம் ஓரளவு சமனம் வருவதும் மறுபடியும் திருப்பிக் கொள்வதுமாகக் கண்ணாமூச்சி காட்டுகிறது. இதற்கு என்ன செய்யலாம் என்று கேட்டுள்ளார்.

ரத்தவாதமான போதிலும், சீதஸ்நிக்தமான சிகிச்சை செய்ய வேண்டியது தான். சிரமமாயினும், இப்பொழுது விதியிலிருந்து இவருக்குச் சிறிது விலக்குச் சலுகை கொடுப்பது அவசியமாகிறது.

ரத்த வாதத்தில் ரத்தத்தின் கொதிப்புக் குறைவதற்குச் சீதமும்—வாதத்தின் சீற்றம் குறைய ஸ்நிக்தமும் நல்ல சேர்க்கைதான்.

ஆனால் வசிப்பது நீலகிரி. சீதம் அதிகமுள்ள பிரதேசம். சீதத்தினால் வாதத்துக்குச் சீற்றம் அதிகம் ஏற்படும். ஆகவே தேசத்தின் நிலை, காலத்தின் நிலை இவற்றுக்குத் தக்கபடி வாதத்தைக் குறைக்க ஸ்நிக்தமானதும் ஆயினும் அதிசீதத்தினால் வாதத்துக்கு ஏற்படக்கூடிய அதிசீற்றத்தையும் அடக்குவதற்குச் சிறிதளவு உஷ்ணமும் சேர்ந்துதான் இருக்க வேண்டும்.

சீந்தில் கொடியின் ரஸம், புளியந்தழையின் சாறு இவற்றுடன் நல்லெண்ணெயும் பிண்டதைலத்துக்குச் சொன்ன கல்கமும் கூட்டிக் காய்ச்சிய தைலத்தை மேலுக்குத் தடவி ஊறவும்—ஊறிக் கொண்டிருக்கவும்—ஊறினபின் சிறிது சூடான நீரில் குளிக்கவும். குக்குலுவைத் தனித்தோ-அல்லது குக்குலு இக்தகமென்ற கிருதமாகவோ உள்ளுக்குச் சாப்பிட்டு வரவும். இவ்வுபாயங்களால் விரைவில் குணம் காண இயலும்.

கடிதம் 580ல் உபாத்தியாயர் உத்தியோகம் செய்யும் சென்னை நண்பரொருவர் எழுதுகிறார்.

"எனக்கு சஸிஹேனைபல்ஸ் இருமலிருந்தது. நீங்கள் சொன்னபடி துளசி தைலமும், அச்வகந்தா லேகியமும், நடுவில் கூஷ்மாண்ட ரஸாயன லேகியமும் சாப்பிடுகிறேன். நல்ல பலன் கொடுத்திருக்கிறது" என்று எழுதிவிட்டுப் பிறகு தன் மகளுக்குத் தேவையான மருந்தைச் செய்து கொள்ள விரும்பி அதிலுள்ள ஒன்றிரண்டு சந்தேகங்களைப் பற்றியும் கேட்டிருக்கிறார்.

"வட்டத் திருப்பிக்கு வேறு பெயருண்டா?" மலபார் பாடாக் கிழங்கு என்றுகேளுங்கள். கிடைக்கும். விட்டாத்திப் பூ அல்ல. ரஸாஞ்சனமென்பது மரமஞ்சள் கஷாயத்தினின்றும் தயார் செய்து கொள்ள வேண்டிய மருந்து. ரஸஸிந்தூரப்பூ அல்லவே அல்ல. ரஸம், கந்தகம் போன்ற மருந்துகளை உபயோகிக்கும்படி ஒருகாலும் கல்கி நேயர்களுக்கு எழுத மாட்டேன். வைத்தியர்கள் அவற்றைக் கையாள்வது ஒரு விஷயம். கல்கி நேயர்கள் அவற்றைக் கையாள்வது அனுமதிக்க முடியாத காரியமாகும். மூலிகைகளையே தான் உபயோகிக்கும்படி நான் தெரிவிக்க முடியும். இவற்றால் அற்ப பலன் கிடைக்குமானாலும் போதும். ஆபத்து ஒன்றும் ஒருகாலும் ஏற்படாது.

வாழ்வு அளித்த செல்வம்

ஸோமாஸ்

என் நண்பன் சந்திரனுக்குத் திருமணம் நடந்த செய்தி எனக்கு இதுநாள் வரையில் தெரியாது. திருமணத்துக்கு நான் வராதது அவனுக்கு மிகவும் கோபத்தை உண்டுபண்ணியிருக்கும். தவறு என்னுடையதுதான். ஒருநாள் தங்கின ஊரில் மறுநாள் தங்காமல் சுற்றிக் கொண்டேயிருந்தால் அவன் எப்படி எனக்குத் திருமண அழைப்பை அனுப்புவான்? இதெல்லாம் போதாக் குறைக்கு, நான் அவனுக்குக் கடிதமே எழுதுவதில்லை.

சமீபத்தில் உத்தமர் கோவிலில் நடந்த என் மைத்துனர் கல்யாணத்துக்குப் போயிருந்தேன். அங்கே என் பழைய நண்பர் ஒருவரைச் சந்தித்தேன். அவர்தான் சந்திரனுக்கு விவாகமாகி விட்டதைப் பற்றிச் சொன்னார். அவனுக்கு விவாகமாகி ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. இது எனக்கு அதிசயமாயிருந்தது. ஆனால் இதைவிட அதிசயம் இதைப் பற்றி எனக்குத் தெரியாமல் இருந்ததுதான்.

அந்த நண்பரிடம் சந்திரனின் விலாசத்தைக் கேட்டு வாங்கிக் கொண்டு நேரே சென்னைக்குப் புறப்பட்டேன்.

சந்திரன் என்னைப் பார்த்ததும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

"என் திருமணத்துக்கு உனக்கு அழைப்பு அனுப்பக் கூட முடியாமற் போய்விட்டது. நீ எங்கேயிருக்கிறாய் என்பதே எனக்குத் தெரியாத போது உனக்கு அழைப்பு எப்படி அனுப்புவேன்? இருக்கட்டும், இப்பொழுதாவது வந்தாயே! அதுவரையில் சந்தோஷம். நீ ஸ்நானம் செய்து விட்டு வா. சாப்பிட்டு விட்டுப் பிறகு பேசலாம்" என்று கூறிச் சந்திரன் என்னை உள்ளே அழைத்துச் சென்றான்.

சந்திரனுடைய பங்களா மிகவும் அழகாயிருந்தது. அவன் ஆபீஸ் அறையை இன்றைக்கெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம். அது மிகவும் பெரிய பங்களா. பங்களாவைச் சுற்றிலும் பெரிய தோட்டம். அது ஒரு அழகிய நந்தவனமாகக் காட்சி தந்தது.

சந்திரன் இப்பொழுது ஒரு பத்திரிகையில் வேலைபார்க்கும் 'வெறும் உதவி ஆசிரியன்' அல்ல. நூலாசிரியன், கதாசிரியன், நாடகாசிரியன், சினிமா



வசனகர்த்தா. அவன் அந்தஸ்து இப்பொழுது மிகவும் உயர்ந்து விட்டது. முன்பு அவன் உதவியாசிரியனாயிருந்த போது என்னிடமும் மற்ற நண்பர்களிடமும் அடிக்கடி பண உதவி கேட்பான். இப்பொழுது அவன் நல்ல நிலைமையிலிருப்பதைப் பார்க்க எனக்கு மிகவும் சந்தோஷமாயிருந்தது. ஒரு தமிழ் எழுத்தாளன் வசதியாகப் பங்களா கட்டிக் கொண்டு வாழ்வதைப் பார்த்து நான் பூரித்துப் போனேன்.

சாப்பிடும் போது சந்திரன் என்னை அவன் மனைவிக்கு அறிமுகப்படுத்தி வைத்தான். அவள் அவனுக்கேற்ற அழகிதான். சந்திரன் அவளைக் கண்டதும் காதல் கொண்டதில் வியப்பு ஒன்றும் இல்லை.

சாப்பிட்டானதும் ரயிலில் வந்த அலுப்பில் அயர்ந்து தூங்கி விட்டேன். நான் விழித்துக் கொண்டு பார்த்த போது எதிரே காப்பி கமகமவென்று மணம் கமழ்ந்து கொண்டிருந்தது.

''நான் எதிர்பார்த்தபடியே விழித்துக் கொண்டு விட்டாயே? ஹைதராபாத் நைஜாமைத் தூக்கத்திலிருந்து எழுப்ப வேண்டுமானால் ரூபாய் நாணயத்தை 'ணங்' என்று ஓசைப்படுத்தினால் போதுமாம். விழித்தெழுந்து விடுவாராம். அது போல் உன்னை எழுப்புவதற்கு நல்ல காப்பியின் மணம் போதும்போலிருக்கிறது!'' என்று கூறிக் கலகலவென்று சிரித்தான் நண்பன்.

நானும் அவனோடு சேர்ந்து கொண்டு சிரித்தேன்.

அதே சமயத்தில், ஒரு குழந்தையின் கலகலவென்ற கிண்கிணிச் சிரிப்பொலி கேட்டது. ஜன்னல் வழியாகப் பார்த்தேன். சந்திரனின் மனைவி தங்க விக்கிரகம் போன்ற குழந்தையை வைத்து விளையாடிக் கொண்டிருந்தாள்.



''என்னப்பா சந்திரன், காலையில் என்னிடம் குழந்தையைக் காட்டவே இல்லையே! என்ன, ஒரு குழந்தைதானா? விவாகமாகி ஐந்து வருஷங்கள் ஆகி விட்டனவே!'' என்றேன் நான்.

''நீ வந்த போது குழந்தை தூங்கிக் கொண்டிருந்தான். எங்கள் வாழ்வை வளமாக்க வந்த இவன் ஒருவனே எங்கள் செல்வன். குழந்தையில்லாத என் முதல் மனைவி இப்போது இல்லை. இவள் என் இரண்டாவது மனைவி....'' என்று கூறின சந்திரன் முகத்தில் இலேசாகப் பனித்திரை மாதிரி சோகம் படர்ந்தது.

''அடாடா! நீ காதலித்துக் கல்யாணம் செய்து கொண்ட தாரா இறந்து விட்டாளா? இவளையும் அந்தப் பெயரிட்டே அழைக்கிறாயாக்கும்!'' என்றேன் அனுதாபத்துடன்.


''உம். அது ஒரு கதை. அவசியம் நீ கேட்க வேண்டும். அடியோடு பாழாக இருந்த என் வாழ்வு இந்தப் பிள்ளைக் கனியமுதால் எப்படிப் பிழைத்துப் புத்துயிர் பெற்றது என்பது மிகவும் சுவாரஸ்யமான கதை!'' என்று கூறி விட்டு, சந்திரன் அந்தக் கதையைக் கூறலானான். அவன் வாய்ச் சொல்லாகவே அந்தக் கதையைக் கேட்டால் உங்களுக்கும் சுவாரஸ்யமாக இருக்கும்.

★

தாராவும் நானும் மனப் பூர்வமாகக் காதலித்துத் திருமணம் புரிந்து கொண்டோம். என் எழுத்துத் துறைக்குத் தாரா பேருதவியாயிருந்தாள். சினிமா, நாடக விமரிசனம், கதை, கட்டுரை, தொடர்கதை யெல்லாம் உண்மையில் அவள்தான் எழுதுவாள். நான் எழுத்து வேலையையே நிறுத்தி விட்டேன். அதாவது நான் சொல்ல அவள் எழுதும் அளவுக்கு வந்து விட்டது. இந்தப் பயிற்சி எனக்கு முதலில் கொஞ்சம் சிரமமா யிருந்தாலும் வரவர மிகவும் சௌகரியமாயிருந்தது. தாராவின் உதவியினால் எழுதுவதிலுள்ள பாதி சிரமம் குறைந்து விட்டதல்லவா?

என்னுடைய கதைகளையும் கட்டுரைகளையும் தாராவின் முத்து முத்தான கையெழுத்தில் பார்க்கும்போது எனக்கு உண்டான ஆனந்தத்துக்கு எல்லையே இல்லை.

நான் தாராவைக் கரம் பற்றிய வேளை மிகவும் நல்ல வேளை. இல்லாவிட்டால் என் எழுத்துக்கு மதிப்பு எங்கிருந்து வரும்? என் கதை ஒன்று சினிமாப் படமாக



வந்தது. அதைவிட அதிசயம், அந்தக் கதைக்காகப் பேசப்பட்ட பணமும் கைக்கு வந்தது. அப்புறம் இன்னும் இரண்டொரு கதைகள் படமாக்கப்பட்டன. கையில் பணம் சேரவே இந்தப் பங்களாவை விலைக்கு வாங்கினேன். சினிமா உலகத்தில் நான் பிரசித்தி பெற்று விடவே, முன்பு என் புத்தகத்தைப் பிரசுரிக்கச் சம்மதிக்காத பிரசுரகர்த்தர்கள் தாங்களே வலிய என் நூல்களைப் பிரசுரிக்க முன்வந்தனர்.

இதனால் எனக்குப் பணமும் புகழும் குவிந்ததோடு வேலையும் அமோகமாகக் குவிந்தது.

ஆனால் இப்பொழுது தாராவின் தளிர்க் கரங்களுக்கு வேலையே இல்லை. எனக்குத்தான் உதவியாளர்களாகப் பலர் ஏற்பட்டு விட்டனரே

எனக்கு ஓய்வு கிடைப்பதே அருமையாகப் போய்விட்டது. இரவில் நிம்மதியாக வீட்டுக்கு வந்து உறங்கக்கூட முடியாமல் சினிமாத் துறையில் தீவிரமாக ஈடுபட நேர்ந்தது.

ஆனால் இதில் வேறொரு விதத்தில் விபரீத நிலைமை ஏற்பட்டு வருவதை நான் வெகுநாட்களாக உணரவில்லை.

சினிமாக் கதைகளும், பிறர் கதைகளுக்கு வசனமும் எழுதும் மும்முரத்தில், நான் தாராவைக் கவனிக்கவே இல்லை. இப்படி இரண்டுவருஷ காலம் கழிந்து விட்டது.

அன்று இரவு எனக்கு எதிர் பாராத விதமாக ஓய்வு கிடைத்தது. அதோடு நில்லாமல் நான் பொறுப்பேற்றுக் கொண்டிருந்த படங்களும் அநேகமாகப் பூர்த்தியாகி விட்டமையினால் எனக்குச் சில நாட்களுக்குப் பூரண ஓய்வு இருக்கும். இந்த நிம்மதியான நினைவுக்கிடையில் தாராவின் தாமரை முகம் பளிச்சிட்டது. இத்தனை நாட்களாக நான் அவள் நினைவே இல்லாமல் இருந்துவிட்டதைப் பற்றியும் நினைவுக்கு வந்தது. உடனே காரை எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் பறந்தேன்.

நான் வீட்டுக்குச் சென்றதும் பரபரப்புடன் தாராவைக் காணச் சென்றேன். நான் சமீப காலத்தில் அவளைக் காண அந்தமாதிரி சென்றதேயில்லை. வந்ததும் வராததுமாக அரைகுறையாகச் சாப்பிட்டு விட்டு உடனே ஸ்டுடியோவுக்குச் சென்று விடுவேன். இத்தனைக்கும் தாரா ஓடோடியும் வந்து என்னைக் கவனிப்பாள். அவளுக்கு அரட்டையடிப்பதில் ஒரு தனி உற்சாகம். முன்பெல்லாம் அவளோடு அரட்டையடிப்பதில் எனக்கும் அலாதி உற்சாகம் இருந்தது. இப்பொழுது மாத்திரம் என்ன? ஆனால் அவகாசம்தான் எனக்கு இல்லை.

இத்தனை நாட்களாகத் தாராவை அலட்சியம் செய்துவிட்ட தவறுகளுக்கெல்லாம் பிராயச்சித்தம் செய்து கொள்ளுகிற முறையில் அவள்மீது அப்படியே அன்பைப் பொழிந்து விடுவதென்று தீர்மானித்துக் கொண்டேன்.

வீட்டில் அமைதி குடி கொண்டிருந்தது. என் கார் வரும் சத்தம் கேட்டதும் ஓடி வந்து வரவேற்கும் வழக்கத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக நிறுத்தி விட்டாள் தாரா. நானும் இத்தனை நாட்களாக அதைப் பொருட்படுத்தாமல் இருந்தேன். ஆனால் அன்று வாசலில் அவளைக் காணாதது மனதுக்கு என்னவோ போல் இருந்தது.

மாடியறையை அடுத்த வெளித் தாழ்வாரத்தில் தாரா ஒரு பெஞ்சில் படுத்துக் கொண்டிருந்தாள். தாழ்வாரத்தின் வழியாக அவள்மீது படிந்த வெண்ணிலவு அவளுக்கு அப்ஸரஸின் தோற்றத்தைத் தந்தது. தங்க நிலவில் மின்னிய தந்தம் போன்ற அவள் சரீரம் முன்பிருந்ததை விடச் சற்று வாடியிருந்தது. தூங்கிக் கொண்டிருந்த அவள் கனவு கண்டிருக்க வேண்டும். இலேசாக அவள் கன்னம் குழிந்தது. முதன் முதலில், பெண் பார்க்க வந்த நான் தாராவைச் சந்தித்தது நினைவுக்கு வந்தது. அவளை எழுப்புவதா, வேண்டாமா என்று தயங்கியபடி அவள் முகத்துக்கு அருகில் அமர்ந்து தொண்டையைச் சிறிது கனைத்தேன். தாரா விழித்துக்கொண்டு விட்டாள். உடனே எழுந்து உட்கார்ந்தாள்.


நாம்
ஒன்றுகூடி
நமது சங்கத்தில்
எந்த நாடகத்தைப்
போடுவது என்பது
பற்றி விவாதிப்போம்
...தேநீர்
பரிமாற மறந்து
விடாதீர்கள்

"ரொம்ப நேரமாக உட்கார்ந்திருக்கிறீர்களா? நான் அயர்ந்து தூங்கி விட்டேன் போலிருக்கிறது. நீங்கள் இன்னும் சாப்பிடவில்லையே? வாருங்கள், கீழே போகலாம்!" என்று கூறிக் கொண்டே தாரா எழுந்தாள்.

என் உள்ளம் மிகவும் நெகிழ்ந்து விட்டது. இரண்டு வருஷகாலமாக அவளை நான் லட்சியமே செய்யாமல் வந்திருக்கிறேன். அது பற்றி அவள் என்னை ஒரு வார்த்தை கூடக் கேட்டுக் கண்டிக்கவில்லை. அதற்காகத் தாரா என்னிடம் கோபித்துக் கொண்டிருந்தால் கூட நான் சந்தோஷப் பட்டிருப்பேன். ஆனால் அவள் மலர்ந்த முகத்துடன் என்னை வரவேற்றதைக் காண உள்ளத்தில் சுரீர் என்று சுட்டது.

சட்டென்று தாராவின் கரங்களைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டேன்.

"தாரா! நீ தெய்வ மங்கை, உன்னை அடைய நான் உண்மையில் கொடுத்து வைத்தவன். உன் உடம்பு மாத்திரம் தங்கமல்ல; உள்ளமும் தங்கம்......!" என்று கூறிக் கொண்டிருக்கும்போதே தாரா என்னை இடை மறித்து, "இந்த ராத்திரி வேளையில் தங்கம், வெள்ளியென்று இரையாதீர்கள். ஊரில் திருட்டுப் பயம் அதிகமாயிருக்கிறது! எந்தத் திருடன் காதிலாவது விழுந்து வைக்கப் போகிறது! அப்புறம் ஆபத்து!" என்று கூறிக் 'கல கல' வென்று சிரித்தாள்.

வெகு நாட்களுக்குப் பிறகு, தாராவின் சிரிப்பைக் கேட்டு ரஸித்தேன். அந்த ஆனந்தத்தில் எனக்குச் சாப்பிட வேண்டும் என்ற உணர்ச்சியே மறந்து போய்விட்டது.

★

இப்பொழுதெல்லாம் வேலையைக் குறைத்துக் கொண்டு தாராவுடன் அதிகமாகப் பொழுதைக் கழிக்க முயற்சி செய்யலானேன். அது என் உள்ளத்துக்கு மிகவும் இதம் தருவதாயிருந்தது. இந்த நிலை அதிகநாள் நீடிக்கவில்லை. என் மன அமைதியைக் குலைக்கும் செய்தியைத் தாராவே கூறினாள்.

"உங்களிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும் என்று சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். எனக்குப் பொழுதே போகவில்லை. முன்பெல்லாம் உங்கள் இலக்கியப் பணிக்கு உதவி வந்தேன். இப்பொழுது என் உதவி உங்களுக்குத் தேவையில்லாமற் போய் விட்டது. அத்துடன் வர வர, உங்களைக் காண்பதும், உங்களோடு பேசுவதுங் கூடச் சிரம சாத்தியமாகி விட்டது. ஆகையினால் எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. நான் சினிமாவில் நடிக்க விரும்புகிறேன்!"

தாரா இப்படிச் சொன்னதைக் கேட்டபொழுது மௌனப் படத்தைப் பார்ப்பதுபோல் சுற்றுப்புற ஒலி ஒன்றும் கேட்கவில்லை! தாராவின் உருவமே, 'லாங்ஷாட்'டில் (தூரக் காட்சி) பார்ப்பது போல் தெரிந்தது.

"என்ன? நீயா சினிமாவில் சேர்ந்து நடிக்க விரும்புகிறாயா.. ...?"

"ஏன் கொலைக் குற்றம் சுமத்தப் பட்ட சினிமாப் படக் கதாநாயகனைப் போல் அதிர்ச்சியடைந்து விட்டீர்கள்? சினிமாவில் நடிக்க எனக்குத் தகுதியில்லையா?" என்று தாரா அலட்சியமாகக் கேட்டாள். அப்பொழுது அவள் சினிமாவில் வரும் 'வில்லி'யாகவே தோன்றினாள்.

"தாரா......! நீ விளையாட்டுக்குத் தானே சொல்லுகிறாய்?" என்று தயங்கிய வண்ணம் கேட்டேன்.

இதில் விளையாட்டென்ன இருக்கிறது? நிஜமாகத்தான் சொல்லுகிறேன். சினிமாத் துறையில் உங்களுக்கு இருக்கும் செல்வாக்குக்கு நான் சினிமாவில் நடிப்பது ஒன்றும் சிரமமில்லை. யாராவது ஒரு படாதிபதியிடம் நீங்கள் ஒரு வார்த்தை சொன்னால் போதும். எடுத்த எடுப்பிலேயே கதாநாயகியாகக் கூட என்னை எடுத்துக் கொள்ளுவார்கள். ஒரு எழுத்தாளராயிருந்தும் உங்களுக்குப் பரந்த மனப்பான்மை சிறிதும் இல்லையே!" என்றாள் தாரா! அவள் குரலில் ஏக்கம் தொனித்தது.

அவளுக்கு என்ன பதில் சொல்லுவதென்றே எனக்குத் தோன்றவில்லை. நான் சமீப காலத்தில் தாராவைக் கவனிக்காமல் இருந்து விட்டது எவ்வளவு பெரிய தவறு என்பது இப்பொழுது எனக்குத் தெளிவாகப் புலனாயிற்று.

"தாரா! சினிமாவில் நடிப்பதைக் கிள்ளுக்கீரையாக நினைத்து விட்டாய். ஒரு நடிகையாக விரும்பும் உனக்கு அதற்கு ஏற்ப என்ன தகுதி இருக்கிறது?" என்று கேட்டேன்.

அவ்வளவுதான். தாராவின் முகம் கோபத்தினால் சிவந்து விட்டது.

"இப்பொழுது சினிமாவில் நடிப்பவர்களெல்லாம் என்ன தகுதியிருக்கிறதென்று நடிக்க ஆரம்பித்தார்கள்? எல்லாரும் முதலில் என்னைப் போல் ஒன்றும் தெரியாமல் இருந்தவர்கள் தானே! எனக்குப் படத்தில் நடிக்க ஆர்வம் இருக்கிறது. போதாக் குறைக்கு உங்கள் செல்வாக்கு வேறு இருக்கிறது.

இன்னும் என்ன வேண்டும்?'' என்று சீற்றத்தோடு கேட்டாள் தாரா.

நான் அப்போதைக்கு எதையாவது சொல்லிச் சமாளிக்க நினைத்து, ''தாரா! யோசனை செய்து சொல்லுகிறேன். நீ நடிப்பதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை'' என்று சொல்லி வைத்தேன்.

ஆனால் அதிலிருந்து என் மனம் பட்ட வேதனையைச் சொல்லி முடியாது. ''கடவுளே! இதென்ன சோதனை? தங்கமாயிருந்த தாராவின் உள்ளத்தைக் கெடுத்து விட்டாயே!'' என்று கடவுளை நோக்கிக் கதறினேன்.

தாராவின் மனம் ஒரு வேளை மாறினாலும் மாறும் என்று நான் எதிர்பார்த்தது முற்றிலும் தவறாகி விட்டது. தாராவின் சினிமாப் பைத்தியம் நாளுக்கு நாள் அதிகமாயிற்று.

''எனக்கு நாள் முழுவதும் சும்மா உட்கார்ந்திருப்பது ரொம்பக் கஷ்டமாயிருக்கிறது. சினிமா விஷயமாக உங்களைத் தொந்தரவு செய்ய வேண்டாமென்று தீர்மானித்துவிட்டேன். நானே உங்கள் பெயரை வைத்துக் கொண்டு முயற்சி செய்யலாமென்றிருக்கிறேன்...'' என்றாள் தாரா.

எனக்குத் தலை சுற்றியது. ''ஐயோ! இது என்ன போதாத காலம்! தாராவும் நானும் இன்ப வாழ்வு வாழ்வதில் பொறாமை கொண்ட 'வில்லன்' ஒருவன் என் வாழ்க்கையில் குறுக்கே புகுந்து குழப்பம் விளைவிக்கப் பார்க்கிறானா?' என்று ஐயம் கொண்டேன். தாராவைக் கண்டு நான் காதல் கொண்ட நிகழ்ச்சிகளெல்லாம் 'செய்திக் கதிர்' சுருள்போல் சுருண்டு ஓடின என் மனத் திரையில்.

என் போதாத காலம், தாராவின் தாத்தா காசி யாத்திரை சென்று விட்டார். அவர் மட்டும் இப்பொழுது இங்கேயிருந்தால் இந்த மாதிரி தாரா மாறியிருக்க மாட்டாள். என்ன செய்யலாம்! தாராவின் பிடிவாதம் எங்கள் இருவரையும் பிரித்துவிடும் என்று தீர்மானித்து விட்டேன். நயமாகவும் பயமாகவும் சினிமாவில் நடிக்கும் எண்ணத்தை விட்டுவிடும்படி தாராவுக்கு எத்தனையோ விதத்தில் புத்தி சொல்லிப் பார்த்தேன். நான் தடுக்கத் தடுக்கத் தாராவின் சினிமா ஆசை அதிகமாயிற்று. அவள் முடிவை மாற்ற முடியாது என்று எனக்குத் தீர்மானமாகத் தெரிந்தது. சினிமாப் படத்தில் எதிர்பாராத விதமாகக் கதாநாயகனைக் காப்பாற்றுவதற்கென்றே மிகவும் நெருக்கடியான சந்தர்ப்பத்தில் தோன்றும் நிகழ்ச்சிகளைப் போல் ஏதாவது ஒன்று தோன்றித் தாராவின் மனம் மாறி விடாதா என்று எண்ணி நான் ஏங்கினேன்....''

இந்த இடத்தில் சந்திரன் சிறிது நிறுத்தி விட்டுப் பெருமூச்சு விட்டான். இந்தச் சமயத்தில் சின்னஞ்சிறு ஆண் குழந்தை ஒன்று தவழ்ந்து கொண்டே வந்து அவன் கால்களைக் கட்டிக் கொண்டு, ''அப்பா, அப்பா!'' என்று மழலைமொழி பேசினான். சந்திரன் குழந்தையை வாரி எடுத்து, மடியில் வைத்து அணைத்துக் கொண்டான்.

சந்திரன் வாழ்க்கையில் ஏற்பட்ட முக்கியமான நிகழ்ச்சியைத் தெரிந்து கொள்ளும் ஆவல் என்னைத் துளைத்தெடுத்தது.

அத்துடன் சினிமாவில் சேரத் துடித்த அவனுடைய முதல் மனைவியின் ஆவல் பூர்த்தி ஆயிற்றா? ஒரு வேளை சந்திரன் அவளைத் தள்ளி வைத்திருப்பானோ என்றெண்ணி நான் மனம் குழம்பினேன்.

''...அப்புறம் தாரா தன் விருப்பப்படியே நடந்து கொண்டாளா?'' என்று சந்திரனைப் பார்த்துக் கேட்டேன்.


''ஹஹ்ஹ ஹஹ்ஹஹா!'' என்று சிரித்து விட்டு, சந்திரன், ''இல்லை, இல்லை. இந்தப் பயல் பாலசந்திரன் பிறந்து அவளைத் தோல்வியுறச் செய்து விட்டான். நான் தாரா விஷயமாக மனம் குழம்பிப் போய்த் தவித்துக் கொண்டிருந்த போது, முருகன் அருளால், தாரா கர்ப்பமாயிருக்கிறாள் என்னும் விஷயம் தெரிய வந்தது. குழந்தை பிறப்பதற்கு முன்பே என் மனத்தில் ஒரு நிம்மதி பிறந்தது.

''மாதம் செல்லச் செல்ல, தாராவின் சினிமா ஆசை குறைந்து கொண்டே வந்து இந்தப் பயல் பிறந்ததும் அடியோடு மறைந்துவிட்டது. இப்பொழுது இவன் அவளை நாள் முழுவதும் ஆட்டி வைக்கிறான். முன்பு அவளுக்குப் பொழுது போகவில்லை. இப்பொழுது பொழுது போதவில்லை! முன்பு சினிமாவில் சேரத் துடித்த தாரா மறைந்து புனர்ஜன்மம் அடைந்து விட்டாள்....'' என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினான் சந்திரன்.

அப்பொழுது தாரா அங்கே வந்தாள். ''நண்பரிடம் எல்லாவற்றையும் கூறி விட்டீர்களா?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டாள்.

''இல்லை. இல்லை. நம் செல்வனைப் பற்றித்தான் சொல்லிக் கொண்டிருந்தேன். நம் வாழ்வையே நல்ல வழியில் திருப்பி விட்டானல்லவா அவன்!'' என்றான் சந்திரன். தாரா மகிழ்ச்சியில் பொங்கினாள்.


மழமழப்பான
சுகமான
க்ஷவரத்திற்கு...
வாழ்வில் வெற்றி கண்டவர்கள் வேறெந்த தயாரிப்பையும்
நாடாமல்
பாமாலிவ்
ஷேவிங் கிரீமைத்தான் உபயோகிக்கிறார்கள்
PALMOLIVE
BRUSHLESS
PALMOLIVE
LATHER
பாமாலிவ் என்ருலே உயர்ந்த ரகம்!


ZENITH
விலைகள் வெகுவாகக் குறைந்துள்ளன
ஸோல் ஏஜண்டுகள் தி பிரிட்டிஷ் மெஷினரி சப்ளைஸ் கம்பெனி
73, பிராட்வே, மதராஸ்-1 (போன் 55762)





மௌனச் சித்திரம்

வை. சுப்பிரமணியன்

கல்யாண வீட்டு முகப்பிலிருந்து நாதசுரத்தின் வழியே கல்யாணி ராகம் உருப்பெற்று அந்தக் கல்யாணக் கூடம் முழுதும் நிறைந்திருந்தது. சத்யநாதன் அந்த நாதமயத்தில் கட்டுண்டிருந்தான். அவனுக்குக் கர்நாடக சங்கீதம் என்றால் உயிர். இசை பெருகிக் கொண்டிருக்கும்போது அதனுடன் ஒன்றி, பல கனவுகளையும் கற்பனைகளையும் இசையுடன் இணைத்து உருவாக்கிப் பார்த்தபடியிருப்பான்.

இப்போது கல்யாணி ராகத்துக்கு ஒரு மனித வடிவம் தர அவன் மனம் வேலைசெய்து கொண்டிருந்தது. புலன்களிலும் அந்த வடிவம் தெரிந்து விட்டது. ஒரு பெண் வடிவமாகக் கல்யாணி நடமாடிக் கொண்டிருந்தாள். அவளையே அவன் நினைவு நிழல்போல் தொடர்ந்தது. கல்யாணக் கூடத்துக்கும் உள்ளுக்கும், உள்ளிருந்து மாடிக்கும் மாடியிலிருந்து உக்கிராணத்துக்கும் அவள் அலைந்து கொண்டிருந்தாள்.

சத்யநாதனின் பிரமை கலைந்தது. இசை மயக்கத்துடன் தோற்றத்தில் தெரிந்த யாரோ ஒரு பெண்ணைக் கண்கள் தொடர்ந்ததால், அந்த உருவத்தை 'இசை ராணி கல்யாணி' என்று தான் கருதி விட்டதாகத் தோன்றியது. ஆனால் ஒரு உண்மையை அவன் உள்ளம் ஒப்புக் கொண்டது. கல்யாணி ராகத்தின் உருவே அவள் தான் என்று எண்ணுகிற அளவுக்கு அவள் தோற்றம் தன்னை அலைத்தது என்றால் அவள் சாதாரணத்தன்மை கொண்டவள் அல்ல என்றே எண்ணினான்.

நண்பனின் கல்யாணத்துக்கு வந்த இடத்தில் கல்யாணத்தின் ஒரு அம்சமாவது மனத்தில் தங்குவதற்குப் பதிலாக அவள்தான் நிறைந்து தங்கியிருந்தாள். நண்பனின் உறவினர்களில் ஒருத்தியாக இருக்கலாம் அவள். அதுதான் அப்படி ஓடி ஆடி வேலை செய்கிறாள் என்பதை அனுமானித்துக்

கொண்டு விட்டான் சத்யன். நண்பனைத் தனியே சந்திக்க வேண்டும் என்று முடிவு கட்டி வைத்தான். சத்யனின் மனம் இப்படி அலையடித்ததில்லை; அவன் நினைவில் தொடர்ந்து பெண் உருவம் எதுவும் தங்கிச் சிந்தனையைக் கிளறி விட்டதில்லை; எனவே, இது புது அநுபவமாயிருந்தது.

அவளது மௌன நிலைதான் அப்படி அவன் மனத்தைக் கவர்ந்து விட்டது. அழகாய்ச் சமைந்த பெண் நிழல் ஒன்று இங்கும் அங்கும் நடமாடியது போலிருந்தது.

வாயைத் திறந்து அவள் பேச வேண்டுமே? குறிப்பால் உணர்ந்து உணர்ந்து அவள் காரியங்களைச் செய்து கொண்டு போனது, சிற்பியொருவன் தன் நிறைவடைந்த சித்திரத்துக்குப் பார்த்துப் பார்த்து முற்றுப் பூச்சுக் கொடுத்துக் கொண்டிருந்த மாதிரியிருந்தது.

அவள் முகம் கலை பொருந்திய முகம். அதரங்களிடையே ஜீவ நிலையில் புன்னகை நிலைத்திருந்தது. ஒரு முறை அவள் தன் புறம் திரும்பினால் அதை அருள் நோக்காகக் கொள்ள வேண்டும் என்று காத்திருந்தான் சத்யன். அத்தனை மதிப்பு அந்த உருவத்தின் மேல் சாற்றி விட்டான் அவன்.

நண்பனைத் தனியே சாவகாசமாகச் சந்திக்கிற வாய்ப்பு அன்றிரவு கிடைத்தது. நினைவில் மிதந்து கொண்டிருந்த விஷயத்தை ஒதுக்கி விட்டு, ஒப்புக்காக வேறு விஷயத்தை இழுக்க மனமில்லாமல் நேரிடையாகச் சத்யன் ஆரம்பித்தான்:

" 'பனிச்' சென்று ஒரு பெண் உன் கல்யாணத்தில் ஓடியாடி வேலை செய்து கொண்டிருந்தாளே, அது யார் அப்பா?"

"பெரிய கல்லாகத் தூக்கிக் கொண்டு வருகிறாயே, பயமாக இருக்கிறதே அப்பா!" என்றான் நண்பன்.

"தலையிலே போட்டுவிட மாட்டேன்; புது மாப்பிள்ளையாச்சே! பயப்படாமல் சொல், உனக்கு என்ன முறையில் உறவு?..."

"அவள் எனக்கே புரியாத வகையில் தூரத்து உறவு. அவள் ஒரு பிறவி ஊமை!"

சத்யனுக்குத் தலையில் கல் எதுவும் விழுந்து விட்ட மாதிரி இல்லை; ஆனால், திடீரென்று வாசிக்க எடுத்த வீணை ஸ்பரிசிப்பதற்கு முன்பே அழுகிறாற் போன்ற உணர்வுதான் அவனுக்கு ஏற்பட்டது.

"எதற்கு அவளைப் பற்றி அப்படி அக்கறையுடன் கேட்டாயடா அப்பா, சத்யா? ஊமைக்குத் தகுந்த ஊமை மாப்பிள்ளை உங்கள் ஊரில் கிடைப்பானா?"

"கிடைப்பான்."

"விசாரித்து எழுதுகிறாயா?"

"விசாரிக்க வேண்டியதை இங்கேயே விசாரியேன்; நான்தான் அந்த மாப்பிள்ளை!"

"என்ன?"

சத்யன் அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை; கேள்விக்கு என்ன, நண்பனின் ஆட்சேபணைகளுக்கு, அறிவுரைகளுக்கு எதற்குமே அவன் வாயைத் திறக்கவில்லை. அவனது தீர்மானத்துக்கு எதிராக யாருமே அவன் எதிரிலும் வாய் திறக்கவில்லை.

சத்யன் அவளைக் கல்யாணம் செய்து கொண்டு விட்டான்.

அவள் அந்தத் தனி வீட்டில் வளைய வந்தாள். ஊமையாயிருந்தாலும் அவள் அழகாயிருந்ததைப் போலவே, பேசவும் கேட்கவும் இயலாத நிலையிலும் அவள் கம்பீரமாயிருந்தாள். ஊமையின் ஜீவ பாஷையான 'பெப்பே பெப்பப்பே' என்ற விகார ஒலிகளை எழுப்பவில்லை; கையைக் காலை ஆட்டிச் சாடை செய்யவில்லை. எந்தச் சலனமும் புரியாததாலேயே 'இவள் பேசக் கூடப் பேசுவாளோ, இவள் வாய் திறந்தால் ஒலி சிதறுமோ? முத்து புறப்படுமோ?' என்ற உயர்ந்த நினைவுகூட எழச் செய்தது.

சத்யன் அவளை அழைப்பதென்றால் அவள் முன் அவளது நேர்ப் பார்வையில் நின்று, "ரூபா!" என்று அழைப்பான். ஏற்கெனவே அரும்பு கட்டியிருக்கும் புன்னகையைச் சிறிதே மலர வைப்பாள் அவள்.

ஒலியே சிந்தாத அவளிடம் சத்யனுக்குச் சம்பாஷணைக்குப் பஞ்சமில்லை; சிரிப்புக்குப் பஞ்சமில்லை. ரூபாவின் கண்கள் பேச்சுக்கு அவசியமாகும் போது வாயாக மாறும்; கேட்க நேரும்போது காதுகளாக மாறும். அவளது அதரங்கள் பேசும்; புன்னகை பல சந்தேகங்களைக் கொட்டும்: விரல் நுனிகள் வார்த்தைகளை வெள்ளமாய்க் கொட்டி அர்த்த வடிவங்களாகப் பிரிக்கும்.


ரூபா இப்படி வேண்டுமென்றே ஒலி எழுப்பிச் சங்கேதம் எதுவும் செய்யாமல் மௌனச் சாதனை புரிகிறாளா? அதன் தனி அழகும் கம்பீரமும் அவளுக்குப் புரிகின்றனவா? அல்லது இயற்கையின் ஒரு வினைவு ஊமை நிலை என்பது போல் அதன் அற்புத எதிரொலியா இந்த நிலை என்று தெரியவில்லை சத்யனுக்கு.

ரூபாவை மனைவியாகப் பெற்றதில் பெருமளவு இன்பம் பெற்றான் சத்யன். அவளுடன் வீட்டு வாசலிலிருந்த தனது சிறு தோட்டத்தில் மாலைப் பொழுதுகளைப் போக்குவான். ரோஜா மலரைக் காட்டி ஒருநாள், "இதற்குப் பெயர் தெரியுமா?" என்று அவன் கேட்டான். தெரியும் என்று தலையை இலேசாக அசைத்தாள் அவள்.

"உனக்குத் தெரியாது, ரூபா! நீ இதை உன் சங்கேதம் மூலம் 'ரோஜா மலர்' என்று எப்படியாவது சொல்லி விடுவாய். ஆனால், இதற்குப் பெயர் 'ரூபா' என்பேன் நான். ஏன் தெரியுமா? உன்னிடம் மலருக்குள்ள அழகு இருக்கிறது; அதன் மென்மை இருக்கிறது; நிறத்திலும் நீ அதன் நிறம்; அதன் உயிர்த் துடிப்பும் நெஞ்சை அள்ளும் சிரிப்பும் மலர்ச்சியும் மணமும் உன்னிடம் இருக்கின்றன. அதைப் போல் நீயும் வாய் திறந்து பேசவில்லை. தென்றலிடம் கற்ற இசையையும், இந்த மாபெரும் உலகின் மாண்புறு கதைகளையும் அந்த ரோஜா மலர் நீ இங்கே வருவதற்கு முன் எனக்குச் சொல்லியிருக்கிறது. நீயும்தான் அந்த அற்புத சாதனையைச் செய்கிறாய். ஆகையால்தான் அதற்கும் உனக்கும் நான் வித்தியாசம் வைக்காமல் பொதுவாக 'ரூபா' என்று அதையும் அழைக்க விரும்புகிறேன்!" என்று ஒரு இலக்கியச் சொற்பொழிவு நிகழ்த்தி முடித்தது போலவே கூறி நிமிர்ந்தான் அவன்.

அவள் இதயம் பெருமையால் விம்மியதைப் புறத்தோற்றம் காட்டியது. தான் ஒரு ஊமை என்பதனால் தன் கணவன் தன்னைச் சிறுமையாக நினைக்கவில்லை, நடத்தவில்லை, அதற்குப் பதிலாக வானுர உயர்த்துகிறார் என்று தெரிந்தது அவளுக்கு. பொன்நிறுக்கும் தராசின் பொடிமுள் மையப் புள்ளியைத் தொடாமல் தொட்டுக் காட்டுவதைப் பார்த்தறியும் நகை வியாபாரியின் நுணுக்கசக்தி அவளிடம் இருந்தது. கணவனின் உதடுகள் அசைவதில் அவள் வார்த்தைகளைக் கண்டு கொள்வாள்.

காலம் இன்பக் கிளையைப் பிடித்து இழுத்து அவர்கள் முன்னால் கொண்டு வந்து நிறுத்தி யிருந்தது.



காரைக்குடியில், அழகப்பா கல்லூரியின் ஸ்தாபகர் தினம் ஆகஸ்டு 30-ந் தேதி விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. டாக்டர் ஆர்எம். அழகப்ப செட்டியாரின் நெருங்கிய நண்பரான திரு எஸ். வை. கிருஷ்ணசாமி அவர்கள் இவ்விழாவில் சிறப்புச் சொற்பொழிவாற்றினர். கல்வி மந்திரி திரு சி. சுப்பிரமணியம் இவ் வைபவத்துக்குத் தலைமை வகித்தார். கல்வி மந்திரி சொற்பொழிவாற்றுவதையும், திரு எஸ். வை. கிருஷ்ணசாமி, திரு ஏ. எம். எம். முருகப்ப செட்டியார், திருமதி உமையாள் ராமநாதன், திரு சா. கணேசன் முதலியவர்களையும் படத்தில் காணலாம்.

அந்த இன்ப நிலைக்கும் ஒரு கலக்கம் ஏற்பட்டது. அமைதியாகச் செல்லும் ஆற்று நீர் எத்தனை நேரம்தான் அமைதியைக் கட்டிக் காக்க முடியும்? ஒரு ஆலம்பழுமாவது நீர் நிலைமேல் விழுந்து அமைதியைக் குலைக்காதா?

அதே போல் மௌனம் ஆண்டு, சாந்தி கொலுவிருந்த அந்த வீட்டில் 'சளசள' வென்ற பேச்சொலியும் சலனமும் ஏற்படுத்த இரண்டு பேர்கள் அங்கே காலடி வைத்தார்கள். சத்யனுக்குத் தெரிந்த வேறொரு நண்பனும், அவன் தங்கையும்தான் அவர்கள். ஆனால், முன்கூட்டித் தெரிவித்து விட்டுத்தான் அவர்கள் வந்தார்கள். பேச்சொலிசித்தாத வீட்டில் பேச்சும் கும்மாளமும் அமர்க்களப்பட்டன. ரூபா வாய் திறந்து பேசாத காரணத்தால், பேசிக்கொண்டிருந்த ஒரே ஆத்மாவான சத்யனும் மௌன சாம்ராஜ்யம் நிறுவி யிருந்தான் அங்கே. அந்தச் சாம்ராஜ்யக் கோட்டை அண்ணன் தங்கையின் ஒரு இடிச்சிரிப்பிலேயே தகர்ந்துவிட்டது.

நண்பன் வந்ததும் கேட்டான்: "சத்யா! கல்யாணம் செய்து கொண்டு விட்டாயாமே! எனக்கெல்லாம் ஏன் தெரிவிக்கவில்லை?"

"என்னவோ ஒரு சூழ்நிலை; அதனால் சொல்லவில்லை."

சத்யநாதனின் மனைவி ஊமை என்றறிந்த போது நண்பன் அதிர்ந்தாற்போல் சத்யனிடமே கேட்டான்: "ஏண்டா, துரதிருஷ்டக் கட்டையே! போயும் போயும் தெரிந்தே ஒரு ஊமையைக் கட்டிக் கொண்டிருக்கிறாயாமேடா! ஏண்டா இப்படி?"

"ஏன், ஊமையா யிருந்தால் என்ன? அவளும் உயிருள்ள ஒரு பெண்தான்!"

"பெண்ணு யிருந்தால்?"

"பெண்மை யிருக்கிறது; பெண்ணுக்குள்ள இதயம் இருக்கிறது; அவள் பேசவில்லையே தவிர மற்றப்படி அவள் வாழத் தகுந்தவள்!"

நண்பன் சத்யனின் நிலையை ஓரளவு புரிந்து கொண்டான். ஆவேச நிலையில் அவன் இருப்பதைப் பார்த்து ஓரளவு அவன் மனைவி மீது நண்பனுக்கே ஒரு மதிப்பு ஏற்பட்டது. பிறகு பேச்சை மாற்று வழியில் திருப்பி, தான் வந்த விஷயத்தை நோக்கித் தாவினான்.

அவன் தன் சகோதரியுடன் வந்த விஷயம்: அவன்தான் அவளுக்குக் கல்யாணம் செய்து வைக்க வேண்டிய பொறுப்பாளி. ஆயிரக் கணக்கான ரூபாய்க்கு இப்போதும் எப்போதும் சாதாரண முறையில் வழியில்லாததால் பணம் தேடும் முறைக்கு ஒரு கடுமையான வழியுடனும் லட்சியத்துடனும் வந்திருப்பதாகக் கூறினன். அது என்னவென்று சத்யன் கேட்டதற்குப் பிறகு தெரியும்படி செய்வதாகக் கூறிவிட்டு, தன் சகோதரியை அவன் பொறுப்பில் ஒப்படைத்துச் சென்றால் தாயார், தகப்பனார், சகோதரன் ஸ்தானத்திலிருந்து அவளைக் காப்பாற்றுவதற்கு முடியுமா என்று கேட்டான்.

சத்யன், அவசியமில்லாவிடினும் கூடச் சத்தியமே செய்து கொடுத்தான். ஆனால், அவன் திட்டம் என்னவென்பதுதான் சத்யனின் கேள்வி. அந்தக் கேள்விக்கு ஒருவாரம் கழித்து ஒரு கடிதம் கிடைத்து விடையாக அவன் முன் நின்றது. நண்பன்தான் எழுதியிருந்தான்.

'அன்பின் உருவான சத்யநாதனுக்கு,

என் சகோதரி சாந்தியை வாழ்விக்கச் செய்யப் பணம் தேட ராணுவத்தில் சேர்ந்து விட்டேன். மாதாமாதம் பணம் அனுப்புகிறேன். என்னைவிட உன்னைப் பொறுப்பாளியாக்கி விட்டு ஓடி வந்ததே என் சுயநலமான

செயல்தான். சாதாரணமாக வயது வந்த பெண்ணை இப்படிப் பிறரிடம் விட்டுச் செல்வது உலக நியதிக்குப் புறம்பானதுதான். ஆனால், நண்பா! எனக்கு வேறு வழியில்லை. பெற்றோர், சுற்றம் என்று யாரும் இல்லாத நிலையில் நம்பிக்கையுள்ள ஒரு உயர் நண்பனை அவளுக்குப் பெற்றோரும் மற்றோருமாக இருக்கச் செய்யும் துணிவான செயலை நான் செய்கிறேன். நீதான் அவளுக்குப் பெற்றோர்.

ராணுவத்தில் சேரும் என் யோசனையைக் கூறினால் மறுப்பாய் என்றே கூறாது வந்தேன். என் தங்கை இனி உன் தங்கை. அவளுக்குத் திருமணம் நிச்சயம் செய்து கொண்டுதான் வருவேன். எப்பொழுதோ, எந்த வருஷமோ?

உண்மையுள்ள,

....

சாந்தி சத்யநாதனுடனும் ரூபாவுடனும் கலகலப்பாகப் பழகினாள். மௌனமாகப் பழக வேண்டியிருந்ததாலேயே இன்னும் ஒரு படி அதிக மதிப்பை அவளுக்கு வழங்கிப் பழகினாள் என்றும் சொல்லலாம்.

ஆனால், பேச வாயில்லாத ரூபாவுடன் சங்கேத முறைகளை அபிநயம் பிடித்துக் கொண்டு, அவளுடைய பரிபாஷையையும் பொறுமையுடன் புரிந்து கொண்டு சம்பாஷிப்பதைவிடச் சத்யனிடம் அரட்டை அடிப்பது அவளுக்குச் சுலபமாயிருந்தது. அதுதான் பழக்கத்தில் வரத் தொடங்கியது. அவளுடைய சுபாவம் சத்யனுக்கும் பிடித்திருந்தது.

தோட்டத்தில் பூச்செடிகளை நிமிர்த்தி வைத்துக் கட்டி, மலர்களுக்கும் இலைகளுக்கும் வலிக்காத வண்ணம் வளைவுகளைச் சரிப்படுத்திக் கொண்டிருப்பான் அவன். சாந்தியும் பல சமயங்களில் உதவி செய்வாள்.

எங்கேயாவது செடி மறைவிலிருந்து ஒரு மலரை அலக்காகப் பிடித்துக் கொண்டே எதற்காகவாவது சாந்தியைச் சைகை காட்டி அழைப்பான் சத்யன்.

"என்ன அண்ணா இது? ரூபாவுக்குச் சைகை காட்டுகிற பழக்கத்தினால் என்னையும் அப்படிக் கூப்பிடுகிறீர்களா? அல்லது என்னையே ரூபா என்று நினைத்துக் கொண்டு விட்டீர்களா?" என்பாள் சாந்தி.

"இரண்டுமில்லை. என்னவோ அப்படித் தோன்றியது!" என்பான் சத்யன்.

சாந்தியின் அண்ணன் ராணுவத்தில் சேர்ந்து ஆறு மாதங்களாகி விட்டன. காலத்தின் கணக்கை ஒரு நாள் நினைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டாள் அவள். அவளைத் தனிமை பிடுங்கித் தின்றாற்போல் தோன்றியது அவளுக்கு. ரூபாவும் சத்யனும் இணைந்து பழகிய விதம் அவள் உள்ளத்தில் உணர்வு அலைகளைக் கூட்டியது.

ரூபாவை நினைக்கும்போது அவளுள் வியப்பு ஏற்பட்டு, நினைவை அவள்மேல் திருப்பியது.

'ஊமையாயிருந்தாலும் அவள் எப்படி இத்தனை அழகாயிருக்கிறாள்? ஊமைகள் விகாரமாகப் பேசிச் சாடை காட்டுகிற மாதிரிகூட இவள் செய்யவில்லையே? எல்லாவற்றையும் புரிந்து கொள்கிறாள்; புரிய வைக்கிறாள்; சிரிக்கிறாள்; ஒரு வருஷம் கண்ணாடிமுன் நின்று பழகினால் கூட அந்தச் சிரிப்புக்கு இணையாகச் சிரிக்க முடியாது...'

பிறகு சத்யனின் நினைவு படர்கையில் அவனது தோற்றம் அவள் மனத் தளத்தினின்றும் மேலே வந்தது. அவள் கொண்ட நாண உணர்வை அவளது நினைவுகளும் பெற்று ஒதுங்கிச் சென்று கொண்டிருந்தன. அவனது கம்பீரமான வடிவம் அவள் மனத்தில் புது உணர்வுகளை எழுப்பியது.

'அவரை எதற்கு நான் அண்ணா என்று கூப்பிட வேண்டும்? எனக்குத்தான் ஒரு அண்ணா—சொந்த அண்ணா—இருக்கிறானே... இவரை வேறு.. '

ரூபாவின் முகம் போல் இப்போது தன் முகம் இருக்கிறதா என்று பார்க்கக் கண்ணாடி இருந்த பக்கம் எழுந்து சென்றாள் சாந்தி. பெயரைத் தன்னுள் கொண்டிருந்த சாந்தி அதன் பொருளை அங்கிருந்து வெளியேற்றும் படியாயிற்று.

மறுநாளே அவள் வாழ்க்கையில் விளையாட ஆரம்பித்து விட்டாள். சத்யனைக் கண்டதும் முதன் முதலாக, "இதோ பாருங்கள், நான் இன்று முதல் உங்களை 'அண்ணா' என்று கூப்பிடப் போவதில்லை!" என்று கூறினாள்.

"தம்பி என்று கூப்பிடப் போகிறாயா, அம்மா? எனக்கு வயது முப்பத்திரண்டு; உனக்கு இருபத்தாறு என்று உன் அண்ணா சொல்லிப் போனதாக ஞாபகம்....தம்பி என்று கூப்பிடுகிறாயா? அல்லது மாமா..."

"சேச்சே! நான் என்ன பாப்பாவா? ம்... ரூபாவுக்கு என்ன வயதாகிறது?"

"அவளுக்கும் கிட்டத்தட்ட உன் வயது தான்."-அவன் முடிக்கவில்லை. "அப்படியானால், அவளும் என் வயதானால் நானும் அவள் கூப்பிடுகிற மாதிரியே கூப்பிடுகிறேன்" என்று கூறினாள் சாந்தி.

சத்யன் சிரித்தான். அந்தச் சிரிப்பை ஏதோ பரிசளிப்புப் போல் மரியாதையுடன் உள்ளத்தில் ஏந்திக் கொண்டாள் சாந்தி. அவள் உள்ளக் குளத்தில் அந்தச் சிரிப்புச் செந்தாமரை வேர்விட்டுப் படர்ந்துவிட்டது. அவனைப் பற்றிய 'அண்ணா' உறவை அவள் மனம் மறந்தே விட்டது. புது உணர்வுக்கு இடம் ஏற்பட்ட அந்த மனத்தில் காதல் மலர் மலர ஆரம்பித்து விட்டது.

இன்னொரு நாள்: "மிஸ்டர் சத்யன்! ரூபாவைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்றாள் சாந்தி. அவனுடன் பழகுவதில் பல நிலைகளைக் கடந்து முன்னேறியிருந்தாள் இப்போது.

"என்ன நினைக்கவில்லை என்பதை வேண்டுமானால் சில வார்த்தைகளில் சொல்லிவிடலாம்" என்றான் சத்யன்.

"நீங்கள் இப்படி யெல்லாம் மேற்போக்காகப் பேசுவது ஒருபுறமிருக்கட்டும்; ரூபாவைப் போன்ற அபூர்வப் பிறவிகளைப் பற்றி



தொன்றுதொட்டே
புகழ் பெற்றது
புராதன காலத்திலிருந்தே கிருமிகளை அடி
யோடு கொன்று வலுவூட்டுவதற்கு மிகச்
சிறந்தது நீம் (வேம்பு) என இந்தியாவெங்கும்
ஒப்புக்கொள்ளப் பட்டது.
வேம்பின் இயல்பான இக் குணங்கள் நீம் டூத்
பேஸ்டில் அபரிமிதமாக இருப்பதே அதன்
சிறப்புக்கு முக்கிய காரணம். பற்கள்
ஈறுகள் நன்கு பாதுகாக்கப்பட, இன்றைய
பல் வைத்தியத்தில் கையாளப்படும்
பொருள்கள் யாவும் இதிலிருக்கின்றன.
நீம் டூத் பேஸ்டுடன் வேறு எந்த பற்
பசையையும் ஒப்பிட முடியாது.
நீம் டூத் பேஸ்ட்
கல்கத்தா கெமிகல் கோ., லிட்., கல்கத்தா-29. தென்னிந்திய ஆபீஸ்: 5/149, பிராட்வே, சென்னை-1



நண்பர் ஒரு நல்ல செய்தி
யைச் சொல்கிறார் அடிக்
கடி எப்ரிலைம் உட்
கொண்டதால். அவர்
ஆஸ்த்மா உபாதையால்
தற்பொழுதுபீடிப்பதில்லை
EPHRILIME
எப்ரிலைம்
நீண்ட நாள்பட்டதும், மிக்க உபாதை தரக்கூடியதுமான மார்ச்சளி, ஆஸ்த்மா முதலிய நோய்களுக்கு ஓர் சிறந்த ஹானியற்ற மருந்து.
யூனியன் டிரக் கம்பெனி, லிட்.
மதராஸ் டிப்போ :
2. ஜோன்ஸ் லேன் :: மதராஸ்-1



Admirable
Long
Luxuriant
Hair...
Roma
HAIR GROW TONIC
Make your own Hair Tonic with ROMA, the concentrated essence of valuable ingredients, for preventing dandruff, falling of hair and premature greyness. It strengthens the Hair Roots and stimulates to grow Healthy Thick Long Lustrous Hair

விவேகமுள்ள மனிதர்கள் என்ற முறையில் ஒரு சிறிது ஆராய்ச்சிகூட நடத்த வேண்டாமா?'' என்றாள் சாந்தி.

"நீ என்ன சொல்கிறாய், சாந்தி?''

"ரூபா ஒரு மர்மமான பெண் என்று நான் நினைக்கிறேன்.''

"எப்படி?''

"அவளுக்குப் பேசத் தெரியலாம்; எழுதப் படிக்க, காது கொடுத்துக் கேட்க எல்லாம் தெரியலாம் என்று தோன்றுகிறது.''

"என்ன?''

"ஆமாம்; அந்தச் சக்திகளை அவள் எதற்கோ மறைத்து வைத்திருக்கிறாள் என்று எனக்குப் படுகிறது.''

"சாந்தி! நீ இங்கே ஏதாவது கலகம் பண்ணக் கங்கணம் கட்டாதே. நாங்கள் அமைதியாக வாழ்கிறோம்.''

"அணுகுண்டை அடியில் புதைத்துக் கொண்டு, மேலே சோபா போட்டு அமர்ந்து அநுபவிக்கிற அமைதிதான் இது.''

சத்யன் தவித்தான். அவனுள் எதையோ புரட்டி விட்டாள் சாந்தி.

"நீ எதனால் இப்படிச் சொல்கிறாய், சாந்தி?''

"ஊகம்தான்; ஆராய்ச்சிதான். இவள் தெய்வப் பிறவியா யிருந்தாலொழிய, 'மூணுக்' என்னாமல் காலம் கடத்த முடியுமா? இவள் ஊமை என்பதற்கு நீங்கள் சாட்சியா யிருப்பது போல அவள் ஊமையல்ல என்பது என் கட்சி. ஆனால், அதை நிரூபிப்பது அவள் கையில் இருக்கிறது. அவளைத் தூண்ட உங்களால் முடியுமா?''

"சரி; நீ ஏன் இதையெல்லாம் கிளறுகிறாய், சாந்தி? உன் பெயரைப் போல் உன்னால் சாந்தியா யிருக்க முடியவில்லையா?''

அவள் விழிகள் மட்டும் ஏறி, அவன் முகத்தைச் சந்தித்தன.

மறு நாள் முதல் ரூபாவைக் கூர்மையாக ஆராயத் தொடங்கினான் சத்யன். சாந்தி திறந்துவிட்ட ஆராய்ச்சிக் கண்கள் தம் வேலையை மேற்கொண்டிருந்தன. இந்த மாறுதலான போக்கைப் பற்றி ரூபாவும் ஒன்றும் தெரிந்து கொள்ளாமல் இல்லை. அவள் தன் இரு கண்களையும் அந்த வீட்டில் நடமாடிய இரு ஜீவன்கள் மேலும் சாற்றி யிருந்தாள். சத்யனும் சாந்தியும் அடிக்கடி சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். இப்போதுதான் அவன் சாந்தியை உற்றுப் பார்க்கத் தொடங்கியிருந்தான். அவள் தனதனவென்று ஒரு அபூர்வக் கனியாக மின்னினாள்.

ரூபாவின் விரல் நுனிகள் சத்யனின் முகத்தண்டை வந்து படமெடுத்து ஆடும் பாம்பின் உருவை வரைந்து காட்டின. அவள் முகத்திலே கடுகடுப்பு தோன்றியிருந்தது. அவள் பாஷை அவனுக்குப் புரியாதா, என்ன?

"இது என்ன புதிய போக்கு? சும்மா இருக்கும் என்னைத் தீண்டிப் பாம்பு போல் ஆடச் செய்வானேன்?'' என்பதுதான் ரூபாவின் குறிப்பு.

இதைச் சாந்திக்கு விவரித்துக் கூறினான் சத்யன்.

"பார்த்தீர்களா? தீண்டினால்தானே பாம்பு உயிருள்ளதா செத்ததா என்பது தெரியும்? உள்ளுக்குள்ளே விழித்துக் கொண்டிருக்கும் புறக் கண் மூடிய ஆத்மா அவள். உங்களுக்கு விந்தை எதையாவது கூடிய சீக்கிரம் காட்டுகிறேன், பாருங்கள்!'' என்றாள் சாந்தி.

சாந்தியின் போக்கு ஏதோ மர்மம் கொண்டதாக இருப்பதுபோல் உணர்ந்தான் சத்யன். தன்னை அவள் விரும்புவதால் ரூபாவுக்கும் தனக்கும் இடையில் ஒரு தடைச் சுவர் எழுப்பிவிட அவள் முனைகிறாள் என்றும் தோன்றியது அவனுக்கு. ஆனால், பேதை தனது முடிவைப் பற்றி அறியாமலே இயங்குகிறாளே என்ற ஒரு அநுதாப உணர்வும் அவனுள் தோன்றியது. சாந்தியைக் காப்பாற்றும் வகைக்கு அவன் அவளுடைய அண்ணனிடம் சத்தியம் செய்து கொடுத்திருப்பது தொடர்ந்த மணியோசை போல் அவனுள் ஒலித்துக் கொண்டே யிருந்தது. சாந்தியின் திட்டத்தைப் பொறுமையுடன் கவனிப்பதில் ஈடுபட்டான் அவன்.

ஒருநாள் ரூபா நிதானமாக அவன் இருந்த இடம் நோக்கி வந்து கொண்டிருந்தாள். அவள் கைகள் எதையோ ஏந்தி யிருந்தன. அவள் நடந்து வந்தது, வானத்திலிருந்து நிலவு இறங்கி நடந்து வந்து கொண்டிருந்ததோ என்ற பிரமையை ஊட்டியது.

'பிரமையை உண்டுபண்ணவே பிறந்து வந்த தனிப்பிறவி இவள். இசை வடிவமோ, மலர் இதழோ, தெய்வச் சிலையோ என்றெல்லாம் பிரமை காட்டியவள் இப்போது நிலவுக்குத் தாவி யிருக்கிறாள் போலும்' என்று நினைத்தான் சத்யன். 'ஆனால், மர்மம் நிறைந்த மாயக்காரியா யிருந்தால் வாழ்க்கையில் பெரும் தோல்வியடைந்தவனாவேன் நான். நேற்று வந்த சாந்தி இவள் மாயத்தைத் துலக்கி வெற்றி கொண்டு விடுவாள்!' என்றும் தொடர்ந்து நினைக்கத் தோன்றியது.

அவன் முன் வந்து நின்ற ரூபா அவனிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தாள். அவன்

முகத்தை ஏறிட்டுப் பார்த்த அவன் அங்கே ஒரு புன்னகையைக் கண்டான். மூக்கில் இட்டிருந்த வைர பேசரி அந்தப் புன்னகையை ஒளிபடக் காட்டியது. தெய்வம் சிரித்தால் தான் அப்படி இருக்க முடியும்!

கடிதத்தைப் படிக்கத் தொடங்கினான் சத்யன்:

' அன்புள்ளவரே...... !

(அதற்குமேல் படிப்பதை வேறு நினைவு தடுத்தது.)

"இவளுக்கு எழுதவும் படிக்கவும் தெரியுமா? அப்படியானால் சாந்தி இவளைப் பற்றி ஆராயப் புகுந்தது முற்றிலும் சரிதானே... இந்தக் கடிதத்தில் என்ன எழுதி எந்த உண்மையை வெளியிடுகிறாள்?' என்று எண்ணிக் கொண்டு பரபரப்புடன் கடிதத்தைத் தொடர்ந்தான்.

"நான் ஒரு மர்மமூட்டம். நான் ஊமை இல்லை; படிக்கத் தெரியாதவள் இல்லை; எழுதத் தெரியாதவள் இல்லை; இந்த எழுத்து என் விதியை விளங்க வைக்கும் எனது சொந்தக் கையெழுத்து. வாழ்வில் எனக்கு ஏற்பட்ட ஒரு தோல்விக்காக அன்றொரு நாள் வாய் மூடினேன். இன்னும் திறக்கவில்லை; திறக்க விரும்பவில்லை; வாய் திறந்தால் என் சுயசரிதையைக் கொட்டிக் கொண்டு போக வாய்ப்புகள் வரும். கசப்பு மருந்தானாலும் வாய்க்குள் போட்ட பிறகு ஜீரணமாகி விடுவதில்லையா? என் அனுபவத்தை ஜீரணிக்க என் ஊமை நிலை பயன்படுகிறது.

நீங்களும் சாந்தியும் பழகுகிற விதத்தைச் சில நாட்களாகக் கண்டு முதலில் நான் சற்றுக் குமைந்தாலும் இப்போது மகிழ்கிறேன். இன்ப வாழ்க்கைக்கு இன்சொற்கள் பரிமாறிப் பாதை அமைத்துப் போவதல்லவா சிறப்பான நிலை? அதற்குச் சாந்தி முற்றிலும் தகுதியுடையவள்......"

கடிதத்தினின்றும் ரூபாவின் முகத்துக்குப் பார்வையைச் சுழல விட்டான் சத்யன். அவள் அமைதியாகப் புன்னகையைச் சொரிந்து கொண்டிருந்தாள். 'என்ன?' என்ற சைகை எழுந்தது அவள் புன்னகையில். 'எழுதுவதை எழுதி விட்டு என்னவென்றால்?' என்று நினைத்துத் தொடர்ந்தான் அவன்.

"......அவளுடன் நீங்கள் வாழ்வதை நான் மனமார வரவேற்கிறேன். உங்களிடையில் ஒரு முட்டுப் போல் நான் இருப்பதைத் தவிர்க்க நீங்களே ஒரு வழி செய்யுங்கள். தீர யோசித்து என்ன வழி காட்டினாலும் அதன்படி நடந்து கொள்வேன். நான் பிரிய வேண்டுமானாலும் பிரிந்து சென்று விடுகிறேன்! சட்டப்படி உங்களைக் கட்டுப் படுத்த மாட்டேன்.

உங்கள் அடியாள்,

ரூபா "

கண்ணீருடன் நிமிர்ந்தான் சத்யன். களங்கமில்லாமல் தோற்றம் காட்டி நின்றுகொண்டிருந்த ரூபா, "என்ன?" என்று கடிதத்தைச் சுட்டிக் காட்டிச் சங்கேத முறையில் கேட்டாள். ஒன்றும் புரியாத புதிர் அவனைப் பிழிந்து கொண்டிருந்தது.

தற்செயலாக அவன் கண்கள் மேஜையின் மேல் தாவின. அங்கே ஒரு கடிதம் எழுத ஆரம்பித்த நிலையிலேயே நின்று விட்டிருந்தது. எழுதப் பிடித்த பேனா மூடியிடாமல் அப்படியே பக்கத்தில் கிடந்தது.

அன்புள்ள அண்ணாவுக்கு, சாந்தி அநேக நமஸ்காரம். நீ ராணுவத்தில் சேர்ந்த பிறகு என் மனம்' அத்துடன் நின்றிருந்தது கடிதம்.

அந்தக் கடிதத்தைத் தாவி எடுத்தான் சத்யன். 'தன்னிடம் ரூபா கொண்டு வந்து கொடுத்த கடிதத்தையும் அதையும் சேர்த்துப் பிடித்து மாறி மாறிப் பார்த்தான். இரண்டு கடிதங்களிலும் இருந்தது ஒரே கையெழுத்துத்தான்!

அதேசமயம் அந்த அறைக்குள் பறந்து ஓடி வந்த சாந்தி அங்கிருந்த சூழ்நிலையைக் கண்டு கொண்டு, புலன்கள் நடுங்கும் நோயாளியைப் போல் ஒடுங்கினாள்.

"சாந்தி!" என்று இடிபோல் முழங்கினான் சத்யன்.

அவள் அதிர்ந்து போய் அவனை மெல்ல ஏறிட்டுப் பார்த்தாள்.

"இது யார் எழுதிய கடிதம்? யாருக்கு எழுதியது?"

"நான் எழுதியதுதான்; ராணுவத்திலுள்ள என் அண்ணாவுக்கு எழுத ஆரம்பித்தேன். இன்னும் முடிக்கவில்லை."


"இதோ, இந்தக் கடிதம்?"

அதைச் சற்று எட்டிப் பார்த்தாள் சாந்தி. அவள் முகம் கறுத்து விட்டது.

"அதுவும் நான் எழுதியதுதான்; ரூபா உங்களுக்கு எழுதியது போல நான்தான் எழுதினேன்..... உங்களை அடைய நான் துடித்த துடிப்பில், என் மூளை தலைகீழாக வேலை செய்தது. ரூபாவை மர்மம் நிறைந்தவளாக உங்களுக்குள் சந்தேகத்தை எழுப்பி அவளுக்கு எழுத, படிக்க, பேச வரும் என்று நிலைநாட்டி அவளே எழுதியது போல் இந்தக் கடிதத்தை எழுதினேன். ஆனால் என் விபரீதத் திட்டத்தைக் கடைசி வரை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியவில்லை. நேற்றிரவு நான் எழுதிய இந்தக் கடிதம், நான் அறையை விட்டு வெளியில் சென்று திரும்புமுன் மாயமாகப் போய் விட்டது. ரூபாவின் கையில் இது கிடைத்து விட்டது என்று இப்போது தான் தெரிகிறது. நான் முட்டாள்தனம் செய்து விட்டேன். ரூபாவின் வாழ்வுக்கே உலை வைக்கத் திட்டமிட்ட என்னைத் தெய்வம் நல்லவேளையாக இப்போது தடுத்து விட்டது. என்னை மன்னித்து விடுங்கள். நான் உங்களை அடையக் கட்டிய கோட்டை ஆதாரமில்லாத மண் கோட்டை. ரூபாவுக்கு முன் நான் ஒரு துரும்பு!" என்று கண்ணீரிடையே கதறினாள் சாந்தி.

"சாந்தி! உன் அண்ணனுக்கு எழுதி உனக்கு ஒரு வழி தேடச் செய்கிறேன். அவன் உன்னை இங்கே விட்டுச் சென்றதும், நான் இங்கே உன்னை வைத்துக் கொள்ள அனுமதித்ததும் இரண்டு பெரிய தவறுகள்!" என்று அவன் கூறி முடிக்குமுன் சாந்தி குனிந்த தலையுடன் அந்த அறையைவிட்டு வெளியேறினாள்.

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam


ROSE
புதுமை!
வினோலியா
ரோஸ் டாய்லெட்
பவுடர்
விலை
ரூபா 1
ரோஜா மணமுள்ள அழகுசாதனப் பவுடர்
VETP 1-X20 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon